www.t.me/tamilbooksworld



# நானே நான்

AVOID TO DOWNLOAD FROM userupload.net SPAM WEBSITE

ஜாவர் சீதாராமன்

# இந் நூலாசிரியரைப் பற்றி...

''கரணம் தப்பினால் மரணம்'' என்று சொல்லுவார்கள். ''மரணம் தப்பினால் மண்டையாவது உடையும்; காலாவது முறியும்; அல்லது பல்லாவது உடையும்'' என்று சேர்த்துச் சொல்லவும் முடியும். ஆனால் இந்த ஆபத்து எதுவுமே இல்லாமல் ஒருவர் 'கரணம் போட்டுத் தப்பினார்' என்றால் அது மிக ஆச்சரியந்தானே!

''ஏழை படும்பாடு'' படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜாவரின் பாத்திரத்தை ஏற்று அமரத்துவம் பொருந்திய, அந்த சீதாராமன் 'இந்தியன் சிவில் சர்வீஸ்' (ICS) பரீட்சையில் தேறி, கலெக்டராக ஆகிவிட என்று ஆசை கொண்டார். அதன்படி பரீட்சையும் எழுதினார். ஆனால் சர்க்காரின் துரதிருஷ்ட வசமாய்— ஐ.ஸி.எஸ். பரீட்சையில் தேறவில்லை. அதைநினைத்து சிறிதும் வருந்தாது சினிமா உலகில் பிரவேசித்து விட்டார்.

சினிமா உலகில் பிரவேசித்த பின்னர் அவருக்கு வெற்றி மேல் வெற்றி; புகழுக்கு மேல் புகழ்தான். இந்தியன் சிவில் சர்வீஸிற்கும், இந்தியன் சினிமா சர்வீஸிற்கும், முதல் எழுத்துக்கள் (ஐ.ஸி.எஸ்.) விஷயத்தில் பூரண ஒற்றுமை இருந்தபோதிலும் புகழ் விஷயத்தில் எவ்வளவு வேற்றுமை பார்த்தீர்களா!

இவர் சினிமா உலகில் பிரவேசித்ததே ஒரு எதிர்பாராத சம்பவம்தான் காரணம். ஐ.சி.எஸ். பரீட்சையில் தேர்வு பெறாத இவர் எந்தத் தொழிலில் நுழையலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, ஒருநாள் ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் அவர்களைப் பார்க்கச் சென்றார். சினிமா உலகில் நுழைய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் அங்கு செல்லவில்லை. ஏதோ காரணமில்லாத ஆவல்தான் அவரை இழுத்துச் சென்றது.

ஜாவர் சீதாராமன் அவர்கள் பேச்சும், பாவனையும், நடையும் வாசன் அவர்களைக் கவர்ந்தது. இருவருக்கும் பேச்சு ஆரம்பமாயிற்று. சினிமா உலகைப்பற்றியும், படங்களைப் பற்றியும் சீதாராமன் தன் அபிப்பிராயங்களை அள்ளி வீசினார். "ஜெமினி படங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று திரு. வாசன் கேட்டார். உடனே இவர் தாக்கு தாக்கு என்று தாக்கி, தன் அபிப்பிராயங்களைத் தைரியமாக வெளியிட்டார்.

இதற்காக வாசன், அவரைக் கோபித்துக்கொள்ளவில்லை. பெரிய மனிதரின் சுபாவம்! அதற்குப் பதில் அவர், "இவ்வளவு தூரம் நீங்கள் பேசுகிறீர்களே, உங்களால் நடிக்க முடியுமா? சொல்லுங்கள்" என்று கேட்டார்.

"ஏன் முடியாது? தாராளமாய் முடியும்" என்று அழுத்தமாகப் பதில் அளித்தார் சீதாராமன்.

"அப்படியானால் அதையும்தான் பார்த்து விடலாமே; உங்கள் விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள். கூடிய சீக்கிரத்தில் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன்" என்று கூறினார் வாசன்.

ஆனால் இவர் சினிமாவில் சேருவதை உற்றார், உறவினர், நண்பர்கள் எவரும் விரும்பவில்லை. ஆனால் திரு. வாசன் அவர்களிடமிருந்து அழைப்பு வந்ததும்,



"எப்படியானாலும் சரி; சினிமாவில் சேர்ந்தே தீருவது" என்று அவர் சென்னைக்குப் புறப்பட்டார்.

தன் அழைப்பின் பேரில் சென்னைக்கு வந்த சீதாராமனுக்கு "மிஸ் மாலினி" படத்தில் நாடக டைரக்டராக நடிக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். இவர் இந்தப் படத்தில் மிகவும் அபாரமாக நடித்து, நடிப்பு என்பதை விட நிஜமாகவே எல்லாம் நடப்பதுபோல் தத்ரூபமாய் நடித்துக் காட்டினார். பிறகு இவர் சந்திரலேகா, ஏழை படும் பாடு போன்ற படங்களில் நடித்தார்.

'ஏழை படும் பாடு' சீதாராமனை ஒரு உன்னத நடிகரென்று ஊர்ஜிதம் செய்து வைத்தது. அதில் இவர் 'ஜாவர்' பாத்திரத்தில் திறம்பட நடித்ததால் இவருக்கு இப்பெயரே நிலைத்துவிட்டது. பிறகு, அவருக்குப் பட உலகில் கிராக்கி அதிகரித்துவிட்டது.

இவர் சினிமா உலகில் படத்தின் மூலமே பிரகாசிக்கத் தொடங்கியதற்குக் காரணம், பள்ளிக்கூட நாடகங்களில் நடித்தும், மேடையில் பிரசங்கம் பேச்சுப் போட்டி இவைகளில் நிறைய அனுபவம் பெற்றிருந்ததுதான் என்று கூறலாம்.

திருச்சி ஜில்லாவிலுள்ள அழகிய மணவாளன் கிராமத்தில் 1920-ல் ஜூலை மாதம் 6-ஆம் தேதி பிறந்தார். ஆரம்பத்தில் படித்தது கோயமுத்தூரிலுள்ள சர்வ ஜன ஹைஸ்கூலில்தான். இப் பள்ளியின் ஹெட்மாஸ்டராயிருந்த ஸ்ரீ. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் சீதாராமனிடம் மிகப் பிரியம் கொண்டிருந்தார். நாடகங்களில் இவரை நடிக்கத் தூண்டி உற்சாகமூட்டியவர் அவர்தான். பல பிரசங்கங்களிலும், போட்டியிலும் இவர் முதன்மையாக நின்று 'கப்'கள், மெடல்கள் முதலியவைகளைப் பெற்றிருக்கிறார். 1940-ல் சர்வகலா சாலை சங்க விவாதத்திலும், 1941-ல் கஸ்தூரிரங்கய்யங்கார் ஞாபகார்த்தப் பிரசங்கப் போட்டியிலும், 1950-ல் சட்டக்கல்லூரிப் பிரசங்க

போட்டியிலும் முதன்மையாக நின்று அவர் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

சைவ ஜன ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். ஸி. முடித்துக் கொண்டு, திருச்சி நாஷனல் காலேஜில் இண்டர் மீடியட்டை முடித்து, செயின்ட் ஜோசப் கல்லூரியில் பி. ஏ. ஹானர்ஸ் பாஸ் செய்தார். அவர் தேசிய கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். இதன் பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல். பட்டமும் பெற்றார்.

படிப்பிலும் நடிப்பிலும் தேர்ந்த சீதாராமன் எழுதுவதிலும் திறமையுடையவர். பத்திரிகைகளில் "கௌசி" என்ற புனைப் பெயரில் பல நல்ல கதைகளை எழுதியிருக்கிறார். திரைப்படங்களுக்குப் பல நல்ல கதைகளை எழுதியுள்ளார். இவர் பணம்-பெண்-பாசம், நானே நான், சொர்க்கத்தில் புயல், மின்னல்-மழை-மோகினி, உடல்-பொருள்-ஆனந்தி போன்ற கதைகளைப் பத்திரிகைகளில் தொடராக எழுதினார். இவர் திரைக்கதையைத் தவிர வசனம் டைரக்ஷன் போன்ற பொறுப்புகளையும் திறம்பட செயலாற்றியுள்ளார்.

இப்படிச் சகலகலா வல்லவனாகத் திகழ்ந்த இவர் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவருடைய புகழும் எழுத்துக்களும் நம்மிடையே இன்றும் நிலவி வருகிறது.

# நானே நான்

30052
4663165

## 1

ஆங்கிலேயர் ஆண்ட அந்தக் காலத்தில் ஒரு தனிவித ஜாதி உலவி வந்தது நம் நாட்டிலே.

ஜமீன்தார்கள், மைனர்கள், படித்த மிட்டாதார்கள் ஆகிய இனங்களில் உருவாயிற்று இந்த ஜாதி. அதற்கென்று தனி லட்சணங்கள், முத்திரைகள் உண்டு.

ஓரளவு படித்தவர்களாயும் ஆங்கிலேயர்களின் அன்பர்களுமாயிருப்பார்கள். பழக்க வழக்கங்களில், ஆங்கிலோ இந்தியச் சாயல் இருக்கும். கோடையில் உதகையிலும், மாரியில் சென்னையிலும் உலவும் வர்க்கம் இது. பிள்ளைகள் மழலைப் பருவத்தில் சென்னை கான்வென்டிலும், வாலிபப் பருவத்தில ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், லண்டன் சர்வகலா சாலைகளிலும் படிக்கச் செல்வார்கள். திரும்புகையில் ஐ. சி. எஸ். முத்திரையோ அல்லது ஆங்கிலேயப் பெண்ணை மணந்த ஒரு முத்திரையோ பெற்றுத் திரும்புவார்கள்.

கப்பலில் இறங்கியவுடன் பம்பாய் தாஜ்மஹால் ஹோட்டலில் வெள்ளைக்கார மனைவியோடு தங்கியிருக்கும் நிலையிலேயே, உறவினர்கள் சென்று சில ஆயிரம் ரூபாய்களைப் பிள்ளையாண்டான் அழைத்து வந்த அந்த நாட்டு அப்ஸரஸுக்குக் கொடுத்து இந்தியாவில் அவள் தொடர்ந்து தங்குவதனால் அவளைப் பிடித்துக் கொள்ளக் காத்திருக்கும் மலேரியா, காலரா அம்மை போன்ற நோய்களைத் தடுத்து விவரித்து, மறு கப்பலிலேயே அவளைத் தாய் நாட்டுக்கு அனுப்பி விட்டு வருவதுண்டு.

சில இளைஞர்கள், 'காதல் போயின் சாதல்' என்று ஊருக்குப் பொய்யாகக் கூடாதே என்ற அக்கறையில் வெள்ளைக்கார மனைவியைச் சொந்த ஊருக்கே கொண்டு வருவதும். அவளுக்குத் தனி வீடு கட்டி அதில் ஒரு டென்னிஸ் கோர்ட்டு நிறுவி அவளோடு பந்தடிப்பதும், அதைப் பார்க்க அக்கம் பக்கத்து அரை கிராமமே வருவதும் கூடுவதும் உண்டு. மைனரும் துரைசானியும் பங்களாவின் புல் தரையில் வலை கட்டி அம்மானை ஆடும் அழகுத் வைபவத்தை ஊர்க்கோடி வீட்டிலிருந்து மைனரின் பாவ மனைவி கண்ணீரோடு கண்டு புழுங்கும் சோகக் கதையும் இருக்கும்.

உள்ளூரிலோ ஐந்து வயது இளங்கன்னிப் பருவத்தில் கணவனுக்கு மாலையிட்டு, பின்னர் பருவமடைந்து உடல் கொழிக்கும் பருவத்தில் அவன் எங்கோ சீமையிலே நாம் இங்கு ஊரிலே என்று வாழ்ந்துவிட்டு, திரும்பிய கணவனைத் தொடவும் முடியாமல் குடும்பக் கணக்குப் பிள்ளை மூலம் கணவன் வீட்டு அன்றாட நடவடிக்கைகளை உணர்ந்து வெதும்பும் அபலைகளுக்குத் திடீரென்று விமோசனம் ஏற்படுவதும் உண்டு. அதாவது, துரைசானியின் மனத்துக்கு இந்தியா புளித்துப் போனதும் அவள் நிரந்தரமாக ஊர் திரும்பலாம் என்று நினைப்பதல்லவோ அல்லது இந்தியக் கணவன் புளித்துப் போய் உள்ளூரிலே வேறு எவன் மீதோ அவள் ஆசை திரும்ப, மைனருக்குத் தெரிந்துவிட, அதோ நம் நாட்டுப் பெண்ணின் பதிவிரதைத் தன்மையின் பெருமை மைனரின் கண்களுக்குப் புலப்பட, மைனர் வெள்ளை மனைவிக்கு விவாகரத்தும், திரண்ட பணமும் கொடுத்து, அவளை அவள் பிறந்த சீமைக்கு அனுப்பிவிட்டு அதன் பின்பு தன் வாழ்க்கை முறையையே மாற்றிக் கொள்வதும் உண்டு. பிறகு உள்ளம் மாறிய மைனர், கோவில் கும்பாபிஷேகங்களிலும் அத்வைத சபைகள் பராமரிப்பிலும் முறையாக மணந்த மனைவியோடு பங்கெடுத்துக் கொண்டு ஊரின் பாராட்டுதலைப் பெறுவார். ஏன்



மனைவியின் பாராட்டுதலையும் பெறுவார். ஒரு சிலர் தேசத் தொண்டிலும் தீவிரமாக இறங்கி ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் சத்தியாக்கிரகம் செய்து, சிறை சென்று தியாகிகள் ஆகிப் பின்பு பதவிகளை அடைந்ததும் உண்டு.

ஒழுங்காக உள்ளூரில் வாழ்ந்த மைனர்களும் இல்லாமலில்லை. ஆனால் ஊதாரியாய் வாழ்ந்து மனந்திருந்தி திரும்பிய மகனுக்குக் கொழுத்த ஆட்டை வெட்டி விருந்து வைத்ததாகக் கூறப்படும் பைபிளின் ஊதாரிப் பிள்ளைக் கதைபோல் இந்த மைனர்களுக்குத் தவறு செய்தபோதும் ஒருமித்த பாராட்டுதல். திருந்திய போதும் பாராட்டு.

'பிரிட்டிஷ் தாசர்கள்' என்று இந்த இனம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும், சென்ற நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் ஆங்காங்கே இந்தியா பூராவும் வசதி நிறைந்த சிறுபான்மை இனமாக இருந்தது. காவிரிக் கரையில் பாரிமங்கலம் மைனரும் அந்த ஓர் இனத்தைச் சேர்ந்தவர்தான். பாரிமங்கலம் மைனருக்குத் தந்தை தாய் வைத்த பெயர் ராஜலிங்கம். ஆனால் அவர் அந்தப் பெயரை ராஜன் பாரிமங்கலம் என்று மாற்றி வைத்துக் கொண்டார்.

சங்கீதக்காரரைப் போல் தன் பெயருடன் ஊர் பெயரையும் சேர்த்துக்கொண்ட ராஜன் சங்கீதத்திலும் ஆர்வம் உள்ளவர்தான். கர்நாடக சங்கீதமும் அவருக்குத் தெரியும். ஐரோப்பிய சங்கீதமும் அவருக்குத் தெரியும். ஐரோப்பிய பந்தி சங்கீதம் முதல் இன்று அமெரிக்கா ஐரோப்பாவைப் பித்தாக்கி இருக்கும் பீட்டில் சங்கீதம் வரை அவருக்குப் பரிச்சயம் உண்டு.

நாத நாமக்ரியா ராகத்தை ஐரோப்பிய சங்கீதத்தில் என்ன உருவில் பாடலாம். பிரெஞ்சு இத்தாலியன் என்ற உருவத்தில் அமைப்பார்கள். எப்படி ஆரோகண ஸ்வரங்களுக்கு வந்தால் எந்த ஒலி உருவம் அமையும் என்று ஸ்வரப்படுத்திக் காட்ட அவரால் முடியும். ஒரு ராகம் ஐரோப்பாவில் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்குப் பிரயாணம் செய்யும்போது அது அடையும் உருவமாற்றம்

கலை விளக்கும் அளவுக்குத் திறமை ஏற்பட்டதன் காரணம் அவரது மனைவி பங்கஜத்தின் கலை ஆர்வமே. பங்கஜம், பொன்மங்கலம் மைனரின் ஒரே மகள்.

காவிரியின் வடகரையில் உள்ளது பொன்மங்கலம். நேர் எதிரே தென்கரையில் அமைந்தது பாரிமங்கலம். பொன்மங்கலம் பண்ணைக்கும் பாரிமங்கலம் பண்ணைக்கும் சில தலைமுறைகளாக இருந்த தீராத பகை தீர்ந்தது பங்கஜத்தின் பிறப்பால். பிறகு அவள் திருமணத்தால் பொன்மங்கலமும் பாரிமங்கலமும் ஒன்றாகி விட்டன. பாரிமங்கலம் மைனர்கள் எப்போதுமே எதிலும் புதுமை விரும்புபவர்கள், துணிச்சல் வழி சென்று புதுப்பாதை வகுப்பவர்கள், காரர்கள். ஆனால் பொன்மங்கலம் குடும்பத்தார்கள் பழங்கால முறை சம்பிரதாயத்தின் சிறையில் அடைபட்டு வாழ்ந்து வந்தவர்கள்.

அரசியல் தேர்தல் கலைநிகழ்ச்சி இவற்றில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வதே இல்லை. பொன்மங்கலம் மைனருக்குப் பொது வாழ்க்கை என்று ஒன்று உண்டு என்றால், அது ஊர் சிவன் கோவில் நிர்வாகம்தான். மற்றபடி அவர் வீடுண்டு கணக்கு வழக்குகள் உண்டு. சரிகை வேட்டி கட்டுவதே ஊதாரித்தனம் என்று நினைத்தவர் சாய வேட்டியே கட்டுவார். பாரிமங்கலம் பண்ணையில் பொன்மங்கலத்தை, 'சாய வேட்டிப் பண்ணை' என்றே புரளியாக அழைப்பது வழக்கம். பாரிமங்கலத்தார் வெளிநாடு சென்று திரும்புவதும் சென்னையில் அவர்கள் வாழ்ந்த ஆடம்பர வாழ்க்கையும் பற்றி புகழ்ந்து யாராவது பொன்மங்கலம் பண்ணையார் நமச்சிவாயத்திடம் சொன்னால் நமச்சிவாயம் அமைதியாகச் சிரிப்பார். "அவுங்க அவுங்க பரம்பரைக் குணம் எங்கே போகும்? பாரிமங்கலம் பண்ணை ஆரம்பிச்சதே மிளகாய் மூட்டையிலேதானே? அதுதான் அவுங்க எதிலேயுமே காரசாரமா இருக்காங்க" என்பார்.

பொன்மங்கலம் பண்ணையார் குடும்பம் ஆஸ்தி பாஸ்தியோடு பண்ணையாக இருந்தபோது





பாரிமங்கலம் குடும்பத்தின் செல்வத்தை ஸ்தாபித்த முத்துவீரப்பர், ரெங்கூன் துறைமுகத்தில் மிளகாய் மூட்டைகளைக் கப்பலில் இருந்து கரைக்குத் தூக்கிப் போடும் கூலியாக இருந்ததைத்தான் நமச்சிவாயம் குறிப்பிடுகிறார். ராஜலிங்கத்தின் தந்தை சாமலிங்கத்திடம் இதைக் கூறினால் அவர் வெகுண்டு பேசுவார்.

"பரம்பரையாம், பண்ணைக்கட்டுமாம். எந்தப் பரம்பரையும் ஆரம்பிக்கிறப்போ ஏதாவது ஒரு மூட்டையிலேதானே ஆரம்பிக்குது? நமச்சிவாயத்தின் முப்பாட்டன் மட்டும் என்னவாம்? கொங்கு நாட்டிலே தீவட்டி கொள்ளை அடிச்சுச் சம்பாதிச்ச பணத்திலேதான் நிலம் வாங்கினார்? எங்க மூதாதையாவது உழைச்சுச் சம்பாதிச்சார். இவுங்க சொத்து, இருட்டு மூட்டையிலே தானே ஆரம்பிச்சது" என்பார். இந்த விவாதத்தை யாராவது போய், பொன்மங்கலம் நமச்சிவாயத்திடம் சொல்வார்கள். உடனே நமச்சிவாயம், "ரொம்ப ஒழுங்கா உழைச்சவங்க, தெரியாதாக்கும், முத்துவீரப்பன் மகன் பெத்து வீரப்பன் எப்படி நிலம் சம்பாதிச்சான்னு எனக்குத் தெரியாதா? பெத்து வீரப்பன் சம்பாதிச்ச வித்தையைக் [illegible] ஊரு திறந்து சொல்ல முடியாதே" என்பார்.

ராஜலிங்கத்தின் கொள்ளுப்பாட்டன், பெத்து வீரப்பனின் தந்தை முத்துவீரப்பன், மிளகாய் மூட்டை தூக்கி சம்பாதித்த முப்பதாயிரம் ரூபாயில் அறுபது ஏக்கர் நிலம் வாங்கினார். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அறுபது ஏக்கராயிருந்த சொத்து ஆறாயிரம் ஏக்கராக விருத்தியானது, பெத்து வீரப்பனின் முயற்சியாலே ஆகும்.

பெத்து வீரப்பன் ஆறடி உயரமும், அதற்கேற்ற பருமனும் உருண்டு திரண்ட புஜங்களும் உடையவனாக இருந்தானாம். அவரது அகன்ற மார்பும், பருத்த முதுகும் மிளகாய் மூட்டை தூக்கிய தந்தையின் [illegible] அமைந்தவை என்பார்கள்.

பெத்து வீரப்பனின் பலமும் அழகும் அவரது ஒழுக்கமில்லா நடவடிக்கையும் அவரைச் சுற்றிப் பல கதைகள் உலவக் காரணமாயிருந்தன. பெத்து வீரப்பனுக்கு ஒரு டஜன் குழந்தைகள் இருந்தனர். தொண்ணூறு வயதில் அவர் இறக்கும் போது அவருக்குக் கொள்ளி வைக்க ஒரு மகனும், 'அப்பா போய் விட்டாரே' என்று சொல்லி அழ ஒரு மகளுமே மிஞ்சினர்.

பெத்து வீரப்பனைப் பெத்துக் கொடுத்த வீரப்பன் என்று வியாக்கியானம் செய்தாராம் அவர் காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழய்யா. 'பெத்து வீரன் காவடிச்சிந்து' என்று ஒரு மட்டரகமான நூல், அவர் கதையைக் காவடிச் சிந்தில் அமைத்து ஊர் பூராவும் பரப்பியிருந்தது; பெத்து வீரப்பனின் மகன் குத்தாலலிங்கம் 25000 ரூபாய் செலவு செய்து அந்த நூல் பிரதிகளையும் அதை அச்சடித்த அச்சகத்தையும் வாங்கி, அந்த நூலைச் செலாவணியிலிருந்து நீக்கினார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒரு காவடிச் சிந்துக்குப் பாட்டுடைத் தலைவனாகி, அந்த நூல் பிரபலமாகக் காரணமாயிருந்தது, பெத்து வீரப்பனின் வாழ்க்கையே. எதைச் செய்தும் சொத்து சேர்ப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்தார் பெத்து வீரப்பன்.

ஓர் எருதின் ஜீரணச் சக்தி படைத்தவராயிருந்தார் பெத்து வீரப்பன். காலைப் பலகாரத்துக்கு 20 இட்டிலியும் 10 வடையும் சாப்பிடுவாராம். மாலையில் காவிரி நதியில் இரண்டு மணி நேரம் நீந்திவிட்டுக் கரையேறியதும் எதிரேயுள்ள ஓட்டல் கடையில் புகுந்து ஒரு தட்டு தயிர்வடை பூராவும் விலைக்குப் பேசி அதன் மீது ஒரு படி காராபூந்தியைக் கொட்டித் தட்டைக் காலி செய்வாராம். அவர் தீனியைப் போல்தான் அவர் ஆண்மையின் புகழும் பாடப்பட்டிருந்தது காவடிச் சிந்தில்.

தேவதாசிகள் தந்த பணத்திலேதான் அவர் முதல் பதினைந்து ஏக்கர் நிலம் வாங்கினார் என்பது ஊர் வதந்தி. உண்பதிலும் உழைப்பதிலும் இன்பம் துய்ப்



பதிலும் ஓர் அசுரனாக விளங்கிய பெத்து வீரப்பன் வாழ்வில் திடீரென்று அதிர்ஷ்டம் அடித்தது.

அந்த ஜில்லாவுக்கு ஜோஸப் என்ற ஆங்கிலேயர் கலெக்டராக நியமிக்கப்பட்டார். கலெக்டர் ஜோஸப் ஜமா பந்திக்கு முசாபரி பங்களாவில் 'காம்ப்' செய்தபோது அவருடைய தேவைகளைக் கவனிக்கும் பணியை பெத்து வீரப்பனே ஏற்றுக் கொண்டார். அவரது ஆஜானுபாகுவான உருவமும் அவருடைய கறுத்த விழிகளும் முறுக்கு மீசையும் கலெக்டரின் மனைவி நோரா ஜோஸப்பைக் கவர்ந்தன.

பெத்து வீரப்பன் ஒரு கன்டிராக்டர் ஆனார். ரயில் பாதைகள் போடவும், ரயில் பாலம் கட்டவும் ஆரம்பித்தார். அவருக்கு நிரந்தரமாக அரசாங்கத் தொடர்பு ஏற்பட்டது. ஆங்கிலமும் கற்றுக் கொண்டார். பாரிமங்கலம் குடும்பத்தில் அன்று ஏற்பட்ட நாகரீகம்தான் பின்பு தொடர்ந்து வளர்ந்தது; முனிசிபாலிடி, டிஸ்ட்ரிக்ட் போர்ட் முதலிய இடங்களைக் கைப்பற்றினார்கள் அவர் சந்ததிகள். ராஜலிங்கத்தின் தந்தை ராமலிங்கம் மாகாண நிர்வாக மெம்பர் பதவி வரையில் வந்துவிட்டார். எந்தப் பதவியும் அடைய முடியாமல் படிப்பில்லாத வெறும் விவசாயியாக இருந்த பொன்மங்கலம் நமச்சிவாயம் தனக்கு இருந்த ஆத்திரத்தைப் பலவகையில் தீர்த்துக் கொண்டார். நமச்சிவாயம் நடத்தி வந்த கால்நடைப் பண்ணையில் இருந்த பொலிக் காளைகளுக்கு, பெத்து வீரப்பன் ஒன்று, பெத்து வீரப்பன் இரண்டு என்று பெயர் வைத்திருந்தார். இந்த நிலையில் ஒரு விசித்திர சம்பவம் நடந்தது. இது ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதிலே.

அந்தச் சம்பவம் இரு குடும்பங்களுக்கிடையே இருந்த பகையைக் குறைத்து நட்பை வளர்க்க உதவியது. ஒரு நாள், வில்லை அணிந்த சேவகன் ஒருவன் நமச்சிவாயத்தின் வீட்டுக்கு வந்து அவரிடம் ராஜாங்க முத்திரை தாங்கிய உறையைக் கொடுத்தான். ஆங்கில வாடையே உணராத நமச்சிவாயம் ஆங்கிலத்தில் கையெழுத்துப்

போட மட்டும் கற்றுக் கொண்டிருந்தார். அரசாங்கம், கோர்ட்டு, ஆபீஸ் என்றாலே நமச்சிவாயத்துக்குப் பயம். அரசாங்கத் தொடர்பெல்லாம் பண்பில்லாத பாரிமங்கலத்தானுக்குத்தான் சரி. நமக்கு சரிபட்டு வராது என்று இருந்தவரின் வீட்டுக்கு அரசாங்க வில்லைச் சேவகன் வந்தது பயத்தைக் கொடுத்தது. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கையெழுத்துப் போட்டு உறையை வாங்கிக் கொண்டு அதைப் பிரித்துப் படித்துப் புரிந்து கொண்டவர் போல் நடித்துவிட்டு, சேவகனுக்கு ஒரு ரூபாய் சன்மானம் அளித்துவிட்டு அவனை அனுப்பினார்.

அந்தச் சமயத்தில் நமச்சிவாயத்துக்கு அவர் மைத்துனன் குண்டுப் பிள்ளையின் ஞாபகம் வந்தது. குண்டுப் பிள்ளை என்பவர் நமச்சிவாயத்தின் மனைவியின் சகோதரர். பட்டணத்துப் பழக்கமுடையவர். அவருக்கு ஆங்கில ஞானம் உண்டு என்பது நமச்சிவாயத்தின் நம்பிக்கை. ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் வந்தால், அவர்களோடு பேசிச் சமாளிக்கும் பொறுப்பு குண்டுப் பிள்ளையுடையது. அடிக்கடி "எஸ்" "எஸ்" என்றும், "கரெக்ட்" "ஆல்ரைட்" "சர்ட்டன்லி" என்றும், அவரது உரையாடலின் போது ஆங்கில வார்த்தைகள் அடிபடுவது வழக்கம். குருடர்களின் நடுவே ஒரு கண் மட்டும் போனவன் ராஜா என்பது போல், தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு, நமச்சிவாயத்தைக் குண்டுப் பிள்ளை திகைக்க வைத்துக் கொண்டிருந்தார். குண்டுப் பிள்ளையின் அரைகுறை ஆங்கில அறிவு அவர் பிறந்த ஊரில் பெரும் ஆபத்தை விளைவித்த கதை, நமச்சிவாயத்துக்குத் தெரியாது. ஒருவருக்கு டில்லியிலிருந்து வந்த தந்தியைத் தவறாகப் படித்து, உயிரோடிருந்த மகனை 'இறந்து விட்டான்' என்று சொல்லி அந்தக் குடும்பம் கருமாதி செய்யும் அளவுக்குக் கொண்டு வந்து விட்டவர் குண்டுப் பிள்ளை. இறந்து போனதாகக் கூறப்பட்ட மகன் ஊர் திரும்

www.t.me/tamilbooksworld



பியதும், குண்டுப் பிள்ளைக்கு இருந்த ஆங்கில அறிவின் 'உண்மையை' எல்லோரும் புரிந்து கொண்டனர்.

"கடிதத்தில் கோர்ட் முத்திரை இருக்குன்னு சொல்றியே. என்ன எழுதியிருக்கு சொல்லு" என்று பதறிப் படி கேட்டார் நமச்சிவாயம். அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்த குண்டுப்பிள்ளை, தன் அறியாமையைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. தெரியாத விஷயத்தைப் பேச்சில் சமாளிக்க ஆரம்பித்தார். "என்ன அத்தான், வாய்தாப் பணத்தைத் தவறாமல் கட்டியிருக்கீங்க இல்லையா?" என்று கேட்டார்.

அதற்கு நமச்சிவாயம், "அதிலே தவறினதே கிடையாதே" என்று கூறினார்.

மேற்கொண்டு குண்டுப் பிள்ளை, "புறம்போக்கு மரம் எதையாவது வெட்டினீர்களா?" என்று கேட்க, உடனே நமச்சிவாயம், "அப்படியெல்லாம் ஒன்றும் செய்யலியே. தோப்பு தோப்பா மரங்கள் எனக்குச் சொந்தமா இருக்கறப்போ, நான் ஏன் புறம்போக்கு மரத்தைப் போய் வெட்டறேன்" என்று அழாக்குறையாக அலறினார்.

உண்மையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று புரியாத குண்டுப் பிள்ளை, "அது என்னமோ அத்தான், கோர்ட்டுக்கு உங்களைப் பத்தாம் தேதி வரச் சொல்லி உத்தரவு போட்டு இருக்காங்க" என்றார்.

"கோர்ட்டுக்கா? நானா போகணும்? நான் பிழைச்ச பிழைப்பென்ன, வாழ்ந்த வாழ்வென்ன? நான் இப்போ கோர்ட்டுக்குப் போகும்படி ஆயிடுச்சே! யாரோ என்மேல் வீணாப் பிராது கொடுத்திருக்காங்க" என்று நமச்சிவாயம் கூச்சலிட ஆரம்பித்தார்.

குண்டுப் பிள்ளை அவரைப் பார்த்து, "அத்தான் வீணாகக் கூச்சல் போட்டு, உங்க அவமானத்தை விளம்பரப்படுத்தாதீங்க. நீங்க கோர்ட்டுக்குப் போகிற விஷயம் ஊரிலே யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று கூறி

அடக்கி வைத்தார். அதற்குப் பிறகும் நமச்சிவாயம், மனத்திற்குள்ளேயே பொரும ஆரம்பித்தார். தினமும் காலையில் அரச மரத்தடியில் உட்கார்ந்து தேவாரம் படிக்க ஆரம்பித்தார். மனைவியிடம் கூடத் தனக்கு நேர்ந்ததைச் சொல்லிக் கொள்ள வெட்கம்! கோவில்களுக்கெல்லாம் அபிஷேகம் செய்வதாக வேண்டிக் கொண்டார். பத்தாம் தேதி வருவதற்குள் மனிதர், அரை மனிதர் ஆகிவிட்டார். பாரிமங்கலம் பண்ணையார்தான், திருச்சி டவுனில் வக்கீலாக இருக்கிறார். இந்த உத்தரவு அவர் சூழ்ச்சியாகத்தான் இருக்கும் என்று நினைத்துப் பொருமினார்.

பத்தாம் தேதி காலை. சட்டை, கோட், வேட்டி— எல்லாவற்றையும் அணிந்து கொண்டார். மனைவியையும் தன் மூன்று வயது நிரம்பிய அருமை மகள் பங்கஜத்தையும், கண்ணீரோடு பார்த்தார். இனிமேல் இவர்களைப் பார்ப்போமா, பார்த்தாலும் இனி எப்போது பார்ப்போமோ என்ற பயம்! வில் வண்டியில் ஏறிக் கொண்டார். வண்டியில் செல்லும்போது, அடிக்கடி அந்தக் கோர்ட் முத்திரை போட்ட பேப்பரைப் பார்த்துக் கொண்டார். வில் வண்டி ஸ்டேஷனை வந்து அடைந்தது. ரயிலும் வந்தது. ரயிலில் ஏறும்போது ஒரு கான்ஸ்டபிள் அந்த ரயிலில் ஏறுவதைப் பார்த்ததும் அவர் பயம் இன்னும் அதிகமாயிற்று. தன்னைப் பின் தொடர்கிறான். போலீஸ்காரன் என்ற விபரீதமான எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

ரயில் திருச்சியை அடைந்தது. மெள்ளத் தள்ளாடிய படி வண்டியிலிருந்து இறங்கி ஸ்டேஷனுக்கு வெளியே வந்தார். வெளியே பாரிமங்கலம் பண்ணையார் ராமலிங்கம் காரில் அமர்ந்திருந்தார். ராமலிங்கத்தைப் பார்த்ததும் நமச்சிவாயத்துக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ராமலிங்கமும் நமச்சிவாயத்தைப் பார்த்தார். நமச்சிவாயம் போன்ற பெரிய மனுஷன் ஸ்டேஷனுக்கு வெளிப்புறம் குதிரை வண்டிக்காரனுடன் பேரம் பேசுவது பரிதாபமாக



இருந்தது. ராமலிங்கம் உடனே பரம்பரைப் பகையை மறந்து, "என்னங்க நமச்சிவாயம்! ஏது, அபூர்வமா டவுனுக்கு வந்து இருக்கீங்க!" என்று வினவினார். நமச்சிவாயம் விழித்துக் கொண்டே, "ஒன்றுமில்லை. சும்மா அப்படியே மார்க்கெட்லே வேலையிருந்தது....." என்று சொல்லி மழுப்பினார். "சரி, வாங்க. என் காரிலேயே நம்ம வீட்டுக்குப் போகலாம்" என்று அன்போடு அழைத்தார். "ராமலிங்கம், செய்யறதையும் செய்துவிட்டு, என்ன அன்பா கூப்பிடறான் பாரு" என்று நினைத்தார் நமச்சிவாயம். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "வேண்டாங்க, நான் ஓட்டலுக்கே போறேன்" என்றார். "ஊஹூம், நீங்க இந்த முறை நம்ம வீட்டுலேதான் தங்கணும்" என்று வற்புறுத்தினார் ராமலிங்கம். நமச்சிவாயத்துக்கு அதற்கு மேல் மறுக்க முடியவில்லை. ராமலிங்கத்தின் காரில் ஏறிக் கொண்டார். விஷயம் புரியாத ராமலிங்கத்துக்கு, தம் பரம்பரைக்கும் நமச்சிவாயத்துக்கும் உள்ள பகை முடிய வேண்டும் என்ற ஆசை இருந்தது. படித்த ராமலிங்கம், பொன்மங்கலத்தில் நமச்சிவாயத்துக்குள்ள அந்தஸ்தை உணர்ந்தார். மிகவும் அன்போடு பழகினார். ஆனால் நமச்சிவாயம் ஓரிரண்டு வார்த்தைகளோடு நிறுத்திக்கொண்டார். ராமலிங்கத்தின் கன்டோன்மெண்ட் பங்களா வந்ததும், வேண்டா வெறுப்பாக உள்ளே சென்றார் நமச்சிவாயம். ராமலிங்கத்திடம் அந்தக் கடிதத்தைக் காட்டி உதவி கேட்பதும் கேவலம் என்று நினைத்தார். பரம வைரி ராமலிங்கத்தின் காலில் விழுவதைவிட, ஜில்லா கோர்ட் சேவகன் காலில் விழுவது எவ்வளவோ மேல் என்று நினைத்தார். காரை விட்டு இறங்கியதும் அரை டிராயர், பூட்ஸ் அணிந்த எட்டு வயதுச் சிறுவன் ராஜலிங்கம் ஓடி வந்து ராமலிங்கத்திடம், "குட் மார்னிங் டாடி" என்று ஆங்கிலத்தில் வணக்கம் தெரிவித்தது. நமச்சிவாயத்திற்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

## 2

ராமலிங்கத்தின் செல்ல மகன் ராஜன், தந்தையிடம் ஆங்கிலத்தில் பேசுவது கண்டு வியந்து நின்றார் நமச்சிவாயம். கூர்த்த விழிகள், நிமிர்ந்த மூக்கு, நெற்றியில் சுருண்டு விழுந்த கறுத்த குழல் கற்றை—குழந்தை ராஜனைப் பார்ப்பதற்கு ஆயர்பாடிக் கண்ணனையே ஞாபகப்படுத்திற்று. என்ன அழகு, என்ன பேச்சு! அப்பப்பா! இந்தப் பாரிமங்கலம் குடும்பத்தார் எல்லா விஷயத்திலும் கொடுத்து வைத்திருக்கிறார்கள்'' என்று வெதும்பினார் நமச்சிவாயம்.

நமச்சிவாயத்தின் மனத்தில் கொந்தளிக்கும் பொறாமையை உணராத ராமலிங்கம், ''வாங்க, காப்பி சாப்பிடுவோம்'' என்று அவரை அழைத்தார்.

பொன்மங்கலம் வீட்டார், பாரிமங்கலம் வீட்டில் பச்சைத் தண்ணீர் குடித்து இருபத்தைந்து வருடமாகிறது! நமச்சிவாயத்தின் தந்தை காலத்திலிருந்தே இரண்டு குடும்பத்தாருக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. 'நம் மூதாதையர்களுக்குத் துரோகம் புரிந்து விட்டோமே; பரம்பரைப் பகை வீட்டுக்கு வந்து விட்டோமே! மைத்துனன் குண்டுப் பிள்ளை இதைக் கேள்விப்பட்டால் என்ன நினைப்பார்! மனைவிக்குத் தெரிந்தால் என்ன நினைப்பாள்!' நமச்சிவாயம் தயங்கினார். ''இன்னிக்கு உபவாசம். நான் ஒன்றும் சாப்பிடுறதில்லை'' என்று ஒரு பொய்யை எடுத்துப் போட்டார்.

ராமலிங்கம் புரிந்துகொண்டு சிரித்தார்.

''உபவாசம்னா, பழரசம் சாப்பிடலாமில்லையா?'' என்று தொடர்ந்து உபசரித்தார்.

'எதுவும் சாப்பிடுறதில்லீங்க! சுத்தப் பட்டினி'' என்றார் நமச்சிவாயம்,

இருவரும் பேசிக்கொண்டே டைனிங் ரூமுக்கு வந்தனர். ராமலிங்கம் கறுப்புக் கோட்டைக் கழற்றி, கோட் ஸ்டாண்டில் மாட்டினார். பட்லர் உடுப்பு அணிந்த ஒரு வேலையாள் தட்டுக்களையும் ஸ்பூன்களையும்



டேபிளில் பரத்தினான். வெண்சலவைக் கல் மேஜையையும் கலை வேலைப்பாட்டுடன் இருந்த தொங்கும் விளக்குகளையும் விழித்துப் பார்த்தபடி இருந்தார்.

இதற்குள் அந்தச் சாப்பாட்டு அறைக்குள் ராமலிங்கத்தின் மனைவி சிவகாமி நுழைந்தாள். எழிலாரும் விழியோடு, வைரக்கம்மல் மின்னலாடும் கன்னத்தோடும், குங்குமப் பொட்டு இட்ட நெற்றியோடு, அவள் வெண் பட்டுச் சேலையின் வெண்மை அவள் மேனி நிறத்திற்குத் தோற்று நிற்க, நெற்றியில் துலங்கிய குங்குமம் அவள் உதட்டுச் சிவப்புக்கு நிறம் குறைந்து நாண, நடந்துவரும் சிவகாமியைக் கண்டு நமச்சிவாயம் பட்டிக்காட்டான் முதன் முதலில் சினிமா பார்த்தது போல நின்றார்.

சிவகாமி பொன்மங்கலம் கோவில் விழாக்களில் நமச்சிவாயத்தைப் பார்த்திருக்கிறாள். அதனால் உடனே அடையாளம் புரிந்து கொண்டாள். அவரைத் தன் வீட்டில் கண்டது குறித்து அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. வெகு நாள் பகை ஒரு நொடியில் தீர்ந்தது எப்படி? இவர் எப்படி நம் வீட்டுக்கு வந்தார்? புரியாமல் திகைத்தாள்.

''நம்ம வீட்டுக்கு யார் வந்திருக்காங்க பாரு, சிவகாமி. பொன்மங்கலம் பண்ணையாரை ஸ்டேஷனில் பார்த்தேன். வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வந்தேன்'' என்று விளக்கினார் ராமலிங்கம்.

''ரொம்ப சந்தோஷம், வாங்க, வீட்டிலே அண்ணி குழந்தைகள் எல்லாம் சுகமா?'' என்று உபசரணைக்காகக் கேட்டாள்.

நமச்சிவாயம் அசடு வழிய, ''எல்லோரும் சுகம்! மார்க்கெட்டிலே சாமான் வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்று இழுத்தபடி சொல்லிவிட்டு, மேலே பேச முடியாமல் அந்த மேல்நாட்டு முறையில் அலங்கரிக்கப்பட்ட அறையில் தன் பார்வையைத் திருப்பினார்.

அதைக் கவனித்த சிவகாமி தன் கணவனிடம் திரும்பி, ''என்னாங்க, சும்மா நிக்கிறீங்க? அவுங்க எல்லாம் ரொம்பத்

திலே இருக்கிறவங்க. கால் முகம் கழுவாம ஒன்றும் சாப்பிட மாட்டாங்க. பாத்ரூமுக்குக் கூட்டிப் போங்க. நான் போய் பலகாரம் தயார் பண்ணச் செல்றேன்'' என்றாள்.

''வேண்டாம், ஒன்றும் வேண்டாம். நான் இன்னிக்கு உபவாசம்'' என்றார் பதைபதைப்புடன் நமச்சிவாயம்.

''இவ்வளவு வருஷம் நடக்காதது நடந்துட்டுது. நீங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. ஒன்றும் சாப்பிடாமல் போகிறதா?'' என்றாள் சிவகாமி.

'சாய வேட்டிப் பண்ணை என்று தன் குடும்பத்தைப் புரளி செய்த வீட்டில் சாப்பிடுவதா? பெரிய தப்பல்லவா செய்து விட்டோம். ராமலிங்கம் கூப்பிட்டபோது நாம் காரில் ஏறியிருக்கக் கூடாது. நம் புத்தி, அந்தக் கோர்ட்டு ஸ்டாம்பு போட்ட கடிதத்தினால் குழம்பிப் போயிருந்தது. இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் வந்து விட்டோம். இனி எவ்வளவு சீக்கிரம் வெளியே போகிறோமோ, அவ்வளவும் நல்லது' என்று நினைத்துக் கொண்ட நமச்சிவாயம், ''இல்லையம்மா! எனக்காக ஒன்றும் பலகாரம் தயார் செய்ய வேண்டாம். நான் உடனே மார்க்கெட்டுக்குப் போகணும். நான் வர்றேன்'' என்று கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியே நடக்க ஆரம்பித்தார்.

ராமலிங்கமும், சிவகாமியும் ஒரு விநாடி திகைத்தனர். ராமலிங்கம் உடனே சுதாரித்துக்கொண்டு, ''கொஞ்சம் நில்லுங்க. சாப்பிடவில்லைன்னா பரவாயில்லை. மார்க்கெட்டுக்கு நடந்து போவானேன்? என்னுடைய காரில் போய் இறங்கிக்குங்க'' என்றார்.

நமச்சிவாயம், ''அது சரி ராமலிங்கம், அப்படியே செய்யறேன், ரொம்ப நன்றி'' என்றார்.

ராமலிங்கம் உடன் சென்று, கார் கதவைத் திறந்து நமச்சிவாயத்தைக் காரில் உட்கார வைத்துவிட்டு டிரைவரிடம், ''ஐயா எங்கே போகணும்னு சொல்றாரோ, போய் விட்டு வா'' என்றார்.

www.t.me/tamilbooksworld



கார் நகர்ந்ததும், மனைவியிடம் திரும்பி, ''உபவாசமுமில்லை ஒன்றும் இல்லை. நம்ம வீட்டில் சாப்பிட அவருக்கு இஷ்டமில்லை. அவ்வளவுதான்'' என்றார்.

''அப்படிப்பட்டவர் ஏன் நம்ம வீடு வரை வந்தார்?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை. டவுன் பக்கமே நமச்சிவாயம் வரமாட்டார். அவருண்டு, கோவிலுண்டு, பஞ்சாட்சர ஜபமுண்டு என்று இருந்தவர், டவுனுக்கு வரணும்னா ஏதோ காரணம் இருக்கணும்'' என்றார் ராமலிங்கம்.

''இவ்வளவு சொத்தும் பணமும் இருக்கு. ஒரு கார் வாங்கக் கூடாது! இப்படியா ரயிலிலே வரணும்?'' என்றாள் சிவகாமி.

ராமலிங்கம் சிரித்தபடி, ''நம்மிடம் இருக்கிற ரொக்கத்தைவிட அதிகப் பணம் அவரிடம் இருக்கும். குறைந்தது முப்பது லட்சமாவது பணமாக இருக்கும். அதிலே கால் பங்காவது ரூபாய் நாணயமாகவே இருக்கும். அவுங்க பரம்பரைப் பழக்கம் அது. அசாத்திய செட்டு. ஆனால் ஒரு விஷயத்தில் அவுங்க வதாரிகள் தான். கோவில் கும்பாபிஷேகம், கோவில் திருப்பணி, சித்திரைத் தேர் இம்மாதிரி விஷயங்களில் பணத்தைப் பணமா பார்க்க மாட்டாங்க. நமச்சிவாயம் ரொம்ப நாள் வரை வீட்டுக்கு மின்சார விளக்கே போடாமல் இருந்தார். அவ்வளவு வெளிச்சம் எதுக்குன்னு சொல்லிட்டிருந்தார். அப்புறம் சொந்தக்காரங்க தொந்தரவு தாங்காமல் வீட்டுக்கு மின்சாரம் போட்டார். அப்போது பல்புகள் வாங்க வேண்டி வந்தது. 'எத்தனை கேண்டில் பவர் பல்பு வாங்கறது? 100 கேண்டில் பவரா, 50 கேண்டில் பவரா வாங்கறது?' என்று குண்டுப் பிள்ளை கேட்டார். நமச்சிவாயம், 'கேண்டில் பவர் என்றால் என்ன?' என்று கேட்டார். '50 கேண்டில் பவர்னா ஐம்பது மெழுகுவர்த்திகள் வெளிச்சம் உள்ள பல்பு' என்றார் குண்டுப் பிள்ளை. உடனே நமச்சிவாயம், '50 மெழுகுவர்த்தியா

எரிக்கிறோம்? ரூமுக்கு ஒரு மெழுகுவர்த்தி போதாது? எல்லா ரூமுக்கும் ஒரு காண்டில் பவர் போறும்பா?' என்று சொன்னாராம்'' என்று நமச்சிவாயம் தன் பங்களாவுக்கு மின்சாரம் தருவித்த வைபவத்தைக் கேலியாக விளக்கினார் ராமலிங்கம். சிவகாமி விழுந்து விழுந்து சிரித்தாள்.

நமச்சிவாயம் மார்க்கெட்டில் இறங்கிக் கொண்டு காரை அனுப்பியபின் பெருமூச்சு விட்டார்.

'நாளைக் காலையில் கோர்ட்டுக்குப் போக வேண்டும். அதுவரையில் எங்காவது தங்க வேண்டுமே' என்று யோசித்தார்.

முடிவில் மார்க்கெட்டுக்கு அருகில் உள்ள சிறு ஹோட்டலில் தினம் ஒரு ரூபாய் வாடகைக்கு உள்ள அறையை நிச்சயம் செய்துவிட்டு, மலைக்கோட்டை அடிவாரத்தில் உள்ள விநாயகர் கோயிலுக்குச் சென்றார். விநாயகருக்கு அர்ச்சனை செய்துவிட்டு குருக்கள் கொடுத்த விபூதி பிரசாதத்தை எடுத்துக் கோர்ட்டிலிருந்து வந்த அந்தக் காகிதத்தின் மீது தடவினார். தும்பிக்கையான் தயவால், அந்தக் கடிதத்தினுள் மறைந்திருக்கும் ஆபத்து, அவமானம் நீங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். கோவிலிலிருந்து தன் அறைக்குத் திரும்பும் பொழுது, 'நாம் என்ன தவறு செய்திருப்போம்? எதற்காக நம்மை ஜில்லா நீதிபதி அழைத்திருப்பார்?' என்று யோசித்தார்.

அப்போது ஒரு விஷயம் நமச்சிவாயத்தின் ஞாபகத்துக்கு வந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பு பொன் மங்கலத்தில் வாய்க்கால் தகராறு ஏற்பட்டது. அதில் அவர் பண்ணையாள் முனியன் ஒரு பணியாளை அரிவாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டான். போலீஸார் முனியனைச் சிறைப் பிடித்துச் சென்றனர். நமச்சிவாயம் முனியன் மனைவியிடம் ஐந்நூறு ரூபாய்களைக் கொடுத்துக் கோர்ட்டுச் செலவுகளுக்கு வைத்துக் கொள்ளுமாறு சொன்னார். முனியன் மனைவி நமச்



சிவாயத்திடம் ஆயிரம் ரூபாய் கேட்டாள். அவர் அதைக் கொடுக்க மறுத்து விட்டார். 'உங்களுக்காகப் பாடுபட்ட என் புருஷனைக் காப்பாத்த மறுக்கிறீங்களா? பாருங்க, உங்க பேர் சந்தி சிரிக்க வைக்கிறேன். உங்களைக் கோர்ட்டுக்கு இழுக்கிறேன்' என்று ஆத்திரத்துடன் அவள் கூறிப்போனது இப்போது ஞாபகத்துக்கு வந்தது. 'ஒரு வேளை அவள் தூண்டுதலால்தான் இந்த வாய்க்கால் தகராறில் என்னையும் இழுத்து விட்டார்களோ' என்று நினைத்தார்.

'பாரிமங்கலம் மைனர் ராமலிங்கம் ஒரு வக்கீல். அவரிடம் இந்தக் காகிதத்தைக் காட்டியிருக்கலாமே!' என்று மனம் நினைத்தது. 'சேச்சே! அவனிடம் காட்டினால், அவன் விவகாரத்தை இன்னும் வளர்த்து விடுவான். காட்டாமல் வந்ததே நல்லதாகப் போய்விட்டது. மைத்துனன் குண்டுப் பிள்ளை சொன்னது போல் 'ஜில்லா நீதிபதியின் சேவகனிடம் சென்று அடைக்கலம் புகுவது தான் சரியான வழி. சாமியின் சலுகை வேண்டுமாயின் பூசாரிக்குப் பழம் தேங்காய் கொடுத்துத்தான ஆக வேண்டும்? அதுபோலத்தானே ஜில்லா நீதிபதியும், அவர் பியூனும்?' என்று நமச்சிவாயம் கோவில் அநுபவத்தை வைத்துத் தீர்மானித்தார்.

தனக்குத் தெரிந்த ஒரு தேங்காய் வியாபாரியின் உதவியால் ஜில்லா நீதிபதியின் பிரதம சேவகன் மாணிக்கத்தின் விலாசத்தைத் தெரிந்து கொண்டார். உடனே ஜவுளிக்கடைக்குச் சென்று நூறு ரூபாயில் பட்டுப் புடவை, வேட்டி எல்லாம் எடுத்துக் கொண்டு, மாணிக்கத்தின் வீட்டுக்குச் சென்றார்.

அவர் போகும்போது, மாணிக்கம் இரவு சாப்பிட்டு விட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''மாணிக்கம் என்பது யாரு?'' என்று மாணிக்கத்திடமே கேட்டார்.

''நான்தான் மாணிக்கம். நீங்க யாருய்யா?'' என்று எரிந்து விழுந்தான் அவன்.



www.t.me/tamilbooksworld

''நீங்கதானே ஜில்லா நீதிபதியின் சேவகன்?'' என்று ம றுபடியும் கேட்டார்.

''ஆமாப்பா! ஆமாம். என்ன வேணும்? நீங்க யாரு?''

''கோவிச் க்காதேப்பா! நீதான் என்னைக் காப்பாத் தணும். ஒரு கோர்ட் விவகாரத்திலும் மாட்டிக்காமே எங்க குடும்பம் வாழ்ந்து வந்துச்சு இது வரையிலே. நானும் அப்படியே கௌரவமாகத்தான் வாழ்ந்து வந்தேன். இப்போ என் காலம் சரியில்லே. எனக்கு அஷ்டமத்திலே சனியும், குருவும் சேர்ந்திருக்கான். அதுதான் இப்படி எல்லாம் நடக்கு து'' என்று ஆரம்பித்தார்.

''நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்!''

''இந்தா பாருப்பா! இந்தக் காகிதத்தை'' என்று நமச்சிவாயம் கோர்ட்டு சம்மனைக் காட்டினார்.

அதில் குறிப்பிடப்பட்டு இருக்கும் விலாசத்தைப் பார்த்ததும் மாணிக்கம் மிரண்டு அவரை ஏற இறங்கப் பார்த்தான். ''நீங்க பொன்மங்கலம் பண்ணையார் தானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்பா. அதுனாலேதான் என்னைக் காப்பாத் துன்னு சொல்றேன்.''

''நீங்க இதைப் படிச்சுப் பாத்தீங்களா அய்யா?'' என்றான் அவன்.

''எனக்குத்தான் அந்தக் கோணல் எழுத்துப் பாஷை புரியாதே. என் மச்சான் படிச்சுப் பார்த்துட்டுச் சொன் னான், 'உடனே திருச்சிக்குப் போய் ஏதாவது செய்து மானத்தைக் காப்பாத்திக்க'ன்னு. பணத்தோட வந்திருக் கேன். என்ன செலவானாலும் சரிப்பா. நீ இதை முடிச்சுக் கொடுத்திடு'' என்று கேட்டார் நமச்சிவாயம்.

மாணிக்கத்துக்குச் சிரிப்பு வந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. 'இவர் அந்தஸ்தைக் கருதி இவரை ஜூரர் பதவிக்கு அழைத்திருக்கிறார்கள். இவர் ஆயுள்



தண்டனைக் கைதிபோலத் துடிக்கிறாரே!' என்று அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

உடனே அவரிடம் உண்மையைச் சொல்லி, அவர் பயத்தைப் போக்கி விடலாமா என்று நினைத்தான். அடுத்த வினாடி அவன் மனக்கண் முன்பு, தன் முதல் பையன் கல்யாணத்துக்கு வாங்கியிருந்த கடன் தொகை தான் வந்து நின்றது.

வேண்டுமென்றே முகத்தில் கவலையை வரவழைத்துக் கொண்டு, ''ஐயோ, கடிதம் வந்தவுடன் வரக் கூடாதா? இவ்வளவு நேரம் கழித்து வந்திருக்கிறீர்களே'' என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

''ஏதாவது செய்து என் மானத்தைக் காப்பாத் துப்பா.''

''ஐயா! இதிலே நான் சம்பந்தப்பட்டது யாருக்கும் தெரியக் கூடாது. உங்களுக்கு அவமானம்னு நினைக் கிறீங்க இல்லையா? இதையே உங்களுக்குக் கௌரவமான பதவியா நான் மாத்திப்பிடறேன்'' என்றான்.

''எனக்குக் கௌரவம் ஒன்றும் வேண்டாம்பா! என்னை விட்டால் போதும்'' என்று வேண்டிக் கொண் டார் நமச்சிவாயம்.

''எவ்வளவு ரூபாய் கொண்டு வந்திருக்கீங்க?''

''பத்தாயிரம் கொண்டு வந்திருக்கிறேன்.''

''சரி, வாங்க போகலாம்'' என்று சொல்லி நமச்சிவாயத்தை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே ஒரு ஜட்காவை வாடகை பேசி, அதில் இருவரும் ஏறிக் கொண்டனர்.

இருட்டு வேளையில் ஒவ்வொரு தெரு மூலையிலும் ஜட்காவை நிறுத்தி, நமச்சிவாயத்திடம், ''ஒரு ஆயிரம் ரூபாய் கொடுங்க'' என்று கேட்பான்.

நமச்சிவாயம் ஒரு நோட்டை எடுத்துக் கொடுப்பார். அதை வாங்கிக் கொண்டு சந்தில் சென்று நோட்டைப்

டையில் போட்டுக் கொண்டு, பத்து நிமிடம் கழித்து வண்டியில் வந்து ஏறிக் கொள்வான் மாணிக்கம்.

மறுபடியும் இன்னொரு தெருவுக்குச் சென்று மாணிக்கம் அவரிடமிருந்து இன்னோர் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொள்வான். இப்படியே அவரிடமிருந்து ஐந்து ஆயிரம் ரூபாய்களை வாங்கிக் கொண்டு ஜட்கா வாடகை ஐந்து ரூபாய் வாங்கிக் கொடுத்து விட்டுத் தன் வீட்டில் இறங்கிக் கொண்டான்.

நமச்சிவாயம், "என்னப்பா! ஒன்றும் சொல்லாமப் போறியே?" என்று கேட்டார்.

"எல்லாம் பேசி வச்சிட்டேன். கவலைப்படாதீங்க. நாளைக்குக் காலையில் ஒன்பது மணிக்குக் கோர்ட்டுக்கு வந்துடுங்க. எல்லாம் சரியாயிடும்" என்றான்.

"கோர்ட்டுக்குப் போகாமல் ஊருக்குப் போக வழி இல்லையா?" என்று நமச்சிவாயம் அவனிடம் கேட்டார்.

"நான் இருக்கறப்போ, ஏன் கவலைப்படறீங்க? தைரியமா வாங்க" என்று சொல்லிவிட்டுச் சென்றான் அவன்.

நமச்சிவாயம் குழப்பத்தோடு தன் ஹோட்டலுக்குத் திரும்பினார்.

3

ஹோட்டலுக்குத் திரும்பிய நமச்சிவாயம், ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வாடகை பெறும்படியான ரூமுக்கு வந்து ஆடும் நாற்காலியில் உட்கார்ந்தார்.

பலகைகளை வரிசையாகக் குறுக்கு வைத்து இரு சட்டங்களில் ஆணி அடிக்கப்பட்ட கட்டில், அதன்மீது கருப்பு நார் மெத்தை. அதன்மீது ஒரு காலத்தில் வெண்மையாக இருந்து இப்போது குட்டம் குட்டமாகப் பூரோணப்படம் போல் மாறிய துணி. அந்தப் படுக்கை



யிலே குடியிருந்த மூட்டைப் பூச்சிகள், அவர் எப்போது படுப்பார், எங்கிருந்து அவரைத் தாக்குவோம் என்ற யுத்த முஸ்தீபுகளுடன் படுக்கையில் பல மூலை விளிம்புகளில் கொரில்லாப் படைகள் போல் பதுங்கியிருந்தன. ஆனால் பல திறப்பட்ட பீதி நினைவுகளுக்கு வாசஸ்தலமாயிருந்த நமச்சிவாயத்தின் பரிதாப மனநிலையைப்பற்றி மூட்டைப் பூச்சிகளுக்கு என்ன தெரியும்? ஹோட்டலிலிருந்து வாங்கி வந்த இட்லி பொட்டலத்தைப் பிரித்து இட்லியைப் பிட்டுக் கார சட்னியில் துவைத்து வாயில் போட்டுக் கொண்டார். சட்னி தாங்கிய இட்லி துண்டுகள் வாயில் சென்றனவே தவிர, மனம் எங்கோ ஏதேதோ நினைவுகளில் நின்று தவித்தன. இட்லியைச் சாப்பிட்டு முடித்ததும், பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் படுத்தார். கண்களை மூடித் தூங்க நினைத்தார். முடியவில்லை.

மூட்டைப் பூச்சிகளின் தாக்குதல் ஒருபுறம், மறுநாள் கோர்ட்டில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளின் நினைவு மறுபுறம். படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தார். இருளும் தனிமையும், பீதி நிறைந்த மனத்தின் குழப்பத்தை இன்னும் அதிகமாக்கின. மனைவியின் நிலையும், மகளின் நிலைவும் அடிக்கடி தோன்றி அவருடைய பரிதாபமான எதிர்காலத்தை இன்னும் பரிதாபமாகக் காட்டின.

கோர்ட்டு சேவகன் மாணிக்கத்தின் வார்த்தைகளை நம்பலாமா? நாளைக் காலையில் கோர்ட்டு சென்றதும் என்ன நிகழப் போகிறதோ? ஆங்கில நீதிபதி என்ன சொல்வானோ? அவன் என்ன சொன்னால் என்ன, நமக்குப் புரியவாப் போகிறது? என்ன தவறு செய்தோம் என்று தெரிந்தால் பரவாயில்லையே? பதிலாவது தயார் செய்து கொள்ளலாம். அட கஷ்டமே! புரியாத நக்கமல்லவா ஒரு கோர்ட் கடிதம் மூலமாக நமக்கு வந்திருக்கிறது. அவர் தர்மகர்த்தாவாக இருந்த கோவில்களின் தெய்வங்கள் எல்லாம் அவர் கண்முன் வந்தன. 'எவ்வளவு

கும்பாபிஷேகங்கள் செய்திருக்கிறேன்! எவ்வளவு லட்ச எண்ணிக்கை பஞ்சாட்சர ஜபம் செய்திருக்கிறேன்! ஈசா எனக்கு இந்த மாதிரி சோதனையைத் தரலாமா?' என்று வருந்தினார்.

ஆண்டவனின் சோதனைக்குள்ளான சிவநேச செல்வர்களாகிய மாணிக்கவாசகர், அப்பர் சுவாமிகள் ஆகியோரது நினைவு வந்தது. அவ்வளவு தலைசிறந்த அடியார்களுக்கே சோதனை ஏற்படவில்லையா? ஞான சம்பந்தரைப் போன்ற சிலரை இன்னல் தவிர்த்து ஞானப் பால் அளித்து ஆட்கொள்வதும், அப்பர் போன்றோரை இன்னல் தந்து சோதித்து ஆட்கொள்வதுமே அந்த ஈசன் திருவுளச் சம்மதம் அல்லவா? அவரை இரண்டாவது ரகத்தில் சேர்த்து விட்டானா?

சற்றுத் தொலைவில் உள்ள தியேட்டரிலிருந்து, இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்த, 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்' என்ற தியாகராஜ பாகவதரின் பாடல், நமச்சிவாயத்தின் நிலைமை வர்ணிப்பது போல் அமைந்தது. அவர் எண்ணங்களின் பீதி அவர் வயிற்றைத் தாக்கிற்று. விடிந்ததும், கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டார். கண் சிவந்து, இரவு ஏற்பட்ட வயிற்றுக் கோளாறு காரணமாக, உடல் மெலிந்து ஜுரம் கண்டிருந்தது. வெந்நீரில் குளித்து விட்டு, விபூதியணிந்து கோவிலுக்குச் சென்றார். காலையில் சிற்றுண்டி சாப்பிடவே அவருக்கு மனம் இல்லை. உணவு விஷமாகக் கசந்தது. காலையில் எட்டு மணிக்கே, ஒரு குதிரை வண்டி அமர்த்திக் கொண்டு கோர்ட்டுக்குச் சென்றார்.

ஜில்லா கோர்ட்டு கட்டிடத்தைப் பார்க்கும்போதே அவருக்குப் பீதி ஏற்பட்டது. கோர்ட் வராந்தாவில் குமாஸ்தாக்கள் மற்றவர்கள் தமாஷாகப் பேசியபடி வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தனர். 'என்ன சந்தோஷம் வேண்டியிருக்கு!' என்று எரிச்சலாக வந்தது

www.t.me/tamilbooksworld



அவருக்கு. சிலர் அங்கிருந்த கடையில் கடலை வாங்கித் தின்பதையும், கோர்ட்டின் மரத்தடியில் ஆப்பம் விற்கும் ஆயாவிடம் ஆப்பம் வாங்கி ரசித்துச் சாப்பிடுவதையும் பார்த்தார். ஒரு பையன் சைக்கிளில், அப்போது பிரபலமாகி இருந்த, 'சிவபெருமான் கிருபை வேண்டும், வேறென்ன வேண்டும்?' என்ற பாட்டைப் பாடிக் கொண்டு சென்றான். பையன், பாட்டின் இசையைக் கவனித்தானே அல்லாது அதன் பொருளைக் கவனித்ததாகத் தெரியவில்லை. 'அந்தச் சிவபெருமான் கிருபைக்காக நான் பாதாதிகேசம் துடித்துக் கொண்டிருக்கிறேன். அதைப் பற்றி இவ்வளவு அலட்சியமாகப் பாடிச் செல்கிறானே!' என்று வருந்தினார் நமச்சிவாயம். உலகம் பூராவுமே மகிழ்ச்சியில் திளைப்பதையும், தான் மட்டும் வேதனையில் உழலுவதையும் உணர்ந்தார். திடீரென்று ஒரு மூலையிலிருந்து, ''வணக்கம்'' என்ற குரல் கேட்டுத் திரும்பினார்.

எதிரே, கோர்ட்டு குல்லாய் அணிந்த ஒரு வாலிபன் நின்று கொண்டு இருந்தான். திகைத்து நின்றார்.

''என்னைத் தெரியலிங்களா? நான் உங்கப் பண்ணையாள் சொக்கலிங்கம் மகன். இங்கே முன்சிப் கோர்ட்லே டைப்பிஸ்டா இருக்கேன். நீங்க மட்டும் தனியா வந்திருக்கீங்களா? நீங்க கோர்ட்டுக்கு வந்தது ஆச்சரியமா இருக்கே!'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. சும்மா தான் வந்தேன்'' என்றார் நமச்சிவாயம். அந்த ஊர்ப் பையனிடம் உண்மையைச் சொல்வது கேவலம் என்று நினைத்தார். ஆனால் கோர்ட் சேவகனிடம் லஞ்சம் கொடுத்து உதவி பெறுவது கேவலமாக அவருக்குப் படவில்லை.

'பொன்மங்கலத்துப் பெரியவர், நம் குடும்பத்துக்குக் கடவுள் போன்றவர். அவர்முன் நின்று அதிகம் பேசுவதே

தவறு' என்று நினைத்து, மரியாதையோடு அப்புறம் சென்றான் அந்த டைப்பிஸ்ட். அவருக்கு ஒரு பயம் ஏற்பட்டது. 'நம் ஊர்ப் பிள்ளைகள் எத்தனை பேர் இங்கே வேலையாக இருக்கின்றனரோ! நமக்கு ஏற்படப் போகும் அவமானம் அவர்கள் எல்லோருக்கும் தெரிந்து விடுமே' என்று தூண் மறைவில் போய் நின்றார்.

சில வினாடிகளுக்கெல்லாம் ராமலிங்கம் காரிலிருந்து இறங்கிக் கம்பீரமாக நுழைந்தார். 'ராமலிங்கம் சிரித்தபடி சூட் அணிந்து கோர்ட்டில் நுழைய, ராமலிங்கத்தைவிடக் கை ரொக்கம் அதிகமுள்ள நாம் இப்படித் தூண் மறைவில் பதுங்கிக் கிடக்கிறோமே!' என்று மனம் வெதும்பினார் நமச்சிவாயம். 'இந்தக் கோண எழுத்து தெரிந்த காரணத்தினால் அல்லவா ராமலிங்கம் அப்படி ஏறு போல நடக்க முடியுது!' என்று நொந்து கொண்டார். ராமலிங்கம் ஜில்லா கோர்ட்டுக்குள் நுழையாமல் இருக்க வேண்டுமே என்று பயந்தார். சற்று தூரத்தில் வில்லையணிந்த காக்கி நிஜார் கோட் அணிந்து, தலைப்பாகையுடன் ஒரு சேவகன் நமச்சிவாயத்தை நெருங்கி, "இப்படி வாங்க," என்று அழைத்தான். அப்போதுதான் நமச்சிவாயத்துக்கு அந்த உடையில் இருப்பது மாணிக்கம் என்று புரிந்தது. முகம் மலர, மகிழ்ச்சியோடு, "ஓ! மாணிக்கமா! அடையாளமே தெரியலையே" என்றார்.

"வாங்க" என்று நமச்சிவாயத்தை அழைத்துக் கொண்டு எதிரே உள்ள ஹோட்டலுக்குள் நுழைந்தான் மாணிக்கம். அங்கு ரவா தோசை இட்லி பொங்கல் எல்லாம் ஆர்டர் செய்தான். ஏதோ தானே பணம் கொடுத்துப் பலகாரம் வாங்கிக் கொடுப்பவனைப் போல் அவரைச் சாப்பிடும்படி வற்புறுத்தினான்.

மாணிக்கம், "கவலைப்படாதீங்க. எல்லாம் நல்லபடியா முடிஞ்சுப்போச்சு. உங்களை ஜூரராக்கிட்டேன். நீங்க ஒன்றும் செய்ய வேண்டாம். சும்மா வந்து கோர்ட்லே உட்கார்ந்திடுங்க" என்றான்.



"ஜூரரா? அப்படின்னா?" என்று விழித்தார் அவர்.

"ஜில்லா ஜட்ஜுக்கு உதவியா, குற்றவாளியின் குற்றத்தைக் கண்டு பிடிக்க உதவும் ஒரு பதவி. வக்கீல்கள், ஜட்ஜ் எல்லாரும் உங்க முடிவைக் கேட்டுத்தான் குற்றவாளியைத் தண்டிப்பாங்க. குற்றவாளியா இருந்த உங்களை இந்தப் பதவிக்கு மாத்தியிருக்கிறேன். சந்தோஷப்படாமல் முழிக்கிறீங்களே" என்று புரளி செய்தான்.

நமச்சிவாயம் திகைத்தார். "கோர்ட்டுக்குள்ளே நுழையாமல் நான் வீட்டுக்குப் போக முடியாதா, மாணிக்கம்? மறுபடியும் ஜட்ஜ் என்னைக் குற்றவாளியா மாத்திட்டா என்னப்பா செய்யறது?" என்றார்.

மாணிக்கத்துக்குச் சிரிப்பு வந்தது. அதை அடக்கிக் கொண்டு, "நீங்க கவலைப்படாதீங்க. என்னோடு கோர்ட்டுக்கு வாங்க. நான் சொல்றபடி செய்யுங்க," என்று உத்தரவிட்டான்.

ஜில்லா கோர்ட் வராந்தாவில் அவரை நிறுத்தி வைத்தான். ஆங்கிலேய நீதிபதி ஜார்ஜ், கறுப்புக் கோட் அணிந்து, கவுன் பறக்க வராந்தாவில் நடந்து வரும் காட்சியைப் பார்த்த நமச்சிவாயம் வெடவெடன்று நடுங்கி நின்றார்.

மாணிக்கம் நமச்சிவாயத்தை அழைத்தான். "அதோ பாருங்க, அவங்களோடு போய் உட்காருங்க" என்று இரு ஜூரர்களைக் காட்டினான்.

தூக்கத்தில் நடப்பவர் போல் ஜூரர் மத்தியில் உட்கார்ந்தார்.

ஜட்ஜின் முகத்தைப் பார்த்தபடியே இருந்தார். கோர்ட்டில் வேறு யார் முகத்தையும் பார்க்கவில்லை. ஜூரரில் ஒருவர் வேறு எதையும் பாராமல் தன்னையே முழித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு நீதிபதி ஆச்சரியமடைந்தார்.

www.t.me/tamilbooksworld

போலீஸ் தரப்பு வக்கீல் வழக்கைத் தொடங்கி, குற்றவாளிகளின் குற்றத்தை விளக்கும்போது, நமச்சிவாயத்துக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. பப்ளிக் ப்ராஸிக்யூடர் தன் எதிரே நின்றபடி பேசியதாலும், அவர் பார்வை அடிக்கடி தன்னைச் சந்தித்ததாலும் தன்னைப் பற்றித்தான் பேசுகிறார் என்று நமச்சிவாயம் நினைத்துக் கொண்டார். தாம் செய்யாத குற்றங்களை எல்லாம் நம் தலையில் சுமத்துகிறாரே என்று மனம் புழுங்கினார். குற்றவாளி இந்த ஜோடி மாடுகளைத் திருடி விட்டான் என்று சொன்னபோது அவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. பப்ளிக் பிராஸிக்யூடர், முதல் குற்றவாளியை வர்ணித்து, 'இருட்டும் பித்தலாட்டமும் குற்றவாளிக்கு இன்று நேற்று வந்த உறவல்ல. அவன் பரம்பரையே குற்றம் செய்வதைத் தொழிலாகக் கொண்டது' என்றதும், ஏழு தலைமுறைக்கு முன் தன் குடும்பத்தில் யாரோ ஒருவர் தீவட்டிக்கொள்ளைக்காரனாக இருந்ததைத்தான் குறிப்பிடுகிறார் என்று நினைத்துக் கொண்டார். பயம் நீங்கித் தைரியம் பிறந்தது. குபீரென்று ஜூரர் பெட்டியிலிருந்து குதித்தார்.

''நிறுத்துடா! நானும் பொறுத்துப் பொறுத்துப் பாத்துக்கிட்டிருக்கேன். நீ பேசிக்கிட்டே போறே! அதுவும் பொய்யாப் பேசிக்கிட்டே போறே! நான் ஏன்டா மாட்டைத் திருடணும்? என் பண்ணைக்கு வந்து பாரு. ஐந்து ஆயிரம் மாடு இருக்கு. நான் மாடுகளுக்குப் போடற தீனிச் செலவுக்குக் காணாது நீ சம்பாதிக்கிறது. நானா மாடு திருடறேன்?'' என்றவர் ஜட்ஜை நோக்கித் திரும்பி, ''வெள்ளைக்காரன் நீதிக்குப் பேர் போனவன்னு சொல்வாங்க. என்னய்யா அக்கிரமம்! ஐயாயிரம் மாடு வச்சிருக்கிறவன் இந்த ஜோடி மாடு திருடுவானா என்று நீ யோசிக்க வேண்டாமா? உனக்குப் புத்தி இல்லையே! உனக்கு மாடு திங்கற புத்திதான் இருக்கு!'' என்று ஏச ஆரம்பித்து விட்டார்.

www.t.me/tamilbooksworld



ஜட்ஜ், கோர்ட் எல்லோரும் திகைத்துப் போய் இருந்தார்கள். மாணிக்கம் ஓடிப்போய், ''சும்மா இருங்க'' என்று அவரைத் தடுத்தான்.

''எப்படிடா சும்மா இருக்கிறது! டேய் மாணிக்கம் நீ அயோக்கியன்டா! ஐயாயிரம் ரூபாயை வாங்கிட்டு தோசையும் இட்லியும் தின்னுட்டு, என்னை இந்த மாதிரி வம்பிலேயே மாட்டி விட்டே!'' என்று கூச்சலிட்டார்.

தமிழில் அவர் என்ன சொல்கிறார் என்று தெரியாமல் ஜட்ஜ் அவரை முறைத்துப் பார்த்தார். ஜட்ஜின் பார்வையைக் கண்டதும் நமச்சிவாயத்திடம் சொல்லாமல் தைரியம் மறைந்தது. மறுபடியும் கோழையானார். இரண்டு கைகளையும் சிரமேல் கொண்டு சேர்த்து சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து ஜட்ஜை நமஸ்கரித்தார். ''அய்யா, மாட்சிமை தங்கிய கோர்ட்டார் அவர்களே! என்னைப் பொறுத்து அருள வேண்டும்'' என்று கெஞ்சினார்.

நீதிபதி ஒன்றும் புரியாமல், ''வாட்டன் ஹி ரோட்டிக அவர் என்ன உளறுகிறார்?'' என்று கேட்டார்.

## 4

ஜில்லா கோர்ட்டில் என்றும் நடக்காத நிகழ்ச்சி நடந்து விட்டது.

இதற்குமுன் ஜட்ஜின் காலடியில் நெடுங்கிடையாக குற்றவாளிகள் விழுந்ததுண்டு. சில சமயம் குற்றவாளிகள் ஜட்ஜுகளைத் திட்டியதுண்டு. ஆனால் ஒரு ஜூரர் இ மாதிரி செய்தது இதுவே முதல் தடவை.

ஒரு வினாடிக்குக் கோர்ட்டில் வக்கீல்கள், இன்ஸ்பெ டர்கள் எல்லோருமே அமைதியாக இருந்தனர். பிற விஷயம் ஓரளவு விளங்கியதும் சிரிக்க ஆரம்பித்தனர். அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொள்ளாத மூன்று நபர்கள்

ஒருவர் நீதிபதி, இரண்டாமவர் நமச்சிவாயம், மூன்றாமவன் தண்டனையை எதிர்பார்த்து நின்ற குற்றவாளி.

சற்றுமுன் கோர்ட் அறையில் நுழைந்த பாரிமங்கலம் ராமலிங்கம் ஒருவாறு நிலைமையைப் புரிந்து கொண்டார். அமைதியாக நீதிபதியைக் கவனித்தார். மெள்ள அடி எடுத்து வைத்துத் தமிழில், "என்னங்க நமச்சிவாயம் ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்? நீங்க ஒரு ஜூரர். அது ஒரு பதவி. பெருமைப்பட வேண்டிய விஷயம்; பயப்பட வேண்டிய விஷயமல்ல" என்றார்.

ஏற்கனவே மிரண்டு போயிருந்த நமச்சிவாயத்துக்கு ராமலிங்கத்தைப் பார்த்ததும் பயம் அதிகமாயிற்று. "ராமலிங்கம் நீ ஒன்றுதான் பாக்கி. நீயும் வேற வந்துட்டியா? யாரு கேட்டாங்க, இந்த ஜூரர் பதவியெல்லாம்? பரம்பரைப் பகையை மறந்து என்னை ஊருக்கு அனுப்பி வையப்பா. இதுவரை அந்தப் பயல் மாணிக்கத்துக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தாச்சு. அந்த ஜட்ஜு என்னமோ கேட்கிறான். எனக்கு ஒன்றுமே புரியமாட்டேங்குது" என்றார்.

"மிஸ்டர் ராமலிங்கம், வாட் இஸ் தி ட்ரபிள் வித் தி மேன்?" என்று கேட்டார் நீதிபதி.

ராமலிங்கம் ஆங்கிலத்தில், நமச்சிவாயத்தின் நிலையை விளக்கி, இம்மாதிரி ஆங்கில வாசனையும் சட்ட அறிவும் சிறிதும் இல்லாதவர் ஜூரராக இருப்பது முறையல்ல என்பதையும் எடுத்துக் கூறினார்.

நீதிபதிக்கு விஷயம் புரிந்ததும் நமச்சிவாயத்தைத் திரும்பிப் பார்த்தார்— மிருகக் காட்சி சாலையில் நோய் வாய்ப்பட்ட மிருகத்தை அதைப் பராமரிப்பவன் பரிதாபத்தோடு பார்ப்பதுபோல். அவருக்குச் சிரிப்பு வந்தது.

அதைப் பார்த்துக் கோர்ட்டிலுள்ளவர்கள் எல்லோரும் சிரித்தனர்.

புது ஜூரி நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ராமலிங்கம் நடுங்கிய



படி இருந்த நமச்சிவாயத்தைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று எல்லாவற்றையும் விளக்கினார். நமச்சிவாயத்துக்கு, அப்போதுதான் தன் மைத்துனரின் ஆங்கில அறிவு எப்பேர்ப்பட்டது என்பது புரிந்தது.

ராமலிங்கம் "நேற்று ஸ்டேஷனில் என்னைப் பார்த்த போதே அந்தக் காகிதத்தைக் காட்டியிருந்தால் எல்லாம் விளக்கி இருப்பேன். நீங்கள் இவ்வளவு வேதனையும் பட்டிருக்க வேண்டாம். பொன்மங்கலத்தில் உங்களிடம் விவசாயிகள் பஞ்சாயத்துக்கு வருவதில்லையா? அங்கு நீங்கள் தீர்ப்பு அளிப்பதில்லையா? அதுபோல்தான் இதுவும் ஒரு அந்தஸ்துள்ள பதவி" என்றார்.

என்ன பண்றது ராமலிங்கம்! நான் படிப்பில்லாதவன் தானே? உன்கிட்டே சொன்னால் நீ ஏதாவது கெடுதல் செய்திடுவேன்னு நினைத்து விட்டேன். சொத்து இருந்தால் மட்டும் போதாது. ஓரளவு படிப்பும் வேண்டும். மைத்துனன் பேச்சைக் கேட்டு உன்னைத் தப்பா நினைச்சேன். இன்னைக்குத்தான் புரியுது உன் பெருமை. ஜட்ஜே உன்னிடம் என்ன மதிப்பு வச்சிருக்காரு!" என்று நன்றியைத் தெரிவித்தார்.

அன்று முதல் நமச்சிவாயம், ராமலிங்கத்திடம் நெருங்கிப் பழகத் தொடங்கினார். பொன்மங்கல எஸ்டேட் விவகாரங்கள் எல்லாம் ராமலிங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டன. ராமலிங்கம் நினைத்திருந்தால் நமச்சிவாயத்தை ஏமாற்றி இருக்கலாம். ஆனால் எந்த விதப் பணமும் எடுத்துக் கொள்ளாமல் எஸ்டேட் விவகாரங்களைச் சீர்ப்படுத்த ஆரம்பித்ததைக் கண்டு நமச்சிவாயத்துக்கு அவரிடம் இருந்த மதிப்பு இன்னும் அதிகமாயிற்று.

"என்னப்பா ராமலிங்கம், பீஸ் வாங்காமல் வேலை செய்றியே இது நல்லாருக்கா?" என்று ஒரு நாள் கேட்டார்.

"உன் எஸ்டேட் வேறே, என் எஸ்டேட் வேறு

ங்கிட்டே எதுக்குப் பீஸ் வாங்கணும்? உன் மகளை என் மகனுக்குக் கொடுத்திடு. அதுதான் எனக்குப் பீஸ்'' ன்றார்.

குழந்தைப் பங்கஜத்தின் அழகும் கவர்ச்சியுமே ாமலிங்கத்தை அவ்வாறு கூறச் சொல்லின.

''என் பங்கஜம் உன் ராஜலிங்கத்துக்குத்தான். அதிலே ன்ன சந்தேகம்? காவேரியின் வடகரைப் பண்ணையும் தென்கரைப் பண்ணையும் இனி ஒன்றாகி விட்டன!'' ன்று மகிழ்ச்சியோடு சம்மதித்தார் நமச்சிவாயம்.

''ஆனால் நீ ஒன்று செய்யணும், நமச்சிவாயம். ன் பண்ணையிலுள்ள பொலி காளைகளுக்கு இதுவரை பத்து வீரப்பன்னு பேரி வச்சுட்டிருக்கிறதை மாற்றி டு. அது எங்க பரம்பரையை அவமானப்படுத்தற மாதிரி நக்கு. இரண்டாவது, என் மகனைக் கட்டிக்கப் போற ன் பெண் இங்கிலீஷ் படிக்கணும்'' என்றார்.

நமச்சிவாயம், தன்னுடைய ஜாகையைத் திருச்சி ்டோன்மென்ட் பங்களாவுக்கு மாற்றிக் கொண்டார். ய வேட்டி கட்டுவதையும், சட்டையில்லாமல் ருப்பதையும் நிறுத்திக் கொண்டார். ஆனால் தன் டகான குடுமியை மட்டும் எடுக்க மனமில்லை.

ஆறு வயதுப் பங்கஜம் கான்வென்ட் பள்ளியில் படிக்க ரம்பித்தாள். கிளாரா என்ற ஆங்கிலோ—இந்திய மாது, டில் டியூஷன் சொல்லிக் கொடுக்கவும், குழந்தைப் கஜத்துக்கு நாகரீக பழக்கங்கள் சொல்லித் தரவும் மிக்கப்பட்டாள். தன் மகள் இங்கிலீஷ் வார்த்தை ளைப் படிப்பதை அடுத்த அறையிலிருந்து சங்கீதம் ்பதுபோல் கேட்டு ரசிப்பார். ஆனால் அதே வீட்டி ந்த அவருடைய மைத்துனன் குண்டுப்பிள்ளை, ஷன் சொல்லித் தர வீட்டுக்கு வரும் கிளாராவின் ல் அழகை ரசிக்கிறார் என்பதை அவர் புரிந்து கொள்ள லை.

எஸ்டேட் நிர்வாகம் குண்டுப் பிள்ளையிடமிருந்து

www.t.me/tamilbooksworld



பறிக்கப்பட்ட பின், தர்மத்துக்கு அந்த வீட்டில் குடியி ருந்த மைத்துனனைப் பார்க்கவே நமச்சிவாயத்துக்குப் பிடிப்பதில்லை. மனைவியின் சட்டாயத்துக்காக வீட்டோடு வைத்துக்கொண்டு இருந்தார். கிளாரா வரும் போதும் போகும்போதும் குண்டுப் பிள்ளை பல்லை இளித்தபடி ஏதாவது அவளிடம் பேச வருவான்.

ஒருநாள் நமச்சிவாயம் தன் மனைவி குழந்தையோடு ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் சென்றிருந்தார். வீட்டில் குண்டுப் பிள்ளை மட்டும்தான். மாலையில் வழக்கம்போல் டியூஷன் சொல்லித் தர வந்திருக்கிறாள் கிளாரா. இது தான் சரியான சந்தர்ப்பம் என்று நினைத்த குண்டுப் பிள்ளை, குழந்தை வீட்டில் இல்லை என்பதைச் சொல்லாமல் அவளுக்குக் காப்பி பலகாரம் எடுத்து வந்து உபசாரம் செய்திருக்கிறார். துணிந்தால் எந்தப் பெண்ணும் தன் இஷ்டத்துக்கு இணங்குவாள் என்ற நம்பிக்கையில் கிளாராவிடம் பேச்சோடு நில்லாமல் தொடவும் முயன்றிருக்கிறார். வெகுண்ட கிளாரா, தன் மிதியடிகளால் அவர் முகத்துக்கு ஒத்தடம் கொடுத்து, அவர்மீது கிரிமினல் புகாரும் செய்து விட்டாள்.

ஸ்ரீரங்கநாதனைத் தரிசித்துவிட்டுத் திரும்பிய நமச் சிவாயம் இதைக் கேட்டதும் இறைறி விட்டார். ராமலிங்கத் திடம் ஓடினார். ராமலிங்கத்தின் அரசியல் செல்வாக்கும், நமச்சிவாயத்தின் பண பலமும் சேர்ந்து விவகாரத்தை ஒரு விதமாகக் கோர்ட்டு வரை வராமல் தடுத்து நிறுத்தின. கிழ்த்தரமாக நடந்து கொண்டதற்கு தான் குற்றவாளியல்ல என்றும், கிளாரா அணிந்திருந்த உடல் கட்டை வெளிப்படுத்தும் இறுக்கமான உடைதான் காரணம் என்றும் குண்டுப் பிள்ளை வாதாடினார். ராமலிங்கம், குண்டுப் பிள்ளை ஒரு கண்ணியமான வீட்டில் இருக்க யோக்கியதை இல்லாதவர் என்று சொல்லி அவரைப் பொன்மங்கலத்திலேயே விவசா யத்தைப் பார்த்துக் கொள்ளும்படி அனுப்பிவிட்டார்.

ஆனால் சில மாதங்களுக்கெல்லாம் பொன்மங்கலத்தில் மறுபடியும் கல்லாட்டா ஏற்படவே, நமச்சிவாயம் இனி தமக்கும் குண்டுப் பிள்ளைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்கக் கூடாது என்று தீர்மானித்தார். எல்லாவற்றுக்கும் ராமலிங்கத்தின் ஆலோசனைகளே காரணம் என்று குண்டுப் பிள்ளைக்கு அவர்மீது பகை ஏற்பட்டது. ''என்ன ஐயா பிரமாதமான தப்பு செய்துட்டேன்? உங்க பாட்டன் பெத்து வீரப்பன் செய்த தவறைத்தான் நானும் செய்தேன். அவருக்கு அதிர்ஷ்டம் இருந்தது. அவர் வெள்ளைக்கார துரைசாணி தயவாலே கண்டிராக்டர் ஆனார். என் அதிர்ஷ்டம், மிதியடிப் பிரயோகத்திலே கொண்டு வந்து விட்டது. மான நஷ்ட வழக்குப் போட்டுக் கிளாராவிடம் பணம் வசூல் பண்ணாமல் என்னைத் திட்டறீங்களே! நீங்க என்னய்யா வக்கீல்?'' என்று வாதாடவும் செய்தார்.

ராமலிங்கத்தின் நிர்வாகத்தில், கருங்கள் அறையில் பெரிய இரும்புப் பெட்டிகளில் அடைபட்டிருந்த நமச்சிவாயத்தின் பணம் சூரிய வெளிச்சத்துக்கு வந்து புஷ்டியடைந்து வட்டியாகக் குட்டி போடத் தொடங்கியது. பணம் ஆஸ்பத்திரிகளாகவும், பள்ளிகளாகவும் மாறி, சிறிது லாபத்தையும் கொடுத்தது நமச்சிவாயத்துக்கு. தர்மம்கூட வட்டி கட்டும் என்பதைப் புரிந்து கொண்ட நமச்சிவாயத்துக்கு, ராமலிங்கத்திடம் இருந்த மதிப்பு இன்னும் அதிகமாயிற்று. அப்போதிருந்த கவர்னரின் அரசியல் சபையில் சட்ட மெம்பராக ராமலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னையில் ஒரு விருந்து கவர்னர் மாளிகையில் நடந்தது. அதற்கு நமச்சிவாயம் நிச்சயமாக வரவேண்டும் என்று ராமலிங்கம் வேண்டிக் கொண்டார். நமச்சிவாயம் முதன் முறையாகக் கோட்டு, தலைப்பாகை அணிந்து ராமலிங்கத்தின் காரிலேயே சென்னை வந்தார். மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் மனைவியிடம் கை குலுக்கும் வாய்ப்புக் கிட்டியது.



நமச்சிவாயம், ''கவர்னர் என்பவர் ஜில்லா கோர்ட் ஜட்ஜை விட உயர்ந்தவர்தானே?'' என்று கேட்டார்.

''ஆமாம். பதவியைப் பொறுத்தவரையில் பல மடங்கு உயர்ந்தவர்'' என்றார் ராமலிங்கம்.

''இன்றுதான் ராமலிங்கம், என் ஜன்மம் சாபல்யம் அடைந்தது. ஒரு ஜில்லா கோர்ட் ஜட்ஜின் காலில் விழுந்தவன், இன்று உன் உதவியால் கவர்னரோடு கைகுலுக்கி அவரோடு ஒரே டேபிளில் உட்கார்ந்து காப்பி குடித்திருக்கிறேன். அதே விருந்தில், நான் பயந்து கிடந்த அதே ஜில்லா கோர்ட் ஜட்ஜ் மதிப்பாரற்று வேறு மூலையில் உட்கார்ந்திருந்தான்!'' என்று சொல்லி மகிழ்ந்தார்.

இம்மாதிரி பல நிகழ்ச்சிகளில் பாரிமங்கலம் பண்ணைக்கும் பொன்மங்கலம் பண்ணைக்கும் நெருக்கம் ஏற்பட்டு ஊரே பெருமைப்படும் அளவுக்கு இரண்டு குடும்பமும் இணைந்து வாழ்ந்தன. ராமலிங்கத்தின் மூத்த மகன் ராஜலிங்கத்தை ஆக்ஸ்போர்ட் கலாசாலைக்கு அனுப்புவது என்று தீர்மானித்தார்கள். கடல் கடப்பதற்கு முன் திருமணத்தை முடிப்பதா அல்லது சீமையிலிருந்து ஊர் திரும்பியபின் வைத்துக் கொள்வதா என்பது பற்றிப் பெரிய சர்ச்சை நடந்தது.

''பங்கஜத்துக்கு வயது பதினாறுதான் ஆகிறது. ராஜலிங்கம் திரும்பிய பின் மணம் முடிக்கலாம்'' என்றார் ராமலிங்கம். நமச்சிவாயமோ திருமணம் முடிந்த பின்பு தான் சீமைப் பயணம் என்று வாதாடினார். எல்லா விஷயத்திலும் ராமலிங்கத்துக்கு விட்டுக் கொடுத்த நமச்சிவாயம், இந்த ஒரு விஷயத்தில் பிடிவாதமாக இருந்தார். ராமலிங்கத்தின் மனைவி சிவகாமியும், திரும்பிய பின் திருமணம் வைத்துக் கொள்வதே சரி என்று நினைத்தாள்.

அப்போது ராமலிங்கம் சென்னையில் இருந்தார். நேரிலே பொன்மங்கலம் சென்று, அங்கு தங்கியிருந்த நமச்சிவாயத்தின் மனத்தை மாற்றத் தீர்மானித்தார்.

ராமலிங்கம், அவர் மனைவி சிவகாமி, ராஜலிங்கம், சென்னையில் படித்துக் கொண்டிருந்த நமச்சிவாயத்தின் மகள் பங்கஜம் எல்லோருமே பொன்மங்கலத்துக்குப் புறப்பட்டனர். சட்ட மெம்பர் கனம் ராமலிங்கமல்லவா புறப்படுகிறார்? தனி காரேஜ் ஒன்று எழும்பூரில் திருவனந்தபுரம் வண்டியோடு சேர்க்கப்பட்டது. அந்த பெட்டியில் பங்கஜமும் பயணம் செய்தாள். ராஜலிங்கமும் பங்கஜமும் இதுவரை நெருக்கமாக ஒருவரையொருவர் சந்திக்க வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அந்த வாய்ப்பு இப்போது ஏற்பட்டது.

அவனைப் பொறுத்த வரையில், நமச்சிவாயம் ஒரு வேடிக்கை மனிதர். பத்தாம் பசலி ஆள். அவர் மகள் என்னதான் படித்தாலும் பழமையில் ஊறி வளர்ந்தவளாக இருப்பாள் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கோ, படிக்காத தன் தந்தையிடம் அதிக மதிப்பு. அவர் மனம் வருந்தக் கூடாது என்பதற்காக, ஆடை அணிவது, நகை அணிவது போன்ற விஷயங்களில் அவர் இஷ்டப்படி நடந்து வந்தான். எழும்பூரை விட்டு ரயில் நகர்ந்ததும் ராமலிங்கமும் அவர் மனைவி சிவகாமியும் அந்தக் காரேஜில் வேறு பக்கத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ராஜலிங்கமும் பங்கஜமும் தனியே விடப்பட்டனர்.

அவன் அவளைப் பார்த்தபடியே இருந்தான். அவள் தன் கையிலிருந்த புத்தகத்தைப் படித்தபடி இருந்தாள்.

''அது என்ன புத்தகம்?''

தலை நிமிர்ந்து பார்த்தவள், ''இது ஷேக்ஸ்பியர் நாடகங்கள்'' என்றாள்.

''எந்த நாடகம் படிக்கிறாய்?''

''வெனிஸ் வர்த்தகன்.''

பங்கஜத்தைவிட ரசனையில், படிப்பில் தான் உயர்ந்தவன் என்று காட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவனுக்கு.

www.t.me/tamilbooksworld



''எனக்கு 'ரோமியோவும் ஜூலியட்டும்'தான் பிடிக்கும். அதில்தான் ஷேக்ஸ்பியரின் மொழிவளம் சிறப்பாக இருக்கிறது'' என்று கல்லூரிப் பேராசிரியர் சொன்னதை ஞாபகத்திலிருந்து எடுத்து வீசினான்.

''ஆங்கில மொழி வளத்தைப் பற்றி மதிப்பிட எனக்கு இன்னும் தேர்ச்சி போதாது. ஆனால் வெனிஸ் வர்த்தகனில் வரும் போர்ஷியா பாத்திரம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஒரு பெண் துணிந்து சாமர்த்தியமாகத் தன் கணவனின் நண்பனை, நீதி மன்றத்தில் காப்பாற்றும் காட்சி சிறப்பாக இருக்கிறது'' என்றாள் அவள்.

அவனுக்கும் ஷேக்ஸ்பியரை மதிப்பிடும் அளவுக்கு ஆங்கில மொழித் தேர்ச்சி போதாது. அதை அவன் உணர்ந்தவன்தான். 'பட்டுப் புடவை கட்டி, குங்குமப் பொட்டிட்டு, கை நிறைய வளையல் அணிந்திருந்த பழங்கால உருவம் ஷேக்ஸ்பியர் படிப்பதே ஆச்சரியம்! பஞ்சாட்சரம் ஓதும் கட்டுக்குடுமி நமச்சிவாயத்தின் மகள்—பதினேழு வயது கூட நிரம்பாதவள்— ஷேக்ஸ்பியர் பற்றிச் சொந்த அபிப்பிராயம் தெரிவிப்பதாவது! அவனால் பொறுக்க முடியவில்லை.

''ரோமியோவும் ஜூலியட்டும் ஓர் அழகான காதல் காவியம். காதல் காவியம் உனக்குப் பிடிக்காதா?'' என்று தொடர்ந்து கேட்டான்.

''கான்வெண்டில் படிக்கும்போதே டீச்சர் எனக்கு அதைப் படித்துக் காட்டியிருக்கிறாள். ஆனால் ரோமியோவும் சரி, ஜூலியட்டும் சரி இருவருமே முட்டாள் என்று தோன்றுகிறது. தாய் தந்தையருக்குத் தெரியாமல் ரகசியமாக மணந்து கொள்கின்றனர். இது தெரியாமல் அவள் பெற்றோர் வேறொருவனுக்கு அவளைத் திருமணம் செய்து வைக்க நிச்சயிக்கும்போது அதை எதிர்த்துப் பேசக்கூடத் துணிவில்லாத பெண் என்ன பெண்? கவர்ச்சியான நாடகமாயிருக்கலாம். ஆனால் பாத்திரங்களிடம் மனவலி இல்லை. வலிமையில்லாத ரோமியோவும்

ஏன் எதிர் நீச்சல் போடத் துணிய வேண்டும்?'' என்று அவள் சொன்னதை ராமலிங்கம் கேட்டுக்கொண்டே வந்தார்.

''சபாஷ் பங்கஜம்! நீ சொல்ற பாயிண்ட் கரெக்ட். ஜூலியட் ஒரு பலம் இல்லாத கேரக்டர்தான். அதனாலே தான் அது ஒரு சோகமான டிராஜடியா முடியுது'' என்று பங்கஜத்தைப் பாராட்டினார். ''பாரு வெகாமி! பங்கஜம் தேவாரம் திருவாசகம் ஓதற சூழ்நிலையிலிருந்தபடியே ஷேக்ஸ்பியர் படிச்சிருக்கா! என்ன தெளிவா சொந்த அபிப்பிராயம் வச்சிருக்காப் பாரு. அப்படித்தான் ஒரு பெண் இருக்கணும்.''

ராஜலிங்கத்துக்கு என்னவோபோல் இருந்தது. வெறித்துப் பார்த்தான், பங்கஜத்தை.

அவள், அவன் மன வேதனையைப் புரிந்து கொண்டவளபோல் புன்முறுவல் செய்தாள். அன்று இரவு, ராமலிங்கம் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு முன் பகுதிக்குச் சென்றுவிட்டார். அவர் மனைவி வெற்றிலை மடித்து கொண்டு அவர்பின் சென்றாள். ராஜலிங்கமும் பங்கஜமும் மறுபடி தனியே விடப்பட்டனர்.

''ஏன் பேசாமல் இருக்கீங்க?'' பங்கஜம் கேட்டாள். ''என் மேலே உங்களுக்குக் கோபமா?''

''கோபமில்லை. இந்தச் சின்ன வயசிலே நீ இவ்வளவு நல்லாப் படிச்சிருப்பேன்னு நினைக்கல்லே'' என்று அவன் சிரித்தபடி ஒப்புக்கொண்டான்.

அவளது அழகான பல்வரிசை ஒரு விநாடிக்கு அவன் கவனத்தைக் குழப்பியது. சமாளித்துக்கொண்டு, சிரித்த படி, ''இந்தச் சின்ன வயசிலே என்று என்னமோ தாத்தா மாதிரி பேசறீங்களே, உங்களுக்கு மட்டும் என்ன வயசா விட்டுது? இருபதுக்குள்ளேதானே இருக்கும்?'' என்றாள்.

''எனக்கு வயசு ஒன்றும் இருபதுக்குள்ளே இல்லே, இருபது முடிஞ்சு இரண்டு மாசமாகுது.''



அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள். சிரிப்பின் காரணமாக அவள் மார்பு குலுங்குவதை அவன் கவனித்தான். அவளுக்கு வெட்கம் ஏற்பட்டது. தலை குனிந்தபடி பெரியவர்கள் இருக்கும் முன் பகுதிக்குச் சென்றாள். தனியே விடப்பட்ட ராஜலிங்கம் குழப்பத்தோடு நின்றான்.

## 5

ரயில் வண்டி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அதைவிடப் படபடப்போடு அடித்துக் கொண்டது ராஜன் மனம். பங்கஜத்தின் உடலுக்கு ஒரு விதமான கவர்ச்சி இருப்பதைப் புரிந்து கொண்டான். இதுவரை அவன் பெண்கள் என்றால் மனித இனத்தில் ஒரு பகுதி, உபத்திரவம் தரும் பகுதி என்றுதான் நினைத்து வந்தான்.

ராஜன் அட்டவணைப்படி வாழப் பழகியிருந்தான். விளையாட்டு நேரத்தில் விளையாட்டு, படிப்பு நேரத்தில் படிப்பு. எல்லாவற்றிலும் தன் தந்தை இட்டபடி நடந்து வந்தான். கலாசாலைக்குத் தந்தையின் மோட்டார் காரில் சென்று இறங்கும்போது மாணவர்கள் அவனைச் சூழ்ந்து கொள்வார்கள். பள்ளியில் படித்த பெண்களும் அவனை நெருங்கிப் பேச வருவார்கள். ஆனால் ராஜனுக்குத் தன்னிடம் ஏதோ கவர்ச்சி இருப்பதாகவே தெரியாது; மற்றவர்களிடம் கவர்ச்சி இருப்பதும் தெரியாது. ஆண் பெண் இன உணர்வுகளைப் பற்றிய புத்தகங்களை மாணவர்கள் படித்து மகிழும்போதும் அதைப் பற்றிச் சிரித்துப் பேசும் போதும் அவன் பங்கெடுத்துக் கொண்டதே கிடையாது. குறைவாக இல்லாது வளர்ந்த குழந்தையாக இருந்ததால் அவனைக் கலா சாலையில் மாணவர்கள் 'பாரிமங்கலம் பேபி' என்றே அழைப்பது வழக்கம். அந்தப் பேபிக்கு இன்று பங்கஜத்

தின் உடல் ஒரு குழப்பத்தை விளைவித்தது. அவன் மனத்தில் ஒரு கிறுகிறுப்பு ஏற்பட்டது.

ரயில் திருச்சி வந்ததும், நமச்சிவாயம் ரயில்வே ஸ்டேஷனில் காத்திருந்தார். அவர் ராமலிங்கத்தைத் தன் ஊருக்கு வரும்படி அழைத்துவிட்டு, பங்கஜத்தை அழைத்துக்கொண்டு பொன்மங்கலத்துக்குப் புறப்பட்டார். ஊருக்குப் புறப்படும்போது, பங்கஜம் ராஜனிடம் விடைபெற்றுக் கொள்ளும் கட்டம் வந்தது. அவள் கரிய விழிகள் ராஜன் முகத்தை ஆராய்ந்தன. அரை விநாடிக்குப் பிறகு தரையைப் பார்த்தபடி, "நீங்களும் அப்பாவோடு பொன்மங்கலம் வருவீங்களா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

பதில் ஏதும் சொல்ல முடியாமல் விழித்தான் ராஜன். அதற்குள் நமச்சிவாயம் பங்கஜத்தைக் கூப்பிடவே பங்கஜம் அவரோடு செல்லும்படியாயிற்று. ராஜன் வருவானா வர மாட்டானா என்பது தெரியாமலே ஊருக்குச் சென்றாள். ஒரு வாரம் ராமலிங்கத்துக்குத் திருச்சியில் பொது விருந்துகளுக்குச் செல்வது, திறப்பு விழாக்களுக்குச் செல்வது போன்ற பணிகள் ஏராளமாக இருந்தன. ஒரு சில நிகழ்ச்சிகளில் ராமலிங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி என்ற கோஷத்துடன் கறுப்புக் கொடிகளும் அவருக்குக் காட்டப்பட்டன.

அந்த ஒரு வார காலமும் ராஜனுக்குப் பலமுறை பங்கஜத்தின் நினைவே வந்து கொண்டிருந்தது. தந்தை, பொன்மங்கலம் கிராமத்துக்குச் செல்லும்போது தன்னை அழைக்காவிட்டால் தான் போக முடியாதே என்று பார்த்திருந்தான். அவன் பயத்திற்கேற்ப ராமலிங்கமும் சிவகாமியிடம், "ராஜன் வேணும்னா பங்களாவிலேயே இருக்கட்டும்" என்று சொன்னார்.

ஆனால் சிவகாமி குறுக்கிட்டாள். "ராஜன் சீமைக்குப் போய் ஊர் திரும்ப சில வருஷம் ஆகும். போறதுக்கு முன்னாலே, நம்ம ஊர் பெருமாள்

www.t.me/tamilbooksworld



கோவிலுக்கு வந்து வணங்கிட்டுப் போகட்டும். பங்கஜத்தோட அம்மாவும் எவ்வளவோ தரம் சொல்லிட்டாங்க. ராஜன் அவுங்க வீட்டிலே ஒரு நாள்கூடச் சாப்பிடலேன்னு. அந்தம்மாளுக்கும் ஆசை இருக்காதா, அவுங்க வீட்லே மாப்பிள்ளையாகப் போறவன் சாப்பிடணும்னு?"

"அது சரி, அந்த மனுஷன் நமச்சிவாயம் உடனே கல்யாணம்னு ஒரே காலில் நிற்கிறாரு. அவர்பிடிவாதத்தை மாத்தியாகணும், என்ன பண்றதுன்னு புரியல்லே" என்றார் அவர்.

ராமலிங்கத்தின் குடும்பத்தார், அவர்கள் சொந்தக் கிராமமான பாரிமங்கலத்துக்குச் சென்றனர். பிறகு அங்கு கோவில் பூஜை முடிந்த பின், பரிசலேறிப் பொன்மங்கலத்துக்குச் சென்றனர். இந்த முறை ராமலிங்கம் வெறும் பண்ணையாராக அல்லாமல், கவர்னர் நிர்வாக சபை மெம்பராக வந்திருந்ததால் கிராமத்தில் போலீஸ் நடமாட்டமும், அதன் விளைவாக மக்கள் கூட்டமும் வழியெல்லாம் நிறைந்திருந்தது. இது நமச்சிவாயத்துக்குக் கொஞ்சம் பெருமையாகவும், அதிகம் வேதனையாகவும் இருந்தது. "என்னப்பா ராமலிங்கம், நீ போலீசோடே வந்துட்டே, எனக்கு ஒரு மாதிரியா இருக்கு. காவிரிக் கரைக்குப் போனா சிவப்புத் தொப்பி, கோவில் பக்கம் போனா சிவப்புத் தொப்பி, ஊரே மிரண்டு போயிருக்கு. சம்பந்தி வந்திருக்கிறாரா, இல்லை, நமச்சிவாயத்தைப் பிடிச்சுட்டுப் போகறதுக்கு வந்திருக்காரா பாரிமங்கலத்தார்னு பேசறது தான் பாக்கி" என்று நமச்சிவாயம் குறிப்பாக உணர்த்தவே, ராமலிங்கம் தன்னுடைய செகரிட்டரியை அழைத்து, பரிவாரங்களைத் திருச்சி செல்லும்படி உத்தரவிட்டார்.

அரசாங்க அதிகாரிகளும் போலீசும் சென்றுவிடவே, கிராமத்தில் மறுபடியும் அமைதி நிலவிற்று. ராமலிங்கம் காலைச் சிற்றுண்டி அருந்திவிட்டு, நமச்சிவாயத்தோடு பேசியபடி காவிரிக் கரையில் நடந்து வந்தார்.

"நமச்சிவாயம் நான் சொல்றதைக் கேளு. கல்யாணத்தைப் பண்ணிவிட்டுப் பொண்ணும் மாப்பிள்ளையும் பிரிஞ்சிருக்கிறதைவிட, ராஜன் திரும்பினதுக்கப்புறம் திருமணம் செய்யறதுதான் சரி. இரண்டு பேருக்கும் வயசாக வேண்டாம்?"

"ராமலிங்கம் இது ஆயிரங்காலத்து விஷயம். கல்யாண சமாசாரம் உனக்கு ஒன்றும் தெரியாது. நீ ஊரையே ஆளலாம். நிறையப் படிச்சவனா இருக்கலாம். கல்யாணம் வருகிற தை மாசத்திலே நடந்தாகணும். இதை யாரும் மாத்த முடியாது. கட்டினப்புறம் இரண்டு பேரும் சேர்ந்து இருக்கணும்னா, உன் மகனைச் சீமைக்கு அனுப்பாமல், உள்ளூர்லேயே இருக்கச் சொல்லு. அதுக்காக அவன் கல்யாணத்தை நிறுத்தாதே!"

ராமலிங்கத்துக்கு இது சோதனையாக இருந்தது. பேச்சைச் சில விநாடிகள் வேறு திசையில் திருப்பிவிட்டு, மறுபடியும் தொடங்க நினைத்தார்.

இதே சமயத்தில், அதே காவிரிக் கரையில் குளிக்கும் படித்துறையில் பங்கஜம் குளித்துக் கொண்டிருந்தாள். மரங்கள் அடர்ந்த படித்துறை. சற்று ஒதுக்குப் புறமாக இருந்ததால், பங்கஜம் யாரும் இல்லை என்ற நிம்மதியில் நன்றாகப் பச்சை மஞ்சளைப் படித்துறைக் கல்லில் அரைத்துப் பூசிக் கொண்டாள். சென்னையில் ஹாஸ்டலில் மற்ற மாணவிகள் கேலி செய்வார்களே என்று மஞ்சள் பூசும் வழக்கத்தை நிறுத்தி வைத்திருந்தாள். கரை புரண்டோடும் காவிரி நதியில் குளிப்பதே பங்கஜத்துக்கு ஒரு விருப்பமான பொழுது போக்கு. அதுவும் காவிரியைப் பல நாட்கள் பிரிந்திருந்து, திரும்பி வந்தவளாகையால் கரை புரண்டு ஓடும் நதியில் மாறு கை போட்டு நீந்துவதில் தன்னையும் மறந்தாள் பங்கஜம். நீரைக் கிழித்து நீந்தும் அழகைக் கரையில் நின்று கொண்டு பார்த்தபடி இருக்கும் ராஜனை அவள் கவனிக்கவில்லை.

அதிக நாள் சென்னையிலே வளர்ந்த ராஜனுக்கு இது



ஓர் இன்பம் தரும் காட்சியாக இருந்தது. பங்கஜம் கரை நோக்கி வரும் போதுதான் ராஜன் நிற்பது அவளுக்குத் தெரிந்தது: தன்னை விட்டு விலகி நீரில் மிதந்து கொண்டிருந்த ஆடையை எடுத்துப் போர்த்துக் கொண்டாள். நீருக்குள் மூழ்கியபடி நீந்திக் கரைக்கு வந்து தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

அப்போதும் ராஜன் கரையில் நின்று கொண்டு அவளைப் பார்த்தபடி சிரித்தான். பங்கஜத்துக்கு வெட்கமாக இருந்தது. உடலை நீரில் மறைத்து தலையை மட்டும் தூக்கி, "நீங்க குளிக்கலையா?" என்று கேட்டாள்.

"சும்மா பார்த்துக் களிக்க மட்டும் காவிரிக் கரைக்கு வரவில்லை. குளிக்கத்தான் வந்திருக்கேன்" என்றான்.

"நீஞ்சறதுக்கு இதுதான் சரியான துறை" என்று சொல்லிவிட்டு அவள் ராஜனைப் பார்த்தாள்.

ராஜன் சிரித்தபடியே பனியனைக் கழற்றிவிட்டு நீரில் இறங்கினான். அதே சமயத்தில் ராமலிங்கமும் நமச்சிவாயமும் அதே இடத்துக்கு நெருங்கிக் கொண்டு இருந்தனர். ராமலிங்கம் மறுபடியும் கல்யாணப் பிரச்னையை எடுத்தார். நமச்சிவாயம் பொறுமையை இழக்கும் நிலையை அடைந்திருந்தார். அதனால் அவர் வார்த்தைகள் பீறிட்டுக் கொண்டு வந்தன. ராமலிங்கம் மாகாணத்திலே ஒரு முதன்மையான மனிதர் என்பதை மறந்தார். தனக்குச் சம்பந்தியாகப் போகிறவர் என்பதையும் மறந்தார். "என்ன நீ விவரம் புரியாமப் பேசறே! உன் மகன் ஜாதகத்தையும் என் மகள் ஜாதகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துட்டேன். உன் மகன் ஜாதகம் ஆயுள் பலம் குறைஞ்சு இருக்கு. என் மகள் பங்கஜத்தின் ஜாதகத்திலே ஆயுள் பலமும் மாங்கல்ய பலமும் வலுத்திருக்கு. ஒரு ஜோஸ்யன் இல்லை ராமலிங்கம், பத்துப் பேரைக் கேட்டுட்டேன். எல்லோரும் சொல்றாங்க. மகரத்திலே சூரியன் இருக்கிறப்போ இந்த வருஷத்திலே கல்யாணத்தை முடிச்சிட்டா எல்லாம் சரியாயிடும்னு சொல்லிட்

டாங்க. அதுவும் முசிறி வள்ளுவன் அடிச்சுச் சொல்லிட்டான். பாரிமங்கலம் பண்ணையார் மகன் வாழணும்னா நீங்க துணிஞ்சு உங்க மகள் ஜாதகத்தை அவனோடு சேர்க்கணும்'னு. பெண்ணைப் பெத்த என் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? சிந்திச்சுப் பாரு ராமலிங்கம்'' என்று படபடவென்று சொல்லிவிட்டு மூச்சு வாங்க நிறுத்தினார் நமச்சிவாயம்.

''என்ன நமச்சிவாயம், வள்ளுவன் ஜோஸ்யம் சொல்றதெல்லாம் உண்மையாகுதா?'' என்று ராமலிங்கம் சொல்லி முடிக்குமுன்னே நமச்சிவாயம் குறுக்கிட்டார்.

''உன் பதவி, கௌரவம் எல்லாம் உன் மகனைக் காப்பாத்த முடியாது. அவனுக்கு அல்பாயுசு ஜாதகம். அவன் வாழணும்கிறதுக்காக என் ஒரே பெண்ணைக் கட்டிக் கொடுக்கத் துணிஞ்சிருக்கேன். அதைப் பாராட்டாமல் ஏதேதோ பேசிட்டுப் போறியே! இந்த விஷயத்திலே எனக்கும் வள்ளுவனுக்கும் தெரிஞ்சது. உனக்கும் தெரியாது, நீ பிரமாதமா நினைக்கிறியே அந்தக் கவர்னருக்கும் தெரியாது. ஏதோ இத்தனை தலைமுறை பிரிஞ்சிருந்து நம்ம தலைமுறையிலே ஒன்றா சேர்ந்தோம். உன் வீட்டிலே விளக்கேத்தி வைக்கத்தான் நான் விரும்பறேன். என் சம்சாரத்துக்கு இது தெரிஞ்சாக் கூட நமக்கேன் இந்தச் சம்பந்தம், வேறே சாதாரண இடமாப் பார்ப்போம்னு சொல்வா! தையிலே கல்யாணம்னா என் மகள் உண்டு. வேறே வருஷம்னா நமக்குள்ளே சம்பந்தமே வேண்டாம்'' என்று சொல்லி முடித்தார்.

அதே விநாடி, காவிரி ஆற்றின் பிரவாகத்தின் நடுவிலிருந்து, ''பங்கஜம், பங்கஜம்!'' என்று அலறும் குரல் கேட்டது.

ராமலிங்கமும், நமச்சிவாயமும் திரும்பினர். ஆற்றின் நடுவில் ராஜன் தத்தளித்தபடி இருந்தான். அவன் கைகள் ஓய்ந்து விட்டன. அவன் முழுகிவிடுவான் போல் இருந்தது. பங்கஜம் ஒன்றும் புரியாமல் தன் உணர்வு சக்தியெல்லாம்



இழந்து நின்றாள். அவள் வாழ்வின் அர்த்தமே மறைந்து முழுகப் போகிறது என்று தோன்றிற்று. கரையில் நிற்கும் தந்தையையும் நமச்சிவாயத்தையும் பார்த்தான் ராஜன். ''அப்பா!'' என்று சொல்லி முடிப்பதற்குள்ளே அவன் தலை தண்ணீரில் மறைந்தது.

ராமலிங்கத்தின் வயிற்றில் ஒரு பூகம்பமே ஏற்பட்டது போல் நின்றார். ஒரு நிமிடத்துக்கு முன்புதான், ஆங்கில அறிவு இல்லாத நமச்சிவாயம் ராஜனுக்கு அல்பாயுசு என்று ஆவேசம் வந்தவர்போல் கூறினார். அது உண்மையாகப் போகிறதா? அவனுடைய ஆயுள் முடியத்தான் போகிறதோ என்று நினைத்தார். ஆனால் தன் மகனைக் காப்பாற்றவோ, மீட்கவோ அவர் கை கால்கள் அசையவில்லை. அப்படியே மலைத்து நின்றார்.

30052
4663165

## 6

ராமலிங்கமும், நமச்சிவாயமும் ராஜனுக்கு ஏற்பட்ட விபத்தைப் பார்த்து அப்படியே மலைத்து நிற்கும்போது, நீரில் நின்ற பங்கஜம் தன்னை உடனே சுதாரித்துக் கொண்டாள். நீரில் பாய்ந்தாள். அவள் கரங்கள் மாறி மாறி நீரைக் கிழித்துச் சென்றன. சில வினாடிகளில் ராஜன் மூழ்கிய இடத்தை நெருங்கி விட்டாள். நீருக்குள் அவளும் மூழ்கினாள். அடுத்த சில வினாடிகளில் அவளும் ராஜனும் நீர் மட்டத்துக்கு மேல் மட்டத்துக்கு மேல் வந்தனர்.

மூச்சுத் திணற, தன் மேலாடை நழுவியதைக்கூடக் கவனியாமல், ஒரு கையால் நீந்தியபடி ராஜனை இழுத்துக் கரை சேர்த்தாள். வாய், மூக்கு வழியே நீர் சொட்ட கண்களை மூடியபடி கிடந்தான் ராஜன்.

ராமலிங்கமும், நமச்சிவாயமும் ஓடி வந்தனர். பெரியவர்கள் நெருங்கியதைக் கூடக் கவனிக்கவில்லை பங்கஜம். தரையில் கிடக்கும் ராஜனின் அருகில்

உட்கார்ந்து அவனை அப்படியும் இப்படியும் அசைத்தான். 'கபக் கபக்' என்று அவன் நாசி வழியாக நீர் வெளிப்பட்டது.

ராமலிங்கம் தன்னையும் மறந்தார். தன் அந்தஸ்து திரண்ட செல்வம் இவற்றுக்கெல்லாம் வாரிசாக இருக்கும் ஒரே மகன் ஞாபகமற்றுக் கிடப்பதுதான் அவருக்குத் தெரிந்தது. ராஜன் மெல்லக் கண் திறந்து பார்த்தான். அடுத்த வினாடியே கண்களை மூடிக் கொண்டான்.

கோவிலுக்கு நீர் எடுத்துச் செல்ல வந்த ஒற்றை மாட்டு வண்டியை நமச்சிவாயம் நிறுத்தினார். அந்த வண்டியில் ராஜன் ஏற்றப்பட்டான். ஈரப் புடவையுடன் பங்கஜமும் ஏறிக் கொண்டாள். நாணம் காட்டவோ ராஜனோடு நாமும் பெரியவர்கள் முன்னிலையில் வண்டியில் ஏறிக்கொண்டோமே என்று வெட்கப்படவோ பங்கஜத்துக்குத் தோன்றவில்லை.

"வண்டியை வேகமாக டாக்டர் வீட்டுக்கு ஓட்டு" என்றாள். பஞ்சாயத்து போர்டு அளிக்கும் சம்பளத்தில் ஒரு எல். எம். பி. டாக்டர் இருந்தார். இரண்டு மைலுக்கு அப்பாலுள்ள கரும்பாலை மில்லுக்கும் அவர்தான் டாக்டர். பொன்மங்கலம் பள்ளிக்கும் அவர்தான் சட்டப்படி டாக்டர். பத்து மைலுக்கு அப்பால் உள்ள கிராமத்தில் அவருக்குப் பத்து வேலி நிலம் உண்டு. டாக்டர், தொழில் ஒரு பொழுதுபோக்கு. ஆங்கில வைத்திய முறை அவ்வளவு சரியில்லை என்று பிரச்சாரம் செய்தபடியே ஆங்கில வைத்தியம் செய்து கொண்டிருந்தார் அவர். எந்த நோயுடன் யார் வந்தாலும், "நிறையக் காய்கறி சாப்பிடுங்க. காவிரியிலே காலையிலே எழுந்தவுடனே குளிங்க. வேப்பிலைக் கொழுந்தை அரைச்சுச் சாப்பிடுங்க" என்று உத்தரவிடுவார்.

கெடுபிடி இல்லாமல் இருந்தமையாலும், தன் வைத்தியத்தினால் பிழைத்த நோயாளிகளிடம் அவரே, "நான் என்ன வைத்தியம் பண்ணினேன்—உனக்கு ஆயுள் கெட்டி



யாயிருந்தது. நீ பிழைச்சுட்டே" என்று சொல்லி வந்தமையாலும் கிராம மக்களுக்கு அவரிடம் அவ்வளவு நம்பிக்கை கிடையாது. அவருக்கும் அவர்களுடைய பாராட்டுதலில் அக்கறையில்லை. அண்மையில் வேறு டாக்டரே இல்லாத காரணத்தால், அவரிடம் சிறு நோய் நொடிகளுக்குத்தான் செல்வார்கள். மக்கள் அவரை "ராவுஜி டாக்டர்" என்று கூப்பிடுவார்கள். ஆனால் பங்கஜத்துக்கு மட்டும் அவரிடம் நம்பிக்கை, மரியாதை. டாக்டர் கொஞ்சமும் பொய் சொல்ல மாட்டார். தன் திறமையை விட நோயாளிகளின் இயற்கையான தேக பலமும், ஆண்டவனின் கருணையுமே குணப்படுத்துகிறது என்று அவர் நம்புகிறார் என்பதில் பங்கஜத்துக்கு அவரிடம் பிரியம். மற்றவர்கள் அப்படியில்லை. பணம் பெற்றுக்கொள்ளாமலே இலவசமாக வைத்தியம் பெற்றுக் கொண்டவர்களே நம்பிக்கை இழந்ததில் ஆச்சரியமில்லை. எளிதில் கிடைக்கும் உதவிக்கு மதிப்பேது?

டாக்டர் வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றபோது அவர் முன் குறட்டில் தக்களியில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார். ஈரப் புடவையுடன் இறங்கிய பங்கஜத்தைப் பார்த்ததும் பதறியபடி வந்து, ராஜனைத் தூக்கி வராந்தாவில் உள்ள மரக் கட்டில் மீது போட்டு உடனடியாக வைத்தியம் செய்தார்.

ராஜன் கண் விழித்துக் கொள்ளும்போது, ஒற்றை மாட்டு வண்டியைப் பின் தொடர்ந்து வந்த ராமலிங்கமும், நமச்சிவாயமும் டாக்டர் வீட்டுக்கே வந்து விட்டனர். ராஜன் பேச ஆரம்பித்ததும்தான் ராமலிங்கத்துக்கு உயிரே வந்தது. டாக்டரிடம் தன் நன்றியைத் தெரிவித்தார்.

அவர் புன்முறுவலுடன், "உங்களைப் போன்ற கவர்னர் நிர்வாக சபை மெம்பர் எல்லாம் என்ற போன்ற காந்தி கட்சிக்காரன் வீட்டுக்கு வந்ததே பெரிய விஷயம்.

போன சத்தியாக்கிரகத்தின் போது, உங்க நிர்வாக சபை உத்தரவின் பேரில் நடந்த தடியடியிலேதான் இந்தச் சின்ன விரலிலே பாதியை இழந்தேன்'' என்று சிரித்தபடியே தன் கைகளைக் காட்டினார். ராமலிங்கத்தின் முகம் வெட்கத்தால் சுருங்கியது. எந்தச் சமயத்தில் எதைப் பேசக் கூடாது என்று தெரியாதவர் டாக்டர். மனத்துக்குத் தோன்றுவதைப் பேசுவதாலே, அவர் பிறருக்கு எவ்வளவு நல்லது செய்தும், அது நிறைவு பெறாமலே போய் விட்டது. ராமலிங்கம் புன்முறுவல் செய்துவிட்டு ராஜனை வண்டியில் அழைத்துக்கொண்டு நமச்சிவாயத்தின் வீடு வந்து சேர்ந்தார்.

பங்கஜம் டாக்டர் வீட்டுக்குள் சென்று டாக்டரின் மனைவியிடம் ஓர் உலர்ந்த துண்டு வாங்கி தலை துவட்டிக் கொண்டாள். டாக்டர் வீட்டு வேலைக்காரன், பண்ணை வீட்டுக்குச் சென்று மாற்றுப் புடவையும், ரவிக்கையும் வாங்கி வந்தான். அதை அணிந்து கொண்டு பங்கஜம் தன் வீட்டுக்குப் புறப்படும்போது டாக்டர், ''என்ன பங்கஜம்! அந்தப் பிள்ளையாண்டான்தான் மாப்பிள்ளையா? கல்யாணம் ஆனப்புறம் எங்கே இந்த டாக்டர் வீட்டுக்கு மாப்பிள்ளையோட வரப்போறே! பெரிய பெரிய இடங்களில் விருந்துக்குப் போகவே உனக்கு நேரம் போதாது. அதனாலேதான் கல்யாணத்துக்கு முன்னாலேயே மாப்பிள்ளையோட வந்துட்டே'' என்றார். டாக்டரின் மனைவி, ''போதுமே அசடு வழியப் பேசற லட்சணம். பாவம், பங்கஜம் பதறிப் போயிருக்கா. இப்பத்தான் அவகிட்டே தமாஷா பேசறதா?'' என்று கண்டித்தாள்.

''அவர் எது பேசினாலும் தப்பா இருக்காது மாமி'' என்று சிரித்தபடி சொல்லிவிட்டு வீடு திரும்பினாள் பங்கஜம்.

* * *

அன்றிரவு சாப்பாடு முடியும்வரை ராமலிங்கமும், நமச்சிவாயமும் ஒன்றும் பேசவில்லை.



ஆனால் ராமலிங்கத்தின் மனத்தில் காவிரி ஆற்றின் கரையில் நமச்சிவாயம் சொன்ன வார்த்தைகள் ஒலித்துக் கொண்டே இருந்தன. சிவகாமி, பொன்மங்கலத்துக்கு வந்த சமயத்தில் ராஜனுக்கு இம்மாதிரி ஆபத்து ஏற்பட்டு விட்டதே என்று கலங்கிப் போயிருந்தாள். கல்யாணம் பேச வந்த சமயத்தில் இம்மாதிரி அபசகுனம் ஏற்பட்டு விட்டதே என்று பங்கஜத்தின் தாயும் மனம் குழம்பி இருந்தாள்.

ஆனால் ராஜனுக்கோ, பங்கஜத்திடம் மதிப்பு அதிகமாகியது. அவள் நிதானம் இழக்காமல் நீந்தி வந்து அவன் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாளே! அவளை அவன் எவ்வளவு நேசிக்க வேண்டும்!

உறவினர்கள் எல்லோருமே, பங்கஜத்தின் தைரியத்தையும் துணிவையும் பாராட்டினர். அவளுக்கு வேதனையாயிருந்தது. அன்றிரவு சாப்பிட்டானதும், ராஜனைச் சந்திக்க வேண்டுமென்று அவள் துடித்தாள். ஆனால் அவனை அவன் தந்தையும் தாயும் உறவினர்களும் சூழ்ந்திருந்தனர்.

இரவு பன்னிரண்டு மணி வரையில், ராமலிங்கம் தங்கியிருந்த பகுதியில் விளக்கு எரிந்தபடி இருந்தது. பங்கஜம் படுத்துத் தூங்க முயற்சித்தாள். முடியவில்லை. அவள் மனத்தில் ஒரு பயமும் இருந்தது. நீந்தத் தெரியாமல் மூழ்க இருந்த ராஜனை அவள் காப்பாற்றினாள் என்று எல்லோரும் பேசுகிறார்களே, அதைக் கேட்கும் போதெல்லாம் அவர் மனம் என்ன நினைக்கும்? ஒரு பெண், அதுவும் வயதில் சிறியவள் நம்மைக் காப்பாற்றி விட்டாள் என்று நினைத்து அவள்மீது கசப்பு ஏற்பட்டால்? குழம்பினாள். குழப்பத்திலேயே அயர்ந்து தூங்கி விட்டாள்.

அவனுடைய உண்மை மன நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பிலே அவள் இருந்ததால் விடியற் காலையிலேயே விழித்துக் கொண்டாள். எழுந்து

பல் துலக்கிவிட்டு வீட்டின் முன்புறம் இருக்கும் களஞ்சியத் திண்ணையில் உட்கார்ந்தபடி எதிரே கட்டியுள்ள பசுக் களைப் பார்த்தபடி இருந்தாள். பசுக்களைக் கோலைத் தின்றுவிட்டு அசைபோடும்போது அவற்றின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் ஒலித்தன. மணியோசை, வைகறை யில் துயிலெழுந்த பட்சிகளின் குரலோடு இழைந்து, பங்கஜத்தின் மனத்தை இழுத்தன.

இருள் நகர்ந்து ஒளி நுழையும் மங்கிய காலை வெளிச்சத்தில், களஞ்சியத் திண்ணையில் உட்கார்ந் திருந்தவளுக்கு, பின்புறம் மெள்ள ராஜன் வந்து நின்றது தெரியவில்லை. அவன் இருமியதும், தலையைத் திருப்பி னாள். அவனைப் பார்த்துப் பேச வேண்டும் என்று இரவு பூராவும் நினைத்தவளுக்கு, அவனைக் கண்டதும் வாயடைத்து விட்டது.

அவன் கலவரத்தைப் புரிந்துகொண்டு "நீரில்தான் உனக்குத் தைரியம் போலும்! தரையில் பேசக்கூட நடுக்கமா பங்கஜம்? கதைகளில் பெரும்பாலும் கதா நாயகன் கதாநாயகியை வெள்ளத்திலிருந்து காப்பாற்றி னான் என்றுதான் எழுதுவார்கள் கதாசிரியர்கள். ஆனால் என் கதையில் அது தலைகீழாய்விட்டது" என்றான் அவன்.

"திருச்சி கன்டோன்மென்டிலும் சென்னையிலும் வாழ்ந்த உங்களுக்கு நீச்சல் கற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் இல்லை. அதைப் புரிந்து கொள்ளாமல் உங்களை அந்தத் துறையில் இறங்கச் சொல்லிவிட்டேன் நான். அது என் தப்புத்தான்" என்றாள். அவள் தன்னைக் குறைத்துக் கொண்டு அவன் மனத்தில் ஒரு திருப்தியை ஏற்படுத்த முயன்றாள்.

அவள் தன்னைக் காப்பாற்றியது தன்னுடைய ஆண்மைக்கு ஒரு களங்கம் என்று நினைக்காதவன்போல் அவன் பேசினான். "பங்கஜம், மறைய இருந்த எதிர் காலத்தை எனக்கு மீட்டுக் கொடுத்தவள் நீதான். அந்த



எதிர்காலத்தை உனக்கே கொடுத்து விடலாம் என்று நினைக்கிறேன்" என்று அவளுடைய கையை எடுத்துத் தன் கைகளில் வைத்துக் கொண்டான்.

அவள் பேசாமல் தலைகுனிந்தபடி நின்றாள்.

தலையை நிமிர்த்திப் பார்த்தபோது, அவனது வரிசையான முத்துப் போன்ற பற்கள் அந்த மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தன. அவன் சிரித்துக் கொண்டிருந் தான். ஒருவர் சிரித்தால், அது ஏன் தனக்கு இவ்வளவு படபடப்பைக் கொடுக்க வேண்டும் என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் அவள். விடை கிடைக்கவில்லை.

அவன் அவளைத் தன்னை நோக்கி இழுத்தான். மெள்ள அவள் உடல் அவன் மார்பில் பதிந்தது. அதே சமயத்தில் அவள் கால்கள், தரையில் நிலை கொள்ளாமல் துவண்டன. ராஜனுடைய அணைப்பின் இறுக்கம், அவளது சிந்தனையைத் தடுமாறச் செய்தது.

"என்ன பங்கஜம், நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லையே நீ? என் எதிர்காலத்தை உன் கையில் நான் ஒப்படைக்கலாம் அல்லவா?" என்று மறுபடியும் அவன் கேட்டான்.

அவள் பேச நினைத்தாள். ஆனால் பேச்சு வரவில்லை.

"நான் என்ன சொல்கிறது? உருவம் இல்லாத, பழக்கம் இல்லாத ஒரு வெள்ளத்திலே நான் இப்போது முழுகிக்கிட்டிருக்கேன். எனக்கு ஒன்றுமே புரியலே. என்னைத் தயவு செய்து கரை சேர்த்துடுங்க" என்று சொல்லி விலகிக் கொண்டாள் அவள். ஏற்கெனவே சிவந்திருந்த அவள் முகம் இன்னும் சிவப்பாய்க் காணப் பட்டது. மூச்சு வேகமாக வந்து போய்க் கொண்டு இருந்தது. ஆசையும், வெட்கமும் போட்டியிட அவனை ஒருமுறை பார்த்தாள். பிறகு தலையைக் குனிந்தபடியே, "உங்கள் எதிர்காலம் உங்களுடையது. அதை என்னிடம் ஒப்படைக்க வேண்டாம். அதில் எனக்குச் சிறிது இடம் கொடுத்தால் போதும்" என்றாள்.

''சிறிது இடம் போதுமா?''

''சிறு இடமாயிருந்தாலும், அது முக்கியமான இடமாக இருக்க வேண்டும்.''

''அந்த முக்கியமான இடம் என்னவோ?''

தன் விரல்களால் அவன் நெஞ்சைத் தொட்டு, ''இந்த இடத்தை நிரந்தரமாக எனக்குக் கொடுத்து விடுங்கள். அது போதும்'' என்று கூறிவிட்டு, பங்கஜம் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவன் மகிழ்ச்சியோடு அவளையே பார்த்தபடி ஒரு விநாடி நின்றான். பிறகு சிரித்தபடியே திரும்பினான்.

எதிரே அவன் தந்தை ராமலிங்கமும், நமச்சிவாயமும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் பார்வை சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருந்த பங்கஜத்தின்மீது நின்றன.

நமச்சிவாயம், ''என்ன ராமலிங்கம்! தம்பி ராஜன் பொழுதோட எழுந்திருக்கிற நல்ல பழக்கம் பழகியிருக்குதே'' என்றார்.

ராமலிங்கம், ''சென்னையில் குண்டு வெடித்தாலும் எட்டு மணிக்கு முன்னே எழுந்திருக்க மாட்டான். பொன்மங்கலத்துக்கு வந்துதான், அதிகாலையிலே எழுந்திருக்கப் பழகிக்கிட்டிருக்கான்'' என்று சொல்லிவிட்டு ராஜனைப் பார்த்தார்.

ராஜன் அங்கு நிற்காமல் வேகமாக நடந்தான்.

## 7

தரையைப் பார்த்தபடி சிந்தித்துக் கொண்டிருந்த ராமலிங்கத்திடம் நமச்சிவாயம், ''என்ன ராமலிங்கம் யோசிக்கறே. நாம நினைக்கிறபடி எதுவும் நடக்கிறதில்லே. நல்லதும் கெட்டதும் அதுபாட்டுக்குத் தானா நடந்துட்டுப் போகுது. அதோட நாமும் நடந்துட்டுப்

www.t.me/tamilbooksworld



போறதுதான் புத்திசாலித்தனம். முரண்டு செய்தோமோ விஷயம் நம்மை உதறிட்டுப் போயிடும்'' என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ராமலிங்கத்துக்கு அவற்றின் உண்மை புரிந்தது. அதிகப் படிப்பு இல்லாத நமச்சிவாயம் நமக்கு இந்த உண்மையைச் சொல்லும்படி ஆகிவிட்டதே என்ற கோபம் ராமலிங்கத்தைப் பற்றிக் கொண்டது.

''என்ன நமச்சிவாயம் உளர்றே? திட்டமில்லாமல் வாழ்க்கை நடத்த முடியுமா? ஒவ்வொண்ணையும் ஆராய்ந்து பார்த்துச் செய்யணும்'' என்றார்.

''அது சரி, ராமலிங்கம். திட்டம் போட வேண்டியது தான். நம்ம திட்டத்துக்கு மேலே ஒருத்தன் உட்கார்ந்து திட்டம் போடறான். அந்தத் திட்டத்தோடு நம்ம திட்டம் ஒத்துப்போற வரையிலும் நமக்கு எல்லாம் நல்லாருக்கும். ஒத்துப் போகாதப்பதான் வம்பு. நீ பொன்மங்கலத்துக்குக் குடும்பத்தோட வந்தே. உன் மகன் காவேரியிலே முழுகிறதாத் திட்டம் போட்டிருந்தியா? அது ஏன் நடந்துச்சு? சிந்திக்கப் பாரு. ராஜன் சுழலிலே மாட்டிக்கிறதுக்கு முன்னாடிதான் நான் உங்கிட்டே சொல்லிட்டிருந்தேன், அவனுக்கு ஆயுள் பலம் போறாது, அவனுக்கு நல்ல மாங்கல்யம் பலம் உள்ள பெண்ணாய்ச் சேர்த்து வைக்கணும்னு. ஜோஸ்யன் சொல்றது பேத்தல்னு சொன்னே, உனக்குக் கண்ணுக்கு நேரே ஜோஸ்யம் உண்மைன்னு காட்ற மாதிரி உம் மகனுக்கு விபத்து ஏற்பட்டுச்சு. அவனை நீயோ நானோ கரை சேர்க்கல்லே. என் மகள் தான் கரை சேர்த்தா. அதுக்கு என்ன சொல்றே!'' கம்பீரமாகத் தன்னுடைய கட்சியைக் கூறிவிட்டு ராமலிங்கத்தைப் பார்த்தார்.

ராமலிங்கம் சிந்தித்தார். தான் பயின்றது, கற்றது, நம்புவது எல்லாவற்றுக்கும் முரண்பாடான விஷயம் இந்த ஜாதகம் பார்ப்பது. அதில் அசையாத நம்பிக்கை வைத்து நிற்கிறார் இந்தப் படிப்பில்லாத நமச்சிவாயம். அவர்

சொல் துக்குத் தக்கபடி இந்த விபத்து நிகழ்வானேன்? நமச்சிவாயத்தின் நம்பிக்கை பொய் என்று நிரூபிப்ப தினால் நமக்கு என்ன லாபம்? 'தை மாதத்தில் திருமணம் செய்தால், உண்டு. இல்லாவிட்டால் உறுதியாகச் சம்பந்தமே அறுந்துவிடும்' என்கிறார் நமச்சிவாயம். என்ன செய்வது? ஜோஸ்யத்தை நம்பும் நமச்சிவாயம், ராஜனுக்கு ஆயுள் பலம் குறைவு என்று தெரிந்து கொண்ட பின்பும், தன் மகளைக் கொடுக்கத் துணிவது எவ்வளவு பெரிய பாராட்ட வேண்டிய விஷயம் என்பதையும் நினைத்துப் பார்த்தார்.

நமச்சிவாயம், அவர் தோளைத் தட்டினார். "ராமலிங்கம், நீ ரொம்பப் படிச்சவன், உன்னாலே சீக்கிரத்தில் எதையும் முடிவு பண்ண முடியாது. நேத்திக்கு ராஜனுக்கு ஏற்பட்ட ஆபத்தும், பங்கஜம் அவனைக் காப்பாற்றினதும், என் மனசிலே இருந்த கொஞ்ச சந்தேகத்தையும் போக்கிட்டுது. எத்தனை சிவன் கோவிலுக்கு, எவ்வளவு ஆயிரம் பண்டாரம் பரதேசிக்குப் பாயசத்தோடு சோறு போட்டிருக்கேன். எல்லாம் வீண் போகுமா? சிவபெருமானே ன் நேத்திக்கு இந்த நாடகத்தை நடத்திக் காட்டிருக்கார். காவேரி ஆத்திலே நடந்தது, 'தை மாசத்திலே முகூர்த்தம் வைச்சுடு'ன்னு சொல்ற மாதிரி இருக்கே. காலையில் நிகழ்ந்ததைக் கவனிச்சா, பங்கஜத்துக்கும் ராஜனுக்கும் இது சம்மதம்னு தெரியுது. நீ இன்னும் என்ன யோசிக்கிறே?"

ராமலிங்கத்துக்கு அதற்குமேல் ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. "சரி நமச்சிவாயம், உன் இஷ்டப்படியே வர்ற தையிலே கல்யாணத்தை வச்சுப் போம். கல்யாணமான பின்பு ராஜன் ஒரு வருஷம் கழித்துச் சீமைக்குப் போகட்டும்" என்றார்.

நமச்சிவாயம் சிறு குழந்தை போல் துள்ளிக் குதித்தார். "என் மனசை மாத்தறதுக்காகத் திருச்சிக்குக் காம்ப் போட்டுட்டு வந்தே, இப்போ உன் மனசை மாத்



திட்டுப் போறே! எப்படி இந்தப் படிக்காதவன் சாமர்த்தியம்?" என்று சிரித்துக் கொண்டே வீட்டுக்குள் சென்றார்.

ராமலிங்கத்தின் மனைவி சிவகாமிக்கே அவரது மன மாற்றம் திகைப்பைக் கொடுத்தது. லேசிலே மாறாத பிடிவாதம் உள்ளவர் இப்படி மாறி விட்டாரே என்று நினைத்தாள். ராஜனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால் அதோடு அவனுக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. இந்த விஷயம் பண்ணையில் உள்ளவர்களுக்குத் தெரிந்ததும், எல்லோரும், 'மாப்பிள்ளை அய்யா' 'மாப்பிள்ளைத் தம்பி' என்று ராஜனை அழைக்க ஆரம்பித்தனர். வேறு ஆண் வாரிசே இல்லாதவராக நமச்சிவாயம் இருந்தமையால், எதிர் காலத்தில் பொன்மங்கலம் தன் உருவத்தை இழந்து, பாரிமங்கலம் பண்ணையோடு ஒன்றாகிவிடும் என்று வருந்தியவர்களும் இருந்தார்கள். அதை உணர்ந்த ராமலிங்கம் ராஜனுக்குப் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருந்தால் அவன் பொன்மங்கல தை அடைவது என்றும், அவனே நமச்சிவாயத்துக் மகன்போல் கிரியைகள் செய்வது என்றும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்.

ஆனால் நமச்சிவாயமோ, "ரொம்ப நீண்ட காலத்துக்குத் திட்டம் போடுவானேன்? நான் இன்னும் முப்பது வருஷமாவது திடமா இருப்பேன். கல்யாணத்தைப் பத்திப் பேசறப்போ ஏன் என் கிரியைப் பத்தி யெல்லாம் பேசணும்! பாரு ராமலிங்கம்! கல்யாணச் செலவு என்னுடையது. ஆனால் எப்படிச் செலவு செய்யணுங்கிறது உன்னுடைய பொறுப்பு. எனக்கு வேண்டியது எல்லாம், இந்த வட்டாரத்திலே உள்ள பண்டாரம் பரதேசிக்கு இரண்டு நாள் தொடர்ச்சியா இரண்டு வேளையும் விருந்து வைக்கணும். ஒரு லட்சம் பேருக்கு மேலே சாப்பிட்டாங்க என்கிற திருப்தி வேணும். இந்த ஜில்லா கோவில்லே எல்லாம் அபிஷேகம்

நடக்கனும். இந்த ஒரு ஏற்பாடு மட்டும் நானே நேர்லே கவனிக்கப் போறேன். மத்தப்படி கச்சேரி, நாட்டியம், அழைப்பு அனுப்பறது, பத்திரிகை விளம்பரம், பெரிய இடத்து விவகாரம் எல்லாம் உன்னுது'' என்று சொல்லி விட்டார்.

தை மாதம் தொடங்கியதிலிருந்து காவிரிக்கரை ஓரத்துக் கிராமங்களில் எல்லாம் கல்யாணத்தைப் பற்றிய பேச்சுத்தான். அரசாங்க மேல்தர உத்தியோகஸ்தர்கள், ஆங்கில அதிகாரிகள் ஆகியோர் தங்குவதற்குப் பிரத்தியேகமான விடுதிகளும், அவர்கள் போக்குவரத்துக்குத் தேவையான கார்களும் ஏற்படுத்தப்பட்டன. திருமணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்து ஊரே அமளியாக இருந்தது.

நமச்சிவாயம் காவிரிக்கரைப் படுகையிலுள்ள மரங்களை வெட்டி, தரையைச் செப்பனிட்டு, இருநூறு கஜ நீளத்துக்கு ஒரு நீண்ட கொட்டகை போட்டிருந்தார். அங்கு ஏழைகள் நான்கு வேளையும் சாப்பிட வசதி செய்திருந்தார். அதற்காக மட்டும் இருபது சமையல்காரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஏழைகள் சாப்பாடு என்று அலட்சியமாக விட்டுவிடுவார்கள் என்று, நெய் சப்ளை, எண்ணெய் சப்ளை, காய்கறி வாங்குவது எல்லாம் அவரே ஏற்றுக் கொண்டார். கல்யாண வீட்டுக்கு எதிரே வெள்ளைத் துணியால் ஒரு கூடாரம் அமைக்கப்பட்டு அதில் மேஜை நாற்காலிகள் விரிப்புக்களுடன் மேல்நாட்டு உணவு வகைகள் பரிமாறப்பட்டன. உறவினர்களுக்கு என்று ஒரு பெரிய விடுதியில் சாப்பாடு ஆகியிருந்தது. இரண்டு பண்ணைகளைச் சேர்ந்த ஆட்களுக்குப் பட்டு வேட்டியும், அவர்கள் வீட்டுப் பெண்களுக்கு ஆரணி காஞ்சிபுரம் புடவை ரவிக்கைகளும் கொடுக்கப்பட்டன. எந்தச் சம்பந்தமுமில்லாது சும்மா சாப்பிட வந்த ஏழைகளுக்குச் சாய வேட்டியும் சுங்குடிப் புடவையும் கொடுக்கப்பட்டன. ஆள் உயரத்துக்கு ஒரு மரப்பெட்டி



யில் விபூதி வைக்கப்பட்டிருந்தது. அந்த விபூதி அணிந்து 'ஓம் நமச்சிவாய' என்ற பஞ்சாட்சரத்தை முடியப் நுழைந்தவர்கள், ஏழைகளின் சாப்பாட்டுப் பந்தலில் அனுமதிக்கப்பட்டனர். திருமணத்தைத் தொடர்ந்த மறு நாள் முடிய, மாவட்டத்திலிருந்து பசியே விரட்டப் பட்டது என்று சொல்லலாம்.

மணமகனும், மணமகளும் நிற்கும் கோலத்தைக்கூட நமச்சிவாயம் கவனிக்கவில்லை. சாப்பாட்டுப் பந்தலில் எழும் பஞ்சாட்சர சத்தமும், ஏழைகள்விட்ட ஏப்பச் சுரமுமே அவரை மகிழ்வித்தன. கல்யாணம் முடிந்த மறுநாள் நமச்சிவாயம் தன் மனைவியிடம், ''எத்தனை ஆயிரம் பேர் மனம் குளிர்ந்து வாழ்த்திட்டுப் போறாங்க. அவுங்க வாழ்த்து, பங்கஜம்—ராஜனின் எதிர்காலத்தை விடாமல் தொடரும். ஒரு குறையும் இல்லாமல் இருப்பாங்க'' என்றார்.

கல்யாணம் முடிந்து கொடைக்கானலில் உள்ள தனி பங்களாவில் தேனிலவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டு ராஜன் புறப்படும் நிலையில், ராமலிங்கம் வகுத்த திட்டத்தில் ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டது. ராஜன் மறு வருடமே புறப்பட்டுச் சீமை சென்று ஆக்ஸ்போர்ட் கலா சாலையில் சேருவது என்று ஏற்பாடாகியிருந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக, அந்த வருடமே கலாசாலையில் அவனுக்கு அனுமதி கிடைத்து விட்டதாகத் தகவல் வந்தது. அதை ஒத்திப் போடுவதா, ஏற்றுக் கொள்வதா என்று தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒரு வருடம் சும்மா இருந்து விட்டுப் பின் சென்று படிப்பதை விட, மூன்று வருடங்களிலேயே படிப்பை முடித்து விட்டு ஊர் திரும்புவது சரியென்று ராமலிங்கத் தின் நண்பர்கள் கூறினர்.

நமச்சிவாயம் அந்த விஷயத்தில் எந்தவித அபிப்பிராயமும் தெரிவிக்கத் தனக்குத் தகுதியில்லை என்று நினைத்தார். ராஜன் சீக்கிரமே படிப்பை முடித்துவிட்டு ஊர்

www.t.me/tamilbooksworld

திரும்பி, குடியும் குடித்தனமுமாய் இருப்பதையே அவர் விரும்பினார். அவன் சீமைக்குச் சென்று படித்துத்தான் வாழ வேண்டும் என்ற ஒரு தேவை இருப்பதாக அவருக்குப் படவில்லை. இருந்தாலும், அது அவரவர் அபிலாஷையைப் பொறுத்த விஷயம். தாம் என்ன சொல்ல இருக்கிறது என்று பேசாமல் இருந்தார்.

உடனே புறப்படுவது பற்றி ராஜனுக்கும் ஒரு குழப்பம் இருந்தது. ஆனால் பங்கஜமே, அவன் உடனே சீமை செல்லும் திட்டத்துக்கு ஒப்புக் கொண்டாள். அவன் ஒரு வருடம் கழித்து அவளைப் பிரிவது இன்னும் அதிக வேதனையாக இருக்கும் என்று நினைத்தாளோ என்னவோ. முடிவில் ராமலிங்கம் ஒரு முடிவு செய்தார். ராஜன் உடனே புறப்படுவது என்றும், அவன் சீமையில் இரண்டு வருடம் படித்த பின்பு, பங்கஜமும் அவனோடு சீமையில் சேர்ந்து கொள்வது என்றும், கடைசி ஆண்டு இருவரும் வெளி நாட்டிலே குடித்தனம் நடத்துவது என்றும் தீர்மானித்தார். எதிர்காலத்தில் ஆங்கில முறைப் படி வாழ வேண்டிய ராஜனுக்கு, அவன் மனைவியும் ஐரோப்பா அமெரிக்காவிலே ஒரு வருடமாவது வாழ்ந்து பழகியிருந்தால் சௌகரியமாக இருக்கும் என்பது அவர் எண்ணம்.

பிரியப் போகிறோம் என்ற உணர்ச்சி ராஜனுக்கும் பங்கஜத்துக்கும் இருந்தமையால் அவர்கள் தேனிலவு பொழுது அதிக நெருக்கத்தில் கழிந்தது. ஒவ்வொரு நாளும் ஏன் முடிகிறது, மறுநாள் பொழுது ஏன் விடிகிறது என்று இருவருக்கும் தோன்றியது. பம்பாய் வரையில் பங்கஜமும் அவனுடன் சென்றாள். அந்த நாட்களில் படிக்கச் செல்பவர்கள் அநேகமாகக் கப்பலிலே செல்வது தான் வழக்கம். அந்த வழக்கப்படியே அவனும் கப்பல் ஏறினான். முதல் நாள் அவனும் பங்கஜமும் தாஜ்மஹால் ஹோட்டலில் ஒரு தனி அறையில் தங்கியிருந்தனர். ராமலிங்கமும் சிவகாமியும் அதே ஹோட்டலில் வேறு அறையில் தங்கியிருந்தனர்.



அந்த ஹோட்டல் அருகிலிருந்து 'கேட்வே ஆஃப் இந்தியா' என்ற இடத்திலிருந்து பங்கஜம் கடலைப் பார்ப்பாள். "இந்தத் திசையில்தான் நீங்க போகப் போறீங்க. இனிமேல் என் ஆசைகள், கனவுகள், வழிபாடு எல்லாமே மேற்குத் திசை நோக்கித்தான் இருக்கும்" என்றாள்.

அவன் ஒரு குழந்தையைப் போல், தன் கண்ணுக்குத் தோன்றியதையெல்லாம் வாங்கி அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். அவள், அவன் வாங்கி அளித்த பொருள்கள், அவன் சென்றபின் அவனை ஞாபகப் படுத்தும் என்று வாங்கிக் கொண்டாள். பளிங்கில் செய்த புத்தர் சிலை, ஒரு முத்து மாலை, ஒரு புரூச், காந்தியடிகள் வாழ்க்கை பற்றிய புத்தகம், நேருஜியின் சுயசரிதை, இவைதான் அவன் அவளுக்கு வாங்கி அளித்தவை. சாமான்களை வாங்கிக் கொண்டு இருவரும் கொலாபாவில் உள்ள ஒரு போட்டோ கடையில் போட்டோ எடுத்துக் கொண்டனர். பிறகு தாஜ்மஹால் ஹோட்டலுக்குத் திரும்பினர்.

ராமலிங்கம், அரசியல் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். "காங்கிரஸ்காரர்களாவது, மந்திரிசபை அமைப்பதாவது! என்ன அடாவடித்தனம்! கூச்சல் போட்டு ஜெயிலுக்குப் போறது சுலபம். பொறுப்பா ஆளறதுன்னா என்ன லேசா?" என்று உஷ்ணமாகப் பேசிக் கொண்டிருந்தார். இன்னும் இருபது வருடத்துக்கு, நாட்டுக்கு வெள்ளையன் ஆட்சிதான் தேவை" என்று தன்னுடைய (பிரிட்டிஷ்) ராஜ பக்தியைத் தன் மனைவியிடம் வெளிப் படுத்திக் கொண்டிருந்தார்.

ஆனால் ராஜனுக்கு இருந்த பிரிவு வேதனையில், தந்தையின் அபிப்பிராயங்களுக்குச் செவி சாய்க்க மனமும் இல்லை, அவகாசமும் இல்லை.

மறுநாள், கப்பல் ராஜனைத் தாங்கிச் சென்றது. துறைமுகத்திலிருந்து ராமலிங்கத்தின் குடும்பம் ஹோட்ட

www.t.me/tamilbooksworld

ஊருக்குத் திரும்பியது. அன்று இரவே சிவகாமி, ராமலிங்கம், பங்கஜம் மூவரும் சென்னைக்குத் திரும்பினர்.

பிரிவின் உண்மையான பளுவைப் பங்கஜம் உணர்ந்தாள். ராஜன் கொடுத்துச் சென்ற பொருள்களுக்குத் தனி மதிப்பு ஏற்பட்டது. கடந்த பதினைந்து நாட்களில் அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தாள். அந்தப் பதினைந்து நாட்களின் நினைவுகள் மட்டும்தான் அவளுக்கு வருங்காலப் பொக்கிஷமாக இருக்கப் போகிறது என்று அப்போது தெரியாது.

மகனை இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டுச் சென்னை திரும்பிய ராமலிங்கத்துக்குப் பெரிய அதிர்ச்சிகள் காத்திருந்தன.

## 8

சென்னை திரும்பியதும், ராமலிங்கம் அசையாத நம்பிக்கை வைத்திருந்த பிரிட்டிஷ் அரசாங்கம், திடீரென்று அதன் பரம விரோதிகளாக இருந்தவர்களிடம் மாகாண ஆட்சிப் பதவியை ஒப்படைக்கப் போவதாக வதந்திகள் உலாவின.

''ஆளப் பயிற்சி வேண்டும். அதற்கு, அம்மா கூச்சல் போட்டு சத்தியாக்கிரகம் செய்து சிறை சென்ற கூட்டம் எப்படிப் பதவி வகிக்க முடியும்?'' என்று நினைத்தவர்களின் எண்ணங்களில் மண் விழுந்தது.

முதன் முறையாக இந்தியாவில் பல மாகாணங்களில் இந்தியரின் ஆட்சி நிலவியது. காந்திக் குல்லாய்கள் கவர்னர் மாளிகைக்குள் நுழைந்தன. பிரிட்டிஷ் கவர்னரும் அவர்களோடு புன்முறுவல் செய்து அளவளாவினார். அது மட்டுமல்ல. சென்னையில் ராஜாஜி ஆங்கில மேலிடத்து அதிகாரிகளையும் தம் அறைக்கு வரவழைத்து அவர்கள் குறைகளைக் கண்டித்து அனுப்பினார். ஒரு சில ஒழுக்க



மில்லாத பிரிட்டிஷ் அதிகாரிகள், அவமானப்பட்டு வேலையை ராஜினாமா செய்து, பிறந்த நாட்டுக்குப் பயணம் செல்ல வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டது.

ராமலிங்கத்துக்கு, ஒரே குழப்பமாக இருந்தது. தம்முடைய அடிப்படைக் கருத்துக்களை மாற்றிக் கொள்வதா? என்ன செய்வது என்று புரியவில்லை. நேர்மை உணர்ச்சி உள்ளவராதலால், ராஜாஜி மந்திரி சபையின் திறமையை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. சில திட்டங்களை அவரால் பாராட்டாமல் இருக்கவும் முடியவில்லை. அரசாங்கம் கொண்டு வந்த கடன் மசோதாவினால் அவருக்கும் நமச்சிவாயத்துக்கும் சில லட்ச ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டாலும், துணிவான அந்தத் திட்டங்களைப் பார்த்து அவருக்கு நன்மதிப்பே ஏற்பட்டது.

'நாம் பதவியில் இருந்தபோது என்ன செய்தோம்? விருந்துகளுக்குச் சென்றோம், திறப்பு விழாக்களுக்குச் சென்றோம், மற்றபடி நாட்டுக்கு என்னதான் செய்தோம்?' என்று சிந்திக்கத் தொடங்கினார். வெட்டி ஆடம்பரத்தில் மட்டும் இல்லை அரசியல் வாழ்வு என்று புரிந்து கொண்டார். இதே சமயத்தில் ராணி மேரி பள்ளியில் படித்து வந்த பங்கஜத்தின் மனத்தில் பெரிய அடிப்படை மாறுதல் நிகழ்ந்து வந்தது. அவள் கணவன் ராஜன், பம்பாயில் அன்பளிப்பாக வாங்கிக் கொடுத்துச் சென்ற இரு புத்தகங்களைப் படிக்கப் படிக்கப் பங்கஜத்தின் பசுமையான மனத்தில் தேசபக்தி வேர் கொண்டது. பண்டித நேரு, மகாத்மாஜி இருவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவள் திரும்பத் திரும்பப் படித்தாள். இப்போது அவளுக்குப் பொன்மங்கலத்திலுள்ள டாக்டரிடம் பன்மடங்கு மதிப்பு அதிகமாயிற்று. தன் மாமனார் வீட்டில் வாழ்க்கை எவ்வளவு செயற்கையாக நிகழ்கிறது என்பதை உணர்ந்தாள். ஒன்றுமறியாத தன் தந்தை எவ்வளவு எளிமையாக வாழ்க்கை நடத்துகிறார் என்பதை

www.t.me/tamilbooksworld

திளைக்கவும் அவளுக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது. காந்தியடிகளின் புத்தகங்களைப் படிக்காமலே தன் தந்தை காந்திய முறைப்படி வாழ்கிறார் என்பதை உணர்ந்தாள். விடுமுறைக்குக் கிராமத்துக்கு வந்தபோது டாக்டர் வீட்டுக்குச் சென்று அவரிடம் நெருங்கிப் பழகினாள். அந்த வட்டாரத்திலேயே டாக்டர் ஒரு சிறந்த தியாகியாதலால், அவரிடம் மதிப்பு வளர்ந்திருப்பதை உணர்ந்தாள். டாக்டரின் நண்பர் ஒருவர் சென்னையில் மந்திரியாக இருந்தார். அந்த அமைச்சர் பொன்மங்கலத்துக்கு வந்த போது டாக்டரின் வீட்டுக்கு வந்திருந்தார். அதுவே அவர் அந்தஸ்தைக் கிராமத்தில் உயர்த்தியது. ஆனால் டாக்டர் அதைக் குறித்து வருத்தமே தெரிவித்தார். "இன்னும் வெள்ளையன் வெளியேறவில்லை. மாகாண ஆட்சி நடக்கும்போதே இப்படித் தினமும் என்னிடம் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும், மந்திரியைப் பார்க்க வேண்டும் என்று சிபாரிசுக் கடிதத்துக்கு ஆட்கள் வருகின்றனரே! காங்கிரஸே நாட்டை நிரந்தரமாக ஆள ஆரம்பித்தால் நாடு என்ன ஆகும்? ஒவ்வொரு தியாகியும் தன் தியாகத்தைச் சரியான விலைக்கு விற்று விடுவான். ஆட்சி ஒரு நெருப்பு. அது ஒரு வேதனை தரும் பொறுப்பு என்று உணராமல் வாழ்க்கையை வளப்படுத்தும் சாதனமாகக் கருதலாமா?" என்று கூறி, தம்மிடம் உதவி தேடி வருபவர்களின் கோரிக்கைகளை மறுத்து விட்டார்.

ஏமாந்தவர்கள் அவரைத் திட்டினார்கள். "கொஞ்சமாவது மூளையிருக்கா? பிழைக்கத் தெரியாத மக்கு. தானும் வாழ மாட்டான், பிறத்தியாரையும் வாழ வைக்க மாட்டான்" என்று திட்டினார்கள்.

ஊரிலேயே அவரைப் புரிந்து கொண்டவர்கள் நமச்சிவாயமும், பங்கஜமும்தான். தன் மகள் கல்யாணத்தை டாக்டர், நமச்சிவாயத்திடம் கடன் வாங்கியே நடத்தினார். பதவியிலுள்ள நண்பர்களின் உதவியையோ மற்றப் பெரிய புள்ளிகளின் தயவையோ நாடாமல் எளிய முறை



யில் நடத்தினார். ஒரு தொண்டனுக்கே மகளைக் கொடுத்தார்.

அவரிடம் விடுமுறை நாட்களில் பங்கஜம் அரசியலைப் பற்றிப் பேசுவாள். டாக்டர் மகள் சாவித்திரியும், அவள் கணவனும் சந்தோஷமாக இருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் பங்கஜத்துக்கு ராஜன் ஞாபகம் வரும். ராஜன், தனக்கு நேர்ந்த அனுபவங்களையெல்லாம் அவளுக்கு எழுதுவான். ஒருமுறை நீச்சல் குளத்தில் தான் நீந்துவதைப் போட்டோ எடுக்கச் செய்து அனுப்பியிருந்தான். "மறுமுறை நான் காவேரி ஆற்றில் இறங்கினால் என்னையே நான் காப்பாற்றிக் கொள்வேன்" என்று குறிப்பிட்டிருந்தான்.

இந்தியாவில் அவன் தந்தை அதிகாரப் பதவியில் இல்லை என்பதைப் பற்றி ராஜன் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. சுய ஆட்சியே பொருத்தமானது, நாட்டுக்குத் தேவையானது என்று எழுதியிருந்தான். இங்கிலாந்தில் இருந்தபடியே அந்நிய ஆட்சி ஒழிய வேண்டும் என்று எழுதியிருந்தது ராமலிங்கத்துக்குக் கலவரத்தையும் பங்கஜத்துக்கு மகிழ்ச்சியையும் கொடுத்தது. இந்தியாவில் இருக்கும் வரை தேசபக்தி இல்லாதவர்கள்கூட இங்கிலாந்துக்குச் சென்றபின் தீவிர தேச பக்தர்கள் ஆவதை குறித்து ராமலிங்கம் ஆச்சரியப் பட்டார். ராஜனுக்குக் கண்டித்து ஒரு கடிதம் எழுதினார். 'உன் படிப்பைக் கவனி. மற்ற விவகாரங்களில் நீ தலையிட வேண்டாம்' என்று எழுதினார். ஆனால் இங்கிலாந்தின் சுதந்திரச் சூழ்நிலையில் ராஜன் மனமும் பண்பும் விசித்திர மாறுதலை அடைந்து கொண்டிருந்தன. குதிரையேற்றம், துப்பாக்கிப் பயிற்சி, விமானப் பயிற்சி முதலியவற்றில் பங்கெடுத்துக் கொண்டான்.

பங்கஜத்துக்கு எழுதிய கடிதத்தில், 'ஒரு நாளைக்கு இருபத்துநாலு மணி நேரம் போதவில்லை. படிப்பு, மற்றப் பயிற்சிகள், காலத்தை விழுங்கி விடுகின்றன.

www.t.me/tamilbooksworld

அறையில் வந்து இரவின் தூக்கத்தை விழுங்கி விடுகிறது. என் அருகில் நீ இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் என்ன செய்வது? ஆறாயிரம் மைல்கள் நம்மைப் பிரிக்கின்றன. ஆனால் ஒன்று உறுதி, பங்கஜம். நான் ஊர் திரும்பும் போது நீந்தத் தெரியாத ஒரு கோழையைச் சந்திக்க மாட்டாய். வீரமும் ஒழுக்கமும் நிறைந்த கணவனைத் தான் வரவேற்கப் போகிறாய்" என்று எழுதி இருந்தான். வீரமும் ஒழுக்கமும் நிறைந்த கணவன் என்ற வரியை அவள் திரும்பத் திரும்பப் படித்தாள். ஒழுக்கம் என்ற வார்த்தை எப்போதோ அவள் மனத்தில் தோன்றிய சந்தேகங்களுக்குப் பதில் போல அமைந்தது.

அடுத்த கடிதத்தில் அவன் ஒரு வார விடுமுறைக்கு ஒரு நண்பனுடன் ஸ்விட்சர்லாந்துக்குச் செல்லப் போவதாக எழுதி இருந்தான். அடுத்த மாதம் ஜெனிவாவிலிருந்து ராஜன் ஒரு பாக்கெட் அனுப்பி இருந்தான். அதில் அவனும் தலைவர் சுபாஷ் சந்திர போசும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படமும் அனுப்பி இருந்தான். அந்தக் கடிதம் பூராவுமே சுபாஷ் சந்திரபோசின் புகழாகவே அமைந்தது. பார்ப்பதற்கு அவர் வெண்ணெயால் செய்த மனிதர்போல் இருக்கிறார். ஆனால் அவர் ஆத்மா நாட்டின் விடுதலைக்காக எரிமலைபோல் கொதிக்கிறது. அவர்தான் தலைவர். அவர்தான் மனிதர். அவர்தான் நம் நாட்டுக்குத் தேவையானவர்'' என்று எழுதி இருந்தான். சுபாஷ் சந்திர போசைப் பற்றி எழுதி இருந்த பகுதியை மட்டும் பங்கஜம் தன் மாமாவிடம் காட்டினாள். ராமலிங்கத்துக்கு ராஜனின் போக்கே புரியவில்லை.

ஆனால் அவர் மனைவி சிவகாமிக்கு அதுவும் ஆறுதலாக இருந்தது.

''பரவாயில்லை. அரசியல், படிப்பு இம்மாதிரி விஷயங்களில் தானே ராஜன் அக்கறையாக இருக்கிறான். ஒவ்வொருத்தன் வேறே விபரீதமா இருக்கிறதில்லையா? அதுவரையில் நல்லதுதானே!'' என்றாள்.



இந்தச் சமயத்தில் ஹிட்லர் போலந்தின் மீது படையெடுக்கவும் ஐரோப்பாவில் போர் மூண்டது. எங்கும் பீதி சூழ்ந்தது. கடிதப் போக்குவரத்துகள் நின்றன. ஆளும் கட்சி, பதவியிலிருந்து விலகி, மறுபடியும் எதிர்க் கட்சியாக மாறியது. போர் முஸ்தீப்புகளுக்கு எதிர்ப்பிரசாரம் செய்யத் துவங்கவே, பிரிட்டிஷ் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. நாடு வெகுண்டு எழுந்தது. வெள்ளையனே வெளியேறு என்ற கோஷம் எங்கும் ஒலித்தது. தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராகச் சிறை சென்றனர்.

அப்போது பொன்மங்கலம் டாக்டரின் மாப்பிள்ளை ரகுவை ரயில் வண்டிக்கு வெடி வைத்த குற்றத்துக்காகக் கைது செய்தனர். தன் மாப்பிள்ளை சதிகாரன் அல்ல, அகிம்சையைக் கடைப்பிடிப்பவன் என்ற டாக்டரின் கோரிக்கையை அரசாங்கம் கவனித்ததாகவே தெரியவில்லை. இது விஷயமாக ராமலிங்கம் நேரிடையாக இன்ஸ்பெக்டர் ஜெனரலைப் பார்த்தார்.

டாக்டர் மனமுடைந்து போனார். அதைப் பார்த்த பங்கஜம் பரிதவித்தாள். பிரிட்டிஷ் ராஜ்யம் ஒரு சைத்தான் ராஜ்யம்; அதை ஒழிப்பதே முதல் கடமை என்று நினைத்து உருகினாள். தெய்வ வழிபாடு தவிர, வேறு எதிலும் பங்கு கொள்ளாத நமச்சிவாயமே எதிர்க் கட்சி அனுதாபியானார். இந்த நிலையில் வைஸ்ராய் மாளிகையிலிருந்து ராமலிங்கத்தைப் பதவியேற்கும்படி ஒரு கடிதம் வந்தது. ராமலிங்கம் நாடு கிடக்கும் நிலையைப் பார்த்துக் குழம்பிப் போயிருந்தார். அதோடு ராஜனிடமிருந்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. லண்டனிலிருந்த ராஜன் போர் முனைக்குச் சென்றிருக்கிறான் என்ற செய்தி மட்டும் கிடைத்தது. சுயேச்சையாக ராஜன் சென்றானா? கட்டாயப்படுத்தப்பட்டுச் சென்றானா? அவருக்குப் புரியவில்லை.

வைஸ்ராய் மாளிகையிலிருந்து வந்த அழைப்பு,

சாதாரணமாக வரக்கூடியதல்ல. அவர் வாழ்க்கையில் கனவில்கூட எதிர்பாராத சந்தர்ப்பம் இது. பதவியில் இருந்தால் அந்தச் செல்வாக்கைக் கொண்டு ராஜுவைப் போர்முனையிலிருந்து மீட்டு எப்படியாவது விமான மூலமாக இந்தியாவுக்குக் கொண்டு வந்துவிடலாம் என்ற ஆசை அவர் மனத்தில் எழுந்தது.

இது விஷயமாகப் பங்கஜத்தோடும் நமச்சிவாயத்தோடும் கலந்து பேசலாம் என்று பொன்மங்கலத்துக்கு வந்தார். ராமலிங்கத்துக்கு வைஸ்ராய் நிர்வாக சபை அழைப்பு வந்திருக்கிறது என்ற செய்தி பத்திரிகையில் வெளியாகியிருந்தது. பொன்மங்கலம் ரோட்டில் அவர் கார் வரும்போதே காவேரிக்கரையின் இருபுறமிருந்தும், ''துரோகி! துரோகி!'' என்ற குரல் எழுந்தது.

இரண்டு மூன்று கற்கள் காரின்மீது வந்து விழுந்தன. காருக்குள்ளே அமர்ந்திருந்த ராமலிங்கமும் சிவகாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். வழியெல்லாம் கூட்டம் கூடியிருந்தது.

ராமலிங்கத்தின் கார் நமச்சிவாயம் மாளிகையின் வெளிப்புறம் வந்து நின்றதும் அங்கு ஒரே கூட்டமாகக் கூடியிருந்தது. ராமலிங்கமும், சிவகாமியும் வண்டியிலிருந்து இறங்கினர். ''கைக்கூலி'' ''துரோகி'' என்ற குரல்கள் எழுந்தன.

திகைப்போடு தலை குனிந்தபடியே ராமலிங்கம் நுழைந்தார். வெளி வராந்தாவில் ஒரு விசுப் பலகையில் ஓர் இளைஞன் பிணம் கிடத்தப்பட்டிருந்தது. அந்தப் பிணத்தின் அருகில் டாக்டரின் மகள் சாவித்திரி கதறியபடி இருந்தாள். அருகில் பித்தம் பிடித்தவர் போல் டாக்டர் உட்கார்ந்திருந்தார். சாவித்திரியைத் தாங்கிப் பிடித்தபடி பங்கஜம் உட்கார்ந்திருந்தாள். நமச்சிவாயம் டாக்டரைத் தன் தோளில் சாத்தியபடி உட்கார்ந்திருந்தார்.

நமச்சிவாயம், ராமலிங்கத்தைப் பார்த்ததும் ஆவேசம் வந்தவர்போல் எழுந்தார். ''என்ன ராமலிங்கம்



பார்த்தியா வெள்ளைக்காரன் ஆட்சி நடத்திய லோக்கியதையை? ஒன்றும் தெரியாத பையனைச் சதிகாரன்னு சொல்லி ஜெயில்லே போட்டு அடிச்சுச் சாகடிச்சுட்டாங்க. இந்தப் பிள்ளை முகத்தைப் பாரு. இவனா ரயிலுக்கு வெடி வைக்கிறவன்? கோர்ட்டு, நீதி, விசாரணை, சாட்சி ஒன்றும் கிடையாதா? இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் சொல்லி நியாயம் நடக்கும்படி செய்யறேன்னு சொன்னியே! பாரு நியாயம் நடந்த லட்சணத்தை! வெள்ளைக்காரனிடம் உன் செல்வாக்கு எவ்வளவு தூரம் செல்லும்னு இப்போ புரிஞ்சுதா?'' என்று கதற ஆரம்பித்தார்.

பலகையில் கிடந்த இளைஞன் ரகுவின் முகம் வீங்கிக் கன்றிப் போயிருந்தது. அடிபட்ட காயத்தின் சின்னங்கள் நிறைய இருந்தன. அழுதபடி பலகையில் படுத்திருக்கும் இளம் விதவையின் முகத்தைப் பார்த்தார். ராமலிங்கத்தின் அடிவயிற்றை என்னவோ செய்தது.

## 9

**ரா**வ்ஜியின் மாப்பிள்ளையுடைய சவம் இறுதிப் பயணத்துக்குப் புறப்பட்டது. கூட்டம் கூட்டமாக வழியெல்லாம் மக்கள் கூடியிருந்தனர். ராமலிங்கம் கூட்டத்தின் உணர்ச்சி நிலையை ஓரளவு புரிந்து கொண்டார். ஊர்வலத்தைப் பின் தொடராமல் வீட்டின் பின்கட்டிலேயே தங்கிவிட்டார். பிற்பகல் இரண்டு மணி சுமாருக்கு நமச்சிவாயம் ஈர வேஷ்டியுடன் திரும்பினார். டாக்டர் ராவின் மனைவிக்கும் மகளுக்கும் ஆறுதலாக இருக்கப் பங்கஜம் ராவின் வீட்டுக்கே சென்றுவிட்டாள் என்றும் மாலை திரும்புவாள் என்றும் நமச்சிவாயம் கூறினார்.

''பங்கஜம் யாரு? பொன்மங்கலம் பண்ணையார் மகள். பாரிமங்கலம் பண்ணையார் மருமகள். இவள் எதற்காக அந்த ஏழை டாக்டர் வீட்டுத் துக்கத்தில் அவ்வளவு பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்? மாமனாராகிய நான் வந்திருப்பதைக் கூடப் பாராட்டாமல் டாக்டர் வீட்டுக்குச்



www.t.me/tamilbooksworld

சென்று விட்டானே! துக்கத்திற்கும் நட்புக்கும் ஓர் அளவு வேண்டாமா?" என்று நினைத்தது ராமலிங்கத்தின் உள்ளம்.

நமச்சிவாயம் தன் துக்கத்திலும் சம்பந்தியை உபசரிக்க வேண்டியதை மறக்கவில்லை. "ராமலிங்கம், நீங்க சாப்பிட்டீங்களா?" என்று கேட்டார்.

"எல்லாம் முடிஞ்சுது நமச்சிவாயம். நீ போய்ச் சாப்பிடு" என்றார் ராமலிங்கம்.

"எனக்குப் பசியே இல்லை ராமலிங்கம்" என்று பரிசாரகனை அழைத்தார் நமச்சிவாயம். பரிசாரகன் ஓடி வந்தான். "நான் சாப்பிடவில்லை. மோரிலே கொஞ்சம் சோறு போட்டுத் தாளிச்சு இரண்டு டம்ளர் கரைச்சுக் கொண்டு வா" என்றார்.

"அய்யா, அப்படியே செய்றனுங்க" என்று சமையலறைக்குச் சென்றான் அவன்.

ராமலிங்கம், நமச்சிவாயத்திடம் தனக்கு வந்திருக்கும் வையர்லெஸ் அழைப்புப் பற்றி எப்படிப் பேசுவது என்று தெரியாமல் திகைத்தார்.

நமச்சிவாயம் பேசினார் ஆத்திரத்துடன். "என்ன ராமலிங்கம், உனக்கு ஞாபகம் இருக்கா? பல வருஷங்களுக்கு முன்னே கோர்ட்டிலேருந்து என்னை ஜூரராக இருக்கும்படி உத்தரவு வந்தப்போ நான் பயந்து செத்ததைப் பார்த்து எனக்குத் தைரியம் வருவதற்காக நீ சொன்ன வார்த்தைகள் இன்னும் என் மனசிலே இருக்கு. 'ஆங்கில ஆட்சி முறையிலே எதுவுமே படிப்படியா, முறையாகத்தான் நடக்கும். யாரையும் விசாரணையின்றி, பரிசீலனை பண்ணாமல், தண்டிக்க மாட்டாங்க'ன்னு சொன்னியே! ராஜ்ஜி மாப்பிள்ளை விஷயத்திலே அது என்ன ஆச்சு? அந்தப் பையன் ரயில் வண்டிக்கு வெடி வைச்சதாய்ச் சொன்ன இரவு என் வீட்டிலே, தேவாரம் படிச்சுக்கிட்டிருந்தான். விசாரணை நடந்தால் கோர்ட்டுக்குப் போய்ச் சாட்சி சொல்லலாம்னு இருந்தேன்.



விசாரணை இல்லாமல் போலீஸ் ஸ்டேஷனிலேயே சாகடிச்சுட்டாங்களே! இதென்ன ராஜாங்கம்? பருவப் பெண்களின் தாலி விக்கற ராஜாங்கம்! ராஜ்ஜி முகத்தைப் பார்க்கிற போதெல்லாம் எனக்கு ஏதாவது அடாபிடித்தனம் செய்து ஜெயிலுக்குப் போகலாமான்னு தோணுது. பால்யத்திலே கோர்ட்டுன்னாலே பயப்பட்ட எனக்கு, வயசுக் காலத்திலே தைரியம் வந்துடுச்சு ராமலிங்கம். காரணம், பிரிட்டிஷ் ஆட்சியிலே நடக்கிற அக்கிரமம்தானே. திடீர்னு ஒரு தாசில்தார் வர்றான் 'யுத்த நிதிக்கு இந்த ஜில்லாவிலே மூணு லட்சம் வசூல் பண்ணணும்னு கலெக்டர் உத்தரவு வந்திருக்கு. நீங்க இருபதாயிரம் கொடுங்க' என்கிறான். ஜெர்மன்காரனோடு இவன் செய்யற யுத்தத்துக்கு நாம எதுக்குப் பணம் கொடுக்கிறது? ஒன்றுமே புரியலையே!" என்று பேச்சை நிறுத்தினார்.

"யுத்தமென்றாலே அப்படித்தான். எல்லா மனசும் உணர்ச்சியிலே குழம்பிப் போயிடுது. ஆனாலும் சர்க்காரும் விட்டு வைக்கலை. பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஜெயம்தான் முக்கிய லட்சியம்தான், உலக யுத்தத்திலே ஜெயிக்கணும், அதுக்கு இடைஞ்சலா இருக்கிறவங்க எல்லோருமே எதிரிங்கன்னு சர்க்கார் நினைக்குது. ஆனால் நம்ம நாட்டிலே சிலர் இது நம்ம யுத்தம் இல்லைன்னு நினைக்கிறாங்க. இதுதான் விஷயம்" என்றார் ராமலிங்கம்.

"வெள்ளைக்காரனுக்கு உணர்ச்சி புத்தியைக் குழப்பற மாதிரிதானே நமக்கும்! ஒண்ணும் தெரியாதவங்களை விசாரணை இல்லாம ஜெயிலிலே தள்ளிச் சாகடிச்சா நமக்கு உணர்ச்சி வராதா? நாம என்ன மரக்கட்டையா ராமலிங்கம்? உப்புப் போட்டுச் சோறு தின்கிறவன் இந்தப் பிரிட்டிஷ் ராஜாங்கத்திலே வேலை செய்ய மாட்டான்!" என்று ஆத்திரத்துடன் பதில் கூறினார் நமச்சிவாயம்.

ராஜ விசுவாசமே மூச்சாய் இருந்த படிப்பில்லாத நமச்சிவாயத்துக்கே இவ்வளவு ஆத்திரம் ஏற்படுகிறதால், மற்றவர்கள் மனநிலையைப் பற்றி என்ன நினைக்க

www.t.me/tamilbooksworld

இவரிடம் வைஸ்ராய் நிர்வாகச் சபைப் பதவியைப் பற்றி இப்போது பேசுவதே சரியில்லை என்று நினைத்தார் ராமலிங்கம்.

அன்று மாலை பங்கஜம் ராவ்ஜி வீட்டில் இருந்து திரும்பினாள். மாமனார் சென்னையில் இருந்து பொன் மங்கலத்துக்குக் காரணமில்லாமல் வந்திருக்க மாட்டார் என்று அவளுக்குத் தெரியும். ராஜனைப் பற்றிய ஏதாவது சமாசாரம் வந்திருக்குமோ என்று நினைத்தாள். "அவரைப் பற்றி ஏதாவது செய்தி வந்ததா? வெளி நாட்டிலிருந்து ஏதாவது லெட்டர் வந்திருக்கா?" என்று கேட்டாள்.

ராமலிங்கம், "ஒரு தகவலும் வரவில்லை, பங்கஜம். போர் முனைக்குப் பிரிட்டிஷ் சைன்யங்களுடன் போயிருக்கிறான்னு மட்டும் தெரியுது. அவன் இருக்கிற பிரிட்டிஷ் சைன்யம் ஆப்பிரிக்காவிலே போராடுதாம். இதைத் தவிர வேறே எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. நானும் டில்லியிலுள்ள என் நண்பர்களிடம் சொல்லி விசாரிச்சுப் பார்த்தேன். எல்லாம் யுத்த ரகஸ்யம், பார். பெரிய பதவியிலே இருக்கிறவங்களுக்குக்கூட ஒன்றும் சரியாத் தெரியல்லே" என்றார்.

"உங்களுக்கு வைஸ்ராய் மாளிகையிலிருந்து அழைப்பு வந்திருக்கிறதாகப் பேப்பர்லே போட்டிருந்ததே, அது உண்மையா?" என்று கேட்டாள் பங்கஜம்.

"ஆமாம், உண்மைதான். எனக்குத்தான் என்ன முடிவு எடுக்கிறதுன்னு தெரியல்லே. ஒரே குழப்பமா இருக்கு. பதவியிலே இருந்தால் ராஜனை யுத்த களத்திலே இருந்து ஊருக்குக் கொண்டுவர உதவியா இருக்கும்" என்று சொல்லி நிறுத்திவிட்டுப் பங்கஜத்தின் முகத்தைப் பார்த்தார்.

பங்கஜம் ஒன்றுமே பேசவில்லை சில விநாடிகளுக்கு. பிறகு, "அவரை யுத்த களத்திலேருந்து இங்கே திரும்ப அழைக்கிறதுக்காகப் பதவி ஏற்கிறீங்க என்பது தெரிந்தால்

www.tamilbooksworld



அவர் விரும்பமாட்டார். அவர் மனசு எனக்கு நல்லாத் தெரியும்" என்று சொன்னாள். 'குழந்தையிலிருந்து நான் அன்பைப் பொழிந்து வளர்த்து ஆளாக்கிய ராஜனின் மனம் தனக்குத் தெரியும் என்று சொல்கிறாளே நேற்று வந்த இந்தச் சிறு பெண்!' என்று ராமலிங்கத்துக்கு ஆத்திரமாக வந்தது.

ராமலிங்கத்தைவிட அவர் மனைவி சிவகாமிக்கு இன்னும் அதிகமாக ஆத்திரம் ஏற்பட்டது. "என்ன பங்கஜம், அப்படிச் சொல்கிறாய்? ராஜன் மனசு என்னன்னு எனக்குத் தெரியாதுங்கிறியா? குழந்தையிலிருந்து அவனை வளர்த்தவள் நான். அவனுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு எனக்குத் தெரிஞ்ச மாதிரி வேறு யாருக்குமே தெரிய முடியாது. அவன் சுபாவத்திலே சாது. கொஞ்சம் உரத்துச் சத்தம் போட்டால்கூடப் பயந்துடு வான். அதிர்ச்சி இல்லாமல் புஷ்பம் மாதிரி வளர்ந்தவன். எப்படித்தான் ஆப்பிரிக்காவிலே தனியா கூடாரத்திலே படுத்துக்கொண்டு துப்பாக்கிச் சத்தத்துக்கு இடையில் வாழறானோ! சண்டைன்னா விளையாட்டா? ஏதாவது ஆயிட்டுதுன்னா? அந்தப் பயத்தினாலேதான் இவரை டில்லிக்குப் போய் பதவியை எடுத்துக் கொள்ளுங்கன்னு சொல்றேன். நாட்டைக் காப்பாத்தறது இருக்கட்டும். கண்ணுக்குக் கண்ணாய் ஒரே ஒரு பிள்ளை. அவனைக் காப்பாத்த வேண்டியது அவசியமில்லையா?" என்று படபடப்புடன் பேசினாள் சிவகாமி.

ராஜனுக்கு ஆபத்து வரும் என்று நினைக்கவே பங்கஜத்துக்குப் பயமாகத்தான் இருந்தது. "அத்தை, எனக்கு மட்டும் அந்தப் பயமில்லையா? அவர் விஷயத்திலே அக்கறை இல்லையா? அவர் கடைசியா இங்கிலாந்தை விட்டுப் புறப்படறப்போ எழுதின கடிதத்தைப் பார்த்தீங்கன்னா உங்களுக்குப் புரியும். அதைப் படிச்சவுடன் இரண்டு நாளா எனக்குத் தூக்கமே வரல்லே, அழுதிட்டே இருந்தேன். அந்தக் கடிதத்தைப் படிச்சுப் பாருங்க அத்தை" என்று சொல்லி விட்டு அவ

அறைக்குச் சென்று பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வந்து சிவகாமியிடம் கொடுத்தாள். போருக்குப் புறப்படுமுன் ராஜன் எழுதிய கடிதம் என்றவுடனே ராமலிங்கம் ஆவலுடன் அதை வாங்கிப் படித்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

''என்னால் உன்னை மறக்கவே முடியவில்லை. படிக்கும் போதும் படுக்கும் போதும் எப்போதும் உன் நினைவுதான். வாழ்க்கையில் இரண்டு சக்திகள் என்னை உருவாக்கியுள்ளன. ஒன்று அம்மா. நான் இன்பமாகவே இருக்க வேண்டும் என்ற ஆசையால் அன்பை மழையாகப் பொழிந்து வளர்த்தவள் அம்மா. அந்த அன்பு எனக்கு வலிமை தரவில்லை, மென்மைதான் தந்தது.

என் வாழ்வில் திடீரென்று தோன்றி, என்னை வலிமையுள்ளவனாக்கியவள் நீ. அன்று காவேரிக் கரையில், மறுபிறப்பு அளித்தாய் என்றே சொல்ல வேண்டும். வாழ்க்கை ஒரு வெள்ளம். அதில் நீந்திக் கரை சேர வலிமை வேண்டும் என்று புரிந்து கொண்டேன். மல்லிகைப் பூவின் மென்மையும் இரும்பு அணியின் உறுதியும் வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். அதனால்தான், விமானப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி எல்லாவற்றிலும் பங்கெடுத்துக் கொண்டேன். இந்தப் போர் ஐரோப்பியப் போர்தான். நம் நாட்டுக்காக நடக்கும் சண்டையல்ல. அது தெரிந்தும் இதில் பங்கெடுத்துக் கொள்வதன் நோக்கம், ஒரு நாள் நான் வலிமையுடன் நாட்டுக்குப் பயன்படலாம் என்பதே. பிறருக்காக வாழும் போதுதான் நாம் வாழுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டதும் எனக்கு ஓர் இன்பம் கிடைத்தது. இந்த மாறுதலின் ஆரம்பம் நீ. அதனால் தான் நான் போர் வீரன் ஆவது குறித்து என்னை நீ கண்டிக்க முடியாது. சோர்ந்த நிலையில் எனக்கு உற்சாகம் தா, ஆபத்திலே துணிவு



தா, உன் உருவம் தேவை. மறு தபாலில் என் விலாசத்துக்கு நீ உன் போட்டோ ஒன்று எடுத்து அனுப்பு...''

வாசித்து முடித்து நிறுத்தினார் ராமலிங்கம். சிவகாமியும் அவரும் ஒருவரையொருவர் சில விநாடிகள் பார்த்துக் கொண்டனர். 'நம் மகனுக்கு, போரில் சேருவது போன்ற ஒரு முக்கியமான முடிவு எடுக்கு முன்பு நம்மை அனுமதி கேட்கத் தோன்றவில்லை. இந்தச் சிறு பெண்ணுக்கு—அவன் மனைவிக்கு, கடிதம் எழுதுகிறான். நமக்குப் பிள்ளையை வளர்க்கத்தான் உரிமையுண்டு. மற்றபடி அவன் பிறர் சொத்தாகி விடுகிறான்' என்று நினைத்து வேதனைப்பட்டார் ராமலிங்கம்.

எனவே, கடிதத்தைப் பங்கஜத்திடம் கொடுத்துவிட்டு ''வா சிவகாமி, போகலாம்'' என்று சொல்லிச் சிவகாமியுடன் புறப்பட்டார்.

நமச்சிவாயம், ''என்ன ராமலிங்கம், என்ன நடந்துச்சு? திடீர்னு வந்தே, திடீர்னு புறப்படறே? ராத்திரி தங்கி விட்டுப் போகலாம்'' என்றார்.

''இல்லே, அவசரமாகப் போகணும் சென்னைக்கு'' என்றார் ராமலிங்கம்.

நமச்சிவாயம் பதில் சொல்லு முன்பே பங்கஜம் குறுக்கிட்டாள். ''அப்பா, மாமாவுக்கு டில்லியிலேருந்து அழைப்பு வந்திருக்கு. வைஸ்ராய் மந்திரி சபையிலே சேரச் சொல்லிக் கேட்டிருக்காங்க. அதைப் பத்தி நம்மோடு கலந்து ஆலோசிக்கத்தான் வந்திருக்கார் போலிருக்கு'' என்று கூறினாள்.

நமச்சிவாயம் அப்படியே திகைத்து நின்றார். ''இந்திய நாட்டையே ஆளும் பதவியா? அடேயப்பா! இது யாருக்குக் கிடைக்கும்?'' என்று கூறி விட்டுச் சிரிக்கத் தொடங்கினார். ''பதவி பெரிசுதான் ராமலிங்கம், இது சாதாரண நாளிலே வந்திருந்தா நல்லா இருந்திருக்கும். நம் நாட்டிலே உள்ள பெரியவங்களை

எல்லாம் சிறையிலே போடுகிற உத்தியோகம் பரவா யில்லையா? ஊர் பூரா திட்டுமே! கைக்கூலி, துரோகி என்று திட்டும் போது நாம் எப்படி வாழறது?'' என்று சொன்னார்.

இது வரையில் ராமலிங்கம் மனத்தில் அடக்கி வைத் திருந்த உணர்ச்சிகள் பீரிட்டு வெளி வந்தன. ''யாரோ அட்ரஸ் இல்லாதவர்களுடைய கூச்சலுக்காகப் பயந்து கொண்டிருக்க முடியுமா? வெள்ளைக்காரன் ஜனநாயகத் துக்காகச் சண்டை போடறான். அந்தச் சமயத்திலே அவனை முதுகுப் புறமா நம் நாட்டிலே சில பேர் தாக்கப் பார்க்கிறாங்க. வெள்ளையன் சும்மா விடுவானா? ஊரிலே இருக்கிறவன் சொல்கிறதைப் பத்தி எனக்கு அக்கறை இல்லை. நான் அந்தப் பதவி ஏற்றுக் கொண்டு வெள்ளைக்காரனுக்குத் துணையாகத்தான் இருக்கப் போறேன். நமச்சிவாயம், நீ படிச்சவனில்லை. உனக்கு இதெல்லாம் புரியாது!'' என்று ஆவேசத்தோடு பேசி னார்.

ராமலிங்கம் கூறுவதைக் கேட்டுப் பங்கஜத்துக்கு ஆத்திரம்தான் வந்தது. இருந்தாலும் பெரியவர் கோப மாக இருக்கும் போது எதிராகப் பேசுவது சரியில்லை என்று பேசாமல் இருந்தாள்.

அதே சமயத்தில் நமச்சிவாயத்தின் வீட்டின் வெளிப் புறம் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ராமலிங்கத் தின் காரியதரிசி ராமய்யா இறங்கினார். அவர் சென்னை யில் இருந்து அவசர அவசரமாகக் காரை விரட்டிக் கொண்டு பொன்மங்கலம் வந்திருக்கிறார் என்பதை அவருடைய கலைந்த தலை மயிரும் சோர்ந்த முகமும் காட்டியது. அவர் கையில் ஒரு கவர் இருந்தது. அதைப் பார்த்ததும் அது அரசாங்க முத்திரை தாங்கிய தபால் என்று ராமலிங்கத்துக்குப் புரிந்து விட்டது. ராமலிங்கம் படபடப்புடன், ''என்ன ராமய்யா, டில்லியில் இருந்து வந்திருக்கா தபால்? எங்கே இப்படிக் கொடுங்க'' என்று



வாங்கிக் கொண்டார். ''நான் உடனே பதவி ஏற்பதாகத் தகவல் கொடுத்திருக்கணும். ரொம்பத் தாமதம் செய் திட்டேன்'' என்று பேசிக் கொண்டே கவரைப் பிரித்தார்.

அடுத்த விநாடியே அவர் முகம் கலவரத்தால் வெளுத்தது. அவர் கைகள் நடுங்கின.

சிவகாமி கவலையோடு, ''என்னங்க? என்ன எழுதி யிருக்கு?'' என்று கேட்டாள்.

''சிவகாமி, இந்த லெட்டர் வைஸ்ராய் மாளிகையில் இருந்து வரவில்லை. போர் முனையிலிருந்து வந்திருக்கு. 'டோப்ருக்' என்ற ஆப்பிரிக்கப் பட்டணத்திலிருந்து வந்திருக்கிறது'' என்று கூறிவிட்டு மேலும் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

பங்கஜம் மூச்சை அடக்கியபடி கடிதம் படிக்கும் ராமலிங்கத்தைக் கவனித்தாள்.

## 10

ராமலிங்கம் கடிதத்தைத் தன் மனத்துக்குள் படித்து முடிக்கும் வரை அந்த வீட்டு அறையில் ஒரு பயங்கர அமைதி நிலவியது. யாருமே பேசவில்லை. நமச்சிவாயம் புரியாமல் மௌனமாக, தன் மகள் முகத்தைப் பார்த்த படி இருந்தார். பங்கஜமும் சிவகாமியும் ராமலிங்கத் தையே பார்த்தபடி இருந்தனர். ராமலிங்கத்தின் கண்கள் கடிதத்தின் மேல் பகுதியில் இருந்து கீழ்ப்பகுதி வரை ஒரு முறை ஓடியது. மறுபடியும் ஒரு முறை அவர் பார்வை கடிதத்தின் மேல் பகுதிக்குச் சென்றது. திரும்பவும் அவர் படிக்கிறார் என்பது தெரிந்தது. மறு முறை அவரால் படிக்க முடியவில்லை. ''சிவகாமி! சிவகாமி!'' என்று கதறினார். அவரால் விஷயத்தைக் கூற முடியவில்லை.

''என்னங்க, என்னங்க?'' என்று பதறியபடி சிவகாமி

கேட்டாள். உயிரையே தன் கண்களில் பொருத்தி வைத்துக் கொண்டிருந்த பங்கஜம், ஒரு வேங்கையைப் போல் பாய்ந்து கடிதத்தை ராமலிங்கத்திடமிருந்து பிடுங்கிப் படிக்கத் தொடங்கினாள். கடிதத்தைப் பாதி படிக்கும் போதே கடிதம் பங்கஜத்தின் கையிலிருந்து நழுவியது. "ஐயோ! அப்பா!" என்று கூவியபடி அப்படியே மூர்ச்சையானாள். நமச்சிவாயம் ஓடிச் சென்று தன் பெண்ணைத் தாங்கிக் கொண்டார். பங்கஜத்தின் தாய் அம்மணி எப்போதுமே ராமலிங்கத்தின் முன் வராமல் மறைவிலேயே இருப்பவள். ஹாலுக்கு அடுத்த அறையிலிருந்து நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தன்னையும் மறந்து ஹாலுக்குள் ஓடி வந்தாள். "என்னங்க, என்ன ஆச்சு!" என்று கேட்டாள். ராமலிங்கத்தின் உதடுகள் பேச முயற்சி செய்து மறுத்தன. அவருடைய நாக்கு உதடுகளின் நடுவே துடிப்பது தெரிந்தது. "நமச்சிவாயம்! நான் எப்படிச் சொல்வேன் நமச்சிவாயம்? ராஜன்-ராஜன் போர் முனையில் காணவில்லையாம்!" என்றார்.

"காணவில்லைன்னா என்னங்க? எனக்கு ஒண்ணுமே புரியலிங்களே?" என்று துடித்தது மகனைப் பெற்ற சிவகாமியின் குரல். ராமலிங்கம் பெரிய முயற்சி செய்து பின் வரும் வாக்கியங்களைக் கூறினார்.

"பதினைந்து நாளைக்கு முன்பு டொப்ருக்யலே ஆங்கிலேயருக்கும் ஜெர்மானியருக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது. மோதல் முடிந்து கூடாரம் திரும்பியவர்களில் நம் ராஜன் இல்லையாம். மறுநாள் காலை ஜெர்மன் துருப்புகள் பின் வாங்கி இருக்கின்றனர். யுத்தகளத்தில் விழுந்து கிடக்கும் உடல்களை ஆங்கிலேயர் சோதித்துப் பார்த்த போது அதிலும் ராஜன் கிடைக்கவில்லை. நமது சேனைகளில் கைதிகளாகப் பிடிபட்டவர்கள் பட்டியலை, பெருமையோடு ஜெர்மன் ரேடியோ அறிவித்திருக்கிறது. அந்தப் பட்டியலிலும் ராஜன் பெயர் இல்லையாம். காணாமல் போனவர்களில் நம் ராஜன் ஒருவனாகச்



சேர்க்கப்பட்டு விட்டான்!" என்றார்.

"நீங்க என்னமோ சுத்தி வளைச்சுச் சொல்றீங்களே. ராஜன் உசிரோட தானே இருக்கான்?" என்று மறுபடியும் கேட்டாள் சிவகாமி. ராமலிங்கம் பேசாமல் விழித்தார். "ஏன் விழிக்கிறீங்க? பதில் சொல்லுங்களேன். என் பிள்ளை உயிரோடதானே இருக்கான்? அவனுக்கு ஒன்றுமில்லையே!" என்றாள்.

"அவனைப் பற்றி ஒன்றுமே சொல்ல முடியாமல்ல இருக்கு?" என்று கூறிவிட்டுப் பலகையில் உட்கார்ந்தார். நமச்சிவாயத்தின் கண்களில் பொல பொலவென்று நீர் உதிர்ந்தது. சிவகாமி அம்மாள் அந்த ஹால் தூணில் சாய்ந்து விட்டாள். பங்கஜத்தின் தாய், "பங்கஜம்! பங்கஜம்" என்று கூப்பிட்டாள். பங்கஜம் மெல்லக் கண் விழித்தாள். எதிரே பெரியவர்கள் கண்ணீரோடு அமர்ந்திருப்பதைக் கவனித்தாள். தான் கடிதத்தில் படித்தது கனவு அல்ல, உண்மைதான் என்று புரிந்தது. உடனே அங்கிருந்து எழுந்து தன் அறைக்குள் ஓடினாள். அவளை அவள் தாய் பின் தொடர்ந்தாள். தன் அறையில் கட்டிலில் படுத்தபடி குமுறி அழ ஆரம்பித்தாள்.

ஹாலில் தனியேவிடப்பட்ட நமச்சிவாயம் தள்ளாடியபடி எழுந்தார். ராமலிங்கத்தை ஒரு முறை பார்த்தார். பிறகு தள்ளாடியபடி பூஜை அறைக்குள் சென்றார். அங்கு ஒரு ஸ்படிக லிங்கம் பலசாளிக் கிராமங்கள் ஒரு மேடையில் வைக்கப்பட்டிருந்தன. அகண்ட தீபம் எரிந்து கொண்டிருந்தது. திருவள்ளுவர் படமும், ராமலிங்க வள்ளலாரின் உருவப் படமும் வைக்கப்பட்டிருந்தன. அந்த உருவப் படங்கள் முன் நின்று அவற்றையே வெறித்துப் பார்த்தபடி நின்றார். அவர் உதடுகளில் இருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. ஆனால் நமச்சிவாயத்தின் பார்வை மட்டும், "என் ஒரே பெண்ணுக்குக் கடவுளே இம்மாதிரித் தீமை விளைவிக்கலாமா?" என்று கேட்பது போல இருந்தது. அவர் பார்வை அங்கு வெள்ளி விமான

தோடு அமைக்கப்பட்ட மேடையில் உள்ள ராஜ ராஜேஸ்வரி அம்மன் தங்கச்சிலையில் நின்றது. அம்மன் நெற்றியில் சிவப்பாகக் குங்குமம் மின்னியது. அதைப் பார்த்ததும் நவச்சிவாயம் விம்மி அழுதார்.

ஹாலில் தனியே விடப்பட்ட ராமலிங்கத்தின் மனத் தில் எண்ணங்கள் அலை அலையாகத் தோன்றின. அரை மணி நேரத்துக்கு முன் அவர் மனத்தில் இருந்த ஆணவம், செருக்கு எல்லாம் மறைந்தன. மனம் சூனியமாகிச் செய லற்று இருந்தார். ராமலிங்கத்தின் காரியதரிசி ராமய்யா மட்டும் அமைதியாகக் கடிதத்தை ஒரு முறை பார்த்து விட்டும் மெள்ள ராமலிங்கத்திடம் நெருங்கினார். ''சார்! சார்!'' என்று கூப்பிட்டார்.

''என்ன ராமய்யா'' என்று சலிப்புடன் கேட்டார்.

''காணவில்லைன்னுதானே எழுதியிருக்கு. டில்லி யிலே யுத்த மந்திரி சபை செக்ரடரி நரசிம்மன் நமக்கு நல்லாத் தெரிஞ்சவர். அவரோடு பேசி நல்லா விசாரிக்கச் சொல்வோம். பூரா விஷயமும் தெரியறதுக்கு முன்னே ஏன் நாம் முடிவு கட்டணும்?'' என்று ஆறுதல் சொன் னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சிவகாமிக்கு மறுபடி யும் ஆசையும் நம்பிக்கையும் எழுந்தன.

''எங்க பித்தாக உட்கார்ந்திருக்கீங்க? அவர் சொல்ற படியே செய்வோம். ஒரு வேளை யுத்த முகாமிலேருந்து தப்பாகச் செய்தி வந்திருக்கக் கூடாதா? ஏதாவது தப்பு நேர்ந்திருக்கக் கூடாதா!'' என்றாள். ராமலிங்கத்துக்கு ஒருவிதப் புத்துணர்வு ஏற்பட்டது. நேராக வீட்டின் உட் புறம் சென்றார். பூசை அறையில் அம்மன் சிலைமுன் உட் கார்ந்திருக்கும் நமச்சிவாயத்தைப் பார்த்தார். ஆடு மாடு கள் அழுவது போல் சத்தமில்லாமல் கண்ணீர்க் கறை கன்னத்தில் வழிய அவர் வீற்றிருந்தார். ''நமச்சிவாயம்'' என்று இரண்டு மூன்று முறை கூப்பிட்டுப் பார்த்தார். பதில் இல்லை. மெள்ள அவரை அசைத்தார். நமச்



சிவாயம் திரும்பினார்.

''நான் உடனே சென்னைக்குப் போகிறேன். உடனே அங்கிருந்து டில்லிக்குப் போகப் போகிறேன்.''

''பதவி ஏற்கப் போகறியா ராமலிங்கம்?'' என்று நமச்சிவாயம் கேட்டது வாள் கொண்டு அறுப்பது போல் இருந்தது ராமலிங்கத்துக்கு.

''எந்தப் பதவியையும் தேடிப் போகல்லே என் மகளைப் பற்றி வந்த தகவல் ஒரு வேளை தவறாக இருக்கலாமில்லே. அதன் உண்மையைத் தெரிஞ்சுட்டு வரப் போறேன். எனக்கு இனிமேல் பதவியிலே எல்லாம் ஆசை இல்லை. காணவில்லைன்னுதான் எழுதியிருக் காங்க. காணவில்லைன்னா உயிரோடு இருக்கலாம்னு ஒரு நம்பிக்கையும் இருக்கில்லையா? அந்த நம்பிக்கையிலே தான் இப்போ என் மூச்சு இருக்கு. அது மட்டும் இல்லை, நமச்சிவாயம். நீ என் மாதிரியில்லே, தெய்வத்திலே எவ்வளவோ நம்பிக்கை வச்சிருக்கிறவன். அன்னதானம், கோவில் என்று எவ்வளவோ செலவு செய்திருக்கே. உன் மகன் வாழ்வை ஆண்டவன் வீணாக்குவாரா? அந்த நம்பிக்கைதான் என்னை முயற்சிக்கத் தூண்டுது'' என்று கூறிவிட்டு வீட்டின் உட்புறம் சென்றார்.

மயங்கிக் கிடந்த பங்கஜத்தின் அருகில் அவள் தாய் உட்கார்ந்திருந்தாள். ராமலிங்கம் இதுவரை பங்கஜத்தின் தாயிடம் பேசியதே இல்லை. ''அம்மா, தபால்லே வந்த செய்தியை உண்மை என்று நினைக்கவும் முடியாது. சமயத்திலே யுத்தத்திலே ஒருத்தரைப் பற்றி வந்த செய்தியை மறு தபாலிலே மாத்தியும் சொல்வாங்க. காணவில்லைன்னுதான் செய்தி வந்திருக்கு. சீக்கிரமே நல்ல செய்தி வரும்னு நம்பறேன். அதுவரையிலும் குழந்தை பங்கஜத்தைத் தைரியமா இருக்கச் சொல் லுங்க'' என்று கூறினார்.

சில விநாடிகளில் சிவகாமியும் ராமலிங்கமும் காரில் சென்னைக்குப் புறப்பட்டனர்.

பங்கஜத்துக்கு நினைவு வந்ததும் அவள் தாய், ராமலிங்கம் போகும் போது கூறிச் சென்ற நம்பிக்கை வார்த்தைகளைச் சொன்னாள். ஆனால் பங்கஜத்துக்கு அவை ஆறுதல் தந்தனவா இல்லையா என்று புரியவில்லை. பங்கஜம் தூக்கத்தில் நடப்பவள்போல் இருந்தாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தினம் மாலையில் காவிரிக் கரைக்குச் செல்வாள். கரையில் உட்கார்ந்தபடி காவிரி ஆற்றின் ஓட்டத்தைப் பார்த்தபடி இருப்பாள். இருட்டியபின்தான் திரும்புவாள். அவளுக்குத் தெரியாமல் சற்றுத் தூரத்தில் நமச்சிவாயம் பின் தொடருவார். பங்கஜம் காவிரியாற்றையும் நமச்சிவாயம் பங்கஜத்தையும் பார்த்தபடி இருப்பார்கள்.

மரத்தின் மறைவில் நின்றுகொண்டு இருக்கும் தந்தையை ஒரு நாள் பங்கஜம் கவனித்துவிட்டாள். ''ஏம்ப்பா நீங்க என்னோட பின்னாலே தினமும் வர்றீங்க?'' என்று கேட்டாள். நமச்சிவாயம் வாய் திறவாமல் நின்றார். ஆனால் அவர் விழிக்கோணத்தில் நீர் நிறைந்திருந்தது. பங்கஜம் அவர் மனத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டாள். ''துக்கம் தாங்காமல் நான் ஆத்திரப்பட்டுக் காவிரியிலே விழுந்திடுவேன்னு பயமா அப்பா?'' என்றாள்.

நமச்சிவாயம் பதில் சொல்லாமல் தரையைப் பார்த்தார்.

''கவலைப்படாதீங்க அப்பா! அந்த மாதிரி அவமானத்தை நான் உங்களுக்குத் தேடித்தரமாட்டேன்'' என்றாள்.

நமச்சிவாயம் தலை தூக்கி அவளைப் பார்த்தார். அப்போதுதான், சில நாட்களில் கவலையால் அவள் முகம் ஒட்டி உலர்ந்து போயிருப்பதை உணர்ந்தார். ''பங்கஜம், நான் அதிகம் படிச்சவனில்லை! மனசைப் பல திசையிலே ஓடவிட்டு வாழத் தெரியாது. நம்பிக்கை எல்லாம் தெய்வத்திலேயும், ஆசை பாசமெல்லாம் உன் மேலேயும்



வச்சிருக்கேன். இரண்டுமே பொய்யாகாதுன்னு நம்பறேன்'' என்றார். தந்தையும் மகளும் மௌனமாக வீடு திரும்பினர்.

வீட்டு வாசல்படியில் டாக்டர் ராவ்ஜி நின்று கொண்டிருந்தார். அவர் கையில் தக்ளி சுற்றிக் கொண்டிருந்தது. நூல் நூற்றுக் கொண்டிருந்தார். வழக்கமாக முன்பெல்லாம் முகத்திலிருந்த குழந்தைப் புன்னகை அன்று நாண குறைவாக இருந்தது. 'பங்கஜம், ஏதாவது தகவல் கிடைத்ததா!'' என்று கேட்டார்.

''ஒன்றும் தெரியல்லே மாமா. பெரியவர் இன்னும் டில்லியிலேதான் இருக்கார்'' என்று சொன்னாள்.

''கவலைப்படாதே பங்கஜம். நீ எனக்கு இன்னொரு பெண். கடவுள் என் இரண்டு குழந்தைகளையும் வீணாக்க மாட்டார். உன் விஷயத்திலே எல்லாம் நல்லபடியா முடியும்'' என்று ராவ்ஜி கூறும்போதே மூக்கை உறிஞ்சிக் கொண்டார்.

பங்கஜம், ''மாமா, உங்களைப்போல ஒரு நல்லவர் வாயால் வரும் வார்த்தைகள் பொய்க்காதுன்னு நம்பறேன்'' என்று சொல்லி உள்ளே போக அடி எடுத்து வைத்தாள். ''பங்கஜம், நான் இரண்டுநாளிலே பட்டணம் போகலாம்னு இருக்கேன். இடம் மாத்தினாலாவது என் பெண் சாவித்திரிக்கு ஓர் ஆறுதலா இருக்கும்னு நினைக்கிறேன்'' என்று கூறினார்.

''அப்படியே செய்யுங்க மாமா. அப்பா, நாமும் பட்டணம் போனா என்ன! சிவகாமி அத்தை தனியாத்தானே இருக்காங்க?'' என்று கூறினாள். நமச்சிவாயம் ராவ்ஜி முகத்தைப் பார்த்தார்.

''டாக்டர், பட்டணத்திலே போய் வைத்தியத் தொழில் செய்யப் போறீங்களா?'' என்றார். ராவ்ஜி சில விநாடிகள் பேசவில்லை.

''என்ன பண்றது நமச்சிவாயம். நான் கடைசி வரையிலே ஏதாவது சம்பாதிச்சுக்கிட்டுத்தானே இருக்கணும்

போயிருக்கு. சாவித்திரிக்கு ஏதாவது வழி செய்ய வேண்டாமா? சின்ன முறையிலே தொழில் ஆரம்பிக்க லாம்னு இருக்கேன்'' என்று கூறினார்.

நமச்சிவாயம் கனிவோடு ராவ்ஜியிடம் சொன்னார்; ''டாக்டர், பணமாகக் கொடுத்தால் நீங்க வாங்க மாட்டீங்க. மாம்பலத்திலே எனக்கு அடுத்து அடுத்தாப் போல இரண்டு வீடு இருக்கு. இரண்டும் பூட்டியிருக்கு. ஒரு வீட்டை நீங்க எடுத்துக் கொள்ளுங்க. அடுத்த பெரிய வீட்லே நாங்க இருக்கோம். குழந்தையிலேருந்து சாவித்திரியும் பங்கஜமும் ஒன்றாகப் பழகிட்டாங்க. இப்போ இரண்டு பேர் வாழ்வையும் துக்கம் சூழ்ந்திருக்கு. ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதலா இருப்பாங்க, என்ன சொல்றீங்க?''

''நானும் சாவித்திரியும் அக்கா தங்கச்சி மாதிரிப் பழகியிருக்கோம். எங்க இரண்டு பேரையும் நினைச்சு ஒப்புக் கொள்ளுங்க மாமா!'' என்று பங்கஜம் வற்புறுத்தினாள்.

ராவ்ஜி கண்ணைத் துடைத்துக் கொண்டார். தக்ளி யில் நூலைச் சுற்றினார். ''பங்கஜம், உன் இஷ்டப்படியே செய்யறேன். எனக்குப் பட்டணம் போய் பிராக்டிஸ் ஆரம் பிச்சு என்ன வருமானம் வரும்னு தெரியாது. கிடைக்கிற திலே நூறோ ஐம்பதோ வாடகையாகக் கொடுப்பேன். அதை நீங்க வாங்கிட்டாத்தான் நான் அந்த வீட்டிலே தங்க முடியும். இனாமா நான் எதையும் வாங்கிக்க விரும்ப வில்லை'' என்று சொல்லிவிட்டுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்யச் சென்றுவிட்டார்.

ராவ்ஜி குடும்பம் சென்னை சென்ற அடுத்த வாரமே நமச்சிவாயம் தன் மனைவி பங்கஜத்தோடு சென்னைக்குப் புறப்பட்டார். நமச்சிவாயத்தின் வாழ்க்கையில் முதல் தட வையாக இப்போதுதான் அவர் பொன்மங்கலத்தை விட்டு அதிக நாள் பிரிந்து வாழத் துணிந்தது. தன் காளைகளை யும் பசுக்களையும் கொட்டிலில் பார்க்கும்போது அவருக்கு அழுகையாக வந்தது. பண்ணை ஆட்கள் முகத்தைப்



பார்க்கவே அவருக்கு வெட்கமாக இருந்தது. அனாதை யாக மாடு மேய்க்க வந்த பையன் ஆறுமுகம். அவன் நாணயத்தின் உருவம். ஒருமுறை களத்து மேட்டில் அறு வடை சமயத்தில் 15 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் கொண்ட முடிச்சை நமச்சிவாயம் மறந்து வைத்து விட்டார். அதை இரவு காவலுக்குப் படுத்திருந்த ஆறுமுகம் கண்டெடுத்து ஒரு நோட்டுக் குறையாமல் கொண்டு வந்து கொடுத் தான். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆறுமுகத் திடம் தன் பண்ணையையும் வீட்டையும் ஒப்படைத்து அவர் பயணமானார்.

சென்னை வந்ததும் ராமலிங்கத்தின் பங்களாவுக்குச் சென்றார். ராமலிங்கம் டில்லியில் இருக்கிறார் என்றும், எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் அவர் மனைவி சொன்னாள். சிவகாமிக்குப் பங்கஜத்தைப் பார்க்கும் போது பெரிய கலக்கமாக இருந்தது. பாவம், இந்த இளம் வயதில் கல்யாணமாகிச் சில மாதங்கள்கூட ராஜுவோடு சேர்ந்து இருக்க முடியவில்லையே. அவள் மனம் என்ன வேதனைப்படும் என்று எண்ணிப் பார்த்தாள். ஒரு நாள் மரியாதைக்கு ராமலிங்கத்தின் வீட்டில் தங்கிவிட்டு, பங்கஜம் தந்தை இருக்கும் மாம்பலம் வீட்டுக்கு வந்துவிட் டாள். தினமும் ஒரு முறை மாலையில் மாமனார் வீட்டுக்கு போய்விட்டுத் திரும்புவாள். ஒவ்வொரு நாள் திரும்பும் போதும் சாவித்திரி, ''பங்கஜம், ஏதாவது தெரிஞ்சுதா? உங்க மாமனார் எப்போ டில்லியிலிருந்து வருவார்?'' என்று கேட்பாள்.

''ஒன்றும் தெரியல்லே சாவித்திரி! இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அதுமேல் தண்ணீர் ஊற்றிக் குளிர வச்சு அடிப்பான் கொல்லன். அது மாதிரி கடவுள் என்னோடு விளையாடறாரு. என் மனசு தினமும் எதிர்பார்த்து ஏமாந்து போகுது. ஒவ்வொரு சமயம் விஷயம் இப்படியே நீடிச்சாக்கூடப் பரவாயில்லைன்னு தோணுது. என்னா, இப்பவாவது நான் ஏதாவது எதிர்பார்க்க முடியுது பாரு'' என்று சொல்வாள்.

ஒருநாள் ராமலிங்கம் வரப்போகிறார் என்ற செய்தி கேட்டு நமச்சிவாயமும் பங்கஜமும் ராமலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றிருந்தனர். அன்று டாக்டர் ராஸ்ஜி தங்கியிருக்கும் வீட்டு வாசலில் சாவித்திரி வழக்கம்போல் பங்கஜம் வருகைக்காகக் காத்திருந்தாள். பங்கஜம் மணி ஆறு ஆகியும் வரவில்லை. நமச்சிவாயம் பங்கஜத்துடன் சென்றிருந்தார். பங்கஜத்தின் தாய்க்குக் கவலையாக இருந்தது. அவள் கிராமத்திலேயே இருந்தவளாதலால் டெலிபோன் செய்யத் தெரியவில்லை. சாவித்திரியை ராமலிங்கத்தின் வீட்டுக்குப் போன் செய்யச் சொன்னாள். சாவித்திரிக்குப் போனை எடுக்கவே பயமாக இருந்தது. "நான் அதிர்ஷ்டக் கட்டை. என்னை விட்டுப் போன் செய்யச் சொல்றீங்களே மாமி?" என்று கேட்டாள். "எல்லார் அதிர்ஷ்டமும் ஒன்றாகத்தான் இருக்கு. நீ போன் பண்ணி ஒன்றும் கெட்டுப் போயிடாது. எனக்குக் கவலையாக இருக்கிறது" என்று பங்கஜத்தின் தாய் வற்புறுத்தினாள்.

சாவித்திரி பயத்தோடு போனை எடுத்து டயல் செய்தாள். ராமலிங்கத்தின் வீட்டில் போன் அடித்துக் கொண்டே இருந்தது. "யாரும் எடுக்கவில்லை மாமி, போன் அடிச்சிட்டே இருக்கு" என்று சொல்லிப் போனை வைத்தாள். சாவித்திரிக்கு மனத்திற்குள் ஒரு திருப்தி. நல்ல செய்தியாகத்தான் இருக்க வேண்டும் மாமி. அதனால்தான் நான் டயல் செய்தபோது போன் கிடைக்கவில்லை" என்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்தாள்.

சாவித்திரி வீட்டுக்குள் நுழைவதற்குள்ளே நமச்சிவாயத்தின் வீட்டின் முன் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து நமச்சிவாயம் இறங்கினார். அவரைத் தொடர்ந்து மிகவும் மெலிந்த உடலுடன் ராமலிங்கம் இறங்கினார். பங்கஜம் ஏன் காரில் இருந்து இறங்கவில்லை என்று ஆவலோடு சாவித்திரி நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 11

சாவித்திரி ஆவலோடு நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். ராமலிங்கம் காரை விட்டு இறங்கியதும் டிரைவர் கார் கதவைத் திறந்தான். பங்கஜம் தள்ளாடிய படி இறங்கினாள். அவள் கால்கள் தரைமேல் நிற்க முடியாமல் தள்ளாடின. பங்கஜத்தின் முகத்தோற்றம் சாவித்திரிக்குச் சுரீர் என்று வேதனையைத் தந்தது. சாவித்திரியின் அடி வயிற்றில் இனம் தெரியாத ஓர் உணர்ச்சி பற்றிக் கொண்டது. அந்த விவரிக்க முடியாத உணர்ச்சியைச் சாவித்திரி தன் வாழ்வில் சந்தித்து இருக்கிறாள்—அதுவும் சமீபத்தில் அவள் தந்தை அவள் கணவனைப் பற்றிய தகவல் தெரிந்து வரத் திருச்சி சிறைக்குச் சென்றிருந்தபோது.

அன்று இப்படித்தான் சாவித்திரி தன் வீட்டு நிலை வாசலில் நின்று தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்? நெஞ்சு துடிக்க தந்தையின் வருகைக்காகக் காத்திருந்தாள். தந்தையோடு அவரும் விடுதலையாகி வரலாம் அல்லவா? ஆவலோடு அவள் என்ன என்னவோ கற்பனை செய்து கனவு கண்டபடி காத்திருந்தாள். தெரு மூலையில் ஒரு வண்டி வந்தது. அதன் முன்புறத்தில் தந்தை அமர்ந்திருந்தார். வண்டியைச் சுற்றி ஒரு கூட்டமே தொடர்ந்து வந்தது. கூட்டத்துக்குப் பழக்கப்படாதவள் அல்ல சாவித்திரி. குவியலாகப் பணத்தை வேண்டுமானால் அவள் உணர்ந்தது இல்லை. ஆனால் அவள் தியாகத் தந்தை சிறையிலிருந்து திரும்பும் போதெல்லாம் தெரு மூலையில் கூட்டம் கூடுவது வழக்கம். "வந்தே மாதரம்!" "பாரத்மாதா கீ ஜெய்!" என்ற கூச்சலோடு கூட்டம் வரும். ஆனால் இன்று வந்த கூட்டம் அமைதியாக, நிசப்தமாக வண்டியைத் தொடர்ந்து வந்தது. வண்டி வீட்டை நெருங்கியதும் ராஸ்ஜியின் பார்வை வாசலில் ஆவலோடு காத்திருக்கும் சாவித்திரியின் முகத்தில் நின்றது. வண்டியைத் தொடர்ந்த தொண்டர் கூட்டமும் சாவித்திரியைக் கவனித்தது.

வண்டியில் இருந்த ராவ்ஜி, ''சாவித்திரி!'' என்று அலறினார். கூட்டத்தில் இருந்து குப்பென்று ஓலம் புறப் பட்டது. ஒன்றும் புரியாமல் தல்லதையையே நினைத்தபடி நின்றிருந்த சாவித்திரியின் பார்வையில், வண்டிக்குள் கிடக்கும் உருவம் தெரிந்தது. அதே கருட்டைத் தலை. எவ்வளவோ முறை ஆசையும் உணர்ச்சியும் உந்த அவள் தடவிக் கொடுத்த அதே தலை. வண்டியின் ஆட்டத்தோடு அதுவும் ஆடிக் கொண்டிருந்தது. அந்த விநாடி அவள் அடி வயிற்றை விவரம் தெரியாத எந்த ஒரு வேதனை பற்றிக் கொண்டதோ, அதே வேதனைதான் இப்போதும் மறுபடியும் அவளை ஆட்கொண்டது.

பங்கஜம் அவள் வீட்டு வெளிப்புறத்தில் இருந்து தன் தாயைப் பார்த்ததும், ''அம்மா! அய்யோ அம்மா!'' என்று அலறியபடி ஓடுவது தெரிந்தது. விஷயம் ஒருவாறு சாவித்திரிக்கு விளங்கியது. மனம் பூராவிலுமே ஒரு வேதனை. மெள்ள அடிமேல் அடி வைத்து, செடி வேலியைத் தாண்டி, அடுத்த பங்களாவுக்குள் நுழைந் தாள்.

பங்களா முன் கட்டில், பங்கஜம் தன் தாயின் மார்பு மீது முகத்தை வைத்து கேவிக் கேவி அழுது கொண்டிருந் தாள். பங்ஜத்தின் தாய் தன் கணவனிடம் திரும்பி, ''என்னங்க? என்னன்னு சொல்லுங்களேன்!'' என்று பதறிக் கேட்டபடி இருந்தாள்.

நமச்சிவாயம், வாயைத் திறந்து ஏதோ சொல்ல முயற்சித்தார். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. உதடு கள் மட்டும் திறந்து மூடியபடி இருந்தன. விஷயத்தை எப்படிச் சொல்வது என்றே ராமலிங்கத்துக்குத் தெரிய வில்லை. ''அம்மா, அரசாங்கத்தில் இருந்து ஆதார பூர்வமான கடிதம் வந்து விட்டது. ராஜன்! என் ராஜன்! அவன் இனித் திரும்ப மாட்டான்!'' என்று சொல்லி விட்டு வேகமாக வாசலில் காத்திருந்த காருக்குச் சென்று விட்டார்.



பங்கஜத்தின் தாய் கற்சிலைபோல் நின்று விட்டாள். இதைக் கவனித்தபடி நின்ற சாவித்திரிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஓடிப்போய், அழுது கொண்டிருந்த பங்கஜத்தை எடுத்துத் தன் மார்புமீது சாத்திக் கொண் டாள். சாவித்திரியைப் பார்த்ததும் பங்கஜத்தின் துக்கம் மடை திறந்த பெரும் வெள்ளம்போல இன்னும் அதிக மாயிற்று. சாவித்திரி, பங்கஜத்தை அன்போடு அணைத்த படி மெள்ள வீட்டினுட்புறம் அழைத்துச் சென்றாள்.

தாங்க முடியாத துக்கம் வரும்போது எதுவும் பேசக் கூடாது என்பதை உணர்ந்திருந்தவளாதலால், பங்கஜத்தை அழைத்துப் போய்க் கட்டிலில் படுக்க வைத்தாள். நமச்சிவாயமும் அவர் மனைவியும் இருளில் அமர்ந்திருந்தனர். அவர் மெள்ள எழுந்தார். ''அம்மணி! அம்மணி!'' என்று இருமுறை கூப்பிட்டார். பதில் வர வில்லை. இருளில் மனைவி துவண்டு கிடப்பதை உணர்ந் தார். விளக்கைப் போட்டார்.

''அம்மணி!''

பங்கஜத்தின் தாய் மெள்ளக் கண்களைத் திறந்து தன் கணவன் நிற்பதைப் பார்த்தவள், எழுந்து உள்ளே சென்றாள். உள்ளே அறையில் பங்கஜம் படுத்திருப்பதை யும், பங்கஜத்தின் அருகில் சாவித்திரி உட்கார்ந்திருப்பதை யும் கவனித்தாள். பேசாமல் நடுக்கட்டுக்கு வந்து பெஞ்சி யில் உட்கார்ந்தாள்.

வெளியே போய்விட்டுத் திரும்பிய ராவ்ஜியிடம் அவர் மனைவி விஷயத்தைச் சொன்னதும், ராவ்ஜி மெள்ள அடுத்த வீட்டுக்கு வந்தார். ராவ்ஜியைப் பார்த்ததும் ஒரு குழந்தைபோல் ஓடிப்போய் அவரைக் கட்டிக் கொண்டார் நமச்சிவாயம்.

''என்ன செய்வேன் டாக்டர்! எனக்கு ஒன்றும் புரியல்லே டாக்டர்!''

''என்ன செய்தி வந்தது? விவரமாகச் சொல்லு, நமச்சிவாயம்.''

www.t.me/tamilbooksworld

"எனக்கு ஒன்றும் புரியல்லே டாக்டர். ராமலிங்கம் தான் படிச்சுச் சொன்னான். அதான், அந்தக் கடல்கரை ஊர் டொப்ருக்-அதான் சண்டை நடந்த இடம்- அங்கே மணலுக்கு அடியிலேருந்து போரிலே விழுந்தவங்க உடல்களை எடுத்தாங்களாம். அடையாளம் தெரியாத உருவங்களாக் கிடந்துச்சாம். அதிலே ஓர் உருவத்தின் கையிலே ராஜன் கடிகாரமும் பட்டாளச் சீட்டும், ராஜன் பேர் போட்ட பேனாவும் இடைச்சுச்சாம். அதை வச்சு நிர்ணயம் பண்ணி எழுதியிருக்காங்க" என்று அழுதபடியே சொல்லி முடித்தார்.

' எப்படிச் செல்லமாய் வளர்ந்த பிள்ளை! எங்கோ கண்காணாத ஊரிலே எவன் சண்டையிலேயோ போய் விழ வேண்டுமா?" ராவ்ஜி பெருமூச்சு விட்டார்.

செய்தி வந்த சில வாரங்களுக்கு நமச்சிவாயத்தின் வீட்டில் இருள் சூழ்ந்து இருந்தது. பண்பாலும் அன்பாலும் சிறந்த ராவ்ஜியுடைய நட்பின் அணைப்பை நமச்சிவாயம் உணர்ந்தார்.

ராவ்ஜி அவரை விட்டுப் பிரியாமலே இருந்தார். சாப்பிடும்போதும், தூங்கும் போதும் அருகிலேயே இருந்தார். சாவித்திரியும் பங்கஜத்தை விட்டுப் பிரியாமலே இருந்தாள். பங்கஜம் உணவை மறுத்தாள். சாப்பிடச் சொல்லி வற்புறுத்திய சாவித்திரியைப் பேசக் கூடாத வார்த்தைகளால் கடிந்து கொண்டாள். துக்கம், அவள் மனத்தில் மறைந்திருந்த சில குணக் கோளாறுகளை வெளிக் கொண்டு வந்தது. யாருமே அவளை நெருங்க முடியவில்லை. சாவித்திரிதான் வசைகளைப் பாராட்டாது அவள் அருகிலேயே இருந்தாள். இரவும் பகலும் ராவ்ஜியின் குடும்பம் நமச்சிவாயத்தின் வீட்டிலே தங்கியிருந்தது. ஊரிலிருந்து பந்துக்கள் துக்கம் விசாரிக்க வரத் தொடங்கினர். அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கே நமச்சிவாயம் சங்கடப்பட்டார். பங்கஜமோ யாரையும் சந்திக்க விரும்பவில்லை. உறவினர்களை உபசரிக்கும் வேலையை ராவ்ஜி



ஏற்றுக் கொண்டார். காப்பி பலகாரம் கொடுத்து உபசரிக்கும் பணி, சாவித்திரியின் பொறுப்பாயிற்று.

பங்கஜத்தின் துக்கத்தில் சாவித்திரி தன்னுடைய சொந்த துக்கத்தை மறந்தாள். அவள் தந்தை அடிக்கடி, "நாட்டுக்காகவோ மற்றவர்களுக்காகவோ வாழ்ந்தால் துக்கம் இல்லை; எந்தச் சோதனையும் பெரிசு இல்லை. நமக்காக நாம் வாழ நினைக்கிறபோதுதான் துன்பத்தின் சுமை அதிகம்" என்று சொல்லி வந்த வார்த்தைகளின் உள் அர்த்தம் அவளுக்குப் புரிந்தது. நமச்சிவாயம் மட்டும் அலத்தியபடி இருந்தார். "நான் யாருக்கும் தப்பு நினைக்கலியே! ஆண்டவன் பேரைத்தானே சொல்லிட்டிருந்தேன்? 'சிவா'ன்னாலே 'மங்களம்'னு அர்த்தமாச்சே! கிட்டத்தட்ட ஒரு கோடி தரமாவது ஓம் நமச்சிவாயான்னு சொல்லி இருப்பேனே. என் வீட்டிலே என் குழந்தையை இப்படிச் செய்துட்டானே கடவுள்!" என்று புலம்பிக் கொண்டிருப்பார்.

ராஜனைப் பற்றிய செய்தி வந்த ஒரு மாதத்துக்குப் பின் ஒரு நாள் காலை ஏழுமணிச் சுமாருக்கு, நமச்சிவாயம் வீட்டின் வெளிப்புறத்தில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ராமலிங்கமும் சிவகாமியும் இறங்கினர். நமச்சிவாயம் அவர்களை எதிர்பார்க்கவில்லை. ராமலிங்கத்தின் உடல் மெலிந்திருந்தது. எப்போதும் ஆடையில் கவனம் செலுத்துபவர், இப்போது மிக அடக்கமான உடையோடு இருந்தார். இருவருமே வயதாகி விட்டவர்கள் போல் தோற்றமளித்தனர்.

நமச்சிவாயம், "வாப்பா ராமலிங்கம்" என்று வரவேற்றார். ராமலிங்கம் வராந்தாவில் உள்ள நாற்காலியில் உட்கார, சிவகாமி நேரே வீட்டின் உட்புறம் சென்றாள். ஹாலில் பலகையில் உட்கார்ந்திருந்த அம்மணி அம்மாளுக்குச் சிவகாமியின் வருகை ஆச்சரியத்தைக் கொடுத்தது. "வா" என்று கூடக் கூப்பிடாமல் சிவகாமியைப் பார்த்தபடி சும்மா இருந்தாள். என்ன

சொல்லுவது என்று தெரியாமல் தயங்கிய சிவகாமி, "பங்கஜத்தைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றாள்.

"அவளைப் பார்க்கும்படியாவா வச்சிருக்கு? அவளைத்தான் நாலு கோலம் பண்ணி நடுவீதியிலே நிறுத்தியாச்சே. இன்னும் பார்வை என்ன வேண்டியிருக்கு?" என்று அம்மணியம்மாள் எழுந்து சென்றுவிட்டாள்.

பசுபோல் இருந்த நாட்டுப்புறத்து அம்மாள் இப்படிக் கன்னத்தில் அறைவதுபோல் பேசுவாள் என்று சிவகாமி சற்றும் எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் மரியாதை, மரியாதைக் குறைவு பற்றியெல்லாம் வருத்தப்படும் மன நிலையில் சிவகாமி இல்லை.

நிலைமையைக் கவனித்த சாவித்திரி, "வாங்கம்மா! துக்கம் ஒவ்வொருத்தரை ஒவ்வொரு விதமாக்குது. ஒருத்தருக்கு அமைதி தருது. ஒருத்தருக்குக் கோபத்தைத் தருது. பங்கஜம் மாடியிலே இருக்கா" என்று மாடிக்கு அழைத்துச் சென்றாள். மாமியாரைப் பார்த்ததும் முதலில் பங்கஜத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படியே விறைத்துப் பார்த்தபடி இருக்கவே, சிவகாமி அம்மாளுக்கு லேசாக ஒரு பயம் எழுந்தது. தாயைப் போலவே பங்கஜமும் ஏதாவது பேசுவாளோ? 'யார் என்ன பேசினால் என்ன?' என்ற விரக்தி சிவகாமிக்கு ஓரளவு துணிவைக் கொடுக்க, பங்கஜம் உட்கார்ந்திருந்த கட்டிலுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த போட்டோவைப் பார்த்தாள் சிவகாமி. பம்பாயில் ராஜனும் பங்கஜமும் எடுத்துக் கொண்ட போட்டோ. முத்துப் பற்கள் வரிசையாகத் தெரியச் சிரித்தபடி இருந்தான் அவன். அருகில் பங்கஜம் நின்றிருந்தாள். சிவகாமியின் பார்வை அந்தப் படத்திலேயே லயித்து நின்றது. மார்பு விம்மியது. உதடுகள் துடித்தன. இதற்கு முன் அவள் இந்தப் படத்தைப் பார்த்ததில்லை. "அப்படியே அவன் நேரா

www.t.me/tamilbooksworld



நிக்கற மாதிரி இருக்கே பங்கஜம்? இந்தப் படம் எப்போ எடுத்துட்டீங்க?"

"பம்பாயிலே அவர் கப்பல் ஏறுவதற்கு முன்பு எடுத்துக் கொண்டோம்" என்று விரக்தியோடு அலட்சியமாகச் சொன்னாள் பங்கஜம். சிவகாமி ஒரு வெறியோடு அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். கோவி அழுதபடி, "ஏன்டா ராஜா அப்படிச் சிரிக்கிறே? நாங்களெல்லாம் அழுதிட்டு இருக்கோம், நீ சிரிக்கிறியேடா! கண்ணாடிக்கு முன்னாலே நின்னு சிரிச்சபடி சொல்லுவாயேடா 'பள்ளிக்கூடத்திலே எல்லோரும் என்னைப் பல் அழகன்னு சொல்றாங்கம்மா. உன் பற்களை விடவா என் பற்கள் அழகாயிருக்கு?'ன்னு கேட்பாயேடா. நான் இன்னும் கல்லாட்டமாருக்கேன். நீ தொடுத்த மாலையை இங்கே வாட விட்டுட்டு எங்கேடா போயிட்டே!" என்று சிவகாமி அழுதபடி சொல்லும் போது, அவளது உதடுகள், தாடை, பற்கள் எல்லாம் அப்படியே தன் கணவன் ஜாடையாக இருப்பதைப் பங்கஜம் கவனித்தாள். ராஜனையே பார்ப்பதுபோல் அவளுக்கு ஒரு விநாடி பிரமை ஏற்பட்டது. மாமியாரை விறைத்துப் பார்த்தபடி இருந்தாள்.

சிவகாமி, படத்தை மேஜையில் வைக்க மனமில்லாமல் வைத்துவிட்டு, "பங்கஜம்! உங்கிட்டே ஒண்ணு கேட்கப் போறேன். அதை நீ எனக்குக் கொடுத்தாகணும்! ராஜன் உனக்கு எழுதின கடிதத்தைப் படிச்சதிலே அவன் உன் மேலே எவ்வளவு நம்பிக்கையும் ஆசையும் வச்சிருந்தான் என்பது தெரிகிறது. உடலோடு சுமந்து பெற்று வளர்த்த என்னிடம்கூட அவன் அவ்வளவு நம்பிக்கை வைக்கல்லே. நீ உண்மையிலேயே அவனுடைய ஒரு பாதின்னுதான் சொல்லணும். முழுசைப் பெத்தவள் அதை இழந்து நிக்கறேன். அந்த முழுசின் ஒரு பாதியாவது என்னோட இருக்கணும்னு எனக்கு ஆசை. உன்னிடம் நான் பிரிந்த ராஜனைத்தான் பார்க்கிறேன். இரண்டு பண்ணைகளும்

ஒன்றாகணும்னு எவ்வளவோ ஆசைப்பட்டு அவசரப்பட்டு கல்யாணத்தை நடத்தினோம். ஆனால் அது இப்படி யாகும்னு நினைக்கல்லே. இனிமேல் நீதான் எனக்குப் பெண்ணும் பிள்ளையுமா இருக்கணும்மா!'' என்று கெஞ்சினாள்.

ஒன்றும் சொல்லாது தரையைப் பார்த்தபடி இருந்தாள் பங்கஜம்.

"உங்கம்மா அப்பாகிட்டேயிருந்து உன்னைப் பிரிக்க வரலேம்மா, அவுங்களுக்கு அடுத்த ஸ்தானமாவது எனக்கும் என் வீட்டுக்காரருக்கும் நீ கொடு. வீட்டிலே உன் குரல் கேட்டா ராஜன் இருக்கிற மாதிரி இருக்கும். நீ சாப்பிடறதைப் பார்த்தா, ராஜன் சாப்பிட்ட மாதிரி எனக்குத் திருப்தி இருக்கும். நாங்க ரெண்டு பேரும் எதுக்காக வாழணும் இனி? பரம்பரைச் சொத்தைப் பாதுகாக்கவா? அதுக்கு இரண்டு வக்கீலும் ஒரு ஆடிட்டரும் போதுமே. உலகத்துக்காக வாழக் கூடிய அந்தப் பரந்த ஞானம்—பண்பு எங்களுக்கு இன்னும் வரல்லேம்மா! உனக்காகவாவது வாழ ஆசைப்படறோம். பெத்த தாயின் மனசு பாரு! அதிலே யாராவது இருந்திட்டிருக்கணும், அது சூன்யமா இருக்கப்படாது பங்கஜம்!''

பங்கஜம் சிவகாமியின் கண்ணீர் நிறைந்த கண்களைப் பார்த்தாள். அவற்றில், சிரித்தபடி நிற்கும் ராஜன் அவளுக்குத் தெரிந்தான்.

அடுத்த விநாடி, ''அம்மா!'' என்று அலறி அப்படியே தன் அத்தையைக் கட்டிக் கொண்டாள்.

பெற்றுப் பிரிந்தவளும் மணந்து பிரிந்தவளும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி அழுதனர். துக்கச் செய்தி வந்த நாளுக்குப் பிறகு இன்றுதான் பங்கஜம் மனத்தில் அன்பும் மென்மையும் புகுந்தன என்பது சாவித்திரிக்கு மட்டும் தெரியும்.

www.t.me/tamilbooksworld

# 12

''அம்மா'' என்று கூவித் தன்னை அணைத்துக் கொண்ட பங்கஜத்தின் செயல் சிவகாமிக்குப் பெருமையைக் கொடுத்தது. தன்னை 'அம்மா' என்று வாஞ்சையோடு அழைக்கும் ஒரு ஜீவன் இன்னும் இருக்கிறது என்ற மகிழ்ச்சி அவளைத் திக்குமுக்காடச் செய்தது. பொதுவாக, சம்பந்தம் ஏற்படும்போது பெண் வீட்டாருக்கும் மாப்பிள்ளை வீட்டாருக்கும் பரஸ்பரம் அன்பு ஏற்படும். ஆனால் மணமகனோ மணமகளோ அகாலத்தில் பிரிய நேரிட்டால் இரு குடும்பமும் ஒன்றை மற்றொன்று வெறுக்கும். 'அந்த வீட்டில் பெண்ணைக் கொடுக்காமல் இருந்திருந்தால், அந்த வீட்டில் பெண் எடுக்காமல் இருந்திருந்தால் எவ்வளவு மேன்மையாக இருந்திருக்கும்' என்று ஒவ்வொரு வீட்டாரும் நினைப்பது வழக்கம். பல வருடங்களுக்கு ஒருவர் வீட்டை மற்றவர் மதிக்கவே மாட்டார்கள். அதுவும் ஒரே பெண்ணுக்கு ஒரே பிள்ளையைக் கொடுத்து விட்டால் கேட்க வேண்டுமா? இந்த வன்ம உணர்ச்சி பெண்டிர்களிடையேதான் அதிகம் இருக்கும். அந்த விதிக்கு விலக்கில்லாதவளாக இருந்தாள் பங்கஜத்தின் தாய் அம்மணி அம்மாள்.

'ஒரே பெண். எவ்வளவு பெரிய இடத்தில் கொடுத்திருக்கலாம்! அதை விட்டு அந்தத் தோசிப் பயல் பாரிமங்கலத்தான் கையைப் பிடித்தாள் என் மகள். இன்று இந்த நிலையில் நிற்கிறாள்' என்று நினைத்தாள். சிவகாமி அம்மாள் மான வெட்கமில்லாமல் தன் வீடு தேடி வந்திருக்கிறாள் என்று நினைத்த அம்மணி, சிவகாமிக்கும் இருப்பது ஒரே மகன். அவன் பிரிவு அந்தத் தாயுள்ளத்துக்கும் பெரிய வேதனை தரும் என்று சிறிதும் நினைக்கவில்லை. தன்னுடைய வருத்தத்திலேயே மூழ்கிப் போயிருந்த அம்மணிக்கு மற்றவர் உணர்ச்சிகளைப் பற்றி எண்ணிப் பார்க்க அறிவும் இல்லை. பழக்கமும் இல்லை.

அவள் உலகம், பண்ணையாட்கள் மற்றக் கிராமத்து மக்களைச் சுற்றிய உலகம். என்ன ஆத்திரம் வந்தாலும் நாளை அடக்கிப் பேச வேண்டும் என்ற நாகரீக தத்துவத்தை உணரவில்லை அம்மணி அம்மாள்.

பங்கஜம் சிவகாமியின் தோளில் சாய்ந்தபடி அழுவது அம்மணிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. மேலும், தன்னை அழைக்க வேண்டிய தனிச் சொல், "அம்மா! என்ற சொல். அதைக் கூறிப் பங்கஜம் எப்படிச் சிவகாமியை அழைக்கலாம் என்று எண்ணியது அம்மணியின் மனம். 'போர் முனையிலிருந்து துக்கச்செய்தி வந்தவுடனேயே தான் உறவுச் சங்கிலி முறிந்து விட்டதே? இன்னும் என்ன இந்த உறவு வேண்டி இருக்கிறது?' என்று நினைத்தாள்.

"அம்மா, பங்கஜத்தை வேடிக்கை பார்க்க வந்தீர்களா? நல்லாப் பார்த்தாச்சா? தந்தச் சிலை மாதிரி இருந்தவ எப்படி ஆயிட்டா பாருங்க. கண்ணிருந்தும் மகளைக் கிணத்திலே தள்ளிட்டேன். இனி என்ன வேண்டியிருக்கு ஒப்புறவு?" என்றாள்.

சிவகாமி அதிர்ச்சியோடு திரும்பினாள். விரிந்த கண்களும், துடித்த உதடுகளுடன் நிற்கும் அம்மணியைப் பார்த்தாள். தன் வேதனையை அடக்கிக் கொண்டு, "என்னம்மா அப்படிப் பேசறீங்க? துக்கத்திலே இருக்கிற உங்களுக்கு எப்படியம்மா என் மனசு புரியாமப் போச்சு? ராஜனை மகனாகவும், பங்கஜத்தை மகளாகவும்தான் நினைத்திருந்தேன். மகன்தான் போயிட்டான்னா மகளைக் கூட நான் பார்க்க வரக் கூடாதா?" என்று சொல்லிவிட்டு விடுவிடுவென்று கீழே இறங்கிப் போனாள்.

பங்கஜத்துக்குத் தன் தாயின்மீது ஆத்திரமே வந்தது. "என்னம்மா முட்டாள் தனமாப் பேசறீங்க? பாவம், அவுங்க மனம் வெந்து வந்திருக்காங்க. அவுங்களைப் பார்த்து இப்படியாப் பேசறது!" என்று தாயைக் கண்டித்தாள்.



30052
466316S

"உனக்கு ஒன்றும் தெரியாது, பங்கஜம். அந்த அம்மா என் மாதிரி பட்டிக்காடு இல்லை, மனம் வெந்து வந்திருக்க! நாயைப் போலப் பெண்ணு, நாளைப் போல சேனைப்பாங்க. சிவகாமியோட அம்மா அஞ்சலையை எனக்கு நன்றாகத் தெரியுமே. அஞ்சலை கட்டின புருஷன் கருமாதி அன்னிக்குக்கூட அவள் காதிலே இருந்த வைரத் தோட்டைக் கழற்ற மாட்டேன்னுட்டாள். புருஷன் செத்து முழுசா நாலு மாசம் ஆகிறதுக்குள்ளே தன் பெண்ணை ராமலிங்கத்துக்குக் கட்டிக் கொடுத்தவ தானே? பெரிய இடத்துச் சம்பந்தம் தட்டிடுமோன்னு பயந்து, செத்த வீட்டிலே மேளம் தட்டினவள் அஞ்சலை, அவள் மகள்தானே சிவகாமி! அவளுக்கா துக்கம்?" என்று அடுக்க ஆரம்பித்தாள்.

பங்கஜத்துக்கு தன் தாய் பழங்கதை அளப்பது பிடிக்கவில்லை. அங்கிருந்து நகர்ந்து அடுத்த அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

மகள் பங்கஜம் தன்னை அலட்சியப் படுத்திவிட்டுப் போனது அம்மணியின் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. அதை நமச்சிவாயத்தின் மீது காட்டினாள். "என்னங்க, அந்தப் பிள்ளை அல்பாயுசுன்னு தெரிஞ்சுதானே செய்தீங்க? ஜோசியம் சொன்னப்புறம் துணிஞ்சுதானே அவளைக் கட்டி வச்சீங்க? எங்க அண்ணாச்சி அப்பவே சொன்னார். அந்த மாரிமங்கலத்தான் உறவு நம்ம குடியைத்தான் கெடுக்கப்போகுதுன்னு சொன்னார். அது பலிச்சுப் போச்சு. இவ்வளவும் ஆனப்புறம் அவுங்க உறவு எதுக்குங்கிறேன்?" என்று கூச்சலிட்டாள்.

"என்ன அம்மணி இப்படிக் கூச்சல் போடறே? ராமலிங்கம் மகனையே இழந்திருக்கிறார். கல்யாணத்தைக் கூட சீமையிலிருந்து திரும்பினப்புறம் வச்சுக்கலாம்னு அவர் சொன்னார். நான்தான் ஜோசியன் பேச்சைக் கேட்டு

உடனே வைக்கணும்னு ஒரு காலிலே நின்னேன். ராமலிங்கமோ அவர் சம்சாரமோ நம்ம பொண்ணைக் கட்டிக்கிட்டதாலேதான் இப்படி ஆச்சுன்னு ஒரு வார்த்தை சொல்லலே. நீதான் இப்படிக் கூச்சல் போடறே. நான் தான் இவ்வளவுக்கும் காரணம்'' என்றார் நமச்சிவாயம்.

''நூறு வாட்டி சொல்லுங்க. தையிலே பிள்ளைக்குக் கல்யாணம் ஆயிட்டா அந்தப் பிள்ளைக்கு ஆபத்தில்லேன்னு அவனைக் காப்பாத்தப் போனீங்க. உங்க பொண்ணைப் பத்தி நினைச்சீங்களா? புதுச் சிநேகிதன் பையனைக் காப்பாத்தறதுக்குத் துடிச்சீங்க. இப்ப என்ன ஆச்சு? உங்க பொண் மஞ்சளை இழந்து நிக்கறா'' என்று தொடர்ந்து பேசினாள்.

நமச்சிவாயமே அம்மணியின் குரலையும் ஆவேசத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டார். எது சொன்னாலும் மறுப்புச் சொல்லாதவள் அம்மணி. கல்யாணம் நிச்சயம் செய்தபோது ராஜன் ஜாதகத்திலே தோஷமென்கிறார்களே என்று லேசாகத்தான் பிரஸ்தாபித்தாள். நமச்சிவாயம் முடிவு செய்தபின் வாய் திறக்கவில்லை. தந்தி வந்தபோதும் பேசாமல் பொறுமையாக இருந்தாள். ராமலிங்கம் முடிவான செய்தி கொண்டு வந்த அன்றும் ஊமைபோல் அழுதாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை. இன்று திடீரென்று, சிவகாமியையும் ராமலிங்கத்தையும் பார்த்தவுடன் ஏன் இப்படி வெகுண்டு கூச்சலிடுகிறாள் என்று நமச்சிவாயத்துக்குப் புரியவில்லை. நாற்பது வருடங்கள் அவளோடு வாழ்ந்தவருக்கு அவளைப் புரியவில்லை. பூமியின் அடித்தளத்தில் பல நூறு வருடங்கள் தொடர்ந்து நிகழும் ரசாயன மாறுதல்கள் ஒரு தீப் பிழம்பாகப் பூகம்பத்தோடு வெளிப்படுவதுபோல் இருந்தது அம்மணியின் கோபம்.

அன்று வந்த கோபம் அன்றோடு மறையவில்லை. நமச்சிவாயத்தின் ஒவ்வொரு செய்கையும் குற்றமாகப்



பட்டது அம்மணிக்கு. நமச்சிவாயம் வீட்டில் பூஜை செய்வதையே நிறுத்தும்படியான நிலைக்கு வந்து விட்டார். 'சாமிக்கு என்ன பூஜை வேண்டியிருக்கு, என்ன அபிஷேகம் வேண்டியிருக்கு?' என்று கூச்சல் போட ஆரம்பித்தாள். நமச்சிவாயத்தினால் தெய்வத்தை நிந்திக்க முடியவில்லை. தெய்வம் ஏன் இப்படிச் செய்து விட்டது என்ற கேள்விக்கு அவரால் பதில் சொல்லவும் முடியவில்லை. உலக விவகாரங்கள் நமக்குப் புரியாது, தெய்வ வழிபாடு ஒன்றுதான் நமக்குப் புரியும் என்று வாழ்ந்த அவர், அதுவும் தனக்குப் புரியவில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டார். பூஜை செய்யப் போய் உட்காருவார். அம்மணி அம்மாள் முறைத்தபடி பூஜை அறைக்குள் நுழைவாள். அப்புறம் நமச்சிவாயத்தின் சிந்தனை சிதறும். வேகமாகப் பூஜையை முடித்துவிட்டு எழுந்து விடுவார்.

நண்பர் ராவ்ஜியிடம் மட்டும் தன் துக்கத்தைத் தெரிவித்தார். ''ஒரு அமைப்பிலே வாழ்க்கையை நடத்தி விட்டேன். அந்த அமைப்பே போயிடுச்சு. எதிரே நின்னு பேசாத மனைவி பளீர் பளீர்னு பேசறாள். துக்கம் வந்திடுச்சுன்னு சாப்பிடாமல் இருக்கோமா நாம்? இல்லையே! அது மாதிரிதான் பூஜை விஷயமும். ஒழுங்காப் பூஜை பண்ணாமல் படுத்தால் தூக்கம் வரமாட்டேங்குது. பூஜைக்குப் போய் உட்கார்ந்தா எதுக்குப் பூஜை பண்ண வேண்டும்னும் தோணுது. 'எனக்கு ஒன்றுமே புரியலே டாக்டர் அய்யா'' என்றார் நமச்சிவாயம்.

ராவ்ஜி, ''மனுஷன் வாழ்க்கை, ரயில் வண்டியிலே போற மாதிரி நமச்சிவாயம்! வண்டி ஒழுங்காத் தண்டவாளத்திலே போயிட்டிருக்கிறவரை ஒன்றும் தெரியாது. தடம் புரண்டப்புறம்தான் விஷயம் புரியும், பெட்டி தலையிலும், தலை சக்கரத்திலேயும் உடையுது. நினைக்கிறது நடந்துட்டு இருக்கிற வரையிலும் நம்ம ரயில் தண்டவாளத்திலே போயிட்டிருக்கு. நினைக்

திக்கு தேர் எதிரா நடக்கிறப்போ விபத்து ஏற்படுது. பாவம், அம்மணி நினைப்பு ஒரு போக்கிலேயே போயிட்டிருந்திருக்கு. அந்தப் போக்கிலே இடர் மாறுதல் வரவும் மனம் குழம்பிப் போயிட்டா. மனம் போனபடி பேசுறா. எந்த அமைப்பிலேயும் வாழ்வு நடத்தாமல் என்னைப் போல வாழ்பவனுக்கு அதிர்ச்சி குறைவு. உன்னைவிட அதிர்ச்சி அடைந்திருக்கிறவர் ராமலிங்கம். அரசியலிலே வெள்ளைக்காரன் நீதி தவற மாட்டான்னு அவனைப் பெரிசா நினைச்சார் ராமலிங்கம். அதுவும் பொய்யாப் போயிடுச்சு. பையனும் அவரை ஏமாத்திட்டான். பதவி, அந்தஸ்து எல்லாம் பொய்யாத் தெரியுது அவருக்கு. கோர்ட்டுக்கு போகாமல் வீட்டிலேயே சுத்திக்கிட்டு இருக்காரு. உங்க மாதிரி ஆண்டவன் ஈடுபாடும் அவருக்கு இல்லை. அதனாலே அவர் வாழ்வு பூராவும் சூன்யமா இருக்கு'' என்று ராமலிங்கத்தின் நிலையை விளக்கி நமச்சிவாயத்துக்கு ஆறுதல் கூறினார்.

ஃ ஃ ஃ

ஒரு வெள்ளிக்கிழமை மாலை.

பங்கஜம் தந்தையிடம் வந்து, ''அப்பா, நான் அவர் வீட்டுக்குப் போய் விட்டு வரணும். கூட வர்றீங்களா?'' என்று கேட்டாள்.

நமச்சிவாயம் வீட்டின் உட்புறம் பார்த்தார். அம்மணி அம்மாள் இல்லை என்பது தெரிந்தது.

''அம்மா என்ன சொல்வாளோன்னு நினைக்கிறீங்களா? அம்மாவுக்குத் தெரிய வேண்டாம். தெரிஞ்சாலும் அக்கறையில்லை, வாங்கப்பா'' என்று வற்புறுத்தினாள் பங்கஜம்.

ஒரு லாங்கிளாத் ஷர்ட்டை எடுத்து அணிந்து கொண்டு நமச்சிவாயம் புறப்பட்டார்.



''காரிலே போக வேண்டாம். நடந்தே போவோம் அப்பா'' என்றாள் பங்கஜம்.

இருவரும் நடந்தே சென்றனர். வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டதும்தான் பங்கஜத்துக்கு ஓர் உண்மை புலப்பட்டது. அவள் துயரத்தில் உலகம் சிறிதுகூடப் பங்கு கொள்ளவில்லை என்பதை உணர்ந்தாள்.

உலகம் இன்பத்தில் மிதந்து கொண்டிருந்தது. ஜோடியாகக் கை கோத்து வரும் தம்பதிகள், காதல் பாட்டை விசில் அடித்தபடி சைக்கிளில் போகும் மாணவன், மனைவிக்குச் சாமான் வாங்கி வீடு திரும்பும் குமாஸ்தா. இப்படி எல்லாருக்குமே ஒரு குறிக்கோள் இருந்தது. தன்னைப்போல் எல்லாரும் இறந்த காலத்தில் உறங்கவில்லை என்பதை உணர்ந்தாள். சாவும், வாழ்வும்—இன்பமும் துக்கமும், செல்வமும் ஏழ்மையும் உலகத்தில் கை கோத்துச் செல்லும் அதிசயத்தை உணர்ந்தாள்.

ராமலிங்கத்தின் வீட்டை அடைந்து வெளித் தோட்டத்தில் நுழைந்தனர். ஒரு காலத்தில் மலர் சுமந்து ஒளி வீசிய செடிகள் எல்லாம் வாடி வதங்கிக் கிடந்தன. பராமரிப்பு இல்லாமல் கிடந்தது அந்தத் தோட்டம்.

நடு ஹாலில் நமச்சிவாயமும் பங்கஜமும் நுழைந்தனர். அங்கு யாரும் இல்லை. ராமலிங்கம் மகிழ்ச்சியோடு இருந்த காலத்தில் அதே ஹாலில் ஐரோப்பியப் பெண்மணிகள், ஆண்கள், மதுவைக் கைகளில் தாங்கி நிற்க, ஐரோப்பிய இசைக்குழு 'வால்ட்ஸ்' சங்கீதம் ஒலிக்க, 'சான்டலியர்கள்' ஒளி வீசும் அந்த ஹால் வெறிச்சோடிக் கிடந்தது. சோபாக்கள் ஒழுங்கற்றுக் கிடந்தன. அந்த ஹாலின் நடு மையத்தில் ஓர் ஆள் உயரத்துக்கு அரக்கன்போல் நின்று கொண்டிருந்தது பெரிய கடிகாரம். டிக் டக் என்று ஒலித்துக் கொண்டிருந்தது. ''யார் வந்தாலென்ன, யார் போனாலென்ன? நான் ஓடிக் கொண்டே இருப்பேன்'' என்று பெருமிதத்துடன் உரைப்பதுபோல் இருந்தது

அந்தக் கடியாரம். ஹாலைத் தாண்டி சிவகாமி அம்மாள் தங்கும் அறை நோக்கி நடந்தனர் தந்தையும் மகளும்.

## 13

சிவகாமி அம்மாள் தங்கும் அறையில் நுழைந்தாள் பங்கஜம். அங்கு ஒரு பலகையில் சிவகாமி அம்மாள் அமர்ந்திருந்தாள்.

அவளைச் சுற்றி ராஜனின் போட்டோ ஆல்பத்தில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட ராஜனின் போட்டோக்கள் தரையில் கிடந்தன. பங்கஜம், ''அம்மா, அம்மா!'' என்று மெள்ளக் கூப்பிட்டாள்.

சிவகாமி மெள்ளத் திரும்பினாள். கண்கள் சில விநாடிகள் கழித்துத்தான், எதிரில் நிற்பது பங்கஜம் என்பதைப் புரிந்து கொண்டன. ''வந்தியா பங்கஜம், வாம்மா வா'' என்று தட்டுத் தடுமாறி எழுந்தாள்.

நமச்சிவாயம், ''ராமலிங்கம் வீட்டிலே இல்லையா?'' என்று கேட்டார்.

''எத்தனை நேரம் நாங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்திட்டு இருக்கிறது? மனசு அலுத்துப் போகுது. அவர் அப்படியே வெளியே நடந்திட்டு வரப் போயிருக்கார். ராஜன் படிச்ச காலேஜ் வாசல்லே போய் நிற்பார். புஸ்தகத்தோடு பிள்ளைங்க வருவாங்க. அவுங்களைப் பார்த்திட்டு நிப்பாரு. அதிலே அவருக்கு ஒரு திருப்தி. முந்தியெல்லாம் புஸ்தகம் படிப்பாரு. இப்போ அதையும் விட்டுட்டாரு. ராத்திரியெல்லாம் உலாத்திட்டிருக்காரு'' என்று சொல்லியவள், நமச்சிவாயம் தரையைப் பார்த்தபடி நின்று கொண்டிருப்பதை உணர்ந்து, ''உட்காருங்க, காபி கொண்டு வரச் சொல்றேன்'' என்று வேலைக்காரனை அழைத்தபடி உள்ளே சென்றாள்.

பங்கஜம் தன் மாமியாரைப் பின் தொடர்ந்தாள். ''அம்மா! இந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்சதும் எனக்குப்



புரியாத ஓர் அமைதி ஏற்படுகிறது! என்னவோ இங்கேயே இருக்கணும்போலத் தோணுது. அது மட்டுமில்லேம்மா! இங்கே நான் சந்தோஷமா இருக்கப் போறேன்னு அசட்டு நம்பிக்கை தோணுது. இந்த உணர்ச்சி எனக்கு எங்க வீட்டிலே ஏற்படல்லே. இங்கே வந்தப்புறம்தான் ஏற்படுது'' என்று கூறினாள்.

சிவகாமி சில விநாடிகளுக்கு ஒன்றும் பேசாமல் இருந்தாள். ''நீ இங்கே வர்றதுன்னா எங்களுக்கு அதைவிடச் சந்தோஷம் இருக்க முடியாதும்மா. ஆனால் அன்னிக்கு உங்கம்மா சொன்னதும் ஒரு விதத்திலே சரிதான். கொஞ்ச நாள் போகட்டும். அப்புறம் நீ இங்கேயே வந்துடலாம். பெத்தவங்களுக்குப் பாசம் இருக்காதா?''

பிறகு வேலைக்காரன் கொண்டுவந்த காபியைக் கொடுத்து, பங்கஜத்தைக் குடிக்கச் சொன்னாள். பங்கஜம், சிவகாமியின் திருப்திக்காகக் காப்பியைக் குடிக்கப் போகும் போது, அந்த வெள்ளிப் பாத்திரத்தில் பொறிக்கப்பட்டிருந்த தன் பெயரின் முதலெழுத்தாகிய 'ப'வையும் ராஜனின் முதலெழுத்தாகிய 'ரா'வையும் கவனித்தாள். கல்யாணத்துக்காகச் செய்த பாத்திரமல்லவா! அதில் சம்பிரதாயப்படி தம்பதிகளின் முதல் எழுத்துக்களைப் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்ததும் பங்கஜத்தின் கண்களில் நீர் நிறைந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் பங்கஜம் காபியைக் குடித்து முடித்தாள். வேலைக்காரன் வேறொரு கோப்பையில் காப்பியை எடுத்துச் சென்று நமச்சிவாயத்தின் முன் வைத்தான்.

பங்கஜம், ''அம்மா, மாடிக்குப் போகலாம் வர்றீங்களா?'' என்று சிவகாமியைக் கேட்டாள்.

சிவகாமிக்கு பங்கஜத்தின் வேண்டுகோளின் அர்த்தம் புரிந்தது. மாடியில்தான் ராஜனின் அறை இருந்தது. அந்த அறையில்தான் ஒரு வார காலம் அவனும் பங்கஜமும் சந்தோஷமாகப் பொழுதைக் கழித்தனர்.

சிவகாமி மாடிப்படியில் ஏறினாள். பங்கஜமும் பின்

தொடர்ந்தாள். ராஜனின் அறையைத் திறந்து சிவகாமி உள்ளே சென்றாள். பங்கஜமும் அறையினுள் நுழைந்தாள். பங்கஜம் அந்த அறையில் ஒரு வேளை தனியாக இருக்க விரும்புவாள் என்ற நினைப்பில் சிவகாமி ஜாடையாக அவளை அங்கு விட்டுவிட்டு வெளியே வராந்தாவுக்கு வந்தாள்.

பங்கஜம் தன் கணவனுடன் படுத்திருந்த இரட்டைக் கட்டில்களும் அப்படி இருந்தன. கணவன் படித்த புத்தகங்கள் பல கண்ணாடி அலமாரியில் அப்படியே வைக்கப்பட்டிருந்தன. அவன் காலேஜில் பரிசாகப் பெற்ற வெள்ளிக் கோப்பைகள் காலத்தால் கறுத்துப் போய் மூலையில் ஒரு டீப்பாயின் மேல் வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையின் ஒவ்வொரு மூலையிலும் ராஜனின் பொருட்களே தோற்றமளித்தன. அவன் மறைந்தது கூடப் பொய்யாக இருக்குமோ என்ற பிரமையைப் பங்கஜத்துக்குக் கொடுத்தன. புத்தக அலமாரியைத் திறந்து ஒவ்வொரு புத்தகமாகப் பிரித்துப் பார்த்தாள். 'ஷேக்ஸ்பியர் நாடகங்கள்' என்ற கறுப்புக் காலிகோ அட்டையுடன் நின்ற புத்தகத்தைப் புரட்டினாள். அதில் 'வெனிஸ் வர்த்தகன்' என்ற நாடகத்தில் தொடக்கப் பக்கத்தில் உலர்ந்துபோன ஒரு மலர்ச் சரம் கிடந்தது. ஒரு காலத்தில் மலர்ச் சரமாக இருந்ததன் கூடு அது. உலர்ந்த நாரும் அதில் சேர்க்கப்பட்டிருந்த சில மலர் இதழ்களுமே மிஞ்சி இருந்தன. ஆனால் அவை பங்கஜத்தின் மனத்தில் நினைவு அலைகளை எழுப்பின. மறுபடியும் அந்தக் கடந்த காலக் காட்சி அவள் நினைவுப் பார்வையில் உருவாகியது.

ஷேக்ஸ்பியர் நாடகத்தைப் படித்தபடி இரவு விளக்கு வெளிச்சத்தில் படுத்திருந்தாள் பங்கஜம். ராஜன் மேல் சட்டை, பனியன் எதுவும் இல்லாமல் அறையில் நுழைகிறான். 'கும்'மென்று அரைத்த சந்தனத்தின் நெடி அறை முழுவதும் வீசுகிறது. புத்தகத்திலிருந்து

www.t.me/tamilbooksworld



பார்வையைத் திருப்பி, கணவனைப் பார்க்கிறாள். ராஜன் சந்தனம் பூசிய மார்போடு நிற்கிறான். முத்தென மின்னும் பற்கள் வெளியே பெரிய சிரித்தபடி நிற்கிறான். படுக்கையில் உட்காருகிறான். அவன் கரங்கள் அவளை மெள்ள அணைக்கின்றன.

"சும்மா இருங்கள். நான் படிச்சுட்டிருக்கேன்" என்று சிணுங்குகிறாள்.

ராஜன் சிரித்தபடியே அவள் கையிலிருந்து புத்தகத்தைப் பறிக்கிறான். "பக்கம் மாறிப் போயிடப் போகுது. புத்தகத்தை இப்படிக் கொடுங்க" என்று புத்தகத்துக்காகப் போராடுகிறாள். போராட்டத்திலே அவள் சேலை நழுவுகிறது. அடுத்த விநாடி—

அவள் கண்கள் இருளடைகின்றன. மேனி முழுவதும் இன்பத்தால் நிறைகிறது. ராஜன் கை அவள் கூந்தலில் இருந்து மலர்ச் சரத்தை எடுத்து அடையாளமாக ஷேக்ஸ்பியர் நாடகத்தில் வைக்கிறது. "ஒரு ராத்திரியிலே ஒரு நாடகம்தான் நடக்க முடியும் பங்கஜம். நம் நாடகமா? ஷேக்ஸ்பியர் நாடகமா? அதுதான் கேள்வி" என்று சொல்லி விட்டு அவள்மீது சாய்கிறான்.

அடுத்த விநாடி அவள் தலைமாட்டில் இருக்கும் விளக்கை அணைக்கிறான். 'அன்று அடையாளமாகப் புத்தகத்தில் வைக்கப்பட்ட சரம் இன்னும் இருக்கிறது. அந்தப் புத்தகம் இருக்கிறது. ஆனால் அவர்...' என்று பங்கஜம் நினைக்கவும் மேற்கொண்டு அவள் சிந்தனை ஓட மறுத்தது.

அவளுடைய உடல் வியர்த்தது. கட்டிலில் அப்படியே சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். சில விநாடிகள் கழிந்த பின்பு கண்களைத் திறந்தாள். சோர்வு அவளுடைய உடலில் தெரிந்தது. இனம் புரியாத அமைதி— இன்பத்தின் எல்லையில் ஏற்படும் அமைதி அவளுக்குக் கிடைத்தது. சோர்வு, பயம் இரண்டும் மறைந்தன. திடீரென்று சிரிக்க வேண்டும்போல் தோன்றியது.

தொடர்ந்து சிரிக்க வேண்டும்போல் தோன்றியது. சிரித்தாள். எதற்குச் சிரிக்கிறோம், சிரிப்பதற்கு ஒரு காரணமும் இல்லையே என்பதை உணராமல் சிரித்தாள், அவள் நிலையில் கணவன் வீட்டில் கணவன் அறையில் சிரிப்பதுகூட அராம்பாவிதம் என்பதை உணராமல் சிரித்தாள். ஒரு குழந்தையைப்போல் சிரித்தாள், சிரிப்பிலே துயரத்தால் ஒட்டிப் போய் இருந்த அவள் மார்பு விம்மியது. கண்வழியே கண்ணீர் வழிந்தது.

காரணமில்லாமல் சிரிக்கும் பங்கஜத்தின் சிரிப்பொலி கேட்டு சிவகாமி அம்மாள் அறையினுள் நுழைந்தாள். பங்கஜத்துக்குச் சித்தம் கலங்கி விட்டதோ? இல்லா விட்டால் இப்படிச் சிரிக்க மாட்டாளே என்ற அச்சத்தோடு சிவகாமி பங்கஜத்தைப் பார்த்தாள்.

பங்கஜம் மாமியார் எதிரே நிற்பதைப் பார்த்ததும் சிரிப்பை முயற்சி செய்து நிறுத்திக் கொண்டாள். ''மன்னிச்சுடும்மா. எனக்கு ஒன்றும் புரியல்லே, என்னையும் அறியாமல் சிரிப்பு வந்திடுச்சு. என்னமோ இந்த ரூமுக்குள்ளே நுழைந்த விநாடியில் இருந்து துயரச் சுமை என்னை விட்டு விலகின மாதிரி ஒரு பிரமை. 'அர்த்தம் இல்லாமல் கவலைப்படறே பங்கஜம். சந்தோஷமா இரு'ன்னு எங்கிட்டே ஒருவித ஆத்ம பாஷையிலே யாரோ பேசின மாதிரித் தோணுது அம்மா. நான் சிரிக்க விரும்பல்லை. ஆனா என் மனத்தின் ஒருபகுதி என்னுடைய துணையில்லாமல் சிரிக்குது'' என்று தன் நிலையை விளக்கினாள்.

சிவகாமிக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரிய வில்லை. ''சரி, வாம்மா போகலாம். அப்பா கீழே காத்துக் கிட்டிருக்காரு'' என்று சொன்னாள்.

பங்கஜம் எழுந்தாள். அவள் முழங்கால் அருகில் வைக்கப்பட்டிருந்த டிரஸ்ஸிங் டேபிள் பலகையில் கால் இடித்தது. வலி பொறுக்காமல் முழங்காலைப் பிடித்துக் கொண்டு கீழே குனிந்தாள். தன் கால் பட்ட அதிர்ச்சியில்



டிரஸ்ஸிங் டேபிள் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த குங்குமச் சிமிழ் கவிழ்ந்து அவள் உடுத்தியிருந்த வெள்ளைச் சேலையின் ஒரு பகுதியை வட்டமாகக் கறைப்படுத்தி இருப்பதைப் பார்த்தாள். சிவகாமியும் பங்கஜமும் சிதறிய குங்குமத்தைப் பார்த்தபடி நின்றனர். குங்குமத்துக்கு அருகதை இழந்து விட்டவள் என்று தன்னை நினைத்துக் கொண்டிருந்த பங்கஜம் அதைத் தொடவும் கூசினாள்.

எப்போதாவது பல மாதங்களுக்கு முன் அந்த அறையில் கணவனோடு தங்கியிருந்த நாட்களில் மாடி பாத்ரூமில் குளித்தவுடன் திலகமிடத் தேவைப்படுமென்று பங்கஜம் வைத்த குங்குமச் சிமிழ். 'அதை யாரும் இது நாள் வரை அப்புறப்படுத்தாமல் அங்கு வைத்திருப்பானேன்? அது இன்று சிதறுவானேன்'' என்று சிந்தித்தாள். இருவரும் பேசாமல் அறையை விட்டு வெளியே வந்தனர்.

படிகளில் இறங்கி நடு ஹாலுக்கு வந்ததும் நமச்சிவாயம் சோபாவில் இருந்து எழுந்து, ''வீட்டுக்குப் போகலாமா பங்கஜம்?'' என்று கேட்டார்.

பங்கஜம் பதில் சொல்லும் முன் சிவகாமி டிரைவரை அழைத்து வண்டி எடுத்து வரக் குரல் கொடுத்தாள்.

''வேண்டாம் மாமி. நாங்க நடந்தே போகிறோம்'' என்றாள் பங்கஜம்.

இருவரும் புறப்படும்போது வேலைக்காரி சொர்ணம், ''அம்மா, பூக்காரன் இப்பத்தான் வந்தான். இந்தாங்க பூ'' என்று ஒரு பந்து மல்லிகைப் பூவை எடுத்து வந்தாள்.

'வேலைக்காரி சொர்ணம், பங்கஜத்தின் முன்பாகவா பூவைப் பற்றிச் சொல்ல வேண்டும்?' என்று சிவகாமி வேதனைப்பட்டாள். ''பூ ஒன்றுதான் குறைச்சல்'' என்று சலித்துக் கொண்டாள்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த பங்கஜம், ''ஏன் அப்படிச் சொல்றீங்க அம்மா? மாமா நல்லா இருக்க வேண்டாமா? வெள்ளிக்கிழமையும் அதுவுமாகப் பூவை

வேண்டாம்னு ஒதுக்காதீங்க" என்று சொல்லி மல்லிகைப் பூப்பந்தை நடுங்கும் கரங்களோடு சொர்ணத்திடம் இருந்து வாங்கி, அதைத் தன் மாமியின் சிகையில் சூட்டினாள்.

இதைப் பார்த்தபடி நின்ற நமச்சிவாயத்தின் தொண்டை அடைத்தது. மலர்ச் சூட வேண்டிய பருவத்தில் பங்கஜம் பூவிழந்து நிற்கிறாள். தன் மாமிக்குப் பூச்சூட்டுகிறாள். முகத்தைத் திருப்பிக் கொண்டு ஹாலை விட்டு வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினார். பங்கஜமும் தந்தையைப் பின் தொடர்ந்தாள். சிவகாமி கண் கலங்கியபடி பங்கஜத்தைத் பார்த்தபடி நின்றாள்.

தந்தையும் மகளும் மௌனமாகவே நடந்து கொண்டிருந்தனர். அவர்கள் வீட்டை நெருங்கும் மூலையில் ஒரு திருப்பம் இருந்தது. அந்தத் திருப்பத்தில் வரிசையாகக் கார்கள் சென்றபடி இருந்தன. கார்கள் வரிசை முடிந்ததும் சாலையைக் கடப்போம் என்று தந்தையும் மகளும் காத்து நின்றனர். அப்போது ஒரு சிறுவன் மலர்த் தட்டோடு பங்கஜத்தின் எதிரே நின்றான். "அம்மா, பூ வாங்கலியா?" என்றான்.

பங்கஜம் திடுக்கிட்டுத் திரும்பினாள். ஏழு வயதுச் சிறுவன் தட்டோடு நின்றான். அவன் அருகில் ஒரு மாது அந்தச் சிறுவனின் தோளைப் பிடித்தபடி நின்றிருந்தாள். அந்த மாதுதான் அந்தக் குருட்டுச் சிறுவனுக்கு வழிகாட்டி என்று தெரிந்தது. பங்கஜம் நின்றிருந்த வரிசையில் பல பெண்கள் நின்றனர். கண் இல்லாத சிறுவன் பூத்தட்டை தன்னிடம் மட்டும் நீட்டுவானேன் என்று பதறியபடி நின்றாள் பங்கஜம்.

நமச்சிவாயத்தின் மனம் பொறுக்கவில்லை. "அந்தப் பூவை இப்படிக் கொடுப்பா" என்று சொல்லி ஒரு ரூபாயைத் தட்டில் போட்டார்.

குருட்டுச் சிறுவனோடு நின்றவள், "ராஜன், பூவை எடுத்துக் கொடு" என்று கட்டளை இட்டாள்.



'ராஜன்' என்று அழைக்கப்பட்ட சிறுவன், பூப்பந்தை எடுத்துப் பங்கஜத்திடம் நீட்டினான். பங்கஜத்தின் கவனம் பூராவும் 'ராஜன்' என்ற வார்த்தையிலேயே நின்றமையால் சிறுவன் கொடுத்த பூவைத் தன்னையறியாமல் வாங்கிக் கொண்டாள். குருட்டுச் சிறுவனும் மாதுவும் நகர்ந்தனர். அப்போதுதான் பூ தன் கையில் இருப்பதை உணர்ந்தாள் பங்கஜம்.

நமச்சிவாயம், "பரவாயில்லே பங்கஜம். ஊர் என்ன வேணும்னா நினைக்கட்டும், நீ பூவைத் தலையிலே வச்சுக்கோ" என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

"வேண்டாம்பா, வேண்டாம்" என்று பதறியபடி சொன்னாள் பங்கஜம்.

நமச்சிவாயம் வெறிப்பிடித்தவர் போல் அவள் கையிலிருந்த பூவை வாங்கி மகளின் தலையில் செருகினார். "குருட்டுப் பையன் ஏம்மா அந்தப் பூவை உன் முன்னாலே நீட்டணும்? அவன் பேரு ஏன் ராஜனாய் இருக்கணும்? எவனோ போர் முனையிலே டைப் அடிச்சு அனுப்பிய செய்திக்காக நீ ஏன் அமங்கலியாய் இருக்கணும்? நீ என்னிக்கும் பூவும் மஞ்சளோடும் தான் இருக்கணும் பங்கஜம்! அதைத் தடுக்க யாராலேயும் முடியாது. அதை நான் அனுமதிக்கவும் மாட்டேன். வா, போகலாம்" என்று அவளை இழுத்தபடி சாலையைக் கடந்தார்.

பங்கஜம் ஒன்றும் தோன்றாமல் அவர் பின்னே சென்றாள்.

## 14

தலையில் பூவைத் தாங்கியபடி தன் தந்தை இழுத்துச் செல்லும் போது தன் உணர்வு இல்லாமல் பங்கஜம் பின் தொடர்ந்தாள்.

வீட்டில் நுழையும்போது தாய் வீட்டின் முகப்பில் உள்ள போர்டிகோவை அடுத்த வராந்தாவில் நின்று

www.t.me/tamilbooksworld

கொண்டிருந்தான். அவனோடு பேசியபடி குண்டுப் பிள்ளை நின்று கொண்டிருந்தார்.

திருச்சியில் குழந்தை பங்கஜத்துப் பாடம் சொல்லித் தந்த ஆங்கிலோ இந்திய ஆசிரியையிடம் தவறாக நடந்து கொண்ட நாள் முதல் குண்டுப்பிள்ளையிடம் நமச் சிவாயத்துக்கு நல்லெண்ணம் போய்விட்டது. குண்டுப் பிள்ளை வாழ்வு நடத்த உபகாரச் சம்பளம் மட்டும் அவ்வப்போது கொடுத்து வந்தார்—அதுவும் தபால்மூலம் மட்டும். பங்கஜத்தின் கல்யாணத்தின்போது குண்டுப் பிள்ளை பெண்ணுக்குத் தாய்மாமன் என்ற முறையில் வந்து போனார்.

நமச்சிவாயத்தையே ஆட்டி வைத்துக் கொண்டிருந்த குண்டுப்பிள்ளையின் செல்வாக்கை முறித்தவர் பாரி மங்கலம் ராமலிங்கம். ஆகையால், ராமலிங்கத்திடம் தீராத வெறுப்பு இருந்தது குண்டுப் பிள்ளைக்கு. பங்கஜத்தை ராஜனுக்குக் கொடுப்பதையே நிறுத்த நினைத்ததுண்டு குண்டுப்பிள்ளை. சகோதரியிடம் என்ன வெல்லாமோ சொல்லிப் பார்த்தார். அம்மணி அன்று சகோதரனின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கும் நிலையில் இல்லை. 'எல்லோரையும்போல நீயும் கல்யாணத்துக்கு வந்து வேட்டி வாங்கிட்டுச் சாப்பிட்டு விட்டுப் போ. அதிகப் பேச்செல்லாம் உனக்கு எதுக்கு? பிள்ளையைப் பங்கஜத்துக்கே பிடிச்சுப் போச்சு'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

தன் சகோதரியே கண்டிப்பாக இருக்கும்போது, தன் குறும்புத்தனத்துக்குச் சிறிதும் இடம் இல்லை என்று குண்டுப்பிள்ளை பேசாமல் இருந்து விட்டார். கல்யாணத்துச் சாமான்கள் வாங்கும் பொறுப்பையாவது தன்னிடம் விடக் கூடாதா என்று வலுவிலே விழுந்த அந்தப் பொறுப்பை ஏற்று, பெங்களூரிலிருந்து காய்கறிகள் கொண்டு வரும் ஓர் அயிட்டத்திலே மட்டும் ஏழு ஆயிரம் சமாளித்து விட்டார் என்பது வதந்தி. சகோதரி மகள்



கல்யாணத்துக்குக் காய்கறி வாங்கப் போனவர், பிறகு தென்னிந்தியத் துருப்புகளுக்கு உருளைக் கிழங்கு சப்ளை செய்யும் கண்ட்ராக்டராக மாறி, அதில் இரண்டு லட்சம் சம்பாதித்து விட்டார். கையில் சில லட்சங்கள் இருந்த போதிலும் மாதா மாதம் நமச்சிவாயத்திடம் பெற்று வரும் தர்ம பென்ஷனை மட்டும் வாங்காமல் நிறுத்திக் கொள்ள வில்லை. தன் சகோதரியை மணந்த நமச்சிவாயம் தனக்குக் கிஸ்தி கட்ட வேண்டும் என்று எண்ணினார் போலும்.

பங்கஜத்தின் கணவன் ராஜன் டோப்ருக் போர் முனையில் விழுந்து விட்டான் என்ற துக்கச் செய்தி வெளியானது, குண்டுப்பிள்ளைக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. சௌகார்பேட்டையில் அவர் தங்கும் அறையின் எதிரில் உள்ள பால் கடையிலிருந்து மசாலா பால் தருவித்து, குடித்துத் தன்னுடைய சந்தோஷத்தை விளம்பரப்படுத்தினார். இந்தத் துக்கம் பொன்மங்கலத் துக்கும் பாரிமங்கலத்துக்கும் இடையே நிச்சயமாக ஒரு பிளவு ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தார். தான் மறுபடியும் அந்தஸ்தோடு சகோதரி வீட்டில் நுழையலாம் என்ற ஆசை ஊசலாடிற்று. அடிக்கடி நமச்சிவாயம் இல்லாத சமயத்தில் வீட்டில் தோன்றித் தன் சகோதரிக்கு ஆறுதல் சொல்லும் வகையில் அறிவுரைக் கருத்துக்களை வழங்கினார். அம்மணி அம்மாளின் மனம் முன்பெல்லாம் கணவன் கருத்துக்களைத் தவிர, வேறு எதுவும் விளையாத தரிசு நிலமாக இருந்து வந்தது. பெண் வாழ்வு பாழான அதிர்ச்சியில் அவள் சகோதரன் கருத்துக்களை மெல்ல மெல்ல ஏற்கத் தொடங்கினாள்.

''அப்பவே தலைத்தலையா அடிச்சுட்டேன் அம்முக் கேட்டியா? இப்போ என்ன ஆச்சு? கூடப்பிறந்தவன் என்ற அந்தஸ்து எனக்கிருந்தா இப்படி ஆயிருக்குமா? பங்கஜம் பிஞ்சிலே வாடி வதங்கி நிற்கும்படி ஆயிருக்குமா? பன்னீர்ப்பள்ளி சொல்லு? என் பேச்சைக் கேட்டு,

மைனருக்குக் கொடுத்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும். பன்னீர்ப்பள்ளி மைனர் இப்போ யுத்த காண்ட்ராக்டிலே லட்ச லட்சமாய்ச் சம்பாதிக்கிறான். கவர்னர் ஹோப் துரை வீட்டுக்குத் தினமும் போய் வர்றான்'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

ஏற்கெனவே குழம்பிப் போயிருந்த வளர்ச்சியடையாத அம்மணியின் மூளை, நமச்சிவாயத்தைக் குற்றம் சொல்லும் வார்த்தைகளை ஏற்கத் தொடங்கியது.

அம்மணி தன் வார்த்தைக்குச் செவி சாய்க்கிறாள் என்று தெரிந்ததும் குண்டுப்பிள்ளை அடிக்கடி வர ஆரம்பித்தான். இன்று மாலையில் குண்டுப்பிள்ளை தன் சகோதரியிடம் பேசியபடி நின்று கொண்டிருக்கும்போதுதான், நமச்சிவாயமும் பங்கஜமும் வீட்டில் நுழைந்தனர்.

சில மணி நேரங்களாகவே மகளும் கணவனும் வீட்டில் இல்லை என்பதைக் குறித்து ஆச்சரியமடைந்த அம்மணி, மகள் தலை நிறையப் பூவோடு வரும் காட்சியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள்.

''எங்கே போயிட்டு வர்றீங்க?'' என்று சற்றுப் படபடப்புடனே கேட்டாள்.

நமச்சிவாயம் ஒரு வினாடி குண்டுப்பிள்ளையைப் பார்த்தார். பிறகு அலட்சியமாக, ''ராமலிங்கம் வீட்டுக்குப் போயிட்டு வர்றேன். பங்கஜம் சிவகாமியைப் பார்க்கணும்னு சொன்னா'' என்று சொல்லிவிட்டு உள்ளே நுழையப் போனார்.

''சிவகாமியை எதுக்குப் பார்க்கணும்? அவுங்க வீட்லே நமக்கு என்ன வரிசை வச்சிருக்கு? என்ன! பங்கஜம் தலையிலே பூவா?'' என்று தாய் வெடுக்கென்று கேட்டாள்.

பெண்மீதுள்ள அன்பைவிடச் சம்பிரதாயத்துக்கு அவள் வைத்திருக்கும் மதிப்பும் பயமும் அதிகமாயிருப்பதால்தான் தாய் அந்தக் கேள்வி கேட்கிறாள் என்பதை



உணர்ந்தாள். நடுங்கும் கைகளோடு பூவை எடுக்கப் போனாள். அதைப் பார்த்த நமச்சிவாயத்தின் நெஞ்சம் துடித்தது. ''பூவை எடுக்காதே! ஏன் அம்மணி, நம் குழந்தை பூவும் குங்குமமும் இல்லாமல் இருந்தாத்தான் பண்பா? எதுக்கு என் பெண் அலங்கோலமா இருக்கணும்? ஓடிப்போனவன் பெண்ஜாதிங்க எல்லாம் நகையும் நட்டுமாய்க் குலுங்கறாங்க. அட்ரஸ் இல்லாம ஓடினவன் உயிரோடு இருக்கான்னு என்ன நிச்சயம்? போர் முனையிலே ராஜன் விழுந்ததை நம் கண்ணாலே பார்த்தோமா? அவன் உடலை நாம் எரிச்சமா? என் வரையிலே இன்னமும் சந்தேகமாத்தான் இருக்கு. என் ஜோஸ்யப்படி பங்கஜம் மாங்கல்யத்தோடு பூவோடு இருக்க வேண்டியவ. அவள் பூவோடுதான் இருக்கப் போறா'' என்று கர்ஜித்தார். திடீரென்று அவர் பார்வை குண்டுப்பிள்ளையிடம் நிலைக்க, மனைவி மீது ஏற்பட்ட ஆத்திரம் அவர்மீது திரும்பியது. ''டேய் குண்டு! இந்த ஊர்லே என்னடா பண்றே? உருளைக்கிழங்கு விக்கறவன் ஊட்டி கொடைக்கானல்லே இருப்பானா, இங்கே என்னடா பண்ணிக்கிட்டு?'' என்று அறைவதுபோல் சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

அம்மணிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஆனால் பதில் சொன்னால், தன் கணவர் கையை ஓங்கி விடுவார் என்ற பயம் இருந்தது. அதனால் ஒன்றும் எதிர்த்துப் பேசவில்லை.

''குண்டு, நாளைக்கு வாடா! அவர், சொல்றதைப் பாராட்டாதே'' என்று குண்டுப்பிள்ளைக்கு உபசார வார்த்தைகள் சொல்லி அனுப்பினாள்.

* * *

பங்கஜம் அன்று இரவு உணவே அருந்தவில்லை. படுக்கையில் படுத்தபடி சிந்தித்தாள். அருகில் படுத்திருந்த சாவித்திரி, ''என்ன பங்கஜம் யோசனை பண்றே?'' என்று கேட்டாள்.

பங்கஜம் ராமலிங்கம் வீட்டில் மாடி அறையில் நுழைந்ததும், அங்கு ஷேக்ஸ்பியர் நாடகப் புத்தகத்தைப் புரட்டியதும், அங்கு அடையாளமாக ராஜன் வைத்த மலர்ச்சரம் உலர்ந்து கிடந்ததைக் கண்டதும், அதன் விளைவாக அவளுக்கு ஞாபகங்கள் எழுந்ததும், அறையை விட்டு வெளியே புறப்படும்போது கால்பட்டுக் குங்குமச் சிமிழில் இருந்து குங்குமம் சிதறியதும், பிறகு சாலையைக் கடக்கும்போது, ராஜன் என்ற குருட்டுச் சிறுவன் வரிசையாக நிற்கும் மற்றப் பெண்களிடம் செல்லாமல், அவளிடம் வந்து புஷ்பத் தட்டை நீட்டியதும், நமச்சிவாயம் பூவை எடுத்து அவள் தலையில் வைத்ததும் யாவற்றையும் விஸ்தாரமாகக் கூறினாள். சாவித்திரி ஒவ்வொரு வார்த்தையையும் விழுங்குவதுபோல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அவரோடு இன்பமாக நான் இருந்த அந்த அறைக்கு இன்று சென்றதும் விவரிக்க முடியாத ஒரு குதூகலத்தைக் கொடுத்திருக்கிறது. அவரையே நேரிலே சந்தித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது சாவித்திரி. அதுமட்டும் இல்லை. துக்கச் சுமையைக் குறைத்துவிட்டது போல் மனம் லேசாகக் கூடத் துள்ளுகிறது. மண்ணைக் குளிர வைக்கும் மழை வருவதன் முன்னால், ஊகத்தால் உணர்ந்து மயில்கள் ஆடுவதுபோல் என் மனம் எதையோ எதிர்நோக்கித் துள்ளுகிறது" என்று சொல்லிவிட்டுச் சாவித்திரியைக் கவனித்தாள்.

சாவித்திரி அவள் மனச் சந்தோஷத்தைக் கெடுக்க விரும்பவில்லை. "வீட்டிலேயே அடைபட்டிருந்த நீ இன்று முதன்முறையாக வெளியே சென்று வந்தாயல்லவா? வேறு பிடித்தமான சூழ்நிலைக்குச் சென்றதன் விளைவாக இருக்கும் பங்கஜம்" என்று தனக்குத் தோன்றிய விளக்கத்தைச் சாவித்திரி கொடுத்தாள்.

பங்கஜத்தின் முகம் சோர்வோடு காணப்பட்டது. "சாவித்திரி, தொடர்ச்சியான மகிழ்ச்சிக்குப் பின்னால்



காரணம் தெரியாத மனச் சோர்வு ஏற்படும். அதுபோல் ஒருவேளை தொடர்ச்சியான துக்கத்துக்குப் பின்னால் மனம் தன் துக்கச் சுமையைத் தூக்கி எறிந்து விட்டு ஒரு மாறுதலுக்காக மகிழ்ச்சியை அடையுமோ? இல்லா விட்டால், இந்த உணர்ச்சி ஒரு வேளை ஏதாவது நிகழப் போகும் நற்செய்திக்கு அறிகுறியோ? ஒன்றுமே புரிய வில்லையே சாவித்திரி!"

"கணவன் வீட்டுக்குப் போனதுமே மனத்திலுள்ள பளு குறைந்து விட்டது என்றால், நீ இனிமேல் அந்த வீட்டிலேயே இருப்பதுதான் சரி" என்று சாவித்திரி கூறி முடிப்பதற்குள் கீழ்ப்பகுதியிலே சத்தம் கேட்டது.

இருவரும் மாடி பால்கனிக்கு ஓடினார்கள். வீட்டின் வெளிப்புறம் ராமலிங்கம் கலைந்த தலையோடு, பழுதான உடையோடு பரிதாபமான தோற்றத்தோடு நின்று, "நமச்சிவாயம், நமச்சிவாயம்" என்று கூப்பிட்டபடி இருந்தார்.

பங்கஜம் மாமனாரைப் பார்த்ததும் படிக்கட்டு வழியே இறங்கி வெளிப்புறக் கதவைத் திறக்க ஓடினாள். அதே சமயத்தில் வெளிப்புறக் கதவை நமச்சிவாயம் திறந்து கொண்டு ராமலிங்கத்தை நோக்கிச் சென்றார். "என்ன ராமலிங்கம் என்ன விஷயம்?"

குழி விழுந்த கண்கள், நரைத்த தலை முடி, ஒட்டி உலர்ந்த உதடுகளுடன் பேச முயன்ற ராமலிங்கம் ஏதோ பேச முயன்றவர் பங்கஜத்தைப் பார்த்ததும் குழப்பத்தோடு பேச்சை நிறுத்திக் கொண்டார்.

நமச்சிவாயம், "என்ன ராமலிங்கம், மணி பன்னிரண்டு அடிக்கப் போகுது. இந்த நள்ளிரவு வேளையிலே காரிலே வராமே நடந்தா வந்தே? சட்டை அப்படியே வேர்த்துப் போயிருக்கே!" என்றார்.

"ஆமாம்... ஆமாம்! எனக்கு ஒண்ணும் தோணலே! காரைப் பத்தி நினைப்பே வரல்லே. அப்படியே ஓட்டமும் நடையுமா வந்துட்டேன்..." என்று தொடர்ச்சியா

www.t.me/tamilbooksworld

வார்த்தைகளைப் பேசாமல் நிறுத்தி நிறுத்தி அங்கும் இங்கும் பார்த்தபடி படபடப்புடன் ஒரு பைத்தியக்காரனைப்போல் பேசினார்.

பங்கஜத்துக்குச் "சுரீர்" என்று அடி வயிற்றில் பயம் பற்றிக் கொண்டது. நினைக்க விரும்பாத ஒன்றை அவள் மனம் நினைத்தது. பங்கஜத்தின் அந்தப் பயங்கர நினைப்பிற்கு நமச்சிவாயம் வார்த்தைகளால் உருவம் கொடுத்தார்.

''நான் சாயந்தரம் உன் வீட்டுக்கு வந்திருந்தேன். சிவகாமி நல்லாத்தானே இருந்தா நீதான் வீட்லே இல்லே. சிவகாமிக்கு ஒன்றும் இல்லையே!'' என்று நமச்சிவாயம் கூறுவதற்குள் ராமலிங்கம் இடைமறித்துப் பேசினார்.

''சிவகாமிக்கு ஒன்னும் இல்லை. அவ நீயும் பங்கஜமும் வந்திருந்ததாகச் சொன்னாள். நீங்க இரண்டு பேரும் வந்தப்போ நான் வீட்டிலே இல்லையேன்னு வருத்தமாய் இருந்தது. உடனே இங்கே புறப்பட்டு வரலாமான்னு நினைச்சேன். அதுக்குள்ளே ஒரு டெலிபோன் வந்துச்சு. சித்தய்யன் டெலிபோன் பண்ணினான். அவனைப் பார்க்கப் போயிட்டேன்.''

ராமலிங்கத்துக்கு இருந்த படபடப்பில் சித்தய்யன் எல்லோருக்கும் தெரிந்தவனாக இருக்க வேண்டுமென்று நினைத்தார் போலும். ஒன்றும் விளங்காத நமச்சிவாயம் ''சித்தய்யனா! அது யாரு?'' என்று கேட்டார்.

''அதுதான் லெப்டினன்ட் சித்தய்யன். நம்ம ராஜுவோடு காலேஜ்லே படிச்சவன். அவனும் அதே டோப்ருக் சண்டையிலே கலந்து கொண்டவன். அவனைப் பர்மா காடுகள்ளே பழகினவன் என்பதுக்காக ஜப்பானிய போர் முனைக்கு மாத்தி இருக்காங்களாம். நாளைக்குப் புறப்படப் போறானாம். அதுக்கு முன்னாலே எனக்குப் போன் பண்ணினான்'' என்று சொல்லிவிட்டுப் பேச்சை நிறுத்தினார் பங்கஜத்தைப் பார்த்தபடி.



கூடவே அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பங்கஜத்துக்கு இது பெரும் சோதனையாக இருந்தது. ''நான் கேட்டுத் திடுக்கிடக் கூடிய துக்கமான செய்தி இன்னும் என்ன இருக்க முடியும்? பரவாயில்லை, சொல்லுங்க'' என்றாள்.

ராமலிங்கம், ''அதிலே பங்கஜம், துக்கத்தையே அனுபவித்துப் பழகி விட்டோம். அதனாலே எந்தச் செய்தியும் துக்கமாய்த்தான் இருக்கணும்னு நினைக்கிறோம். ஆனால் சித்தய்யன் சொன்ன விஷயம் துக்கம்னு சொல்ல முடியாது. அது ஒரு விசித்திரமான செய்தி'' என்று சொல்லி நிறுத்தினார்.

## 15

ராமலிங்கம் சொல்லப் போகும் விஷயம் துக்கமானதல்ல. அதே சமயத்தில் அது விசித்திரமான விஷயம் என்றதும், பங்கஜத்துக்கே முதலில் விளங்கவில்லை. கணவனைப் பற்றிய விஷயம் விசித்திரமானது என்றால் அது என்னவாக இருக்கும் என்று யோசிக்கத் தொடங்கினாள்.

நமச்சிவாயம் ராமலிங்கத்தை அழைத்து நாற்காலியில் அமரச் சொன்னார். ராமலிங்கம் விஷயத்தை எப்படி விளக்குவது, எங்கு ஆரம்பித்து எப்படி முடிப்பது என்று தெரியாமல் உதடுகளை அசைத்தபடி இருந்தார்.

சட்டத்தின் நுணுக்கங்களை விளக்குவதிலும், விரசமான விஷயங்களைக் கௌரவமான முறையில் சொல்வதிலும் தேர்ந்தவர் என்று புகழ் பெற்ற ராமலிங்கம் தன் மகன் விஷயம் வந்ததும் வாக்கு வன்மை இழந்தவராகக் காணப்பட்டார். ''பார் பங்கஜம், சித்தய்யனிடமிருந்து போன் வந்ததும் அவன் தங்கியிருந்த எழும்பூர் ஓட்ட

ளுக்கு'' போனேன். ஓட்டலுக்குப் போனேனா...'' பேச்சை நிறுத்தி விட்டுப் பங்கஜத்தை ஒரு முறை பார்த்தார். ''நான் சொல்லப் போவதைக் கேட்டு நீ வீணாக மனம் தளரவும் கூடாது. தவறாக நீ ஆசைக் கோட்டை கட்டவும் கூடாது. உள்ள விஷயத்தை உள்ளபடி எடுத்துக் கணும்'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினார்.

''விஷயத்தைச் சொல்லாமல் என்ன என்னமோ சொல்லிக்கிட்டுப் போறியே ராமலிங்கம்? அந்தச் சித்தய்யன் என்ன சொன்னான், அதைச் சொல்லு'' என்றார் நமச்சிவாயம்.

''சித்தய்யன் முதலிலே கடல் படையிலே இருந்திருக்கான். அவர் ஜிப்ரால்டாரில் இருந்து கப்பலிலே புறப்பட்டு, பிரிட்டிஷ் சைன்யத்தோடு வந்து இருக்கான். சித்தய்யன் ஜிப்ரால்டர்லே கப்பல் ஏறினதும் ஒரு பையன் சாமான்கள் ஏத்திட்டிருந்தானாம். சித்தய்யன் அவனைப் பார்த்ததும் அப்படியே அசந்து போயிட்டான். சாமான்கள் ஏத்திட்டிருந்தவன் நம்ம ராஜன் மாதிரியே இருந்திருக்கான். சித்தய்யன் ஓடிப்போய் என்னப்பா, நீ எப்போ ரிஜிமெண்டிலே சேர்ந்தே? நீ லண்டனிலே படிச்சிட்டிருந்தே இல்லே?'' என்று கேட்டிருக்கான். அந்த ஆளுக்கு ஒன்றும் புரியல்லே. திரு திருன்னு முழிச்சிருக்கான். என்னப்பா ராஜன், உனக்கு என்ன பணமில்லையா? வசதி இல்லையா? இம்மாதிரிச் சம்பளத்திலே ஆசைப்பட்டு நீ வந்து யுத்தத்திலே சேரணுமா'ன்னு கேட்டிருக்கான்.

நீ யாரைப் பத்திப் பேசறே? நானாவது லண்டன்லே படிக்கறதாவது? என்று அவன் சொல்லியிருக்கான். 'என்ன! நீ ராஜனில்லையா?'ன்னு சித்தய்யன் கேட்டிருக்கான். அந்த ஆளு, 'என் பேரு ராஜன்தான், அதெப்படி உனக்குத் தெரியும்'னு கேட்டிருக்கான். சித்தய்யனுக்கு ஒன்றுமே புரியல்லே. 'நீ என்னோடு படிச்சதை அதுக்குள்ளே மறந்துட்டியா ராஜன்?' என்று திரும்பவும் கேட்டிருக்கான். அந்த ஆளு சிரிச்சிருக்கான். 'நீங்க பேசற ஆளு வேறேன்னு நினைக்கிறேன். என் பேரு தியாகராஜன். சுருக்கி, டீ. ராஜன்னு வச்சிட்டிருக்கேன். என் ஊரு திருவாரூர். எனக்கு அப்பா அம்மா கிடையாது. எங்க அக்கா வறுமையிலே கஷ்டப்படறாள். அவளுக்குச் சவுகரியமா இருக்கும்னுதான் நான் மிலிட்டரியிலே சேர்ந்தேன்' என்று சொல்லியிருக்கான்.



''சித்தய்யனுக்கு ஒரே எரிச்சலாய் இருந்திருக்கு. ஆள் பாக்கிறதுக்கு அப்படியே நம்ம ராஜன் மாதிரியே இருந்திருக்கான். அதே அழகான பல் வரிசை, அதே உயரம், நிறம் மட்டும் கொஞ்சம் மாநிறமா இருந்தானாம். ஒரே பேர், ஒரே உருவம், ஒரே நாடு. இப்படியும் இருக்குமா? ஒரு வேளை ராஜன் தங்கிட்டே வேடிக்கை பண்ணுகிறானோன்னுகூடச் சித்தய்யன் நினைச்சிருக்கான். கப்பல் ஆப்பிரிக்கா வந்ததும் யுத்த மும்முரத்திலே அந்தத் தியாகராஜனைச் சந்திக்கவே இல்லை. டிரிபோலியிலிருந்து பெங்காசிக்குச் சண்டை நகர்ந்ததுடன் ஒரு புது பிரிட்டிஷ் ரெஜிமெண்ட் போர் முனைக்கு வந்திருக்கு. அந்த ரெஜிமெண்ட்லே நம்ம ராஜன் இருந்திருக்கான். அது சித்தய்யனுக்குத் தெரியாது.

''பெங்காசிப் போர் நடுவிலே அமைதி ஏற்பட்டிருக்கு. விடுமுறை கொடுத்திருக்காங்க. அப்போ ஊருக்கு வெளியிலே ஓர் ஓட்டலுக்கு சித்தய்யன் போனப்போ நம்ம ராஜனை, சந்திச்சிருக்கான் நம்ம ராஜனைத் திருவாரூர் பையன்னு நினைச்சுட்டுப் பேசாமல் போயிருக்கான். ஆனால் நம் ராஜன் சித்தய்யனை வலுவிலே தடுத்துப் பேசியிருக்கான். அப்போதுதான் ராஜனுக்கு அவன் மாதிரியே உருவத் தோற்றமுள்ள ஒரு தமிழன், அதே போர் முனையிலே இருக்கிறது தெரிஞ்சிருக்கு. உடனே அவனைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டிருக்கான். சித்தய்யன் அன்னிக்கு ராத்திரி தியாகராஜன் பட்டாள நம்பர் விசாரிச்சு அவன் தங்குகிற விடுதிக்குப் போய்

இருக்கான். இரண்டு பேரும் ஒருத்தர் முன்னாலே ஒருத்தர் நிக்கிறப்போ, நிலைக்கண்ணாடிக்கு முன்னாலே நிக்கிற மாதிரி இருந்துச்சாம். அப்புறம் இரண்டு பேரும் ரொம்ப சிநேகிதமாயிருக்காங்க. நம்ம ராஜனும் தியாகராஜனும் சேர்ந்து மெஸ்ஸுக்குப் போவாங்களாம். இரண்டு பேரும் எப்பவும் தமிழ் நாட்டைப் பற்றிப் பேசிக்கிட்டு இருப்பாங்களாம். ஒரு நாள் சித்தய்யன் தியாகராஜனோடு தனியாப் பேசிக்கிட்டு இருந்தானாம்.

''அப்போ அந்த தியாகராஜன் சொன்னானாம், 'இந்தக் கடவுளுக்குக் கண்ணே இல்லே. உருவத்திலே, பெயரிலே நானும் ராஜனும் ஒன்றாயிருக்கோம். சண்டை முடிஞ்சப்புறம் அவன் செல்வச் சூழ்நிலைக்குத் திரும்புவான். நான் மறுபடி எங்கேயாவது வேலைக்குச் சேர்ந்து கூலிக்கு மாரடிக்கணும்' என்று மனம் கசந்து சொன்னானாம்! அப்புறம் ஒரு நாள் அந்தத் தியாகராஜன் கையிலே பங்கஜத்தின் போட்டோ இருந்ததாம். தியாகராஜன் கையிலே ராஜன் மனைவியோட போட்டோ வந்தது சித்தய்யனுக்கு மிகவும் வருத்தமாய் இருந்திருக்கு. அத்தோட தியாகராஜன் நடவடிக்கைகள், பேச்சு, அவன் ரொம்பக் கீழ்த்தரமானவன்னு சித்தய்யனுக்குப் பட்டிருக்கு! நம்ப ராஜன் அந்தத் தியாகராஜனோடு சேர்ந்து பழகுவது, அவனிடம் மனம் விட்டு குடும்ப அந்தரங்கங்களைப் பற்றி எல்லாம் பேசுவது சித்தய்யனுக்குப் பிடிக்கல்லே. அவன் நம்ம ராஜனை இது பற்றிக் கண்டிச்சிருக்கான்' என்று சொல்லிவிட்டு ராமலிங்கம் நிறுத்தினார்.

பங்கஜத்துக்கு ராஜனைப் பற்றிக் கேட்க ஆசை இருந்தாலும், முக்கியமான விஷயத்தைக் கூறாமல் ஏதேதோ பேசிக் கொண்டே போகிறாரே என்று சலிப்பாக இருந்தது. ''அப்புறம் என்ன மாமா?'' என்று சற்று ஆவலோடு கேட்டாள்.

ராஜன் சித்தய்யனிடம் சொன்னானாம். ''உண்மை



சித்தய்யா, தியாகராஜனுக்கு என்னிடம் பொறாமை இருக்குன்னு எனக்குத் தெரியும். ஆனால் மாலையில் போர்க்களத்தில் இருந்து திரும்பறப்போ நான் உயிரோடு இருப்பேனா இல்லை அவன் உயிரோடு இருப்பானான்னு தெரியாத இந்தச் சூழ்நிலையிலே ஒருத்தரை ஒருத்தர் வெறுக்கிறது அர்த்தமில்லாத விஷயம்னு உனக்குப் படலையா? பாவம், அவன் வசதி இல்லாதவன். பணம், பொருள் இதுக்கு ஆசைப் படறதிலே ஆச்சரியமில்லே. தேத்திக்குக் கூட நான் போட்டிருந்த ரோலெக்ஸ் வாட்சுக்கு ஆசைப்பட்டான். நான் நீயே எடுத்துக்கோன்னு கொடுத்திட்டேன்'னு ராஜன் சொன்னான். இந்தப் பேச்சு நடந்தப்புறம் சித்தய்யன் ராஜனைப் பார்க்கவில்லை. சித்தய்யனை சப்ளை படைக்கு மாத்தி விட்டார்களாம்.

''பல நாள் கழித்துப் பிரிட்டிஷ் படைகள் டோப்ருக்கில் போர் புரிந்தப்போ ராஜன் போரிலே மடிந்து விட்டான் என்பது சித்தய்யனுக்குத் தெரிஞ்சிருக்கு. கடிகாரம்தான் அத்தாட்சியாக இருந்ததால் போரில் விழுந்தது ராஜனா இல்லை தியாகராஜனா என்று எப்படிச் சொல்வது என்று சித்தய்யன் சந்தேகப்படுகிறான். போர் முனையில் பலர் சிறைப்பிடிக்கப்படுகிறார்கள். பலர் சிறை தப்பி ஆப்ரிக்கப் பாலைவனங்களில் ஒடி மறைகிறார்கள். போர் அவசரத்தில் வெளியிடப்படும் தகவல்கள் எதையுமே நம்புவதற்கில்லை. முதல் அறிக்கையில் சொன்ன தகவல் மறு அறிக்கையில் மாற்றிக்கூறப்படும் என்று சித்தய்யன் சொல்கிறான். அவன் நேரிடையாக இருந்து விஷயங்களைப் பார்த்தவன். அவன் சொல்வதில் அர்த்தம் இருக்க வேண்டும்'' என்று கூறி முடித்தார்.

இந்த விசித்திரமான செய்தியைக் கேட்ட பங்கஜத்தின் மனத்தில் பல மாறுபட்ட உணர்ச்சிகள் கொந்தளித்து எழுந்தன. எதை நம்புவது, எந்த எண்ணத்தில் இருப்பது என்று புரியவில்லை. சில மாதங்களாக

எதிர் காலத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. அது என்றுமே வெறும் இறந்த கால ஞாபகங்களின் கோவையாக இருக்கப் போகிறது என்று ஓரளவு தீர்மானித்து விட்டவளுக்கு சித்தய்யன் கூறிய தகவல் மடிபடியும் நம்பிக்கையை ஊசலாட வைத்தது. அந்த நம்பிக்கை எத்தனை நாட்களுக்கு என்ற சந்தேகமும் உடன் எழுந்தது.

ராமலிங்கம் நிறுத்தி நிறுத்திச் சொன்ன தகவல் பங்கஜத்துக்குத் திருப்தி அளிக்கவில்லை. நேரடியாகச் சித்தய்யனையே பார்த்து அவனிடமே பேசவேண்டும் என்று ஆவல் ஏற்பட்டது. உடனே சித்தய்யன் தங்கியிருந்த ஓட்டலுக்குச் செல்ல வேண்டுமென்று ஆசைப் பட்டாள். அவனோடு பேச வேண்டுமென்று தன் விருப்பத்தை எந்தவிதக் கூச்சமுமில்லாமல் தெரிவித்தாள்.

ராமலிங்கம் யோசித்தார். ''இந்த இரவு வேளையில் அவன் தங்கும் ஓட்டலுக்குப் போகவா?'' என்றார்.

''அவர்தான் நாளைக்குப் பர்மாப் போர்முனைக்குப் போய் விடுவாரே? அவர் செல்வதற்குள் நான் அவரைப் பார்க்க வேண்டும்'' என்று ஒரு வித ஆவேசத்தோடு சொன்னாள் பங்கஜம்.

''பங்கஜம், காலையில் போவோம். இப்போ போய் அந்தப் பையனைத் தூக்கத்திலிருந்து எழுப்பிப் பேசுவது மரியாதை இல்லையம்மா'' என்றார் நமச்சிவாயம்.

பங்கஜத்துக்கு மனத்தில் இருந்த ஆர்வத்தில், மற்றவரைத் தூக்கத்தில் எழுப்பித் தொந்தரவு கொடுக்கப் போகிறோமே, அது முறையல்லவே என்ற எண்ணமே ஏற்படவில்லை. ஆனால், தான் சித்தய்யனைக் கேட்கப் போகும் ஒரே கேள்விக்குச் சித்தய்யன் தெளிவான பதில் கொடுக்க வேண்டும். அதற்கு அவன் விழிப்போடு நல்ல ஞாபகத்தோடு இருக்க வேண்டும் என்ற எண்ணம் பங்கஜத்தின் மனத்தில் எழுந்தது.

''சரியப்பா, நாளைக்கு விடிஞ்சவுடனே போவோம். மாமா, நீங்களும் இங்கேயே படுத்துக் கொள்ளுங்க'' என்று கூறி விட்டு மாடி அறைக்குச் சென்றாள்.



அங்கு சாவித்திரி பங்கஜத்தின் வருகைக்குக் காத்து இருந்தாள். பங்கஜம் அவளிடம் விளக்கமாக ராமலிங்கம் கூறியதைச் சொன்னாள்.

சாவித்திரி, ''உங்கப்பா ரொம்ப நல்லவர், சிவபூஜை பண்ணுகிறவர். அவர் நம்பிக்கை வீண் போகாது என்று தோன்றுகிறது பங்கஜம்'' என்று சொன்னாள்.

விடியும் வரையில் பங்கஜம் தூங்கவில்லை. மற்றவர்கள் கண் அயர்ந்தனர். பங்கஜம் திரும்பத் திரும்பத் தான் சித்தய்யனைக் கேட்கப் போகும் ஒரே கேள்வியை எண்ணிக் கொண்டிருந்தாள். அந்தக் கேள்விக்குக் கிடைக்கப் போகும் பதில் நல்ல பதிலாக இருக்க வேண்டுமே என்று பயந்தாள். 'போர்முனை அறிக்கைகள், அரசாங்க மேலிடத்து முயற்சிகள் எல்லாம் உண்மையைக் கூறாது. ஆனால் சித்தய்யன் எனக்குக் கொடுக்கப் போகும் பதில் உண்மையைச் சொல்லும்' என்று ஆவலோடு சூரியன் உதயத்துக்குக் காத்திருந்தாள். கடிகாரத்தின் முள் மிகவும் மெதுவாக நகர்வது போல் தோன்றியது. மணி மூன்று, மூன்றரை, நான்கு, நாலரை, மணி நாலே முக்கால், ஐந்து என்று எண்ணிக்கொண்டே இருந்தாள்.

அருகில் சாவித்திரி நிர்மலமாகத் தூங்கிக் கொண்டு இருந்தாள். 'அவள் வாழ்வு பிரசினை தான் முடிவு கட்டிய விஷயமாயிற்றே. என்னைப்போல் மாறி மாறி நம்பிக்கைக்கும் ஏமாற்றத்துக்கும் இடையே ஊசலாட வேண்டியதில்லையே?' என்று நினைத்தாள். குழப்பம் இருக்கும் வகையில் நம்பிக்கையுண்டு. குழப்பம் தீர்ந்து விட்டால் நம்பிக்கைக்கு இடம் இருக்காதே. என் சித்தய்யனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டு, உள்ள நம்பிக்கையையும் இழக்க வேண்டும் என்ற பயமும் ஏற்பட்டது.

சித்தய்யனைச் சந்திக்காமலே இருந்து விடலாமா என்று நினைத்தாள். அதற்கும் அவள் மனம் இடம் தர மறுத்தது. மணி ஆறு அடித்தது. உடனே எழுந்து பல் விளக்கி ஸ்நானம் செய்து தந்தையின் பூஜை அறைக்குச் சென்று ஆண்டவனை வணங்கினாள்.

பிறகு நேரே மாடிக்கு வந்தாள். டிராயரைத் திறந்து எதையோ தேடினாள். அவள் தேடிய துணிப்பை டிராயரில் இருந்தது. அந்தத் துணிப் பையைத் திறந்து பார்த்தாள்.

'சேதமடையாமல் அவர் வாங்கிக் கொடுத்தபடி இருக்கிறது. இதைச் சித்தய்யனிடம் காட்ட வேண்டும். பிறகு தான் அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டாள்.

துணிப் பையுடன் மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தாள். தந்தை நமச்சிவாயமும் ராமலிங்கமும் தயாராக இருந்தனர். மூவரும் உடனே சித்தய்யன் தங்கி இருந்த ஓட்டலுக்குப் புறப்பட்டனர்.

## 16

ஓட்டல், எழும்பூர் ஸ்டேஷனுக்கு எதிரே உள்ள ஒரு சாலையில் இருந்தது. அதனுள் சென்றதும் வரவேற்பு 'கௌண்ட'ரின் முன் ராமலிங்கம் விசாரிக்கும் முன்பே அங்குள்ள ஓட்டல் சிப்பந்தி, அவரை முதல் மாடியில் உள்ள சித்தய்யனின் அறைக்கு அழைத்துச் சென்றார்.

அந்த அறையின் வெளிப்புறம் உள்ள சிறு பகுதியில் ஒரு மிலிட்டரிக் கோணிப்பை கிடந்தது. அதன்மீது பல முத்திரைகள், எல்லாவற்றுக்கும் மேலாக அது பல கப்பல்கள், மணல் பிராந்தியங்களைப் பார்த்து 'ரிடையர்' ஆகும் நிலையில் இருக்கும் கோணிப்பை என்பது தெளிவாகத்



தெரிந்தது. அதே போல் ஒரு சிறு [illegible] பெட்டியும் அருகில் கிடந்தது.

உட்புறம் உள்ள பாத்ரூமிலிருந்து வாஷ்பேஸினில் தண்ணீர் விழும் சத்தம்—ஒருவர் கொப்புளிக்கும் ஓசை இடையிடையே கேட்டது. அங்கு போடப்பட்டிருந்த நாற்காலிகளில் நமச்சிவாயமும் பங்கஜமும் ராமலிங்கமும் அமர்ந்திருந்தனர். சித்தய்யன் பாத்ரூமிலிருந்து எப்போது வருவான் என்று காத்து இருந்தனர்.

பங்கஜம் மறுபடியும் தன் மனத்தில் அவள் கேட்க வந்த கேள்வியைக் கேட்டுக் கொண்டாள்.

சில விநாடிகளில் பாத்ரூம் கதவு திறந்தது. காக்கி நிஜாரும் பனியனும் அணிந்த சித்தய்யன் பாத்ரூமிலிருந்து வெளியே வந்தான். அவன் பார்வை அறையில் அமர்ந்து இருக்கும் ராமலிங்கத்தின் மீதும் அவருடன் வந்திருக்கும் பங்கஜம், நமச்சிவாயத்தின் மீதும் விழுந்தது. ஒரு விநாடிக்கு அவன் முகத்தில் ஒருவித ஆச்சரியம் வெளிப்பட்டது. அடுத்த விநாடி, தான் வெறும் பனியனோடு மட்டும் இருக்கிறோமே என்ற கூச்சத்தில் ஒரு பெரிய டர்க்கி டவலை எடுத்துப் போர்த்திக் கொண்டான்.

"வாங்க! வந்து ரொம்ப நேரமாச்சா...?" என்று மரியாதைக்கு கேட்டபடி அருகிலுள்ள மர [illegible] மீது உட்கார்ந்தான். முதல் நாள் இரவு ராமலிங்கம் அவனைச் சந்தித்து விட்டுச் சென்றவுடன், அவரை மறுபடியும் காலையில் சந்திக்கப் போகிறோம் என்று சித்தய்யன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை என்பது சித்தய்யன் பேச்சிலும் குரலிலும் தெளிவாகத் தெரிந்தது.

அதைப் புரிந்து கொண்ட ராமலிங்கம், "இதுதான் பங்கஜம், ராஜுவின் மனைவி. அவள் உன்னை நேரடியாகச் சந்தித்து உன்னிடமே ராஜுவைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அதனால்தான் உன்னை மறுபடியும் சந்தித்துத் தொந்தரவு கொடுக்க வேண்டும்படி

யாகி விட்டது" என்று புன்னகையோடு சொன்னார்.

"பரவாயில்லே, எனக்குத் தொந்தரவே இல்லை, உங்களைக் கல்யாண சமயத்திலேதான் பார்த்தது. மறுபடியும் நான் பார்த்தது உங்கள் போட்டோவைத்தான். ராஜன் உங்களைப்பற்றி அடிக்கடிப் பேசிக்கிட்டிருப்பான். உங்க நினைவாகவே இருந்தான்" என்று பங்கஜத்தைப் பார்த்து மரியாதையோடு கூறிவிட்டு, மேற்கொண்டு என்ன பேசுவது என்று தோன்றாமல் நிறுத்திக் கொண்டான்.

பங்கஜத்தின் விழியோரத்திலே துளிர்த்த நீர்த் துளிகள் அவளையும் அறியாமல் அவள் மஞ்சள் சேலையில் விழுந்தது. திடீரென்று பங்கஜத்தின் மனத்தை ஒருவித அச்சம் பற்றிக் கொண்டது. தாம் கேட்க வந்த விஷயத்தைக் கேட்போமா வேண்டாமா என்று பயந்தாள். அது மட்டுமல்ல, அந்தக் கேள்வி தன்னைத் தவிர மற்றவர்களுக்கு அர்த்தமற்ற கேள்வியாக இருக்கும். வெறும் மூட நம்பிக்கையாகவும் தோன்றும்.

அருகில் அமர்ந்திருக்கும் தன் தந்தையையும் மாமனாரையும் ஒரு முறை பார்த்தாள். பிறகு தலையைக் கவிழ்ந்தபடி அமர்ந்திருந்தாள். அவளுடைய குழப்பத்தைக் கவனித்த ராமலிங்கம், "பங்கஜம் நீ கேள்வி கேட்கிறப்போ நானும் உங்கப்பாவும் இருக்கிறது உனக்கு ஒரு மாதிரியாய் இருந்தால், நாங்க வேணும்னா அறைக்கு வெளியே இருக்கிறோம்" என்று சொல்லி எழுந்திருக்கப் போனார்.

"இல்லை மாமா, நீங்க அவருடைய தந்தை. உங்களுக்குத் தெரியாமல் நான் அவரைப் பற்றி எதுவும் [illegible] பேச விரும்பவில்லை" என்று சொல்லிவிட்டு சித்தய்யனைப் பார்த்தாள். பிறகு அவள் குரலிலே ஒரு விதக் குழைவு ஏற்பட்டது. அதோடு அந்தக் குரலில் ஒரு வித பயங்கர உறுதியும் ஏற்பட்டது.

"மிஸ்டர் சித்தய்யன், நீங்கதான் அவரோடு சமீப

www.t.me/tamilbooksworld



காலத்திலே சந்தித்துப் பழகியிருக்கீங்க. அவர் இங்கிருந்து போன பின்பு நாங்க யாரும் பார்க்கவில்லை. வெளிநாட்டுத் தொடர்பு அவர் சுபாவத்திலே என்ன மாறுதலைக் கொடுத்தது என்பது எங்களுக்குத் தெரியவே தெரியாது..." என்று பங்கஜம் கூறி முடிக்கு முன்பே, சித்தய்யன் ஏதோ பேச வாயெடுத்தான். ஆனால் பங்கஜம் அவனை உறுதியோடு தடுத்தாள்.

"நான் சொல்றதைப் பூராவும் கேளுங்க. அப்புறம் சொல்லுங்க. நீங்க மாமாவைச் சந்திக்கும் முன்பு நான் ராஜனை இழந்து விட்டதாகவே நினைத்து மனசைப் பழக்கிட்டேன். நீங்க திருவாரூர் தியாகராஜனைப் பற்றிச் சொன்ன பிறகு எனக்கு மறுபடியும் லேசாக நம்பிக்கை ஏற்படுகிறது. அது பொய் நம்பிக்கையாக இருக்க விரும்பவில்லை! நான் கேட்கிற கேள்விகளுக்கு உண்மையான பதிலைச் சொல்லுங்க. நான் வேதனைப்படுவேன், எனக்குத் திருப்தி ஏற்படணும்னு நினைச்சு எதையாவது சொல்லாதீங்க. எதையும் மறைச்சுப் பேசாதீங்க" என்று சொன்னாள்.

சித்தய்யன், இத்தனை இளம் வயதுப் பெண்ணிடமிருந்து இவ்வளவு தைரியமான வார்த்தைகளை எதிர் பார்க்கவில்லை. முதல் நாள் இரவு ராமலிங்கம் அவனோடு பேசியபோது ஒரு குழந்தைபோல் கண் கலங்கிப் பேசினார். அவரைவிட நாற்பது வருடங்கள் இளமையான ஒரு பெண், சிறிது கூடப் பதற்றமில்லாமல் கண்டிப்பாகப் பேசுவது சித்தய்யனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. பங்கஜத்தைச் சந்திப்பது ஒரு முதிர்ந்த நீதிபதியைச் சந்திப்பதுபோல தோன்றியது அவனுக்கு.

"சரிம்மா, நீங்க கேளுங்க. ஒளிவு மறைவு இல்லாமல் எனக்குத் தெரிந்த உண்மையைக் கூறுகிறேன்" என்றான் சித்தய்யன்.

"போர் முனையில் அவரிடம் நீங்கள் பழகியபோது அவர் பழக்கங்களில் ஏதாவது மாறுதல் இருந்ததா?

உங்களுக்குப் பிடிக்காத மாறுதல் இருந்ததா?"

சித்தப்பன் சில விநாடிகளுக்குப் பதில் சொல்லவில்லை. பிறகு, "இந்தப் போரில் ஒவ்வொரு இந்தியன் பங்கும் விசித்திரமானது. என்னைப் போன்றவர்கள் பதவிக்காக, சம்பளத்துக்காக, பிரிட்டிஷ்—ஜெர்மானியப் போரில் கலந்து கொண்டிருக்கிறோம். ஒரு சில இந்தியர்கள் ஆங்கிலேயனுக்காக—ஆங்கிலேயன் வெற்றிக்காகப் போர் புரிகிறார்கள். ஆனால் ராஜன், ஆங்கிலேயனை வெறுத்துக் கொண்டே இந்தப் போரில் ஈடுபட்டிருந்தான். அதுதான் எனக்குப் புரியவில்லை. அவனையே இது பற்றிக் கேட்டேன். அவன் அதற்குச் சொன்ன பதில் வேடிக்கையாயிருந்தது. 'நான் ஆங்கிலேயனையும் வெறுக்கிறேன். அதைவிட அதிகமாக ஜெர்மானிய யதேச்சாதிகாரத்தையும் வெறுக்கிறேன். அதனால்தான் பிரிட்டிஷ் சைனியத்தில் போர் புரிகிறேன். அதோடு எனக்கே நான் ஒரு கோழையல்ல என்று நிரூபித்துக்கொள்ள வேண்டும் என்ற ஓர் எண்ணமாகவும். சந்தர்ப்பம் கிடைத்தால் தாய்நாட்டுக்காக நான் உயிரையும் விட எனக்குத் துணிவு இருக்கிறது என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று சொன்னான். இந்த மாதிரி ஒரு ஆத்ம பரிசோதனை நோக்கத்தோடு அந்த சைனியத்திலே சேர்ந்தது ராஜன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும்" என்றான்.

பங்கஜத்துக்கு இந்தப் பதில் திருப்தி அளித்தது. அவளுக்கு ராஜன் எழுதிய இறுதிக் கடிதத்திலும் கிட்டத்தட்ட இம்மாதிரியான வாக்கியங்களைத்தான் எழுதி இருந்தான்.

"இன்னொரு கேள்வி: சண்டை சூழ்நிலை காரணமாக அவர் ஒழுக்கத்தில் ஏதாவது மாறுதல் இருந்ததா?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வியைப் பங்கஜம் கேட்டதும், அதுவும் இரு பெரியவர்கள் முன்னிலையில் கேட்டதும், சித்தப்பனுக்குக் குழப்பமாக இருந்தது. தொடர்ந்து அவள், "என்

www.t.me/tamilbooksworld



பொருட்டு மூடாதீங்க. உண்மையைச் சொல்லுங்க" என்றாள்.

உடனே சித்தப்பன் சிரித்தான். பங்கஜத்துக்கு அந்தச் சிரிப்பின் காரணம் விளங்கவில்லை.

"அம்மா, இதிலே மூடுவதற்கு ஒன்றுமில்லை. ரெஜிமெண்ட் மெஸ் பூராவும் பரவலாகப் பேசிய ஒரு விஷயமிது. மது அருந்தாமல், புலால் உண்ணாமல், மற்ற சிறு இன்பங்களுக்கு மனத்தைப் பறி கொடுக்காமல் ஒருவன் சிப்பாயாகப் போர் முனைக்கு வரும்போது அது பொதுவாகப் பரிகாசத்துக்கு உரிய விஷயமில்லையா? மறுநாள் போரில் நம் உயிர் போய்விடலாம் என்ற அச்சம் நிரந்தரமாக இருக்கும்போது, மனிதன் எல்லா இன்பங்களையும் முடிந்தவரையில் அனுபவிக்க நினைக்கிறான். அதற்கு விதிவிலக்காக ஒருவன் வாழும்போது அவனைப் பார்த்து மற்றவர்கள் சிரிக்காமல் இருப்பார்களா? ராஜனை 'மிலிடரி காந்தி' என்று கேலியாக நம் இந்தியச் சிப்பாய்கள் கூறுவது கூட உண்டு. எல்லா இன்பங்களிலும் மூழ்கியிருந்த தியாகராஜனுக்கும் துறவி போல் வாழ்ந்த ராஜனுக்கும் எப்படி இவ்வளவு சிநேகம் சீக்கிரம் வளர்ந்தது என்பதுதான் எனக்கு ஆச்சரியம் தந்தது. உருவத்தில் தன்னுடைய நகம் போல் இருந்த ஒருவன் உள்ளத்தால் இவ்வளவு மாறுபட்டிருப்பதைத் திருத்த முயன்றான் ராஜன் என்றுதான் சொல்ல வேண்டும். பல வருஷங்கள் பழகிய என்னிடம் சொல்லாத குடும்ப விஷயங்களையும் ராஜன் இந்தத் தியாகராஜனிடம் சொல்லி இருந்தான்" என்று சித்தப்பன் கூறி முடித்தான்.

அவன் பேசி முடித்ததும் அறையில் சில விநாடிகளுக்கு நிசப்தம் நிலவியது. பங்கஜம் தன் கைப் பையில் இருந்து ஏதோ ஒரு பொருளை எடுத்தாள். அதை எடுக்கும் போதே அவள் கைகள் நடுங்கின. அடுத்தபடி அவள் எதையோ கேட்க நினைத்து உதடுகளை அசைத்தாள். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. மௌனம் நீடித்தது

தன் கையில் இருந்த பொருளைச் சித்தய்யன் முன் நீட்டினாள். அது, சின்னஞ்சிறு சங்குகளால் பட்டுக் கயிற்றில் கோக்கப்பட்ட ஒரு மாலை. பெரிய விலை உயர்ந்த பொருள் அல்ல. சாதாரண மாலைதான். அதைச் சித்தய்யனிடம் காட்டி, "இந்த மாலையை நீங்க பார்த்ததாக ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

சித்தய்யனுக்கு இந்தக் கேள்வி அர்த்தமற்றதாகத் தோன்றியது. பங்கஜத்தையும், சங்கு மாலையையும் மாறி மாறிப் பார்த்தபடி விழித்தான்.

"இது மாதிரி சங்கு மாலைகள் பார்த்திருக்கிறேன். ஏன் கேட்கிறீங்க?"

பங்கஜம் உடனே, "அது சரி, இம்மாதிரி சங்கு மாலைகள் எல்லாக் கடற்கரைக் கடைகளிலும் கிடைக்கும் இதன் விலை ஒரு ரூபாய் கூட இருக்காது. தியாகராஜன் என் போட்டோவை வைத்துக் கொண்டிருந்ததாக மாமாவிடம் கூறினீர்களே, அந்தப் போட்டோவை நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா?" என்றாள்.

"பார்த்தேன். நன்றாக ஞாபகம் இருக்கிறது. அது பற்றிகூட நான் உங்கள் கணவனிடம் பலத்த கண்டனம் தெரிவித்தேன்."

"என் கணவரிடம் என்னுடைய சில போட்டோக்கள் இருந்தன. அதில் ஏதாவது ஒன்றைத் தியாகராஜன் எடுத்து இருக்கலாம். தியாகராஜனிடம் இருந்த போட்டோ உங்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறதல்லவா?" என்று மறுபடியும் கேட்டாள்.

"நன்றாக ஞாபகம் இருக்கிறது" என்று பதில் உரைத்தான் சித்தய்யன்.

"அந்தப் போட்டோவில் நான் இம்மாதிரி சங்கு மாலை அணிந்திருந்தேனா?"

சித்தய்யன் சில விநாடிகள் யோசித்தான். "இல்லை,



இந்த மாலையைப் பார்த்ததாக ஞாபகம் இல்லை" என்றான்.

"நன்றாக யோசித்துச் சொல்லுங்கள், நீங்கள் சொல்லும் பதிலைப் பொறுத்திருக்கிறது, என் வருங்கால மன அமைதி."

"நிச்சயமாக நான் சங்கு மாலையைப் பார்க்கவில்லை, ஏனென்றால் நான் பார்த்த போட்டோவில் [illegible] மார்க் போட்ட ஒரு டாலர் செயின்தான் பார்த்தேன்."

திடீரென்று சித்தய்யன் எதையோ நினைத்துக் கொண்டவன்போல் சொன்னான்: "அம்மா, மிலிட்டரி காண்டீன் வராந்தாவில் ராஜன் சொன்னது ஞாபகம் வருகிறது. இப்போதுதான் அதன் முக்கியத்துவம் புரிகிறது."

பங்கஜம் ஆவலோடு, "அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டாள்.

ராஜன் சொன்னான் : 'தியாகராஜன் கையில் நீ பார்த்த போட்டோவைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் முக்கியமாக உயிருக்கு மேலாக போற்றும் அவள் போட்டோ என்றும் என் இதயத்தின் அருகே இருக்கும். அதை யாரும் பார்க்க முடியாது. அதை நான் என்றும் பிரிய மாட்டேன் என்று சொன்னான்."

பங்கஜத்தின் முகம் மலர்ந்தது.

"நன்றி, சித்தய்யன். நன்றி. அனுமனைப் பார்த்த சீதை அடைந்த சந்தோஷத்தைவிட என் சந்தோஷம் மிக்க அதிகம். நம்பிக்கை இல்லாத ஒரு சூனியத்தில் வாழ்ந்த எனக்கு நீங்கள் சொன்ன இந்த வாக்கியம், நம்பிக்கை தருகிறது. காதால் கேட்டது, கண்ணால் கண்டது கூடப் பொய்யாக இருக்கலாம். உண்மையாக நேசிக்கும் எங்கள் ரகசிய ஒப்பந்தம் பொய்யாகாது. அது பொய்த்தால் ஆண்டவனே இல்லை, ஆண்டவனே இல்லை" என்று உணர்ச்சியோடு கூறினாள்.

ராமலிங்கமும் நமச்சிவாயமும் எழுந்தனர். பங்கஜம் நன்றியோடு சித்தய்யனை நோக்கிக் கும்பிட்டாள். "பண்புள்ள, நெறி தவறாத பெண்ணின் வாழ்த்துக்குச் சக்தி இருக்குமென்பார்கள். அந்தச் சக்தியின் நிறைவோடு உங்களை வாழ்த்துகிறேன். எந்தக் காட்டில், மலையில் நீங்கள் போர் நிமித்தம் போக நேர்ந்தாலும் உங்களுக்கு ஒருவித ஆபத்தும் வராமல் ஆண்டவன் உங்களைப் பாதுகாப்பார்" என்று கூறிவிட்டு வெளியேறினாள்.

சித்தய்யன் ஓட்டல் வெளிப்புறம் வரை வந்து அவர்களை வழியனுப்பினான். போட்டோவைப் பற்றிப் பங்கஜம் கேட்ட கேள்விகள் ஒன்றுமே ராமலிங்கத்துக்கும் புரியவில்லை. நமச்சிவாயத்துக்கும் புரியவில்லை. ஆனால் அவர் மனம் நிறைந்திருந்தது. பங்கஜம் எதைத் தேடி வந்தாளோ அது அவளுக்குக் கிடைத்துவிட்டது என்ற குருட்டு திருப்தி அவருக்கு ஏற்பட்டது.

## 17

ஹோட்டல் வெளிப்புறம் வந்ததும் பங்கஜமும் நமச்சிவாயமும் காரின் பின்புறம் ஏறி உட்கார்ந்தனர். காரின் முன்புறத்தில் ராமலிங்கம் உட்கார்ந்து கொண்டார். அந்தப் பெரிய கார் மெள்ள ஊர்ந்து கொண்டிருந்தது.

சில விநாடிகளுக்கு யாரும் பேசவில்லை. கார் செல்லும் வழியில் ஒரு விநாயகர் கோவில் இருந்தது. அதைப் பார்த்ததும் பங்கஜம் டிரைவரிடம் வண்டியை நிறுத்தச் சொன்னாள். காரிலிருந்து இறங்கினாள். தன் தந்தை இடமிருந்து பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு கோவிலின் உட்புறம் சென்றாள். அந்தக் கோவிலின் குருக்களாக இருந்த சிறுவன் காரில் இருந்து ஓர் அம்மாள் இறங்குவதைப் பார்த்ததும், மகிழ்ச்சியுடன் தீபாராதனைத் தட்டில் கற்பூரத்தைக் கொளுத்திக் தீபம் காட்டி விட்டுத் தட்டைப் பங்கஜத்தின் எதிரே நீட்டினான். குங்குமார்ச்சனை செய்யப்பட்டு, சிவந்த நிறத்தோடு விநாயகர் காட்சி அளித்தார்.



தீபாராதனைத் தட்டில் ஒரு மூலையில் விபூதியும் மறு மூலையில் சிறிது குங்குமமும் இருந்தது. தட்டில் எரிந்து கொண்டிருந்த தீச்சுடரின் வெப்பத்தைக் கைகளால் ஸ்பரிசித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். பிறகு விபூதியை எடுத்து நெற்றியில் தரித்துக் கொண்ட பின், அவள் கைகள் குங்குமம் வைத்திருக்கும் பகுதிக்குச் சென்றது. தயக்கத்தோடு அவள் பார்வை விநாயகர் மீது நின்றது. பிறகு அவள் விரல் குங்குமத்தைத் துணிவுடன் எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டது. தட்டில், தந்தை கொடுத்த பத்து ரூபாயை வைத்து விட்டுக் காரை நோக்கிச் சென்றாள்.

தட்டில் விழுந்த பத்து ரூபாயைப் பார்த்துத் திகைத்தபடி நின்றான் சிறுவன். அவனுக்குத் தெரியாது இழந்த சொர்க்கத்தை மீண்டும் பெற்றுக் கொள்கிறாள் பங்கஜம் என்ற உண்மை. சொர்க்கம், நரகம் என்ற இரண்டும் மனநிலைகள்தாமே! போர்முனையில் இருந்து வந்த அதிர்ச்சி தரும் அறிவிப்பு, பங்கஜத்தின் வாழ்வை ஒரு நரகமாக்கி விட்டது. இன்று சித்தய்யனிடம் பேசிய பின்பு பங்கஜத்துக்கு விவரம் தெரியாத ஒரு குதூகலம் ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சி மெல்லிய இழை போன்ற ஒரு நம்பிக்கையில் தொங்கியது. அதை வெறும் நம்பிக்கை என்று சொல்லுவதா? இல்லை, மூட நம்பிக்கையென்று முடிவு கட்டுவதா? பங்கஜத்துக்கே புரியவில்லை.

"நான் முக்கியமாக—என் உயிருக்கும் மேலாகப் போற்றும் போட்டோ என் இதயத்தின் அருகே இருக்கிறது, அதை யாரும் பார்க்க முடியாது" என்ற வாக்கியம் அவள் ஞாபகத்துக்கு வந்தது. முகத்தில் புன்னகை அரும்பியது. மறுபடியும் தன் பையில் இருந்த சங்கு மாலையை எடுத்துப் பார்த்தாள். திடீரென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று.

"மாமா! காரை உங்கள் வீட்டுக்கு ஓட்டச்

சொல்லுங்கள். நான் அத்தையைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

ராமலிங்கத்துக்கு இந்த வேண்டுகோளின் காரணம் புரியவில்லை. இன்று பங்கஜத்தின் செயல் எல்லாமே புதுமையாகத்தானே இருக்கிறது! டிரைவரிடம் கட்டளை இட்டார். ராமலிங்கத்தின் வீட்டு வாசலில் கார் வந்து நின்றதும் பங்கஜம் இறங்கி களை இழந்து கிடக்கும் வீட்டினுள், ''அத்தை, அத்தை'' என்று கூப்பிட்டபடியே ஓடினான்.

சமையலறையில் சிவகாமி இல்லை. படிக்கட்டுக்களைத் தாவி, மூச்சு இறைக்க மாடி அறையில் பங்கஜம் நுழைந்ததும், ஏதோ கனவிலிருந்து விடுபட்டவள் போல் மரப் பெஞ்சியில் இருந்து சிவகாமி எழுந்தாள்.

பங்கஜத்தை அவள் அப்போது சற்றும் எதிர்பார்க்கவில்லை. இரவு சித்தய்யனிடம் இருந்து டெலிபோன் வந்ததும் அவனைப் பார்க்க அவள் கணவர் போய் வந்தார். ஏதோ குழப்பமான முறையில், ராஜனைப் போல் யாரோ ஒருவன் படையில் இருந்ததாகச் சித்தய்யன் கூறியதைச் சொன்னார். பிறகு நமச்சிவாயத்தின் ஜாகைக்குச் சென்று விட்டார். இரவு பூராவும் திரும்பவில்லை. காலையில் டெலிபோன் செய்தபோது, எல்லோரும் மறுபடியும் ஓட்டலுக்குப் போயிருப்பதாகச் சாவித்திரி கூறினாள். வேறு எந்தத் தகவலும் கிடைக்கவில்லையே என்று சிவகாமி சிந்தித்துக் கொண்டிருந்த போதுதான் பங்கஜம் திடும் பிரவேசமாக மாடி அறையில் நுழைந்தான்.

''என்ன பங்கஜம், அவர் வரவில்லையா?'' என்று ராமலிங்கத்தைக் குறிப்பிட்டுக் கேட்டாள் சிவகாமி.

''அவரும் அப்பாவும் கீழே இருக்காங்க அத்தை...''

ராஜன் மறைந்த பின்பு, அவளை, 'அம்மா, அம்மா' என்றுதான் பங்கஜம் அழைப்பது வழக்கம். அதில் சிவகாமிக்கு ஒருவிதத் திருப்தியும் இருந்தது. இன்று மறு



படியும் 'அத்தை' என்று தன்னை அவன் கூப்பிடவே, சிவகாமிக்குச் சிறிது ஏமாற்றம் உண்டாயிற்று.

''என்ன பங்கஜம், அப்படிக் கூப்பிடறே? அம்மா என்று கூப்பிடப் பிடிக்கவில்லையா?'' என்றாள்.

''அதில்லே அத்தை. நான் எப்படிக் கூப்பிட்டாலும் நீங்க எனக்கு ஒரு தாய்தான். ஆனால் நீங்க இனிமே எனக்கு அத்தையாய்த்தான் இருப்பீங்க என்கிற நம்பிக்கை வந்திடுச்சு.''

விஷயம் விளங்காமல் சிவகாமி திகைத்தாள்.

''அத்தை, இன்னிக்கு அந்தச் சித்தய்யனைப் பார்த்த பிறகு, அத்தான் எங்கேயோ உயிரோடுதான் இருக்கார். அவர் நிச்சயமாகத் திரும்புவார்னு ஒரு திடநம்பிக்கை ஏற்பட்டிருக்கு. உங்களை அம்மான்னு கூப்பிடறதை விட, அத்தைன்னு கூப்பிடறதுதானே பொருத்தம்?''

''அவர் உன் மாதிரிதான் உணர்ச்சி வேகத்திலே என்னென்னமோ சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாயிடுச்சு. நீயாவது தெளிவாகச் சொல்லம்மா, சித்தய்யன் என்ன சொன்னான்?'' என்று அன்பும் கெஞ்சலும் குழையக் கேட்டாள் சிவகாமி.

''சைன்னியத்திலே தியாகராஜன்னு ஒருத்தரும் இருந்தாராம்... அவர் பெயரும் டி. ராஜனாம். அந்தத் திருவாரூர் ராஜனுக்கு அத்தான் தன் கைக்கடியாரத்தைக் கொடுத்திருந்தாராம். கைக்கடியாரத்தை மட்டும் வைத்துக் கொண்டு, கிடைத்த உடல் அத்தானுடையது என்று எப்படி முடிவு கட்டுகிறது? இந்தச் சந்தேகத்தைச் சித்தய்யன் கிளப்பினார் அத்தை! நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதிலிலிருந்து எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கு.''

பங்கஜத்தின் முகத்தில் இருந்த நம்பிக்கை ஒளி சிவகாமியையும் பற்றிக் கொண்டது. ''என்ன கேள்வி கேட்டே? சித்தய்யன் என்ன பதில் சொன்னான்?''

''அது ஒரு சின்னக் கதை அத்தை. இதுதான் வரை

www.t.me/tamilbooksworld

நான் அதை யாரிடமும் சொல்லவில்லை. அதாவது அதற்கு ஓர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. 'நம்ம வாழ்க்கையிலே தினமும் எவ்வளவோ விஷயங்கள் நடக்கிறது. ஆனால் அந்த நிகழ்ச்சிகள் எதிர்காலத்திலே அவ்வளவு முக்கியமாக இருக்கும்னு எப்படி நினைக்கிறது அத்தை?''

சிவகாமி பொறுமை இழந்தவளாய், ''விஷயத்தைச் சுற்றி வளைக்காமல் சொல்லு பங்கஜம்'' என்று கடிந்து கொண்டாள்.

''அத்தானை நாம பம்பாயில் கப்பலில் ஏற்றி வழியனுப்பப் போனோம் இல்லையா? பிரிந்து வாழப் போகிறோம் என்ற உணர்வில் அத்தானும் நானும் மிக நெருக்கமாக இருந்தோம். மாமாவும் நீங்களும் எங்கள் மனநிலையை புரிந்து கொண்டு எங்கள் இஷ்டப்படி விட்டு விட்டீர்கள். நாங்கள் இரவில் வெகு நேரம் கழித்து ஹோட்டலுக்குத் திரும்புவோம். விடியற்காலை எழுந்தவுடன் காரை எடுத்துக் கொண்டு ஜுஹூ பீச்சுக்குச் செல்வோம். அங்கு கடலில் குளித்துக் களிப்போம். பிறகு அருகிலுள்ள ஓட்டலில் வட இந்தியச் சாப்பாடு சாப்பிட்டு மகிழ்வோம். ஒரு நாள் அத்தை, அவர் ஒரு படகை வாடகைக்குப் பேசி, எலிஃபெண்டா குகையிலுள்ள கலைச் செல்வங்களைப் பார்த்து வரலாம் என்றார். எனக்குப் பயமாக இருந்தது. வேண்டாமென்றேன். 'சில மைல் தூரத்தில் அந்தக் குகைகள் இருக்கின்றன. இந்தச் சில மைல்கள் கடலில் பயணம் செய்ய பயப்படுகிறாயே, நீச்சல் எக்ஸ்பர்ட் ஆன நீ? நான் ஆயிரக்கணக்கான மைல்கள் கடலிலே பயணம் செய்யப் போகிறேனே!'' என்று அவர் சொன்னதும் நான் ஒப்புக் கொண்டேன்.

''அந்த யந்திரப் படகில் சென்று, எலிஃபெண்டா குகைகள் இருக்கும் பகுதியில் இறங்கினோம். வெய்யில் மங்கலாகத்தான் இருந்தது. ஆனால் வெப்பமாகவும் இருந்தது. வேடிக்கைப் பார்க்கும் யாத்ரீகர்கள் அதிகமாக

www.t.me/tamilbooksworld



இல்லை. யாரோ இரண்டு ஐரோப்பியத் தம்பதிகள்தான் இருந்தனர். அவர்கள் அங்கு உட்கார்ந்திருக்கும் மராட்டிய இளநீர் வியாபாரியிடம் இளநீர் வாங்கிக் குடித்தனர். நானும் அத்தானும் அதேபோல் இளநீர் குடித்தோம். குகைச் சிற்பங்களைப் பார்த்துவிட்டு, மறைவாக ஒரு பாறையின் நிழலில் உட்கார்ந்தோம். எனக்கு ஒரு மாதிரி மயக்கமாக இருந்தது. அத்தான் தன் கையில் எடுத்து வந்திருந்த டர்கி டவலை மணலில் விரித்தார். நான் கண்களை மூடிப் படுத்தேன். அவரும் அருகில் படுத்தார். சில விநாடிகளில், என் தோள் மீது அவர் கை அன்போடு...''

பங்கஜம் டக்கென்று பேச்சை நிறுத்திக் கொண்டாள். பழைய நினைவுகள் கொண்டு சென்ற வேகத்தில், தன் கணவரின் தாயிடம் ஏதேதோ சொல்லி விட்டோமே என்ற நாணத்தில் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். பங்கஜத்தின் முகம் சிவந்தது. அந்தப் பாறை நிழலில் நிகழ்ந்ததை ஒருவாறு ஊகித்துக் கொண்ட சிவகாமி, ஆனால் ஒன்றும் புரிந்து கொள்ளாதவள் போல், ''அப்புறம்? என்ன நடந்தது பங்கஜம்?'' என்று கேட்டாள்.

''அப்புறம் நானும் அவரும் எங்களை அறியாமல் ஒரு மணி நேரம் தூங்கி விட்டோம்'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

பங்கஜம் அழுத்தமாகச் சொன்னதிலிருந்து அவர்கள் அன்று தூங்கவில்லை என்பதை சிவகாமி புரிந்து கொண்டாள்.

''அப்புறம் இரண்டு பேரும் வேடிக்கையாகப் பேசிக்கிட்டே நடந்தோம். எங்களுக்கு ஒரே பசி. மூங்கில் படல்களாலான குடிசை. வெளியிலே ஒரு கறுப்புப் பலகை தொங்கிட்டிருந்தது. அது ஒரு குக்கிராம ஹோட்டல் மாதிரி இருந்தது. அதுலே போய் எண்ணெய் பஜ்ஜி வாங்கிச் சாப்பிட்டுட்டு டீ குடிச்சோம். கூட்டமாக

ஜனங்கள் கையிலே தட்டு நிறையத் தித்திப்பு பேடாக் களும் பழமும் எடுத்துக்கிட்டு சாலையிலே போனாங்க. அத்தான் அந்த டீக்கடை ஆளிடம் அதைப் பத்தி விசாரிச்சார். யாரோ ஒரு மகனாம். பேரு பாபாவாம், சாயிபாபாவின் சிஷ்யராம். அவரைப் பார்க்கப் போறாங் கன்னு சொன்னான் அந்த ஆள். எனக்கு அவரைப் பார்க்க வேண்டும்போல தோன்றியது. நாங்களும் பக்கத்துக் கடையில் மிட்டாய்களும் பழங்களும் வாங்கி ஒரு மூங்கில் தட்டிலே வைத்து எடுத்துக்கிட்டு பாபா தங்கியிருந்த கொட்டகைக்குப் போனோம். உயரமா ஒல்லியா ஒரு கிழவர் உட்கார்ந்து இருந்தார். அவர் தன் தலையிலே ஒரு கர்சீப் கட்டிக் கொண்டிருந்தார். பாபா கண்ணை மூடிக் கொண்டே இருந்தார். ஒரு சிஷ்யன்தான் விபூதிப் பொட்டலம் கொடுத்துக்கிட்டு இருந்தான். நாங்களும் தட்டை வைத்துவிட்டு வணங்கினோம். கண்ணை மூடிக் கிட்டிருந்த பாபா திடீர்னு கண்ணைத் திறந்தார். அவர் கண்ணு 'செவ செவ'ன்னு பார்க்கவே பயமாயிருந்தது. அப்புறம் அவர் என்னவோ குஜராத்தியில் சொன்னார், ஏதோ பயங்கரமாச் சொல்றாருன்னு மட்டும் தெரிஞ்சுது. ஆனால் புரியவில்லை. அத்தான் அப்படியே திகைத்து நின்றார். பாபா உடனே இங்கிலீஷிலே கேட்டார். 'நீ லண்டனுக்குப் போறே இல்லையா?"ன்னு.

"அத்தான் ஆமான்னு சொன்னார். உடனே பாபா அத்தானை இரக்கத்துடன் பார்த்தார். 'நல்ல இளம் வயசு. பெரியகுடும்பம். ஆனால் நீ திரும்பப் போறதில்லே' என்று சொன்னார். எனக்குத் தலைமேலே இடி விழுந்த மாதிரி இருந்தது. ஏண்டா இங்கே வந்தோம்னு தோன்றி யது. அத்தானும் என்ன சொல்றதுன்னு புரியாமல் பாபாவைப் பார்த்துக்கிட்டே இருந்தார். அப்போ பாபா என் பக்கம் திரும்பினார். என் உடல் பூராவும் நடுங்கியது."



## 18

"பாபா என்னைக் கூர்ந்து பார்த்ததும், இன்னும் என்ன சொல்லப் போகிறாரோ, அதில் இன்னும் என்ன பயங்கரம் இருக்குமோ என்று நடுங்கியபடி நின்றேன். அவரது வெந்த கண்கள் என் முகத்தைப் பார்த்தபோது என் உள்ளத்தின் எண்ண அலைகளை எல்லாம் ஊடுருவிப் பார்ப்பதுபோல் எனக்கு ஒரு பயம் ஏற்பட்டது. அவர் விழிகளை நேர்முகமாகச் சந்திக்க வலிமை இல்லாமல், என் பார்வையைத் தரையை நோக்கிச் செலுத்தினேன். அத்தான் ஆங்கிலத்தில், "சுவாமிஜி! அண்மையில் நான் சீமைக்குப் புறப்பட வேண்டியிருக்கிறது. இப்படிச் சொல் கிறீர்களே?" என்று குரல் நடுக்கத்தோடு கேட்டார்.

பாபாவிடம் இருந்து பதில் இல்லை. நான் தலை தூக்கிப் பார்த்தேன். பாபா கண்களை மூடிக் கொண்டு இருந்தார். "நீ சீமை செல்லவில்லை. சீமை உன்னை அழைக்கிறது. நீரும் மணலும் உன்னை அழைக்கின்றன. நீ போகாமல் என்ன செய்ய முடியும்? விதியோடு வாழ்வு பின்னப்பட்டிருக்கிறது. ஆம்! விதியோடு வாழ்வு பின்னப் பட்டு இருக்கிறது!" என்று கண்களை மூடியபடியே சொன்னார். எனக்கு மேலும் அங்கு நிற்கவே பிடிக்க வில்லை. அந்த இடத்தை விட்டுப் போனால் போதும் என்று தோன்றியது. 'வாங்க போகலாம் வாங்க' என்று அத்தானை அழைத்தேன்.

பாபா கண்களைத் திறந்து மறுமுறை என்னைப் பார்த்தார். இந்த முறை அவர் சிரித்தார். அத்தானிடம், 'இவள்தான் உன் மனைவியா' என்று கேட்டார். அத்தான், 'ஆமாம்' என்று பதிலளித்தார். பாபா மறுபடியும் என்னைப் பார்த்தார். உடனே தன் இருக்கையை விட்டு எழுந்தார். ஒரு மூங்கிலால் ஆன மனிதன் எழுந்ததுபோல், அவ்வளவு மெலிந்தும், உயர்ந்தும் இருந்தார் அவர். 'நீங்களிருவரும் என்னுடன்

வாருங்கள்' என்று எங்களை அழைத்தார். எனக்குப் பயமாயிருந்தது. அவரோடு தனிமையில் செல்வது சரியில்லை என்று தோன்றியது.

சுற்றியுள்ளவர்கள் ஆச்சரியத்தோடு எங்களையும் பாபாவையும் கவனித்தபடி இருந்தனர். கசமுசவென்று எனக்குப் புரியாத மராட்டிய மொழியில் பேசிக் கொண்டு இருந்தனர். அசுத்தமான இடம், அவலட்சணமான மீனவர்கள். எலும்புக் கூட்டுக்குத் துணி போர்த்தியது போன்ற தோற்றமுள்ள பாபா! எனக்கு வேதனை பொறுக்கவில்லை. தயங்கி நின்று கொண்டிருந்த அத்தானைக் கரம் பற்றி இழுத்தேன். 'வாங்க போகலாம், நாம் இங்கு வந்ததே தப்பு' என்று அங்குள்ளவர்களுக்குப் புரியாத தமிழ் மொழியில் கூறி, அவரை இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

நானும் அத்தானும் கூடாரத்துக்கு வெளியே வருமுன்பே, பாபாவின் வார்த்தைகள் ஒலித்தன. 'நீங்கள் இங்கு வரவில்லை. விதி உங்களை அழைத்து வந்தது. பெண்ணே! நீ இங்கிருந்து அவனைப் பிரித்துச் செல்லலாம். ஆனால் அவனுடைய விதியிடமிருந்து அவனை உன்னால் பிரிக்க முடியுமா?' என்று கேட்டார். நான் தமிழில் கூறிய வார்த்தையின் அர்த்தம், அவருக்கு எப்படி விளங்கியிருக்கும் என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அத்தான் தயங்கினார். எனக்கு மறுபடியும் பயம் ஏற்பட்டது. 'வாங்க அத்தான், அவர் என்ன வேணுமானாலும் சொல்லட்டும்' என்று மறுபடியும் அத்தானை வற்புறுத்தினேன். கூடாரத்தின் எல்லையைத் தாண்டிப் போக அடியெடுத்து வைத்தோம். ஆனால் முடியவில்லை. கால்கள் நடக்க மறுத்தன. ஏதோ ஒரு சக்தி எங்களைத் தடுத்து நிறுத்தியது. அதே சமயத்தில் பாபாவே எழுந்து எங்களை நோக்கி நடந்து வந்தார். அத்தான் என்னிடம், 'சும்மா இரு. பங்கஜம் என்னதான் நடக்கிறது பார்த்திடுவோம்' என்றார்.

www.t.me/tamilbooksworld



பாபா, 'வாருங்கள்' என்று கட்டளையிட்டுவிட்டு கூடாரத்துக்கு வெளியே வந்தார். நாங்கள் பின் தொடர்ந்தோம். கூடாரத்துக்கு வெளியே ஒரு வில்வ மரம் இருந்தது. பாபா அதன் இலைகளைப் பறித்தார். பறித்த ஒரு கொத்து இலையை எடுத்துக் கண்கள் மீது ஒத்திக் கொண்டார். பிறகு நடந்தார். எழுந்து உள்ளே கூடாரத்தினுள் நுழைந்தார். அங்கு மேஜை மீது பல பொருள்கள் குவியலாக வைக்கப்பட்டிருந்தன. கூழாங் கற்கள் ஒரு குவியல், தொடுக்கப்பட்ட மகிழம் பூ மாலைகள், மல்லிகைப் பூ மாலைகள், ரோஜா மாலைகள். இன்னும் ஏதேதோ பச்சிலைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் கிளிஞ்சல்கள், சங்கு மாலைகள் வைக்கப்பட்டு இருந்தன.

பாபா அந்தப் பலகை மேஜைமீது வைக்கப்பட்டிருந்த பொருள்களைக் கவனித்தபடி இருந்தார். பிறகு அவற்றை ஏதோ பிரித்து, குவியல்களாக அடுக்கி வைத்தார். அங்கு இருந்த சிஷ்ய சாமியார், பாபாவைத் திகைத்துப் பார்த்த படி இருந்தான். எங்களையும் ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தான். பாபா எங்களைக் கவனிக்கவே இல்லை. மேஜைமீது கூறுகட்டி வைக்கப்பட்டிருந்த பொருள்களையே தொட்டுத் தொட்டுப் பார்த்து வைத்துக் கொண்டிருந்தார். பிறகு என்னை நோக்கித் திரும்பினார். சிரித்தார். நான் பயத்தோடு அவரைப் பார்த்தேன்.

பாபா ஆங்கிலத்தில், 'குழந்தை! இந்த மேஜை மீது மல்லிகை மாலை, ரோஜா மாலை, மகிழம்பூ மாலை இன்னும் பல பொருள்கள் இருக்கின்றன. இந்த மேஜையை ஒரு முறை சுற்றி வந்து, உனக்குப் பிடித்த பொருளை எடுத்துக் கொள்' என்றார். யாரோ ஒரு பக்கிரி சொல்கிறபடி செய்கிறதெல்லாம் சுத்தப் பைத்தியக்காரத் தனமாகத் தோன்றியது. பேசாமல் நின்றேன். 'நீ ரொம்பப் பிடிவாதமான குழந்தை' என்றார். என் மௌனமான எதிர்ப்பை உணர்ந்து கொண்டு, அத்தான்

என்னிடம், 'பரவாயில்லை. அவர் சொன்னபடியே செய்திடுவோம் பங்கஜம். அதிலே என்ன நஷ்டம்' என்றார்.

நான் நடுக்கத்தோடு மேஜையை ஒரு முறை சுற்றி வந்தேன். எல்லாப் பொருள்களையும் பார்த்தேன். பிறகு எதேச்சையாக என் பார்வை கிளிஞ்சல்கள் அருகில் வைக்கப்பட்டிருந்த சங்கு மாலையில் விழுந்தது. சங்கு மாலையை எடுத்துக் கொடுத்தேன்.

பாபா ஒரு வினாடி என்னைப் பார்த்தபடியே இருந்தார். 'அந்த மாலையை உன் கணவனிடம் கொடு' என்றார். நான் உடனே மாலையை அத்தானிடம் கொடுத்தேன். பிறகு பாபா, அத்தானைப் பார்த்து 'அதை உன் மனைவியின் கழுத்தில் போடு' என்று உத்தரவிட்டார்.

அத்தான் மாலையை என் கழுத்தில் போட்டார். எனக்கு அப்போது ஒரு வித அமைதியும், இன்ப உணர்ச்சியும் ஏற்பட்டன. பாபா என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தார். 'அந்த மேஜையைப் பார் குழந்தை. கிளிஞ்சல் மாலைகளும், சங்கு மாலையும் பக்கத்திலே பக்கத்திலே இருக்கு. கிளிஞ்சல் மாலை சாவு—சங்கு மாலை வாழ்வு! வாழ்வும் சாவும் சேர்ந்தே இருக்கு! நீ சாவை ஒதுக்கிட்டு வாழ்வைப் பொறுக்கிட்டே. அந்தச் சங்கு மாலையை உடைச்சிடாமல் பத்திரமா வச்சிரு. அதுதான் உன் 'சிந்தூர்' உன் 'மாங்கல்யம்!' என்றார்.

அத்தான் அவரிடம் பக்தியுடன் 'ரொம்ப நன்றி' என்றார். அத்தான் முழு மனதுடன் பாபாவின் வார்த்தைகளை நம்புகிறார் என்று எனக்குப் புரிந்தது. பாபா அத்தானைப் பார்த்துச் சிரித்தபடி, 'விதியோடு வாழ்வு பின்னப்பட்டு இருக்கு. அதே போல் பெண் வாழ்வோடும் ஆண் வாழ்வும் பின்னப்பட்டிருக்கு. அந்தக் குழந்தையின் வாழ்வு உன் விதியை மாத்தப் போகுது' என்று சொல்லிவிட்டு நகர்ந்து போனார். அப்போது

www.t.me/tamilbooksworld



அத்தான் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து பாபாவிடம் காணிக்கையாகக் கொடுக்கப் போனார். 'எனக்குப் பணத்தைக் கொடுத்து, உனக்கு நான் இன்று கொடுத்த நல்லதை இழந்து விடாதே. பணத்தை வெளியே இருக்கிற பிச்சைக்காரர்களுக்குப் போடு' என்று சொல்லிவிட்டு, எங்களைத் திரும்பிப் பார்க்காமல் வெளியே சென்று விட்டார்.

நாங்கள் படகிலே 'கேட்வே ஆஃப் இந்தியா'வுக்குத் திரும்பும்போது, அத்தான் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே இருந்தார்.

நான் அவரிடம் ''யாரோ ஒரு பாபா சொன்னதுக்காக ஏன் இவ்வளவு கவலைப்படறீங்க? வேணும்னா, சீமைக்குப் போகும் திட்டத்தை ஒத்திப் போடலாம். மாமாவும் அத்தையும் நீங்க சொன்னா மறுக்கவா போறாங்க?'' என்று கேட்டேன்.

'அதில்லே பங்கஜம், இந்தப் பயணத்தில் இருந்து பயந்து ஓடி, என்ன பிரயோஜனம்? என் விதியிடம் இருந்து நான் ஓட முடியுமா? குழந்தையிலிருந்து எனக்கு அடிக்கடி ஒரு பயம் ஏற்படும். அந்தப் பயத்தில் இருந்து விடுதலை அடையத்தான் நான் இந்தச் சீமைப் படிப்பையே எடுத்துக் கிட்டேன். தனியா, முன்பின் தெரியாத ஒரு ஊரிலே வாழ்ந்தால்தான், நான் பயமில்லாத மனிதனாக வாழ முடியும்னு நினைக்கிறேன். பங்கஜம்! நான் நல்லா நீந்தக் கத்துக்காத காரணம் என்ன தெரியுமா? அடிக்கடி நான் ஒரு கனவு காண்பது உண்டு. அந்தக் கனவிலே மணல் மாரி பெய்யும். அதன் அடியில் அழுத்தப்படுவதுபோல கனவு கண்டு அலறி விழிச்சிருக்கேன். ஒவ்வொரு சமயம் நீரிலே மூழ்கி, அப்படியே நீரின் அடியில் இருக்கும் மணல் என்னை விழுங்குவதுபோல் கனவு கண்டிருக்கேன். அதனால்தான் நீரும் மணலும் எப்போதும் எனக்கு ஒரு பீதியைக் கொடுத்திருக்கு. அதே நீரையும் மணலையும் பற்றித்தான் இப்போ பாபா சொன்னார். அதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்கு'' என்று சொன்னார்.

படகில் இருந்து இறங்கினதும் அத்தான் நேரே ஒரு போட்டோ கடைக்கு என்னை அழைத்துப் போனார். அங்கு இந்த சங்கு மாலையை அணிந்து கொண்டு, என்னைப் போட்டோ எடுத்துக் கொள்ளச் சொன்னார். பிறகு இருவரும் சேர்ந்து சில போட்டோக்கள் எடுத்துக் கொண்டோம். போட்டோக் கடையில் இருந்து வெளி வந்ததும் அவர் பட்டுத் துணியாலான ஒரு பை வாங்கி, அதில் இந்தச் சங்கு மாலையைப் போட்டுக் கொடுத்தார். 'பங்கஜம்! பாபா சொன்னதுபோல் இந்தச் சங்கு மாலைதான் உன் மாங்கல்யம். என் உயிர் நிலை. இது சேதமடையாமல் உன்னிடம் இருக்கும் வரையில் எனக்கு ஒரு ஆபத்தும் வராது. அதேபோல் நீ சங்கு மாலை அணிந்திருக்கும் இந்தப் போட்டோ, என்னிடம் எப்போதும் இருக்கும். இது மற்றவர் கண்ணில் படாமல் என் இதயத்தருகே வைத்திருப்பேன். இதுதான் வெளிநாட்டில் இருக்கும் எனக்கு ஒரு ரக்ஷை மாதிரி. இந்த ரகசியம் நம்மோடு இருக்கட்டும். நம் பெற்றோர்களுக்குக் கூடத் தெரிய வேண்டாம்' என்று அத்தான் என்னிடம் சொன்னார்'' என்று பங்கஜம் சொல்லு முன்பே சிவகாமியின் கண்களில் நீர் துளித்தது.

''பங்கஜம்! இந்தச் சங்கு மாலை சேதமடையாத காரணத்தினால், ராஜன் திரும்புவான் என்று நீ நம்புகிறாயா?'' என்று கேட்டாள்.

பங்கஜம், ''அது மட்டுமில்லை அத்தை. மணலில் இருந்து எடுக்கப்பட்ட உடலில் அத்தான் கடிகாரமும், அவர் விலாசம் கொண்ட கடிதமும்தானே கிடைத்திருக்கிறது? அதைக் கொண்டுதானே, அது அத்தான் உடல் என்று கூறுகிறார்கள். சித்தய்யனிடம் அத்தான் என்ன கூறினார் என்று தெரியுமா அத்தை: 'பங்கஜத்தின் உருவப் படம் என் இதயத்தருகே என்றும் இருக்கும். அதை யாரும் பார்க்க முடியாது' என்றாராம். அத்தான் குறிப்பிட்ட உருவப்படம், இந்தச் சங்கு மாலை அணிந்த படம். அந்த உடலில் இருந்து கடிகாரமும் காகிதமும் அழிந்து



போகாமல் கிடைத்திருக்கும்போது, அந்தச் சங்கு மாலை போட்டோ மட்டும் கிடைக்காமல் போயிருக்குமா! கிடைத்த உடல், ஒன்று திருவாரூர் தியாகராஜனுடையதாக இருக்க வேண்டும். இல்லை, வேறு யாருடையதாகவோ இருக்க வேண்டும்! அத்தான்—ஒன்று ஜெர்மானியரிடம் கைதியாக இருக்க வேண்டும். இல்லையேல் டோப்ருக் போர்முனையில் இருந்து மறைந்திருக்க வேண்டும்'' என்று திட நம்பிக்கையோடு சொன்னாள். பெற்றவள் பங்கஜத்தின் நம்பிக்கையைப் பகிர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

''நீ சொல்லும் போட்டோ அவன் உடலிலிருந்து பறந்து போயிருக்கலாம். அல்லது மணலில் புதைந்து போயிருக்கலாம். அது ஒன்றை மட்டும் நம்பி, எப்படி அம்மா ராஜன் திரும்புவான் என்று சொல்கிறாய்?'' என்றாள்.

ஒரு விநாடிக்குப் பங்கஜம் பேசவில்லை. ''அது மட்டுமில்லை அத்தை. என் நம்பிக்கைக்கு வேறு ஒரு ஆதாரமும் இருக்கிறது. சித்தய்யன் சென்னை வருவதற்கு முதல் நாள் இரவு இரண்டு மணிக்கு ஒன்று நிகழ்ந்தது. அதன் காரணமாகத்தான் நான் இந்த வீட்டுக்கு வந்தேன். இந்த அறையில் சில விநாடிகள் தங்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன்'' என்றாள்.

சிவகாமி, ''என்ன நிகழ்ந்தது பங்கஜம்?'' என்று ஆவலோடு கேட்டாள்.

## 19

பங்கஜத்தின் முகம் வியர்த்தது. சற்று நடுங்கியபடி, ''அத்தை, சித்தய்யன் வரும் முதல் நாள் வரை நான் என் வாழ்க்கை ஒருவிதமாக முடிந்துவிட்ட கதையாகவே தீர்மானித்து விட்டேன். அன்றிரவு வீட்டு மாடியில் நான் டாக்டர் ராவ்ஜியின் மகள் சாவித்திரியிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் கார்

லைட்டுகளுடன் மாப்பிள்ளை அழைப்பு வந்து கொண்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட காரில் ஒரு மாப்பிள்ளை அமர்ந்து இருந்தார். அவர் பின்புறம் பெண்கள் பட்டுப் புடவை அணிந்து தட்டுக்களில் கல்கண்டு, வெற்றிலை, பாக்கு, பழம் தாங்கி வந்து கொண்டிருந்தனர். அதைப் பார்த்ததும் சாவித்திரியின் கண்களில் பொல பொல வென்று நீர் வழிந்தது. சாவித்திரிக்கு அவளுடைய கணவனை மாப்பிள்ளை அழைத்த காட்சி ஞாபகத்துக்கு வந்துவிட்டது போலும். நான் அவளைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள். இருவர் நிலையும் கிட்டத்தட்ட ஒன்றுதானே? மாப்பிள்ளை ஊர்வலம், தெரு மூலையில் மறைந்ததும் நாதஸ்வர இசை மட்டும் தொலைவில் இருந்து ஒலித்தபடி இருந்தது. நான் சாவித்திரியிடம், 'எல்லாம் தெரிந்தும் ஏன் அழுகிறாய் சாவித்திரி? நம் இரண்டு பேர் கதைதான் முடிந்து விட்டதே! இனிமேல் நாம் பழைய ஞாபகங்களைத் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்து வாழ வேண்டியதுதானே நம் விதி?' என்று சொன்னேன், பிறகு அவள் வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுத் திரும்பினாள். நானும் சாப்பிட்டுவிட்டுப் படுத்தேன்.

''படுத்தவள் அயர்ந்து தூங்கி விட்டேன். தூக்கத்தில் ஒரு விசித்திரமான கனவு கண்டேன். பம்பாய் தாஜ் மஹால் ஹோட்டல் வெளிப்புறத்தில் நின்று கொண்டு இருக்கிறேன். அத்தான் சிப்பாய் உடையில் சிரித்துக் கொண்டே வருகிறார். 'இது என்ன டிரஸ்?' என்று கேட்கிறேன். 'இது எனக்கு அழகாயிருக்கா?' என்று கேட்கிறார். 'உங்களுக்கு எது அணிந்து கொண்டாலும் நன்றாயிருக்கும்' என்று பதில் சொல்கிறேன். இருவரும் டாக்ஸியில் ஏறிச் செல்கிறோம். ரோடிலுள்ள கட்டிடங்கள் மறைகின்றன. கடற்கரையோரமாக டாக்ஸி செல்கிறது. திடீரென்று டாக்ஸி மணலில் சென்று கடலில் இறங்குகிறது. நான் பயத்தால் வீரிட்டு அலறுகிறேன். அத்தான் சிரிக்கிறார். ''என்ன பங்கஜம், நீருக்கும் மணலுக்கும்



4663165

பயப்படுகிறவன் நான். நானே [illegible] பயத்தை வென்று விட்டேன். பாபாவைச் சந்தித்த [illegible] பார் பங்கஜம், உன் கழுத்தில் பாபா கொடுத்த சங்கு மாலை இருக்கிறது. அதுதான் உன் சிந்தூர். உன் மாங்கல்யம். அது இருக்கும் வரை எனக்கு நீரிலும் நிலத்திலும் ஆபத்து இல்லை' என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார். நான் என் கழுத்திலுள்ள மாலையைப் பார்க்கிறேன். எங்கள் டாக்ஸி ஒரு நீராவிப் படகாக இருக்கிறது. அதில் நாங்கள் சிரித்தபடி உட்கார்ந்து இருக்கிறோம்.

''உடனே கனவிலிருந்து விழித்துக் கொண்டேன். வீட்டு மாடியில் படுக்கையில் படுத்திருப்பதை உணர்ந்தேன். கடியாரத்தில் மணி ஐந்தாயிருந்தது. தெரு முனையில் உள்ள ஆலயமணி ஒலித்துக் கொண்டிருந்தது. உடனே விளக்கைப் போட்டுப் பெட்டியைத் தேடினேன். பழைய துணிகளின் நடுவில் பட்டுப் பையில் இந்தச் சங்கு மாலை கிடந்தது. அந்த மாலையில் உள்ள ஒரு சங்கு கூட உடையாமல் பம்பாயில் பாபா கொடுத்த நிலையிலேயே இருந்தது அத்தை. அவர் சீமைக்குச் சென்ற பின் ஒரு நாள் கூடக் கனவில் அவரைப் பார்க்கவில்லை, துக்கச் செய்தி வந்த பின்பு அவர் நினைவாகவே இருந்த போதுகூட நான் அவரைக் கனவில் கண்டதில்லை.

''கனவு கண்ட அன்று மாலைதான் நான் வெகு நாட்களுக்குப் பின் இந்த வீட்டுக்கு வந்தேன். அத்தானின் அறையைத் திறக்கச் சொல்லி உள்ளே வந்தேன். என்றும் இல்லாத இன்பமும் அமைதியும் எனக்கு ஏற்பட்டது. அத்தை வீட்டுக்குத் திரும்பும்போது ரோடில் அத்தான் பெயர் கொண்ட கண்ணில்லாத சிறுவன் ஒருவன் புஷ்பத் தட்டை என் முன்னால் நீட்டினான். அன்றிரவே மாமா வீடு தேடி வந்து சித்தய்யன் வந்திருப்பது பற்றியும் போர் முனையில் அத்தானைப் போலவே திருவாரூர் தியாகராஜன் என்ற ஒருவன் இருப்பது பற்றியும் சொன்னார். உடனே விடிந்ததுடன் அவனைப் பார்த்து, சங்கு மாலை, போட்டோ விஷயம் பற்றி விசாரித்தேன்.

இவ்வளவு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்று நடக்க வேண்டுமானால் அதில் அர்த்தமே இல்லாமலா போய்விடும்?" என்று உணர்ச்சி ததும்பக் கூறினாள் பங்கஜம்.

சிவகாமி தன் ஆசை மகன் எப்படியாவது பிழைத்து வரவேண்டும் என்ற ஆசை பங்கஜத்தின் நம்பிக்கையில் பங்கு கொள்ளத் துடித்தது. ஆனால் முதுமையின் விளைவாக ஏற்பட்ட சந்தேகம், கனவு போன்ற மெலிந்த ஆதாரங்களைக் கொண்டு மனக்கோட்டை கட்டவும் பயந்தது. சிவகாமி எதுவும் சொல்லாமல் திகைத்திருந்தாள். சிவகாமியின் குழம்பிய முகத்தைப் பார்த்த பங்கஜத்துக்கு நம்பிக்கையும் தளர ஆரம்பித்தது. "என்ன அத்தை உங்களுக்கு நம்பிக்கையில்லையா?" என்று கெஞ்சியபடி கேட்டாள்.

பங்கஜத்தின் குரலில் தொனித்த சோகத்தை உணர்ந்த சிவகாமி, சட்டென்று சமாளித்துக் கொண்டாள். "நம்பாமல் என்ன பங்கஜம்! அதிகார பூர்வமான அறிக்கை மட்டும் என்ன உண்மையா? அதையும் நம்பித்தானே ஒப்புக் கொள்கிறோம். அன்னிக்கு நீ இந்த வீட்டை விட்டுப் புறப்படறப்போ கூடப் பூக்காரன் வந்தான். உங்கப்பா ஒரே காலா நின்று ராஜன் சீமைக்குப் போறதுக்கு முன்னாடியே கல்யாணத்தை முடிக்கணும்னாரு அந்த முகூர்த்தம் வீணாகாதுன்னார். கல்யாணம் நடந்தாத்தான் ராஜன் ஜாதகத்துலே உள்ள தோஷம் நீங்கும்னார். இவ்வளவு பேர் நம்பிக்கையும் வீணாகாது பங்கஜம் தெய்வம் மனுஷங்ககிட்டே நேரே வந்து பேச முடியுமா? இப்படி ஜாடை மாடையாத்தான் பேசும். எனக்கும் நீ சொன்னதைக் கேட்டுப் புது நம்பிக்கையே வந்துட்டுது. மறுபடியும் இந்த வீட்டுலே சந்தோஷம் தாண்டவமாடத்தான் போகுது" என்று சொன்னாள்.

மாமியாரின் நம்பிக்கை வார்த்தைகளைக் கேட்ட பங்கஜத்துக்குத் திரும்பவும் மன வலிமை ஏற்பட்டது.



சிவகாமியும் பங்கஜமும் பேசிக் கொண்டிருக்கும் போதே ராமலிங்கமும் நமச்சிவாயமும் அங்கு வந்தனர். பங்கஜத்தின் உணர்ச்சியால் சிவந்த முகத்தையும் சிவகாமியின் நம்பிக்கை நிறைந்த பார்வையையும் கவனித்தார் ராமலிங்கம். "சிவகாமி, சித்தப்பனிடம் பங்கஜம் என்னவோ போட்டோவைப் பத்திக் கேள்வி கேட்டா. அவன் பதில் சொன்னதும் அவள் முகத்திலே ஒரு நம்பிக்கை பிறந்தது. எங்களுக்கு ஒன்றுமே புரியல்லே" என்றார்.

"எனக்கு எல்லாம் புரியும்படியா பங்கஜம் சொன்னாள். எனக்கும் ஓரளவு நம்பிக்கை வருது. ராஜன் திரும்பி விடுவான்னு தோணுது" என்றாள்.

ஆனால் ராமலிங்கம் எதையும் அத்தாட்சியில்லாமல் ஒப்புக் கொள்ளக் கூடாது என்று சிந்திக்கப் பழகியவர் அல்லவா? "எதற்கும் திருவாரூர் தியாகராஜனின் உறவினர்களுக்கு என்ன செய்தி வந்திருக்கிறது என்று விசாரிப்போம். போர் முனை அறிக்கைப்படி தியாகராஜன் என்ன ஆனான் என்று தெரிய வேண்டும். அவன் சைன்னியத்தில் உயிரோடு பணியாற்றுவதாகத் தெரிந்தால், நமது நம்பிக்கைக்கு அர்த்தம் இல்லை" என்று சொன்னார்.

ஆசையின் போதை நமது நம்பிக்கைக்குப் பலம் கொடுக்கிறது. அம்மாதிரியான நம்பிக்கையில் இருந்த பங்கஜத்துக்கு ராமலிங்கத்தின் பேச்சு கசப்பாக இருந்தது. ராமலிங்கம் உடனே போன் மூலம் சென்னை அரசாங்க மேலிடத்தில் தியாகராஜன் பற்றி விசாரித்தார். சென்னை அரசாங்கம் டில்லியில் உள்ள டிபன்ஸ் மந்திரி சபையை விசாரித்து, டிபன்ஸ் மந்திரி சபை லண்டனுக்கு விசாரணையை அனுப்பியது. தியாகராஜனைப் பற்றிய அதிகாரப்பூர்வமான தகவல் கிடைக்க ஒரு வாரமாவது ஆகும் என்று தீர்மானிக்கப்பட்டது. பங்கஜம் என்னவோ



www.t.me/tamilbooksworld

...ந்த விசாரணை பற்றியும் அக்கறை செலுத்தவில்லை. அவளைப் பொறுத்தவரையில் நம்பிக்கையோடு இருந்தாள். அதேபோல் நமச்சிவாயமும் திட நம்பிக்கையோடு இருந்தார்.

பங்கஜத்தின் வாழ்க்கையில் திடீரென்று ஏற்பட்ட புதுத் திருப்பம், பங்கஜத்தின் சிநேகிதி சாவித்திரியின் மனநிலையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியது. இது நாள் வரை, இருவரும் ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருந்தனர். சாவித்திரி சிறு வயதிலிருந்தே அவளுடைய தந்தையின் தியாக நிழலில் வளர்ந்தவள். கொள்கை, கட்டுப்பாடு, தியாகம் முதலிய பண்புகள்தான் மனிதத் தன்மையின் அடிப்படை என்று போதிக்கப்பட்டு வந்தவள். அவள் தந்தை ராவ்ஜி தொழிலில் வெற்றி அடையாத போதிலும், அவர் மற்றவர்கள் போல் அல்ல. ஒரு தியாகி என்று மக்கள் போற்றினர். ஊரில் பெரிய நிலப்பிரபுவான நமச்சிவாயமே தந்தையிடம் மரியாதை செலுத்துவது அவளுக்குப் பெருமையாக இருந்தது. தந்தை ராவ்ஜி சொல்லிக் கொடுத்த விஷயங்களை அவள் குறுக்கு விசாரணையே செய்யாமல் ஏற்றுக் கொண்டாள். சாவித்திரியின் கணவன் அநியாயமாகப் போலீஸ் லாக்கப்பில் இறந்த தினத்தன்றுதான் அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. பங்கஜத்தின் அன்பு, நமச்சிவாயத்தின் தோழமை—துக்கத்தின் சுமையைக் குறைத்தது. தனக்கு நேர்ந்த கதி பங்கஜத்துக்கும் ஏற்படவே தன் துக்கத்தை மறந்து பங்கஜத்துக்கு ஆறுதலாக இருப்பதையே தன் கடமையாக நினைத்தாள்.

ஆனால் பொன்மங்கலம் விட்டுச் சென்னை வந்ததும் சாவித்திரி அறியாமலே அவள் மனத்தில் அதிருப்தி லேசாகத் தோன்றியது. தன் தந்தையின் லட்சியங்கள் சரியானவைதானா என்று முதல் முறையாகக் கேள்வி கேட்க ஆரம்பித்தாள். நல்லவர்களாக இருப்பவர்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும். தொடர்ந்து துக்கப்பட வேண்டும். பண்பு, நேர்மை இவற்றிலெல்லாம் அக்கறை இல்லாத



வர்கள் ஏன் இன்பமாக, சிறப்பாக வாழ வேண்டும் என்ற கேள்வி திரும்பத் திரும்ப அவள் மனத்தில் தோன்றியது. இந்தக் கேள்விகள் தோன்றவும் இதுவரை பிரகாசமான லட்சிய புருஷராக விளங்கிய தந்தை, ஒரு சாதாரண வாழத்தெரியாத தோல்வி மனிதராகக் காட்சி அளித்தார். ஆனால் பல வருஷங்களாகப் பழகிய பண்பாடு வேலியை தகர்த்து விடுமா? சாவித்திரி தந்தை காட்டிய பாதையிலேயே சென்று கொண்டிருந்தாள். நடு நடுவே கேள்விகள் மட்டும் எழுந்து கொண்டிருந்தன.

இந்தச் சூழ்நிலையில் சாவித்திரிக்கு ஒரு புதிய உண்மை புலனாகியது. அவள் ஒன்று நினைக்கும்போது அவள் உடல் ஒன்று நினைக்க முடியும் என்பதை அறிந்தாள். கணவன் இறந்த பின்பும் அவனோடு இன்பமாக இருந்த சில இரவுகளின் நினைவுகள் மடியாமல் இருந்தன. விவரம் தெரியாத கனவுகள்—விழித்தெழுந்து நினைத்துப் பார்த்ததும் வெட்கப்படும்படியான கனவுகளாக இருந்தன. நாம் இம்மாதிரி கனவுகளை ஏன் காண்கிறோம் என்று நினைத்துக் கூச்சப்பட்டாள். ஆனால் அவளுக்கு ஒரு திருப்தி! அம்மாதிரிக் கனவுகளிலும் தோன்றி அவளோடு மகிழ்ந்தவர் அவள் கணவர்தானே? ஒரு நாள் அவள் தந்தையோடு தாம்பரத்திலுள்ள நண்பர் வீட்டுக்குப் போய்விட்டு மின்சார வண்டியில் திரும்பும் போது ஒரே கூட்டம், இடிபாடு, நெருக்கடி! அவளும் தந்தையும் நின்று கொண்டே வரும்படி ஆயிற்று. அவள் பின்புறம் நின்றிருந்த மாணவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். பிறகு அவன் உஷ்ணமான மூச்சு கழுத்தின் பின்புறத்தில் படர்ந்தபோது அவள் உடல் சிலிர்த்தது. மின்சார வண்டியின் ஆட்டத்தில் அவள் பின்னால் தள்ளப்பட்டாள். அப்போது அந்த மாணவனின் கைகள் அவளைத் தாங்கிப் பிடிப்பதுபோல் அவளுடைய இடுப்பைச் சுற்றி வளைத்தன. சாவித்திரியின் தலை சுழன்றது. அன்று இரவு அவள் கனவில் தோன்றியது அவள் கணவனல்ல; அந்த மாணவன். கனவு உலகத்தில்

www.t.me/tamilbooksworld

அவள் கூச்சப்படவில்லை. பண்பு, ஒழுக்கம் என்ற தடுப்பு உணர்ச்சிகள் அவளுக்குத் தோன்றவில்லை. மிகவும் நெருங்கிப் பழகினாள்.

கனவுலகத்தில் சாவித்திரி காட்டிய ஆர்வம், நனவு உலகத்தில் சாவித்திரியையே திகைக்கச் செய்தது. விழித்து எழுந்ததும் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரண்டு அடித்தது. அவள் உடல் வியர்த்து இருந்தது. அருகில் பங்கஜம் தூங்கிக் கொண்டிருந்தாள். சாவித்திரிக்குப் பங்கஜத்தைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. சப்தம் இல்லாமல் எழுந்து சென்று குளித்துவிட்டு வந்து படுத்தாள். கனவின் நினைவு திரும்பத் திரும்ப வந்தது. கனவில் எப்படி அவ்வளவு ஆர்வத்தோடு தம் உடல் இயங்கியது என்று அவளுக்குப் புரியவில்லை. 'என்னையும் அறியாமல் என் உடலும் மனமும் இயங்க முடியுமா?' என்று நினைந்து ஆச்சரியப்பட்டாள்.

பங்கஜம் வீடு திரும்பியதும் சாவித்திரியிடம் எல்லா விவரங்களையும் கூறி, தன் நம்பிக்கையைத் தெரிவித்தாள். சாவித்திரி மகிழ்ச்சி அடைந்தாள். அதே சமயத்தில் அவள் மனத்தின் அடித்தளத்தில் வேறு ஒரு புது உணர்ச்சி தோன்றியது. 'பங்கஜத்தின் கணவன் திரும்பலாம். அவள் மறுபடியும் வாழலாம். ஆனால் நான்? என் வாழ்வு?' என்று நினைக்கும்போது, அவளுக்கு வெறுப்புத்தான் ஏற்பட்டது. பங்கஜம் ஒவ்வொரு நாளும் கணவனைப் பற்றி எதிர்பார்த்துப் பேசும்போது, சாவித்திரியின் மனத்தில் பொறாமை வளரத் தொடங்கியது. தன் மனத்தில் தோன்றிய உணர்ச்சி தவறு என்று சாவித்திரிக்குத் தெரியும். ஆனால் அவளால் அந்த உணர்ச்சியைக் கட்டுப் படுத்த முடியாமல் தவித்தாள். சாவித்திரியின் தந்தை ராவ்ஜிக்கு திருவாரூரில் சில நண்பர்கள் இருந்தனர். அவர்கள் மூலமாகத் தியாகராஜனின் சகோதரி சென்னையில் இருக்கும் விலாசம் கிடைத்தது. டாக்டர் ராவ்ஜியும் ராமலிங்கமும் சகோதரியின் வீட்டுக்குச் சென்று விசாரித்தனர்.



சகோதரி, "எனக்குப் போர் முனையில் இருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஆனால் வழக்கம் போல் எனக்கு அரசாங்கத்தார் பணம் கொடுத்து வருகிறார்கள்" என்று சொன்னாள்.

இந்தச் செய்தி ராமலிங்கத்துக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. 'அரசாங்கத்தார் தியாகராஜனின் சகோதரிக்கு எந்தச் செய்தியும் அனுப்பவில்லை என்றால் அவன் உயிரோடு சௌக்கியத்தில் இருக்கிறான். டோப்ருக்கில் கிடைத்த உடல் ராஜனுடையதாக இருக்க வேண்டும் என்ற முடிவுதானே தெளிவாகிறது' என்று நினைத்தார் ராமலிங்கம்.

இந்தச் செய்தியை வீட்டுக்கு வந்து பங்கஜத்திடம் வருத்தத்தோடு ராவ்ஜி தெரிவித்தார். பங்கஜம் ஒரு விநாடிக்குள் குழம்பிப் போய்விட்டாள். அதைக் கவனித்த சாவித்திரிக்கு ஒரு விதமான திருப்தி ஏற்பட்டது. ஆனால் ராவ்ஜி இன்னும் லண்டனில் இருந்து பதில் வரவில்லை, அது வந்தவுடன் தான் தியாகராஜனைப் பற்றி உறுதியான தகவல் கிடைக்கும் என்று பங்கஜத்தைத் தேற்றும் நோக்கத்தோடு சொன்னார்.

அருகில் நின்ற சாவித்திரி பட்டென்று பதில் சொன்னாள். "என்னப்பா குழந்தை மாதிரி பேசறீங்க? தியாகராஜன் போர்முனையில் இறந்திருந்தா அவன் சகோதரிக்கு அரசாங்கம் தகவல் கொடுக்காமல் இருப்பார்களா? நீங்க வீணாக ஏம்பா சுத்தி வளைச்சுப் பேசறீங்க?" என்றாள்.

சாவித்திரியின் குரலிலிருந்த ஆத்திரம் பங்கஜத்தைத் திகைக்க வைத்தது. திருவாரூர் தியாகராஜன் உயிரோடு இருப்பதில் சாவித்திரிக்கு ஏன் இவ்வளவு மகிழ்ச்சி என்று எண்ணினாள் பங்கஜம். அதேசமயத்தில் அவன் இறந்து விட்டான் என்று தெரிந்து கொள்ள எனக்கு ஏன் அக்கறை என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

## 20

பங்கஜத்தின் நம்பிக்கை ஆதாரமற்றது என்று ஜாடையாகவும் பேச்சிலும் சாவித்திரி கூறிய இரண்டு நாட்கள் கழித்து லண்டனிலிருந்து டில்லி சர்க்காருக்கு வந்த கடிதத்தின் நகல் ராமலிங்கத்துக்குக் கிடைத்தது.

அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

''தியாகராஜன் வேலை செய்த 13வது பட்டாலியன் பூராவுமே நூறு பேர் தவிர டோப்ருக் கடற்கரையிலிருந்து திரும்பி வரவில்லை. போர் முடிந்து திரும்பாத நபர்களின் ஜாபிதாவில் திருவாரூர் தியாகராஜன் பெயரும் இருக்கிறது. இறந்தவர் ஜாபிதாவிலும் அவர் பெயர் இல்லை. எதிரி ரேடியோக்கள் அறிவித்த சிறை பிடிக்கப்பட்டவர் ஜாபிதாவிலும் அவர் பெயர் இல்லை. காணாமல் போன நபர்களில் அவரைச் சேர்க்க வேண்டியிருக்கிறது.''

பங்கஜத்துக்கு ஒன்றும் புரியவில்லை. போர் முனையில் இருந்து தியாகராஜன் காணாமல் போய் விட்டான் என்று அரசாங்கம் அவன் சகோதரிக்கு அறிவிக்காமல் இருந்தது. ராணுவத்தின் வேலை நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட தவறாகத்தான் இருக்க வேண்டும் என்று ராமலிங்கம் முடிவு கட்டினார். தியாகராஜன் உடலையே ராஜன் உடல் என்று முடிவு கட்டி அவசரமாக அறிவித்து விட்ட ராணுவம், தியாகராஜனைப் பற்றி விசாரணை எழுந்தும் அவன் காணவில்லை என்று தன் தவற்றை மறைக்க சௌகரியமாக பதில் சொல்லியிருக்கலாம் அல்லவா? இந்தச் சந்தேகம் பங்கஜத்துக்கு எழுந்தது. ராஜன் தியாகராஜன் இருவருமே விரிந்த பொருள் கொண்ட 'மிஸ்ஸிங் பர்சன்ஸ்' (காணாமல் போனவர்) பட்டியலைச் சேர்ந்தவர்கள் என்று நிர்ணயிக்க வேண்டிய முடிவுக்கு வரவேண்டும் என்று பங்கஜம் சொன்னாள்.

ஆனால் சாவித்திரியோ, ''பங்கஜம், இந்த

www.t.me/tamilbooksworld



விஷயத்தில் இவ்வளவு தூரம் குழப்பத்துடன் சிந்தனை செய்யத் தேவையே இல்லை'' என்று சொன்னாள். ''ஒரே மாதிரி உருவம் படைத்தவர் இருவரும் ஒரே சைன்யத்திலிருந்து ஒரே நாள் எப்படி மறைந்திருப்பார்கள்? அப்படி மறைந்து இருந்தாலும் அவர்கள் எதிர்த் துருப்புக்களால் சிறைபிடிக்கப் படாமல் எங்கு இருந்து கொண்டிருக்க முடியும்? சகாரா பாலைவனத்தில் இருவரும் சேர்ந்து திரிந்து கொண்டு இருக்கிறார்களா? உன் அத்தான் ராஜன் தன் கடமையை மறந்து கோழைபோல் ஓடக்கூடியவரா? ஓரிரண்டு நாட்களுக்கு எங்காவது மறைந்திருந்தாலும் நெருக்கடி தீர்ந்த உடனே தலைமைக் கேந்திரத்துக்கு ரிப்போர்ட் செய்து கொள்ளாமல் இருப்பாரா? நம் ஆசை நம் மனத்தைக் குழப்புகிறது, பங்கஜம்'' என்று மனத்தில் தோன்றியதை அழுத்தமாகக் கூறினாள்.

சாவித்திரியின் ஒவ்வொரு வார்த்தையும் கடப்பாரையால் பங்கஜத்தின் மனத்தில் இருந்த நம்பிக்கையைத் தகர்ப்பதுபோல் இருந்தது. ஒரு விநாடி, 'நாம் அவர் உயிரோடு இருக்கிறார் என்று வீணாக மனப்பால் குடிக்கிறோமோ?' என்று கூட நினைத்தாள். ஆனால் அவள் மனத்தில் உள்ள ஏதோ ஒரு சக்தி, அவள் நினைப்பது சரி என்று கூறிக் கொண்டிருந்தது. அது அறிவின் குரல் அல்ல; வெறும் மூட நம்பிக்கையின் குரலும் அல்ல, கண்ணுக்குப் புலப்படாத, அறிவால் விளக்க முடியாத ஒரு குரல், ஆன்மாவின் குரல் என்று சொல்லலாம். ஆனால் பங்கஜத்தின் நம்பிக்கை ராமலிங்கத்துக்கு இல்லை. அவர் சாவித்திரி சொன்னதுபோல்தான் நினைத்தார்.

''ஒரு கனவு, பாபாவின் பேச்சு, ஒரு சங்கு மாலை இவற்றின் பலத்தைக் கொண்டு அதிகார பூர்வமான அறிக்கைகள் கடிதங்களுக்கு எதிராக எப்படி நம்புவது என்று நினைக்கிறீர்கள் அல்லவா மாமா? என் நம்பிக்கை வீண் நம்பிக்கை என்றுதானே நினைக்கிறீர்கள்?'' என்று பங்கஜம் கேட்டதும் ராமலிங்கத்தால் ஒன்றும் பதில்

சொல்ல முடியவில்லை. தலையைத் தொங்க விட்டபடி இருந்தார்.

"பங்கஜம், இது விஞ்ஞான யுகம். ஒரு காரியத்துக்கு ஒரு காரணம் வேண்டும். எதையும் நம்புமுன் அதைச் சோதித்து நம்ப வேண்டும் என்று நினைக்கும் காலம். நளாயினி தன் கணவனுக்காகச் சூரியனைத் தடுத்து நிறுத்தினாள் என்பதையோ, சாவித்திரி யமனோடு போராடிக் கணவனை மீட்டாள் என்பதையோ விஞ்ஞான அறிவாராய்ச்சிப்படி நம்ப முடியாது. ஆனால் அறிவு ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது இல்லாமல் இல்லை. உன் நம்பிக்கை பலிக்கட்டும்" என்று கூறிவிட்டுப் போனார்.

ராமலிங்கம் மட்டுமல்ல, பங்கஜத்தின் தாயே அவள் நம்பிக்கையில் பங்கு கொள்ளவில்லை. சிநேகிதி சாவித்திரியிடம் இது விஷயமாகப் பேசினால், அவள் ஆதரவு கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்டாள். நெருங்கிய உறவினர்கள் சுற்றி இருந்தாலும் தான் தன்னுடைய நம்பிக்கையோடு தனிமையில் வாழ வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள் பங்கஜம். தந்தை நமச்சிவாயம் ஒருவர்தான் பங்கஜத்துக்கு மறு வாழ்வு அமைய முடியும் என்று நம்பினவர். அவர் நம்பிக்கை சோதிடத்திலிருந்து பிறந்தது.

நாட்கள் செல்லச் செல்ல எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை. சாவித்திரியும் இப்போது அடிக்கடி வருவதில்லை. நடுப்பகல் வேளையில் பொழுதுபோக்க வருவாள். பிறகு போய் விடுவாள். பங்கஜத்துக்குத் தனிமையே வேதனையாக இருந்தது.

சிந்திக்கச் சிந்திக்க அவளுக்கு ஒன்று தெளிவாயிற்று. நல்ல செல்வம் நிறைந்த வீட்டில் அவளுக்குப் பிறப்பு கொடுக்கப்பட்டது. இட்ட கட்டளையை நிறைவேற்ற ஆட்களின் சேவை கொடுக்கப்பட்டது. விரும்பிய நகைகள் புடவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. உள்ளமும் உடலும் விரும்பிய கணவனும் கொடுக்கப்பட்டான்,



இம்மாதிரி நிறைவான வாழ்க்கை சில வருடங்களுக்குக் கிடைத்து இருந்தது. இவற்றையெல்லாம் அடைய அவள் யாருக்கு என்ன கொடுத்தாள்? அந்தக் கேள்வியைப் பங்கஜம் தன்னைக் கேட்டுக் கொண்டாலும், அவளால் பதில் சொல்ல முடியவில்லை. செல்வம், சுகம், அந்தஸ்து இவையெல்லாம் அவள் பிறப்புரிமையாகத்தான் நினைந்து வந்தாள். டோப்ருக்கிலிருந்து ராஜன் மறைந்தான் என்ற சவுக்கடி வரும்வரையில் அவளுக்கு ஆழ்ந்து சிந்திக்கத் தேவையே ஏற்படவில்லையே! விலை கொடுக்காமல் பெற்றுக்கொண்ட பொருளை மறுபடியும் இழந்து விட்டவள்போல் இருந்தாள். வாழ்க்கை எடுப்பதற்கு மட்டுமல்ல, அதில் கொடுப்பதற்கும் தேவை உண்டு என்பதை இன்று உணர்ந்தாள். இன்பமாக இருப்பதற்கு ஒரே வழி மற்றவர்களை இன்பப்படுத்துவது என்று எங்கோ புத்தகத்தில் படித்த வாக்கியத்துக்கு இன்று அர்த்தம் விளங்கியது.

மாமா ராமலிங்கத்தின் உதவி கொண்டு சென்னையில் உள்ள விதவைகள் விடுதிக்குச் சென்று அவர்களுக்கான உதவிகள் செய்து தன்னை மறக்க முயன்றாள். சாவித்திரியும் கூடச் செல்வாள். அதேபோல் ஐரோப்பிய அமெரிக்க சிப்பாய்களில் காயம்பட்டு ஆஸ்பத்திரியில் வந்திருப்பவர்களுக்கு, பொழுது போக்குக்கு என செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டாள். 'பெரிய இடத்து சமூக சேவகி' என்ற பட்டம் பங்கஜத்தை வந்து அடைந்தாலும், அவள் மனத்தில் உருவாகிக் கொண்டு வந்த ஒரு தியாக அமைப்பு மற்றவர்களுக்குப் புரியாதபடி இருந்தது.

கைகால் இழந்து கிடக்கும் சிப்பாய்களைப் பார்க்கும் போது எல்லாம், அவளுக்கு ராஜன் நினைவுதான் வரும். சிப்பாய்களைப் பார்க்கும்போது அவளுக்கு [illegible] பெரிய சோதனைகளில், இடுக்கண்களின் நடுவே மாட்டிக் கொண்டிருக்கும் சகோதர ஜீவன்களாகவே காட்சி அளித்தனர். விதவைகள் விடுதியில் சென்று பழகியபோது

ஒவ்வொருவர் வாழ்விலும் புதைந்து கிடந்த சோகக் கதை, அவள் துக்கத்தின் உருவத்தையும் பரிமாணத்தையும் குறைத்துக் காட்டியது. பூவும் பொட்டும் இழப்பதே துயரம். அதிலும் கொடிய துயரம் ஆதரவில்லாத நடுத் தெருவில் எறியப்பட்ட விதவையின் நிலை என்பதை அறிந்தாள். பள்ளியில் படித்ததைவிட வாழ்வில் இப்போது அவள் படித்தது பயங்கரமாக இருந்தது. பணத்தாலும், துணியாலும், அன்பாலும் சேவையாலும் ஒவ்வொரு விதவைச் சகோதரியின் மனத்திலும் மகிழ்ச்சியை உண்டு பண்ணினாள். ஒரு லோபி பணத்தை வெறியோடு சேர்ப்பதுபோல், மற்றவர்களின் மகிழ்ச்சியைச் சேகரித்து, அதை எண்ணிப் பார்த்து மகிழ்ந்தாள். ஒவ்வொரு மாதமும் ஐயாயிரம் ஆறாயிரம் என்று பணத்தைச் செலவழித்தாள். தினமும் பங்கஜம் வீடு திரும்பும்போது இரவு மணி பத்து அல்லது பன்னிரண்டாகும்.

இம்மாதிரி ஒரு பெண் வெளியே சென்று நேரம் கெட்ட நேரத்தில் திரும்புவதும், எதற்கு என்று சொல்லாமல் செலவழிப்பதும் நமச்சிவாயத்துக்குப் புரியாத புதிராக இருந்தது. அவருக்கு அவளை இது பற்றி விசாரிக்க துணிவில்லை. வெளிப் பார்வையில் அவள் நடவடிக்கைகள் பேச்சுக்கிடம் கொடுத்தாலும் பங்கஜத்தின் உயர்ந்த பண்பு பற்றி அவருக்குச் சந்தேகம் இல்லை.

ஃ ஃ ஃ

மாதங்கள் வருஷங்களாகி மறைந்தன. அமெரிக்கத் துருப்புக்கள் ஐரோப்பாவில் நுழைந்துவிட்டன. ஹிட்லரின் சாம்ராஜ்யம் சுருங்கிக் கொண்டு வந்தது. ரஷ்யாவில் இருந்து ஜெர்மானியப் படைகள் பின் வாங்கிக் கொண்டு வரும் செய்தி வந்த வண்ணம் இருந்தது. ராஜன் பங்கு கொண்ட ஆப்பிரிக்கப் படையெடுப்பு பழைய கதையாகி விட்டது.

எந்த வேலை இருந்தாலும் ரேடியோவில் செய்தி

www.t.me/tamilbooksworld



களைக் கேட்க மட்டும் பங்கஜம் தவறுவதில்லை. பெர்லின் நகரம் விழுந்த செய்தி ரேடியோவில் வந்தது. ஐரோப்பியப் போர் முடிந்து விட்டதாகவே கருதப்பட்டது. ஜப்பானியர் மட்டும் தூரக் கிழக்கு நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்தனர். இந்த நிலையில் இந்திய தேசிய ராணுவத்தின் வீரச் செயல்கள் பற்றி மறைமுகமாகத் தகவல்கள் வந்தபடி இருந்தன.

ஜெர்மன் பாதுகாப்பில் இருந்த இந்தியப் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் ஜாபிதா ரேடியோவில் பிரசுரிக்கப்படும் என்ற அறிவிப்பு வந்ததும் பங்கஜம் ஆவலோடு பெயர்களைக் கேட்கத் துடித்தாள். ஒருவேளை இந்தக் கைதிகள் ஜாபிதாவில் தன் கணவன் பெயர் இருக்குமோ என்ற தவிப்புதான். விதவை விடுதிக்குப் போவதையும் நிறுத்தி, தலை சீவாமல் குளிக்காமல் ரேடியோவின் அருகே உட்கார்ந்திருந்தாள். பல இந்தியர்களின் பெயர்கள் வந்தன. ஆனால் ராஜன் பெயர் வரவில்லை. அடுத்த நாள் திருத்தப்பட்ட விடுபட்டு இருந்த பெயர்கள் அறிவிக்கப்பட்டன. அதிலும் ராஜன் பெயர் இல்லை. ஒவ்வொரு முறையும் ரேடியோ செய்தி கேட்டபோது செத்துப் பிழைத்துக் கொண்டு இருந்தாள்.

ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டு ஜப்பானியரைச் சரணாகதிக்குக் கொண்டு வந்தது. கிழக்கு ஆசியப் போரில் கைதான இந்தியர்களின் பெயர்கள் தினமும் அறிவிக்கப்பட்டன. ராஜன் சைன்யம் போரிட்டது ஆப்பிரிக்காவில். கிழக்கு ஆசியப் போர்க் கைதிகளின் பட்டியலில் ராஜன் பெயர் இருக்க நியாயம் இல்லை. இருந்த போதிலும் ஆசை பங்கஜத்தை அந்தச் செய்திகளையும் கேட்கத் தூண்டியது. ஒரு வேளை ரேடியோவில் கேட்கும் பெயரைக் கவனியாமல் விட்டிருப்போமோ என்று மறுநாள் பேப்பரைப் படிப்பாள். இவ்வாறு ஒரு பைத்தியம் போல் யுத்த செய்திகளைத் தொடர்ந்தபடி இருந்தாள், போர் முடியும் வரையில். போர் முடிந்தால் நல்ல செய்தி

கிடைக்கும் என்ற நம்பிக்கை. போரோ முடிந்து விட்டது. எந்த மூலையில் இருந்தும் எவ்விதச் செய்தியும் கிடைக்கவில்லை. பங்கஜத்தின் நம்பிக்கை ஊசலாடியது. தான் கண்ட கனவு, மற்ற அறிகுறிகள் எல்லாம் வெறும் பிரமை தானோ? நாம் என்றுமே ராஜனைப் பிரிந்து இருக்க வேண்டியவள்தானா? அதை எண்ண அவளுக்கு வெளி உலகத்தைப் பார்க்கவே கண்கள் கூசின.

வெளியே செல்வதை விட்டுவிட்டாள். தன் அறையின் ஜன்னல்களை மூடிவிட்டு ரேடியோவின் அருகே உட்கார்ந்து கொள்வாள். பரட்டைத் தலையுடன், மாசு படிந்த ஆடையுடன், ஒவ்வொரு செய்தி ஒலிபரப்புக்கும் காத்துக் கிடந்தாள். இதைப் பார்த்த சாவித்திரிக்கு, பங்கஜத்திடம் பச்சாதாபமும், கோபமும் ஏற்பட்டன.

''பங்கஜம், நீ உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். நடக்காத ஒன்று நிகழப் போகிறதென்று நம்பி வாழாதே. நீ இப்படியே இருந்தால் உனக்குப் பைத்தியம் பிடித்து விடும். நீ எவ்வளவு துடித்தாலும் ராஜன் வரப் போவது இல்லை'' என்று சொன்னாள்.

பங்கஜம் பேய்போல் பாய்ந்து சாவித்திரியின் முகத்தில் அறைந்தாள். ''அதை மட்டும் சொல்லாதே சாவித்திரி. அவர் நிச்சயமாக வரப் போகிறார். ஒரு நாள் வரப் போகிறார். நான் காயாத மரமாக இருக்க வேண்டும் என்று நீ ஆசைப்படுகிறாய். அது நடக்கப் போவதில்லை'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

அதே சமயம் டியூன் செய்யப்பட்டிருந்த ரேடியோவில் இருந்து திடீரென்று ஓர் அறிக்கை வந்தது.

''சில மணி நேரங்களுக்கு முன் வந்த தகவலின்படி ஆப்பிரிக்கப் போர் முனையிலிருந்து காணாமல் போன திருவாரூர் தியாகராஜன் மடியவில்லை என்று தெரிகிறது. அவர் டோப்ருக் கடற்கரையிலிருந்து இத்தாலிய நீர் மூழ்கிக் கப்பல் வழி தப்பி ஜப்பானியரின் சைன்யத்தில் சேர்ந்து விட்டதாகவும் தெரிகிறது. ஜப்பானியப் படையில்



இருந்தபடி மலேயாவில் போர் புரிந்தவர் எங்கு மறைந்தார் என்றும் தெரியவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது. தன் கடமையைத் துறந்து ஓடியவர் என்ற நிலையில், அவருடைய குடும்பத்தாருக்கு அரசாங்கம் இதுவரை அளித்து வந்த சலுகைகள் நிறுத்தப்படும்'' என்று கூறி அறிவிப்பு முடிந்தது.

'ஆப்பிரிக்கக் கடற்கரையிலிருந்து திருவாரூர் தியாக ராஜன் தப்பி விட்டான் என்ற செய்தியைத் தெரிந்து கொள்ளவா இதுநாள் வரை ரேடியோ அருகே தவம் இருந்தேன்!'' என்று நினைத்தபடி பங்கஜம் மயங்கி விழுந்தாள்.

அதே சமயத்தில் ராமலிங்கத்தின் வீட்டுக்குள் ஒரு ராணுவ ஜீப் வந்து நுழைந்தது. அதில் சித்தப்பன் அமர்ந்து இருந்தான். அவன் முகம் புன்னகை நிறைந்து காணப்பட்டது. ஏதோ நல்ல செய்தி கொண்டு வருபவன் முகம்போல் இருந்தது. தன்னை வாழ்த்தி அனுப்பிய பங்கஜத்துக்கு முக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியுடன் ராமலிங்கம் பங்களாவில் நுழைந்தான். அவனுக்குப் பங்கஜம் ராமலிங்கம் வீட்டில் இல்லை என்பது தெரியாது. அவள் இப்போது இதுவரை ஓடிக் கொண்டு இருந்த நம்பிக்கையும் இழந்து மூர்ச்சையாகி இருக்கிறாள் என்பதும் தெரியாது!

## 21

ரேடியோப் பெட்டியருகிலிருந்து மயங்கி விழுந்த அவளுக்குத் தண்ணீர் தெளித்து விழிப்படையச் செய்தாள் சாவித்திரி.

விழித்தெழுந்த பங்கஜத்துக்கு ஏன் விழித்தோம் என்று இருந்தது. எவ்வளவோ நாட்கள், அசையாமல் உறுதியோடு இருந்தவளுக்கு நம்பிக்கை மறைய ஆரம்பித்தது. போர் முடிந்து போர்க் கைதிகள் விடுதலை

ஆகும் நிலையில் தன் கணவனைப் பற்றிய தகவல் கிடைக்கும், அவர் வீடு வந்து சேருவார் என்று நம்பி இருந்தாள். அந்த நம்பிக்கையின் அஸ்திவாரமே இன்று தகர்ந்து விட்டது. எந்தவிதச் சுவையுமில்லா சூனியமாகத் தோன்றியது உலகம். சாவித்திரியிடம் பேசக்கூட ஆசை எழவில்லை அவளுக்கு.

சாவித்திரிக்கு இனம் புரியாத ஒரு திருப்தி ஏற்பட்டது. 'இனி பங்கஜம் புரிந்து கொள்வாள், அவள் நிலையும் என் நிலையும் ஒன்றுதான் என்பதை. இனிமேலும் தன் எதிர் காலத்தைப் பற்றித் தவறான கனவுகள் காணமாட்டாள். ஒரு கனவையும், சங்கு மாலையையும் நம்பி, இனி ஆகாயக் கோட்டைகள் கட்ட மாட்டாள்' என்று நினைத்து சாவித்திரி ஒரு திருப்தி அடைந்தாள். அந்தத் திருப்தி ஒருவித அரக்கத் தன்மை படைத்தது என்று அவளுக்கு நன்கு தெரியும். 'பங்கஜத்தின் சந்தோஷமே என் சந்தோஷம் என்று நினைக்காமல், அவள் மனம் உடைந்து நிற்பதைக் கண்டு திருப்தி படுகிறோமே' என்று சாவித்திரியின் மனத்தின் ஒரு பகுதி அவளையே நிந்தித்து இருந்த போதிலும் அவள் மனத்தில் அடிப்படை உணர்ச்சி பொறாமை உணர்ச்சியாகவே இருந்தது. அதை அவளால் கட்டுப்படுத்தவோ மாற்றவோ முடியவில்லை.

கடந்த சில மாதங்களாகவே சாவித்திரிக்கு அவள் மனம் புரியாத அவள் இதுவரை புகாத-ஒரு பயங்கரக் குகையாக இருந்தது. அந்தக் குகையில் நெளியும் பொறாமை, கொதித்து எழுந்து அடங்கும் காமம், புகை விட்டபடி இருந்து வந்த கோபம் இவை வசித்து வந்தன. அவள் தந்தை ராஜிக்கே அவளுடைய சமீப காலப் போக்கு புரியாமல் இருந்தது. இவ்வளவு வேறுபட்ட உணர்ச்சிகளுக்கு இடையே இழைபோல் பங்கஜத்திடம் ஒரு நட்பு உணர்ச்சியும் ஓடியபடி இருந்தது.

சாவித்திரி பங்கஜத்திடம், "நாம் நினைப்பதெல்லாம்



நடப்பதில்லை. இனியாவது கனவுலகத்திலிருந்து நனவு உலகத்துக்கு வந்துவிடு. உண்மையை உணர்ந்து அதை ஒப்புக் கொண்டு நீ வாழப் பழக வேண்டும்" என்றாள்.

பங்கஜம் திரும்பிச் சாவித்திரியைப் பார்த்தாள். அவளுக்குச் சாவித்திரியின் உள்ளக் கிடக்கையில் உள்ள திருப்தி புரிந்து விட்டது. அதைப் புரிந்து கொண்டதும் பங்கஜத்துக்கு ஆத்திரம் வந்தது. "இந்த வார்த்தைகளைச் சொல்லத்தானே இதுநாள் வரை காத்திருந்தாய் சாவித்திரி! நான் நம்பிக்கைப் பாதையின் கண்ணற்ற முடிவுக்கு எப்போது வருவேன் என்று காத்திருந்தாய் அல்லவா? இப்போது திருப்திதானே?" என்று தன் மனத்திலுள்ள கசப்பைக் கொட்டிவிட்டு மாடி பால்கனியில் உள்ள நாற்காலியில் போய் அமர்ந்தாள். அவள் நெஞ்சம் ஏமாற்றத்தால் துடித்தது. கண்கள் பால்கனி கம்பி ஓரத்தி வழியே சாலையை நோக்கின.

சாலையில் ஒரு கறுப்புக் கார் வந்து நின்றது. அதில் இருந்து ராமலிங்கமும், சித்தய்யனும் இறங்கினர். நமச்சிவாயம் அவர்களை அழைத்தபடி வீட்டுக்குள் நுழைந்தார். பங்கஜத்துக்குத் திக்கென்று இருந்தது. எழுந்து வீட்டின் கீழ்ப் பகுதிக்கு ஓட வேண்டும்போல் இருந்தது. ஆனால் கால் எழவில்லை. சித்தய்யன் என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிந்து கொள்ள ஆவல் எழவில்லை. துக்கம் விசாரிக்கத்தான் அவன் வந்திருக்க வேண்டும். அல்லது மரியாதைக்காகப் பார்த்துவிட்டுப் போக வந்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது நல்ல செய்தியோடு வந்து இருப்பானோ என்று கூட மனம் ஒரு வினாடிக்கு நினைத்தது. மறு வினாடியே அந்த ஆசையை மனத்திலிருந்து தீர்மானத்தோடு அழித்தாள். திரும்பத் திரும்ப எதிர்பார்த்து ஏமாறக் கூடாது என்று நினைத்தாள்.

மாடிப்படிக்கட்டு வழியே ஆள் ஏறி வரும் பூட்ஸ் சத்தம் கேட்டது. சித்தய்யன்தான் வருகிறான் என்பதில் சந்தேகம் இல்லை. கணவனை இழந்து நிற்கும் அவளுக்குச்

www.t.me/tamilbooksworld

சித்தய்யனிடம் சம்பிரதாயமான வார்த்தைகள் பேச விருப்பமில்லை. மாமனார் ராமலிங்கத்தைப் பார்க்கவும் அவளுக்குக் கசப்பாக இருந்தது. கோபமாக இருந்தாலும் சாவித்திரி சொல்வதில் உண்மை இருந்தது. வீண் நம்பிக்கை கூடாதுதான். அது ஜுரம்போல, மறைந்ததும் உள்ளத்தில் அசதிதான் மிஞ்சுகிறது.

மாடி ஹாலில் ராமலிங்கத்தின் குரல் கேட்டது. 'பங்கஜம் பால்கனியில் இருக்கிறாள்' என்று சாவித்திரி சொல்வதும் கேட்டது. பால்கனியிலிருந்து தரையைப் பார்த்தாள் பங்கஜம். இவர்களைச் சந்தித்துப் பேசுவதை விட மாடியிலிருந்து தரையில் குதித்து விடலாமா என்று கூட நினைத்தாள்.

டக் டக் என்று பூட்ஸ் சத்தம் பால்கனியின் மொஸைக் தரைமீது ஒலித்தது. சிரித்தபடி சித்தய்யன் நின்று கொண்டிருந்தான். அவன் அருகில் ராமலிங்கமும், அவன் தந்தை நமச்சிவாயமும் நின்று கொண்டு இருந்தனர். அவளையும் அறியாமல் அவள் பண்பும், மரியாதையும் தலை தூக்கியது. பங்கஜம் நாற்காலியை விட்டு எழுந்தாள். அவள் உதடுகள், ''உட்காருங்க'' என்று உபசார வார்த்தைகளால் உபசரித்தன.

சித்தய்யன் ராமலிங்கத்தைப் பார்த்தார். ராமலிங்கம் சித்தய்யனைப் பார்த்து, ''சொல்லுப்பா'' என்றார்.

எதைச் சொல்லப் போகிறானோ என்ற அச்சம் பங்கஜத்தைப் பிடித்துக் கொண்டது. அவள் நடுக்கத்தோடு சித்தய்யனைப் பார்த்தபடி நின்றாள்.

சித்தய்யன் கனைத்துக் கொண்டான். ''நான் கிழக்குப் போர்முனைக்குச் செல்லும் போது என்னை வாழ்த்தி அனுப்பினீர்கள். அந்த வாழ்த்துதான் உண்மையிலேயே என்னை முக்கியமான நெருக்கடியிலிருந்தும் ஆபத்துக்களில் இருந்தும் காப்பாற்றியது என்று நினைக்கிறேன்'' என்ற பீடிகையோடு சித்தய்யன் பேச ஆரம்பித்தான்.



பங்கஜத்தால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. ''ஐயா, நம்பிக்கை என்ற இழையில் என் வாழ்வு ஊசலாடிக் கொண்டிருந்தது. அது இப்போது அறுந்து விட்டது. என்னோடு விளையாடாதீர்கள். என்னிடம் எதுவும் சொல்ல வேண்டாம். முதலிலே எந்தவித நம்பிக்கையில்லாமல் இருந்தேன். உங்களைப் பார்த்த பிறகு மறுபடியும் நம்பிக்கை வந்தது. ஒவ்வொரு நிமிடமும் அந்த நம்பிக்கையில் வாழ்ந்தேன். திரும்பவும் ஒரு சூறாவளி வந்து எல்லாம் சூனியமாய்ப் போய்விட்டது. பெற்றுப் பெற்றுக் குழந்தையைச் சாகக் கொடுத்த பெண்ணுக்குக் கர்ப்பம் என்கிற செய்தி சந்தோஷத்தையா கொடுக்கும்? உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். நீங்கள் எந்தச் செய்தியையும் என் காதிலே போடவேண்டாம். என் மனசை ஓர் உண்மையை ஒப்புக்கொண்டு வாழ இப்போதுதான் பழக்கி இருக்கிறேன். திரும்பவும் என் மனசைக் குழப்பாதீங்க'' என்று சொல்லி விட்டு, மாடி ஹாலை நோக்கிச் சென்றாள்.

சித்தய்யன் இந்த வரவேற்பைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவன் வருகை பங்கஜத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று நம்பித்தான் ராமலிங்கம் அவனை நேராக நமச்சிவாயத்தின் வீட்டுக்கு அழைத்து வந்தார். சித்தய்யனைப் பார்த்ததும் அவள் படபடவென்று பேசுவாள் என்று எப்படி நினைப்பது? சித்தய்யன் ஏமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டான். ''அம்மா, உங்கள் மனநிலை எனக்கு நன்றாகப் புரிகிறது. போர் முனையில் போராடும் சிப்பாய், டாங்கி, பீரங்கி குண்டுகளைத்தான் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவற்றைக் கூடச் சாமர்த்தியத்தால் சமாளிக்கலாம். ஆனால் வீட்டில் போர் வீரனுக்காகக் காத்திருக்கும் மனைவி, அவளுடைய சிந்தனைகளோடு போராட வேண்டியிருக்கிறது.

நம்பிக்கை, ஏமாற்றம் என்ற இருண்ட நிலைகளுக்குள் மாறி மாறி இயங்க வேண்டி இருக்கிறது. அது பெரிய சித்திரவதைதான். உங்கள் வேதனைக்கெல்லாம் முடிவு வந்து விட்டது என்று சொல்லிப் போகத்தான் வந்தேன். ராஜன் உயிரோடு இருக்கிறான். இன்னும் மூன்று நாட்களில் கப்பலில் பம்பாய்த் துறைமுகத்தில் வந்து இறங்கப் போகிறான்'' என்று சொல்லி முடித்தான்.

பங்கஜம் சித்தய்யனையே விறைத்துப் பார்த்தபடி இருந்தாள். அவள் மனத்தில் உள்ள சந்தேகம் சன்னமான குரலில் வார்த்தைகளாக வெளி எழுந்தது. ''இப்பத்தானே ரேடியோவில் திருவாரூர் தியாகராஜன் போர் முனையில் இருந்து தப்பி எதிரிகள் சார்பில் சேர்ந்து எங்கோ மறைந்து விட்டதாகக் கூறினார்கள். டோப்ருக் கடற்கரையில் கிடைத்த உடல் திருவாரூர் தியாகராஜனது அல்ல என்றால்?'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''போர் முனையில் வினாடிக்கு வினாடி வாழ்வுப் பிரச்னை தீர்மானிக்கப் படுகிறது. அம்மாதிரிக் குழப்ப நிலையில் சில செய்திகளை நிச்சயமாக நம்ப முடியாது. திருவாரூர் தியாகராஜன் டோப்ருக்கில் மடியவில்லை என்றால் ராஜன் மடிந்திருக்க வேண்டும் என்று நிச்சயமில்லை. உடலில் கிடைத்த வாட்ச்சும், கடிதமும்தான் சாட்சி. அவை எப்படி அந்த உடல்மீது வந்தன என்று எனக்குப் புரியவில்லை. இந்தத் தந்தியைப் பாருங்கள்'' என்று ஒரு தந்தியைக் கொடுத்தான்.

''ராஜன் 13ஆம் தேதி வெள்ளிக்கிழமைக் கப்பலில் பம்பாய் வருகிறான். அவனைச் சந்திக்க ஏற்பாடு செய்யவும். நானும் உடன் வருகிறேன்—வின்சென்ட்'' என்று அதில் எழுதி இருந்தது. தந்தி அனுப்பப்பட்ட தேதி 4. 'சித்தய்யன் கொழும்பு' என்ற விலாசத்துக்கு அடிக்கப்பட்டிருந்தது. தந்தி கொழும்பில் கிடைத்தது



ஏழாம் தேதியன்று. உடனே சீட் கிடைக்கவில்லை. ஆகையால் 10ஆம் தேதி விமானத்தில் சித்தய்யன் புறப்பட்டு வந்திருக்கிறான். பங்கஜம் தந்தியை அப்படியே பார்த்தபடி இருந்தாள். ''இந்த வின்சென்ட் என்பவர் யார்? ராஜனை நன்றாக அடையாளம் தெரிந்தவரா?'' என்று சந்தேகத்தோடு கேட்டாள்.

''வின்சென்ட், ராஜன் வேலை செய்த ரெஜிமெண்டில் காப்டனாக இருந்தவர். ராஜனின் நெருக்கமான நண்பர். அடையாளத்தில் அவர் தவறு செய்திருக்க மாட்டார்'' என்று சித்தய்யன் பங்கஜத்தின் மனத்தில் ஏற்பட்ட சந்தேகத்தை விளக்குவது போல் பதிலளித்தான்.

''ராஜனை அழைத்து வரும் காப்டன் வின்சென்ட், உங்கள் கொழும்பு விலாசத்துக்கு மட்டும் தந்தி அனுப்பி விட்டு, பெற்றவர் ராமலிங்கத்துக்கு எந்தத் செய்தியையும் அனுப்பவில்லையே? அது ஆச்சரியமாக இல்லையா?'' என்று பங்கஜம் கேட்டாள்.

உண்மையிலேயே சித்தய்யனால் உடனே அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. ''வின்சென்டுக்கு என் கொழும்பு முகவரி தெரியும். மிஸ்டர் ராமலிங்கத்தின் விலாசம் தெரிய நியாயமில்லை'' என்றான்.

''வின்சென்ட்டுக்கு என் முகவரி தெரியத் தேவை இல்லை. ஆனால் ராஜனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?'' என்று கேட்டார் ராமலிங்கம்.

இந்தக் கேள்வியை ராமலிங்கம் கேட்டதும் சித்தய்யன் ஒப்புக் கொண்டான். ''ஆமாம். ராஜனே தந்தி அடித்து இருக்கலாமே? அவன் ஏன் பேசாமல் இருந்து விட்டான். ஒரு வேளை வின்சென்ட் முதலில் என்னை மட்டும் ராஜனோடு சந்திக்க விரும்புகிறாரோ?''

www.t.me/tamilbooksworld

என்று சந்தேகத்தோடு இழுத்தான்.

''எதுவும் பம்பாய் போனால் தெரிகிறது. இன்று தேதி பத்து. கப்பல் 13ஆம் தேதி வருகிறது'' என்றார் நமச்சிவாயம்.

## 22

ராஜன் சீமை சென்றதிலிருந்து ஏதாவது ஒரு சிக்கல், அதிர்ச்சி! அவன் திரும்பி வரப் போகிறான் என்ற செய்தி கூடப் பூராவும் சந்தோஷம் தரும் செய்தியாக இல்லை, அதிலும் ஏதோ ஒன்று தொக்கி நின்றது. ''வீட்டுக்கு வருகிறேன்'' என்று ராஜன் தந்தி அடிக்கவில்லை. வின்சென்ட் என்ற ஒருவர் சிலோனில் உள்ள சித்தப்பனுக்குத் தந்தி அடித்திருக்கிறார். சில சந்தேகங்களோடு நற்செய்தியாக அதை எடுத்துக் கொண்டாள் பங்கஜம். அடுத்த வினாடி அவளே வேறு விதமாக நினைத்தாள். 'திடீர் திடீர் என்று சந்தோஷம் அதிர்ச்சி என்ற மாறுபட்ட உணர்ச்சி நிலைகளுக்குத் தள்ளப்பட்ட காரணத்தினால் நம் மனம் எந்த நல்ல செய்தியையும் சந்தேகத்தோடு எடுத்துக் கொள்கிறது போலும்' என்று நினைத்தாள்.

குடும்பத்தோடு பம்பாய் செல்லத் தீர்மானித்த ராவ்ஜி சாவித்திரிகூடத் தன்னுடன் வரவேண்டுமென்று வற்புறுத்தினார். சாவித்திரியின் மனத்தில் வேறுபட்ட கருத்துக்களும் உணர்ச்சிகளும் இருந்தபோதிலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. பம்பாய்க்குச் செல்ல ஒப்புக் கொண்டாள். ராஜன் திரும்பப் போகிறான் என்பதைச் சாவித்திரி பூராவும் நம்பவில்லை. 'ஒரு வேளை பம்பாய் சென்றபின் ஏதாவது புதுத் தகவல்



உதயமாகி மறுபடியும் விஷயம் பழைய நிலைக்கு வந்து விட்டால்? அப்படித்தானே இதுநாள் வரை பங்கஜத்தின் விஷயத்தில் நடந்து வந்திருக்கிறது?'' என்று நினைத்தாள். பம்பாயில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்ற மனப்பான்மையோடுதான் புறப்பட்டாள்.

ராஜனின் தாய் சிவகாமிகூட குழப்பத்தோடுதான் புறப்பட்டாள். எந்தவிதச் சந்தேகமும் இல்லாமல் நம்பிக்கையோடு பம்பாய் மெயிலில் ஏறியவர் நமச்சிவாயம் ஒருவர்தான். நமச்சிவாயம் ஜோஸியரிடம் வைத்திருந்த நம்பிக்கை பலித்துவிட்டது. ''ஜோஸியர் சொன்னது பொய்யாகாது. போன மாதம்கூடச் சென்னை வந்த போது பங்கஜத்தின் ஜாதகத்தை அவனிடம் காட்டினேன். பங்கஜத்தின் மாங்கல்ய ஸ்தானத்தின் மீது சுபகிரஹ திருஷ்டி இருக்கு. அவளைக் கல்யாணம் கட்டிக்கிட்டவன் நூறு வயசு [illegible] மரணப்படுக்கையிலே இருந்தாலும், அவனைக் [illegible] வாழ வச்சுடும். கவலைப்படாதீங்க. உயர்ந்த அந்தஸ்துள்ள புத்திரனுக்குப் பங்கஜம் தாயாகணும்னு அவள் ஜாதகம் பேசறப்போ, எப்படி அவள் கணவன் திரும்பாமல் இருக்க முடியும்னு சொன்னான். ஜோஸியன் சொன்னதுதான் நடக்குது'' என்றார்.

பன்னிரண்டாம் தேதி மாலை பம்பாய் வந்ததும், பெரிய ஹோட்டலில் அறைகள் எடுத்துக்கொண்டனர். சிவகாமியும் பங்கஜமும் மகாலட்சுமி கோவிலுக்குச் சென்றனர்.

ராமலிங்கம் துறைமுகம் சென்று கப்பல் திட்டப்படி சரியான நேரத்துக்கு வருகிறதா என்று கேட்டு வந்தார். கப்பல் குறித்த காலத்துக்கு வருகிறது என்று தெரிந்ததும் பொழுது விடிவதற்கு முன்பே எழுந்து குளித்துவிட்டுப் புறப்பட்டுத் துறைமுகம் சென்றனர்.

கப்பல் ஏற்கனவே துறைமுகத்தில் வந்திருந்தது. ராமலிங்கம் குடும்பத்தினர் துறைமுகத்தில் காத்திருந்தனர். சித்தய்யன் மட்டும் கப்பலை நோக்கிச் சென்றான். ஓர் அதிகாரியின் அனுமதியின்பேரில் கப்பலுக்குள் வழியே ஏறிச் சென்றான்.

சித்தய்யன் கப்பலின் மேல் தளத்தில் காணப்பட்டான். அவன் அருகில் முன் மயிர் நரைத்த, சிவந்த மேனி உள்ள ஒருவர் நின்று பேசிக் கொண்டிருந்தார். அவர் ராணுவ உடையுடன் காணப்பட்டார். அவருக்குச் சுமார் நாற்பத்தைந்து வயது இருக்கும். நரைத்த தலைமயிருக்கு நேர் விரோதமாக அவர் மீசை கறுத்து இருந்தது. அவர் பார்வை சட்டென்று துறைமுகப் பக்கம் திரும்பியது. கூட்டமாக ஆணும் பெண்ணுமாக நின்று கொண்டிருந்த தென்னிந்தியக் குடும்பத்தைப் பார்த்தார். அவரும் சித்தய்யனும் சற்று நேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். பிறகு இருவரும் கப்பல் ஏணி வழியே இறங்கி வந்தனர். பங்கஜம் தன் கணவன் ராஜன் ஏன் இறங்கி வரவில்லை என்று ஆச்சரியப்பட்டாள். அதே ஆச்சரியக் குறி சிவகாமியின் முகத்திலும் தெரிந்தது. பங்கஜம் சித்தய்யன் முகத்தைப் பார்த்தாள். அதில் குழப்பம் இருப்பது தெரிந்தது. சந்தோஷத்துக்குப் பதிலாக, விசனம் தாண்டவமாடும் முகமாகத் தெரிந்தது. பங்கஜத்தின் நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொண்டது. எவ்வளவு நாட்களாகக் காத்திருந்தாள்! கணவனைத் திரும்பச் சந்திக்கும் இந்த வினாடிக்காகக் காத்திருந்தவள் அல்லவா? அந்த வினாடி வந்த பின்பும் மனம் திக் திக் கென்று பயப்படுகிறதே! சித்தய்யனும், நரைத்த தலைக்காரரும் நெருங்கி வந்தனர்.

சித்தய்யன், ராமலிங்கம் முதலாகத் தொடங்கி ஒவ்வொரு நபராக வின்சென்டுக்கு அறிமுகம் செய்வித்தான். விஷயத்தைச் சொல்லாமல் இந்த அறிமுகம்

www.t.me/tamilbooksworld



செய்யும் சடங்கு யாருக்கு இப்போது தேவை என்று வேதனையோடு நினைத்தபடி பங்கஜம் நின்றாள். நமச்சிவாயத்தை ராஜனின் மாமனார் என்று சித்தய்யன் அறிமுகம் செய்தபோது நமச்சிவாயம் இரு கரம் சேர்த்து, "வணக்கம்" என்று தெரிவித்தார்.

அவர் அருகில் சாவித்திரி நின்று கொண்டிருந்தாள். வின்சென்ட் நமச்சிவாயத்தின் அறிமுகம் முடிந்ததும், அவராகவே சாவித்திரியைப் பார்த்து, "நீங்கள்தான் பங்கஜமா?" என்று கேட்டார்.

உடனே ராமலிங்கம், "இல்லை. அது சாவித்திரி, பங்கஜத்தின் சிநேகிதி. இதுதான் பங்கஜம்" பங்கஜத்தைக் காட்டினார்.

உடனே வின்சென்ட் புன்முறுவல் செய்தபடி, "அப்படியா? ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லிவிட்டு பங்கஜத்தின் குணத்தையோ, மன வலிமையையோ எடை போடுபவர் போல் பங்கஜத்தைப் பார்த்தார்.

பங்கஜம் ஆவலோடு அவர் என்ன சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்தபடி நின்றாள். வின்சென்ட் தரையைப் பார்த்தார். ராமலிங்கத்தின் உதடுகள் பங்கஜத்தின் மனத்தில் இருந்த கேள்வியை உச்சரித்தன. "ராஜன் கப்பலில்தானே இருக்கிறான்? அவன் ஏன் உங்களுடன் வரவில்லை?"

அதற்கும் வின்சென்ட் பதில் சொல்லவில்லை. சித்தய்யனைப் பார்த்தார். பிறகு ஒருவாறு முடித்தபடி, "கப்பலில்தான் இருக்கிறான். ஆனால்" என்று கூறிவிட்டு நிறுத்தினார்.

'ஆனால்' என்ற வார்த்தையைக் கேட்டதுமே பங்கஜம் தன்னையும் மறந்துவிட்டாள். படபடப்புடன்,

"அவர் உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்று கேட்டாள்.

வின்செண்ட் பங்கஜத்தின் விரிந்த கண்களையும், துடிக்கும் உதடுகளையும் பார்த்தார். திறந்த வெளியான துறைமுகத்தையும் அங்கு நடமாடிய கூட்டத்தையும் பார்த்துவிட்டுத் தயக்கத்தோடு நின்றார்.

"விஷயம் இன்னதுதான்னு ஒரே மூச்சில் சொல்லுங்களேன். ஏன் தயங்கித் தயங்கி நிக்கிறீங்க?" தன் உணர்ச்சியெல்லாம் கொட்டியபடி கேட்டு விட்டாள் சிவகாமி.

வின்செண்ட் சிவகாமியின் முகத்தைப் பார்த்ததும் புரிந்து கொண்டு, "நீங்க ராஜனின் தாயல்லவா? மன்னிச்சுடுங்கம்மா. எவ்வளவோ விஷயங்கள் நான் சொல்ல வேண்டி இருக்கு. எனக்குங்கூடப் புரியாதது எவ்வளவோ இருக்கு. இப்படித் திறந்த இடத்திலே எல்லாம் பேச முடியுமா? அதனாலே நீங்க அவசரப்படாமல் பொறுமையா இருங்க. நான் முதல்லே போய் ராஜனை கூட்டிட்டு வர்றேன். நீங்க யாரும் ஓடி வந்து கூச்சல் போட்டு, உங்க அன்பைக் காட்டாதீங்க. நான் காரணமாத்தான் சொல்றேன். ராஜனே உங்களோடு பேசினால் பேசுங்க! இவ்வளவு நாள் பொறுத்தவங்க இன்னும் கொஞ்சம் பொறுக்கக் கூடாதா?" என்று சொல்லிவிட்டுச் சித்தய்யனை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் கப்பலை நோக்கி.

வின்செண்ட் கூறிப்போன எச்சரிக்கையின் பொருள் யாருக்கும் விளங்கவில்லை. ராஜனின் உயிருக்கோ உடலுக்கோ ஆபத்தில்லை என்று தெளிவாகிவிட்டது. அந்தத் திருப்தியோடு காத்திருந்தனர். சில நிமிடங்களில் சித்தய்யனும் வின்செண்ட்டும் கப்பல் ஏணி வழியே இறங்க ஆரம்பித்தனர். அவர்களைப் பின் தொடர்ந்து ஒருவன் பேண்ட் சூட் தொப்பி அணிந்து வந்தான். அவன் பாதி



ஏணியில் இறங்கும் போதே தொப்பியை எடுத்துக் கைக்குட்டையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டான். தூரத்தில் நின்று கொண்டிருக்கும் பங்கஜத்துக்குக் கணவன் முகம் நன்றாகத் தெரிந்தது. கறுத்த கேசம் சுருண்டு நெற்றியின் ஓரத்தில் கிடந்தது. கன்னம் சற்று உப்பி இருந்தது உடலில் சதை சற்றுக் கூடுதலாயிருந்தது. பால் வழிவது போன்று வெளுத்து இருந்த முகம் பாலவனப் பிரதேசத்து வெய்யில் காரணமாகச் சற்றுக் குழம்பிக் குங்குமம் போல் சிவந்திருந்தது. அவன் பார்வை அடிவானத்தில் எதையோ தேடுவதுபோல் இருந்தது.

'அவர் கண்கள் யாரைத் தேடுகின்றன? என்னையா அல்லது அவரை ஈன்றெடுத்த உத்தமியையா?' என்று தன்னைக் கேள்வி கேட்டுக் கொண்டபடி பங்கஜம் நின்றாள்.

ராஜன் துடுக்கான நடையோடு நடந்து வந்தான். அவன் முன்னே ஐந்தடி தூரத்தில் வின்செண்ட்டும் சித்தய்யனும் வந்தனர். இருவரும் ராமலிங்கம் நிற்கும் இடத்துக்கு அருகில் வந்து ஒன்றும் பேசாமல் நின்றனர். ராஜனும் வந்து நின்றான். ராஜன் கண்கள் எதிரே நிற்கும் கட்டிடத்தைப் பரிசீலித்தன. பின்னர் சாவித்திரி, நமச்சிவாயம், ராமலிங்கம், பங்கஜம் இவ்வாறு ஒவ்வொருவர் முகமாகப் பார்த்தன. சட்டென்று ராஜன் கண்களை மூடிக் கொண்டு மறுபடியும் திறந்தான். இம்முறை அவன் கண்கள் சிவகாமியின் முகத்தில் நின்றது. தாயுள்ளம், 'மகனே ராஜன்!' என்று ஓடிப்போய் அவனைக் கட்டி அணைக்கத் துடித்தது. ஆனால் வின்செண்ட் கொடுத்திருந்த எச்சரிக்கை சிவகாமியைத் தடுத்தது. அவள் கண்களில் நீர் நிறைந்தது. பங்கஜம் தன்னைத் திரும்பிப் பார்க்கவில்லையே என்று கலங்கி நின்றாள்.

அடுத்தபடியாக ராஜன் கூறியது எல்லோரையும்

www.t.me/tamilbooksworld

திகைக்க வைத்தது. ''என்ன மிஸ்டர் வின்செண்ட், இங்கே ஏன் நிக்கிறீங்க? வாங்க போகலாம்'' என்றான்.

## 23

ராஜன் தன் தந்தையும், தாயும் மனைவியும் நிற்கும் இடத்தருகே வந்து நின்ற பின்பு யாரையும் அடையாளம் புரிந்து கொள்ளாமல், ''வாங்க போகலாம்'' என்று வின்செண்டிடம் சொல்லிவிட்டு அங்கு இருந்து நகர்ந்ததும், சிவகாமியின் உயிரே போனதுபோல் ஆகி விட்டது. ராமலிங்கம் முகம் சிவந்து காணப்பட்டார். எந்த முகத்தின் இனிய புன்னகைக்காகப் பங்கஜம் காத்து இருந்தாளோ அதே முகம் அவனை, யாரோ தெரியாத ஒரு நபர்போல் நடத்தவும் பங்கஜத்துக்கு உள்ளம் வெடித்து விடும் போல் இருந்தது... 'எவ்வளவு நாள் காத்திருந்தோம்! எத்தனை சோதனைகளைத் தாங்கிக் காத்திருந்தோம்? முடிவில் இந்த வேதனைதானா மிச்சம்? மழை விட்டும் இன்னும் தூறல் விடாது போலிருக்கிறதே!' என்று நினைத்தாள்.

ராஜனோடு சென்ற வின்செண்ட் பின்புறமாகத் திரும்பி, கண் ஜாடையால், ''பொறுமையாகப் பின் தொடருங்கள்'' என்று அறிவித்தார். வேறு வழியின்றி ராமலிங்கமும், மற்றவர்களும் பின் தொடர்ந்தனர். ராஜனும் சித்தய்யனும் வின்செண்ட்டும் ஒரு டாக்ஸி முன்பு நின்றனர். டாக்ஸியில் ஏறப்போகு முன்பு ராஜன் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். அவன் பார்வை சில விநாடிகளுக்குப் பங்கஜத்தின் மீது நின்றது. பிறகு தன் நெற்றியை விரல்களால் தடவியபடி டாக்ஸியில் ஏறினான்.

''யாரோ பெற்ற பிள்ளை மாதிரி திரும்பிப் பாராமல்



போகிறானே'' என்று அழுதபடி தன் கணவனிடம் சொன்னாள் சிவகாமி. ''பிள்ளை உயிரோடு இருக்கானே அதற்குச் சந்தோஷப்படு'' என்று சிவகாமியிடம் கூறிவிட்டு அடுத்தாற் போல் காத்திருந்த வண்டியில் ஏறிக் கொண்டார்.

ராஜன் ஏறிய வண்டியைப் பின் தொடர்ந்து ராமலிங்கம் ஏறிய வண்டி. பம்பாயில் ஃபோர்ட் என்ற பகுதியில் உள்ள ஓர் ஓட்டல் முன் ராஜன் ஏறி வந்த டாக்ஸி நின்றது. அதிலிருந்து வின்செண்ட்டும், சித்தய்யனும் இறங்கினர். ராஜன் அடுத்தபடியாக இறங்கிப் பின் தொடர்ந்தான். ராமலிங்கம் ஏறிய வண்டி ஓட்டல் போர்டிகோவில் நின்றது. போர்டிகோவிலிருந்து பார்க்கும் போது ஓட்டலின் உட்புறம் நன்றாகத் தெரிந்தது. அங்கு வரவேற்புக் கவுண்டர் முன் நின்று கொண்டிருந்தார் வின்செண்ட். அவருக்கு அருகில் நின்றிருந்த ராஜன் அந்த வரவேற்பு ஹாலைப் பூராவும் பார்த்தபடி இருந்தான்.

சில விநாடிகளுக்குப் பின் சித்தய்யனும் ராஜனும் பெட்டிகளைத் தூக்கியபடி படிக்கட்டில் ஏற ஆரம்பித்தனர். அப்போது ராஜன் மறுபடியும் திரும்பிப் பார்த்தான். காரின் ஜன்னல்புறம் முகத்தை நீட்டியபடி உட்கார்ந்திருந்த பங்கஜத்தின் மீது அவன் பார்வை விழுந்தது. சில விநாடிகளுக்குத் தயங்கியபடி படிக்கட்டில் நின்றான். பிறகு தன் நெற்றியை விரல்களால் தேய்த்துக் கொண்டான். பிறகு மறுபடியும் ஏறிச் சென்றான். சில நிமிடங்கள் சென்ற பின்பு சித்தய்யனும், வின்செண்ட்டும் படிக்கட்டுகளில் இறங்கி வந்தனர். ராமலிங்கத்தையும், பங்கஜத்தையும் அழைத்துக்கொண்டு ஓட்டல் ஹாலுக்குள் சென்றனர். சிவகாமியும், நமச்சிவாயமும் வேதனையோடு காரிலேயே இருந்தனர்.

''என்ன அவருக்கு? எங்க யாரையுமே அவர்

www.t.me/tamilbooksworld

அடையாளமே கண்டு கொள்ளவில்லையே" என்று கேட்டாள் பங்கஜம்.

வின்சென்ட் பெருமூச்சு விட்டார். "அதுதாம்மா பெரிய வேதனையா இருக்கு. இப்போ கூட அவன், 'நான் ராஜனில்லே. நான் யார்?' என்று கேட்கிறான். 'எனக்கே நான் யாருன்னு தெரியல்லே' என்று சொல்றான்! எந்த வித ஞாபகமும் அவனுக்கு இல்லை. பழைய விஷயங்களைப் பத்திப் பேசினால் ஆத்திரப்படறான். கழுத்தை நெறிக்க வருகிறான். சித்தப்பனைப் பார்த்தப்போ அவன் அடையாளம் தெரிஞ்சுக்கல்லே" என்று சொல்லி நிறுத்தினார்.

"நீங்க ராஜனை எங்கே சந்திச்சீங்க? அவன் எப்படி இருந்தான்? டோப்ருக் போர் முடிஞ்சி சில வருஷங்கள் ஆகுது. அது வரையிலும் அவன் கெய்ரோவிலே தான் இருந்தானா? அவ்வளவு நாளும் அவனுக்கு ஞாபகமில்லையா?" என்று ராமலிங்கம் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்.

வின்சென்ட் சில விநாடிகளுக்குச் சிந்தித்தபடி இருந்தார். பிறகு அவர் மெதுவாக வார்த்தைகளைத் தேடிப் பேச ஆரம்பித்தார். "மிஸ்டர் ராமலிங்கம், ஆப்ரிக்கப் போர் முனைக்கு வந்ததிலிருந்து எனக்கு ராஜனைத் தெரியும். அதே போல திருவாரூர் தியாகராஜனையும் தெரியும். ராஜன் நேர்மை, பண்பாடு, இவற்றுக்கு இலக்கணம். ஆனால் திருவாரூர் தியாகராஜனோ எதைச் செய்தாவது வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று நினைப்பவன். பலமுறை ராணுவக் கட்டுப்பாடுகளை மீறியவன். ராஜனும் தியாகராஜனும் உருவத்தில் ஒத்திருந்தது சைனியத்திலுள்ள எல்லோருக்குமே ஆச்சரியத்தைக் கொடுத்தது. இருவருக்குமிடையே உள்ள நட்பும் ஆச்சரியமானது.

திருவாரூர் தியாகராஜனிடம் நெருங்கிப் பழக



வேண்டாமென்று உங்கள் மகன் ராஜனிடம் எச்சரிக்க விரும்பினேன். யுத்தக் களத்திலுள்ள மேலதிகாரி என்ற நிலையில் நான், நேரடியாக ஒரு சிப்பாயைப் பற்றி மற்றொரு சிப்பாயிடம் கேவலமாகப் பேசுவது முறையல்ல என்று நினைத்துப் பேசாமல் இருந்தேன். போர்க் களத்தில் ஒரு சமயம் புது உடைகள் கொடுக்கப்பட்ட போது ராஜனின் கையெழுத்தைப் போட்டு ராஜனின் உடைகளைத் தியாகராஜனே வாங்கிச் சென்றதாகக் கேள்விப்பட்டேன். தியாகராஜனை இது விஷயமாகக் கண்டித்த போது அவன் குற்றத்தை மறுத்து விட்டான். ஆனால் ராணுவ மெஸ்ஸில் சாப்பிடும் போது தியாகராஜன் தன் குற்றத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டதாகக் கேள்விப்பட்டேன்.

'நான் ராஜனைப் போலவே இருக்கிறேன். ராஜனைப் போல கையெழுத்திடுகிறேன். ராஜன், அவன் மனைவி, தந்தை சொத்து பற்றிய விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டு விட்டேன். போர் முடிந்து நான் மட்டும் ஊர் திரும்பினால் ராஜன் பெற்றோர் என்னை ராஜன் என்று தான் ஏற்றுக் கொள்வார்கள்?' என்று சொன்னானாம்.

இம்மாதிரி பேசும் ஒருவனை நண்பன் என்று எப்படி ஏற்றுக் கொண்டாய் என்று உங்கள் மகன் ராஜனைக் கேட்டேன். அதற்கு ராஜன் சொன்ன பதில் எனக்கு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் விளையாட்டுக்கு அப்படிப் பேசுகிறான். அவன் என்னிடமே இரண்டு மூன்று முறை அப்படிப் பேசியிருக்கிறான். கெட்ட எண்ணத்தோடு அப்படிச் சொல்லவில்லை' என்று பதில் சொன்னான். போர் முனையிலிருந்து ராஜன் திரும்பவில்லை என்ற செய்தி கேள்விப்பட்டதும் அன்று இரவே போர்க் களத்தைச் சோதனையிடச் செய்தேன். உடல் கிடைக்கவில்லை. தியாகராஜனும் திரும்பி வரவில்லை. இருவரும் ஒரே சமயத்தில் காணாமல் போனது எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஆனால் நாளடைவில் ராஜன்

உடல் கிடைத்து விட்ட செய்தி கிடைத்தது. பணத்தாசைக்காகப் போரில் ராஜன் சேரத் தேவையில்லை. ஆகையால் போர்க்களத்தில் இருந்து ராஜன் மறையவும் தேவையில்லை. மறைந்தது தியாகராஜனாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

ஆகையால் நான் போர் முடிந்து கெய்ரோவில் தங்கிய போது ஆஸ்பத்திரியில் ஒருவர்—என் பட்டாளத்தைச் சேர்ந்தவர்—இருக்கிறார் என்ற செய்தியை ஆர்டர்லி கொண்டு வந்ததும் உடனே சென்று பார்த்தேன். அங்கு படுக்கையில் ராஜன் போல் ஒருவன் இருந்தான். ஓடி மறைந்த தியாகராஜன் தான் அவன் என்று நினைத்தேன். டாக்டரை விசாரித்தபோது நான்கு நாட்களுக்கு முன்பு தான் அவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான் என்றும், அவன் தெருவில் அடிபட்டு மயங்கிக் கிடந்த நிலையில் போலீசார் கொண்டு வந்தார்கள் என்றும் தெரிந்தது நான் பார்த்தபோது படுக்கையில் படுத்திருந்தவன் ஜுரத்தில் உணர்விழந்து கிடந்தான். அவன் ராஜனா? தியாகராஜனா? ஒன்றும் புரியவில்லை. உடனே லண்டனுக்கு போன் செய்து விசாரித்தேன். லண்டன் அதிகாரிகள் தியாகராஜன் நீர் மூழ்கிக் கப்பல் வழியாக ஐரோப்பா சென்று அங்கிருந்து எதிர் ஜப்பானிய சைன்யத்தில் சேர்ந்துவிட்ட விஷயம் கூறினர். அந்த விஷயத்தைச் சீக்கிரமே ரேடியோ மூலம் வெளியிட்டு அவன் குடும்பத்துக்கு அதுவரை கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தை நிறுத்தப் போவதாக லண்டனில் சொன்னார்கள். இதைக் கேள்விப்பட்டதும் எனக்குப் படுக்கையில் கிடந்தவன் ராஜனாகத்தான் இருக்க வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது. ஆகவே டாக்டரிடம் சொல்லி எப்படியாவது ராஜனைப் பிழைக்க வைக்கும்படி வேண்டினேன்.

கொழும்பில் நான் ஆசியப் போர்முனைக்கு வந்த

www.t.me/tamilbooksworld



சமயத்தில் தியாகராஜனைச் சந்தித்தபோது அவன் உங்களையும் பங்கஜத்தையும் சந்தித்த விஷயத்தைச் சொல்லி இருந்தான். ஆனால் உங்கள் அட்ரஸ் தெரிவிக்கவில்லை. அதனால் உங்களுக்குத் தந்தி கொடுக்க முடியவில்லை. உடனே ராஜனைப் பற்றி தியாகராஜனுக்காவது தந்தி கொடுப்போம் என்றால், ராஜன் நிலை அபாயமாக இருப்பதாகச் சொன்னார் டாக்டர். 105 டிகிரி ஜுரம் அடித்தபடியே இருந்தது. என் ஆர்டர்லி ஆஸ்பத்திரியில் தங்க நேர்ந்ததால் ராஜனை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. இல்லாவிட்டால் நான் ஆஸ்பத்திரிக்கே சென்று இருக்க மாட்டேன்'' என்று முன்னும் பின்னுமாக விஷயங்களைக் குழப்பியபடி வின்சென்ட் சொன்னது பங்கஜத்துக்கு எரிச்சலாக இருந்தது.

''கெய்ரோ ஆஸ்பத்திரியிலே படுத்திருந்தது தான் என் கணவர் ராஜன்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க? அவர் பேர் ஆஸ்பத்திரியிலே பதிவு செய்திருந்தாங்களா? இல்லை, அவருக்குத் தெரிஞ்சவங்க யாராவது அங்கே இருந்தாங்களா?'' என்று ஆவலுடன் பங்கஜம் கேட்டாள்.

''மயக்கமான நிலையிலே போலீசார் எடுத்திட்டு வந்திருக்காங்க. அவன் யாருன்னு அவங்களுக்குத் தெரியாது. ஆனால் வைத்தியம் செய்திட்டிருந்தாங்க. என் ஆர்டர்லி சொல்லி நான் வந்தப்புறம்தான் படுக்கையிலே கிடந்தவருக்குப் பேரே உண்டாயிருக்கு! 'பெனிசிலின்' கொடுத்தாத்தான் பிழைப்பாருன்கிற நிலையிலே இருந்தார். பெனிசிலின் கடைகளிலே கிடைக்கவில்லை. ஆர்மி ஹாஸ்பிடல்லே இருந்ததை என் செல்வாக்கைப் உபயோகப்படுத்தி வாங்க முயற்சி செய்தேன். அது வந்து சேர 4 மணி நேரம் பிடிக்குமின்னாங்க. டாக்டர் அது வரையிலே தாங்கணுமேன்னு கவலைப்பட்டார். நான் படுக்கைப் பக்கத்திலேயே இருந்தேன். அப்போதான் படுத்

ட்டிருக்கிறவன் ராஜன்னு தெரிஞ்சது" என்று கூறிவிட்டு நிறுத்தினார் வின்சென்ட்.

ராமலிங்கம், "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"படுக்கையிலே படுத்திட்டிருந்த உருவம் குளிரால் நடுங்கியது. கை கால்களை முறுக்கி சேஷ்டைகள் செய்தது. அவன் உடல் நெருப்பாகக் கொதித்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். பிறகு கண்களைத் திறந்து டாக்டரைப் பார்த்தான். 'ஆயேஷா, எனக்கு ஞாபகம் வந்து விட்டது. நான் அலிகான் அல்ல. அஹமத் என் சகோதரனல்ல. என்னை நீங்கள் ஏமாத்த முடியாது. நான் தமிழன்! என் பெயர் ராஜன். இந்தியாவைச் சேர்ந்தவன். நான் என் பங்கஜத்தைப் பார்க்கவேண்டும். என் பங்கஜம் எனக்காகக் காத்திருப்பாள். நான் போக வேண்டும்' என்று கதறினான். அடுத்த வினாடி படுக்கையில் விழுந்து விட்டான். டாக்டர் அவன் கையைப் பிடித்து நாடியைப் பார்த்துவிட்டு கலவரம் அடைந்தார். 'ஐயோ! இது சாவின் முன்னால் வரும் தெளிவாக இருக்கிறதே' என்றார். நானும் கவலையோடு அருகில் இருந்தேன். ஆர்மி ஆஸ்பிடலிலிருந்து பென்சிலின் வந்து சேர்ந்தது. அதை ராஜனின் தேகத்தில் டாக்டர் ஏற்றினார்."

## 24

வின்சென்ட் தொடர்ந்தார் :

பென்சிலின் கொடுத்த பின்பு நான் சற்று மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் இருந்தேன். ஆனால் அந்த கெய்ரோ டாக்டருக்கு அப்போதும் பூரண நம்பிக்கை ஏற்படவில்லை. "ஆண்டவனை நம்பிப் பொறுத்திருப்போம்" என்றுதான் சொன்னார்.



சுமார் பத்து மணி கால அவகாசத்தில் ராஜன் உடல் நிலையில் திருப்தியான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக அவன் முகம் வெளுத்துக் கொண்டே வந்தது. சுவாசத்தில் தடுமாற்றம் அதிகமாயிற்று. எனக்கு அங்கு ஆஸ்பத்திரியில் இருக்கவே மனம் இல்லை. வெளியே போய்விட்டு வருவோம் என்று அறையை விட்டுப் புறப்படப் போனேன். ராஜன் திடீரென்று கண்களைத் திறந்து என்னைப் பார்த்தான்.

அவன் பார்வையில் ஒருவித உணர்வும் இல்லை. ஆனால் அவன் உதடுகள் பின்வரும் விசித்திரமான வார்த்தைகளைக் கூறின. "ராஜன், சாவு முனையில் எனக்கு மறுபிறப்படா. நான் நானல்ல. நான் நீயாகப் போகிறேன்" என்று கூறினான். அடுத்த வினாடியே படுத்திருந்தவன் முகம் கலவரம் அடைந்தது. சற்று மாறுபட்ட குரலில், "அது துரோகமடா. நட்புக்குத் துரோகமடா. அதை ஒரு நாளும் கடவுள் அனுமதிக்க மாட்டார்" என்று சொன்னான். ராஜனே வேறு ஒருவனாக நினைத்துப் பேசியது போல் தோன்றியது. தன்னை இரண்டு விதப் பேர்வழிகளாக நினைத்து அவன் பேசிக் கொண்டான் என்பது தெளிவாகியது.

அரைமணி நேரம் கெய்ரோ நகரின் வீதிகளில் உலாவி விட்டுத் திரும்பினேன். ராஜனின் உடல் நிலையில் முன்னேற்றம் தெரிந்தது. பிழைத்து விடுவான் என்ற நம்பிக்கையை டாக்டர் கொடுத்தார். மறுநாள் நடுப்பகல் ராஜன் கண் விழித்தான். அவனைப் பிடித்த ஜுரமும் விலகி இருந்தது. அத்தோடு அவனுக்கு எந்தவித ஞாபகமும் இல்லை. அவனுக்கு அவன் யாரென்றே தெரியவில்லை. டாக்டரும் அவன் ஓய்வில் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்.

அவனை நான் எந்தவிதக் கேள்விகளும் கேட்கக் கூடாது என்று சொல்லி விட்டார். சீக்கிரமே அவனுக்கு

உடல் பலம் திரும்பியது. எனக்கும் இந்தியா திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதால் நான் ராஜனை என்னுடன் அழைத்துச் செல்வதாகத் தீர்மானித்து சித்தய்யனுக்குத் தந்தி கொடுத்துவிட்டுக் கப்பல் ஏறினேன்.

வின்செண்ட் இப்படிக் கூறி முடித்ததும் ராமலிங்கம் கேட்டார். "அவன் கெய்ரோவில் எங்கு தங்கி இருந்தான்? அவனுக்கு எப்படிக் காயம் ஏற்பட்டது. ஒன்றும் தெரியவில்லையா?" என்று.

"ராஜன் ஆஸ்பத்திரியில் இருந்தவரையில் அவனைத் தேடிக்கொண்டு யாரும் ஆஸ்பத்திரிக்கு வரவில்லை. நானும் கெய்ரோ போலீசாரிடம் விசாரித்துப் பார்த்தேன். அவர்களால் அவனைப் பற்றி எந்தத் தகவலும் கொடுக்க முடியவில்லை. அவனைப் போலீசார் கண்டெடுத்த இடத்திற்கு அருகில் உள்ள ஓர் ஓட்டலிலும் விசாரித்தேன். 'இப்படிப்பட்ட அடையாளமுள்ள இந்தியன் யாரும் ஓட்டல் பக்கம் வரவில்லை' என்று கூறிவிட்டார்கள். அவன் மயக்கத்தில் கூறிய 'ஆயேஷா' என்பது யார் என்று கண்டுகொள்ள முடியவில்லை" என்று கூறி முடித்தார் வின்செண்ட்.

"அவர் கப்பலில் பயணம் செய்யும் போதுகூட உங்களிடம் ஞாபகப்படுத்தி எதுவும் கூறவில்லையா? தந்தை, தாய், மனைவி என்ற உறவுகள் பற்றி எதுவுமே சொல்லவில்லையா?" என்று பங்கஜம் ஆவலோடு கேட்டாள்.

"கடல் பயணத்தில் அமைதியாகத்தான் இருந்தான். ஒருமுறை அவனிடம் பழைய விஷயங்களைப் பற்றிச் சொன்னேன். அவன், "நான் ராஜனல்ல" என்றான். பிறகு வற்புறுத்தி அவனிடம் பேசியபோது அவனுக்குக் குழப்பம் ஏற்பட்டது. பிறகு கோபம் உண்டாயிற்று. என் கழுத்தை நெறிக்க வந்து விட்டான். அப்புறம் நான் அவனிடம் பழைய விஷயங்களைப் பற்றிப் பேசுவதையே நிறுத்திக் கொண்டேன். கப்பல் பம்பாயை நெருங்கும்



நாள் அன்று விடியற்காலை மூன்று மணிக்கு காபினில் நான் விழித்துக் கொண்டேன். அருகில் ராஜன் அயர்ந்து நித்திரை செய்தபடி இருந்தான். அவன் உதடுகள் அசைந்தபடி இருந்தன. தூக்கத்திலே அவன் "பங்கஜம்—பங்கஜம்" என்று கூப்பிட்டான். அடுத்தபடி "நாம ரெண்டுபேரும் 'போட்'டிலே போவோமா?" என்று கேட்டான்.

"உடனே அவனை எழுப்பினேன். அவனிடம் அவன் கூறிய வார்த்தைகளைப் பற்றிச் சொன்னேன். அவன், 'ஆமாம்... மிஸ்டர் வின்செண்ட், ஒரு பெண்... அவள் முகம் அடையாளம் தெரியவில்லை. அவள் பேர் என்ன என்று நான் சொன்னேன்? பங்கஜம்னு சொன்னேன்! எலிபெண்டா குகைக்குப் போட்டிலே போகலாமென்றா சொன்னேன்?" என்று என்னையே திருப்பிக் கேட்டான். நீங்க 'பங்கஜம்னு சொன்னீங்க. போட்டிலே போவோமா என்று சொன்னீங்க. எலிபெண்டா குகைக்குப் போகலாம்னு இப்பத்தான் சொல்றீங்க. கண்ணை மூடிக்கிட்டு இருந்தப்போ எலிபெண்டா குகை என்ற வார்த்தையைச் சொல்லவில்லை" என்று அவனிடம் கூறினான்.

"'எலிபெண்டா குகை!' 'எலிபெண்டா குகை?' என்ற வார்த்தைகளை இருமுறை திருப்பிச் சொன்னான். அவனுக்கே எப்படி அந்த வார்த்தையை உச்சரித்தோம் என்று புரியவில்லை. பங்கஜம், நீங்கள் அவரோடு எலிபெண்டா குகைக்குப் போயிருந்தீர்களா?" என்று கேட்டார் வின்செண்ட்.

பங்கஜத்தின் முகம் மலர்ந்தது. "அவர் பம்பாயை விட்டு வெளிநாடு புறப்படுமுன்புதான் எலிபெண்டா குகைக்குப் போயிருந்தோம்" என்று சொன்னாள்.

உடனே சித்தய்யன், "மிஸ்டர் வின்செண்ட், எனக்கு ஒன்று தோன்றுகிறது. ராஜன் எப்படி டோப்ருக் போர் முனையிலிருந்து கெய்ரோ வந்தான்? ஏன் இத்தனை

www.t.me/tamilbooksworld

நாட்களும் சும்மா இருந்தான். எந்த அதிகாரியையும் போய்ச் சந்தித்து இந்தியா செல்ல முயற்சி செய்யாமல் இருந்தான். இதற்கெல்லாம் ஒரே ஒரு பதில்தான் இருக்க முடியும்? அவன் இத்தனை நாட்களாகவே தன் ஞாபகம் இல்லாமல் இருந்திருக்க வேண்டும். அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு வந்ததிலிருந்துதான் அவனுக்குப் பழைய ஞாபகங்கள் மெள்ளத் திரும்புகின்றன என்று நினைக்கிறேன். ஆகையால் சீக்கிரமே அவனுக்குப் பழைய ஞாபகங்கள் திரும்பி விடலாம்'' என்றார்.

ராமலிங்கம் வேதனையோடு காணப்பட்டார். ''மிஸ்டர் சித்தய்யன், மிஸ்டர் வின்செண்ட், எனக்கு இப்போது என்ன செய்வதென்றே புரியவில்லை. எதைச் சொல்லி அவனை என்னோடு அழைத்துச் செல்வது? என் பிள்ளைக்கு என்னையே அடையாளம் தெரியவில்லையே. அவன் மனைவி, தாய் யாரையும் அடையாளம் தெரியாத நிலையில் அவன் எங்களோடு வந்து இருக்கச் சம்மதிப்பானா?'' என்று ராமலிங்கம் கேட்டார்.

சித்தய்யனும், வின்செண்டும் எந்தவிதப் பதிலும் சொல்ல முடியாமல் திகைத்தனர்.

வின்செண்ட், ''நான் கல்கத்தாவில் போய் டியூட்டியில் சேர வேண்டும். சித்தய்யனும் கொழும்பு செல்ல வேண்டும். உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன் உங்களோடு தானே இருக்க வேண்டும்?'' என்றார்.

''ஆமாம் மாமா! இனி அவர் நம்மோடுதானே இருக்கப் போகிறார். அதற்காகத்தானே நாம் இதுநாள் வரை காத்திருந்தோம். அவருக்குச் சீக்கிரமே ஞாபகம் திரும்பி விடும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதுவரை என் நம்பிக்கைகள் பொய்யாகவில்லை. இதுவும் பொய்யாகாது. மிஸ்டர் வின்செண்ட், இனி ஓரிரண்டு நாள் தயவு செய்து பம்பாயில் தங்குங்கள். அதற்குள் நான் அவரிடம் நெருங்கிப் பழகித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறேன்'' என்றாள் பங்கஜம்.

www.t.me/tamilbooksworld



மனைவி, தாலி கட்டிய கணவனிடம் நெருங்கிப் பழக ஒரு வாய்ப்புத் தேடும் நிலையை நினைத்து வின்செண்ட் மனம் வருந்தினார். பங்கஜத்தின் உறுதியையும் தைரியத்தையும் பாராட்டினார்.

ராமலிங்கம், பங்கஜம் இருவரும் மறுபடியும் ஓட்டலுக்கு வெளியே நிறுத்தியிருந்த காரில் வந்து ஏறிக் கொண்டு அவர்கள் தங்கி இருந்த ஓட்டலுக்கு வந்து சேர்ந்தனர்.

சிவகாமியின் நிலைதான் பரிதாபமாக இருந்தது. 'எங்கோ தூரதேசத்தில் மகனை இழந்தபோதுகூடத் துக்கம் பொறுக்கும்படியாக இருந்தது. அவன் கப்பலில் இருந்து இறங்கி வந்து தன் எதிரே நின்று, தன்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு யாரோ வழிப்போக்கன் போல் நகர்ந்து சென்று விட்டானே' என்று நினைத்து நினைத்து மனம் வெதும்பினாள்.

நமச்சிவாயம் தன் மகள் உள்ளத்தில் உள்ள வேதனையை உணர்ந்தார். அவளுக்கு என்ன ஆறுதல் வார்த்தைகள் சொல்வது என்று அவருக்குப் புரியவில்லை. தந்தை என்ற முறையில் சும்மா இருக்கவும் அவரால் முடியவில்லை. ''பங்கஜம், நீ படிச்சவ. நான்படிக்காதவன். எனக்கு என்ன சொல்றதுன்னே புரியல்லேம்மா! ஆனால் ஒன்று மட்டும் எனக்குப் புரியுது. உன் பொறுமைக்காக வாவது கடவுள் உனக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுக்காம இருக்க மாட்டான். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்'' என்று குமுறிக் குமுறிப் பேசினார் தொண்டை அடைக்க.

நாகரிகம் நிறைந்த பம்பாயில் மிக நாகரிகமான ஓட்டல் அறையில் விபூதி, குங்குமத்துடன் நாகரிகத்தின் நிழல் கூடப் படாத தன் தந்தையின் சுத்த சத்தியமான அன்பு மொழிகளைக் கேட்டதும் அவள் மனத்தில் இருந்த சுமையெல்லாம் நகர்ந்தது. பங்கஜம் ஓடிப்போய்த்

தந்தையை அணைத்துக் கொண்டு அழுதாள். மூன்று வருடக் குழந்தை வயதுக்கப்புறம் பங்கஜம் அவர் தோள் மேல் விழுந்து அழுதது கிடையாது. அவள் தன் அன்பு உணர்ச்சிகளை இப்படி வெளியிட்டதும் இல்லை.

"அப்பா, என் அதிர்ஷ்டத்தைக்கூட நான் நம்ப வில்லை. உங்களைப் போன்று அருள் நிறைந்த உள்ளம் தொடர்ந்து துன்பப்பட முடியாது அப்பா. அதற்காக வாவது கடவுள் என்னை நல்ல நிலையில் வைக்க மாட்டாரா தான் எதிர்பார்க்கிறேன்" என்று கூறினாள்.

நமச்சிவாயம் உணர்ச்சி ததும்ப, என்ன வார்த்தைகள் சொல்வது என்று வார்த்தைகளைத் தேடினார். வார்த்தைகள் கிடைக்கவில்லை, 'நமச்சிவாயம்! நமச்சி வாயம்!' என்று சொல்வதைத் தவிர வேறு எதுவும் அவரால் சொல்ல முடியவில்லை.

## 25

மறுநாள் காலை எழுந்ததும் பங்கஜம் பல் துலக்கி, குளித்துவிட்டு நல்ல நாகரிகமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். நெருக்கிப் பிடிக்கும் கறுப்பு ரவிக்கையையும், கறுப்புப் பட்டுச் சேலையையும் அணிந்து கொண்டாள். கூந்தலைச் சற்றுத் தளர்த்தி வாரிக் கொண்டாள். ஃபேஸ் கிரீம் எடுத்து லேசாகப் பூசிக் கொண்டாள். அதன்மீது பவுடரைச் சிறிது ஒற்றி நிரவி விட்டாள். திரும்பத் திரும்பக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். கண் மையைத் தெரிந்தும் தெரியாமலும் இமைகள் ஓரத்தில் இழுத்து விட்டாள்.

கண்ணாடி முன் பங்கஜம் உட்கார்ந்து இவ்வளவு கவனமாக அலங்கரிப்பதைப் பின்புறமிருந்து சாவித்திரி



கவனித்து வந்தாள். சட்டென்று திரும்பிய பங்கஜம், சாவித்திரி தன்னையே வெறித்துப் பார்ப்பதை உணர்ந்தாள். அந்தப் பார்வையில் இருந்த ஏக்கத்தைப் பங்கஜம் புரிந்து கொள்ளவில்லை. பங்கஜம் வெட்கத் தோடு தலை குனிந்தாள். "என்ன பங்கஜம், இவ்வளவு சீக்கிரமாய்க் குளிச்சுட்டே! ரொம்ப நாகரிகமா அலங்காரம் பண்ணிட்டு இருக்கே. லிப்ஸ்டிக் மாத்திரம் தடவிட்டா உன்னை ஒரு பாரின்காரின்னுதான் சொல்லணும்."

"ஆமாம், லிப்ஸ்டிக் என்னிடம் இல்லே. அதனாலே அதைப் போட்டுக் கொள்ள முடியல்லே!" என்றாள்.

சாவித்திரி ஒரு வினாடி மௌனமாக இருந்துவிட்டு, "அவரைப் பார்க்கப் போறியா?" என்று கேட்டாள்.

"ஆமாம் சாவித்திரி. வேறு எதற்காக இப்படித் தயார் பண்ணிட்டிருக்கேன்! அவர் புது மனிதர் மாதிரிதானே இருக்கார்? அவர் சில வருஷங்களாகப் பல ஊர்களிலே இருந்திருக்கார். அவருடைய அழகு ரசனை எப்படி இருக்குமோ? அவர் எதை விரும்புவார்னு ஒன்றும் புரியல்லியே! அவர் மனத்தில் புதைந்து கிடக்கும் பல ஞாபகங்களிலே எந்த ஞாபகம் அவர் உணர்ச்சிகளை ஆள்கிறதுன்னு புரியல்லே! புதுசா ஒருத்தரைப் பார்க்கப் போற மாதிரி இருக்கு, சாவித்திரி."

தனக்குத் தேறுதலாகச் சாவித்திரி ஏதாவது வார்த்தைகள் கூறுவாள் என்று எதிர்பார்த்தாள் பங்கஜம். ஆனால் சாவித்திரி எதுவும் பேசாமல் தரையைப் பார்த்தபடி நின்றாள். சற்றுப் பொறுத்து, "நான் உன்னோடு துணைக்கு வரட்டுமா தனியாகச் செல்கிறாயே. பயமாக இல்லை?" என்றாள்.

"பயமா? கொஞ்சம் திக் திக்கென்றுதான் இருக்கு. இருந்தாலும் அவர் என் கணவர்தானே?" அவரிடம் செல்வதற்குப் பயப்பட்டால் முடியுமா?"

"உடல், தோற்றம், உறவு முறை இவற்றில் அவர்

கணவராக இருந்தாலும், அவர் ஞாபகங்களைப் பொறுத்த வரையில் அவர் வேறு ஆளைப்போல் தானே இருக்கிறார். நம் உறவுகள் எல்லாம் வெறும் ஞாபகங்களைப் பொறுத்து இருக்கிறது என்பதை நினைக்க அது ஆச்சரியமாக இல்லையா? எவ்வளவு லட்சங்கள் செலவழித்து, தடபுடலாகச் செய்த கல்யாணம்! அந்தக் கல்யாணத்தில் ஏற்பட்ட பிணைப்பு இன்று மாறுபட்ட ஞாபகங்களால் அறுந்து நிற்கிறதே!"

"அறுந்து விட்டது என்று மட்டும் சொல்லாதே சாவித்திரி. எனக்கு உயிர் உள்ள வரையில், என் ஞாபகங்கள் சிதையாத வரையில், அந்தப் பிணைப்பை ஒரு நாளும் அறுக்க முடியாது" என்று ஆவேசம் வந்தவள் போல் சொல்லிவிட்டுப் பெட்டியில் இருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துத் தன் கைப்பையில் வைத்துக் கொண்டாள்.

திடீரென்று ஏதோ ஞாபகம் வரவே, பெட்டியின் அடிப்புறத்திலிருந்து சங்கு மாலையை எடுத்துக் கழுத்தில் அணியப் போனாள். பிறகு அதை அணிந்து கொள்ளாமல் தன் கைப் பையிலேயே போட்டாள். தேவை ஏற்படும் போது அணியலாம் என்று நினைத்தாள் போலும். 'மாமனார் ராமலிங்கம், மாமியார் சிவகாமி இவர்களிடம் போய் நான் என் கணவனைப் போய்ச் சந்திக்கப் போகிறேன் என்று எப்படிக் கூறுவது? அவர்கள் என்ன சொல்வார்களோ? நானும் உடன் வருகிறேன் என்று சொன்னால்? அது அவள் வகுத்திருக்கும் திட்டத்துக்குச் சரி வராது என்பதை உணர்ந்தாள். தன் கணவனைத் தனிமையில் சந்திக்க வேண்டும்! அவனோடு தனிமையில் சில இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பது அவள் நோக்கம். அதைப் பெரியவர்கள் புரிந்து கொள்வார்களா? அவர்கள் ஒப்புக் கொள்வார்களா? தன்னைப் பற்றித் துணிச்சல்காரி என்று நினைக்க மாட்டார்களா? யார் என்ன நினைத்தால் என்ன, தன் கடமை இது என்று தீர்மானித்தாள்.

www.t.me/tamilbooksworld



தந்தை இருக்கும் அறைக்குள் நுழைந்தாள். அங்கு குளித்துவிட்டு விபூதியணிந்து இடுப்பில் துண்டுடன் காணப்பட்டார் நமச்சிவாயம். ஓட்டல் அறையில் மூலையில் சிறு பட்டு ஜமுக்காளத்தை விரித்து அதன்மீது அவர் பூஜை சாமான்களைப் பரப்பி, அவற்றுக்குச் சந்தனம் குங்குமம் தடவி, கண்கள் மூடியபடியே ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். பங்கஜம் அறையில் நுழைந்ததும் கண்களைத் திறந்தார். பங்கஜம், "அப்பா" என்று கூறி மேலே பேசாமல் நிறுத்தினாள்.

அவள் சொல்லாமல் விட்டதைப் புரிந்து கொண்டவர் போல் தந்தை பதில் அளித்தார். "நீ ராஜனைப் பார்க்கப் போறியா பங்கஜம்?" என்று கேட்டார்.

"எனக்கு உத்தரவு கொடுங்கப்பா" என்று கூறி அவர் முன் முழந்தாளிட்டு அமர்ந்து தலை தரையில் படும்படி வணங்கினாள்.

"இன்னிக்குப் பிரதோஷம். தமோகுணமூர்த்தியான சிவனுக்கு ஏற்ற நாள். ராஜனைப் பிடித்திருக்கும் தமோ குணம் நீங்கி விடும்! எல்லாம் சரியாயிடும்! போயிட்டுவா" பங்கஜம் தயங்கி நின்றாள். நமச்சிவாயம் புன்முறுவலுடன், "உன்னைப் படிக்க வச்சது சரின்னு இன்னிக்குத்தான் புரியுது. படிச்ச பொண்ணா துணிஞ்சு போயிட்டு வா. ராமலிங்கம், சிவகாமி கிட்டே நான் பேசிக்கிறேன்" என்று உறுதிமொழி கொடுத்தார்.

பங்கஜம் நன்றியோடு தந்தையை ஒருமுறை பார்த்து விட்டு, மறுபடியும் தன் அறைக்கு வந்தாள். சாவித்திரி சிரித்தபடி உட்கார்ந்திருந்தாள். சாவித்திரியை அழைத்துக் கொண்டு மின்சார லிப்டில் இறங்கினாள். ஓட்டல் வாசலில் ஒரு டாக்ஸி காத்திருந்தது. அதில் ஏறிக் கொண்டு புறப்பட்டாள். பங்கஜம் ஏறிச் செல்லும் டாக்ஸியைப் பார்த்தபடி சாவித்திரி சில விநாடிகள் நின்றாள். திரும்பவும் மாடியில் தன் அறை நோக்கி நகர்ந்தாள்.

சில நிமிடங்களில் பங்கஜம் அவள் கணவன் தங்கி

பிருக்கும் ஓட்டலின் வெளிப்புறத்தை அடைந்தான். அவன் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. மெள்ள அடி மேல் அடி வைத்து நுழைந்தான். அந்த வெளிப்புற நடையில் சித்தய்யன் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் அன்று காலைப் பத்திரிகை இருந்தது. பங்கஜம் தயங்கி நின்றாள். சித்தய்யன் பேப்பரை மூடி எதிரே உள்ள டீப்பாயில் வைத்துவிட்டு எழுந்தான். சற்றுத் தூரத்தில் பங்கஜம் தனியே நிற்பதைப் பார்த்தான். சித்தய்யன் அவளை நோக்கி நடந்து வந்தான்.

''கூட யாரும் வரவில்லையா?'' என்று கேட்டான் அவன்.

''இல்லை, நான் மட்டும்தான் வந்தேன்'' என்று தரையைப் பார்த்தபடி பங்கஜம் சொன்னாள்.

''நான் போய் ராஜனை அழைத்து வருகிறேன். நீங்கள் உட்காருங்கள்'' என்று சொல்லி மாடிப் பக்கம் போனான்.

சில நிமிடங்கள் ஓட்டல் நடையில் வைக்கப்பட்டிருந்த விநோதப் பொருள்களைப் பார்த்தபடி நின்றாள். வெளி நாட்டு யாத்ரீகர்கள் விரும்பி வாங்கும் தந்தப்பொருள்கள், இன்னும் மற்றச் செம்பு, பித்தளையால் ஆன சிறு சிலைகள் கண்ணாடி அல்மாரியில் வைக்கப்பட்டிருந்தன. சற்றுத் தொலைவில் ஒரு புஸ்தகக் கடை இருந்தது. அதை அப்போதுதான் ஒருவன் திறந்து வைத்துக் கொண்டு இருந்தான். அட்டைப் படத்தில் பெண்ணின் உடல் கவர்ச்சியைக் காட்டும் பத்திரிகைகளைச் சரமாகத் தொங்கவிட்டபடி இருந்தான். துப்பறியும் நாவல்களும், மலிவுப் பதிப்பில் வந்துள்ள நாடகப் புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பங்கஜம் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் போதே, ராஜனும், வின்சென்ட்டும், சித்தய்யனும் படிக்கட்டு வழியே நடையில் இறங்கினர். ராஜன் குளித்து விட்டு அழகான

www.t.me/tamilbooksworld



பழுப்பு நிறக் கோட்டும், சூட்டும் அணிந்திருந்தான். ''என்ன மிஸ்டர் ராஜன், புக் ஸ்டாலுக்குப் போவோமா?'' என்றான் சித்தய்யன்.

ராஜன், ''ஓ! எஸ்'' என்று சொல்லிவிட்டுப் புத்தகக் கடைக்கு வந்து பங்கஜத்தின் அருகில் நின்றபடி புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பார்வையிட ஆரம்பித்தான். அருகில் நின்றபடியே பங்கஜம் ஓரக் கண்ணால் ராஜனைக் கவனித்தபடியே இருந்தாள். ராஜன் கை ஒரு பத்திரிகையை எடுத்தது. அதன் அட்டைப் படத்தில் கவர்ச்சியான பெண்ணின் புகைப்படம் கண்களைப் பறிக்கும்படி இருந்தது. ராஜன் முகம் அதைப் பார்த்துச் சுளித்தது. வெறுப்புடன் அந்தப் பத்திரிகையை அப்புறம் வைத்தான். அதைக் கவனித்துக் கொண்டிருந்த பங்கஜத்துக்கு ஒருவிதத் திருப்தி ஏற்பட்டது. ராஜனின் அடிப்படை உணர்ச்சிகள் இன்னும் மழுங்கி விடவில்லை என்பதை உணர்ந்தாள். ராஜன் திரும்பிப் பங்கஜத்தின் கையிலுள்ள புத்தகத்தைப் பார்த்தான். பங்கஜத்தின் கையிலிருந்தது ஷேக்ஸ்பியர் எழுதிய 'வெனிஸ் வர்த்தகன்' (மர்சன்ட் ஆஃப் வெனிஸ்) என்ற நாடகத்தின் தமிழ்ப் பதிப்பு. ராஜன் உதடுகள், ''மர்சன்ட் ஆஃப் வெனிஸ்'' என்று இரு முறை உச்சரித்தன. அந்தப் புத்தகத்தைக் கொடுக்கும்படி கடைக்காரனிடம் கேட்டான்.

இது பேச்சைத் தொடங்க ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று பங்கஜத்துக்குத் தோன்றியது. ''உங்களுக்கு இந்த நாடகம் பிடிக்குமா? எனக்கு இது மிகவும் பிடித்தமான நாடகம்'' என்று வலுவில் பேசினாள்.

ராஜன் ஒரு விநாடிக்குப் பங்கஜத்தைப் பார்த்தான். அவன் கண்கள், ஒரு விநாடி புரிந்து கொண்டதுபோல், பங்கஜத்தின் கண்களைச் சந்தித்தன. இந்தச் சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்பதுபோல் சித்தய்யன், ''இது தான் மிஸ் பங்கஜம். மெட்ராஸைச் சேர்ந்தவள்'' என்று அறிமுகப்படுத்தினான்.

ராஜன், "மிஸஸ் பங்கஜம்" என்று ஒரு முறை சிந்தித்தபடி கூறிவிட்டு, "ரொம்ப சந்தோஷம். நீங்களும் இந்த ஓட்டலிலேதான் தங்கி இருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

தன் கணவனிடம் தன்னையே இன்னொருவர் அறிமுகப்படுத்தும் நிலையை நினைத்து வருந்தினாலும், தன் வேதனையை அடக்கிக் கொண்டாள். "இல்லை, நான் இந்த ஓட்டலில் தங்கவில்லை. எனக்கு வேண்டியவர் ஒருத்தர் இங்கே இருக்கார். அவரைப் பார்க்க வந்து இருக்கேன்" என்றாள்.

"ஓ! உங்களுக்கு வேண்டியவரா! அவரை நீங்க பார்த்தாச்சா?"

ராஜன், 'உங்களுக்கு வேண்டியவரா?' என்ற வார்த்தைகளை உச்சரித்த விதத்தில் லேசான பொறாமை உணர்ச்சி வெளிப்பட்டது. அவன் இப்போது தன்னைக் கவனித்த விதத்தில் அவன் மனம் தன் அழகால் கவரப்பட்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

பங்கஜம், "அவரை நேத்திக்கே பார்த்தாச்சு. அவர் இப்போ வெகு தூரத்திலே இருக்கார்" என்றாள் வேதனையோடு.

"ஓ! வெளிநாட்டுக்குப் போயிட்டாரா? காலையிலே தான் போனாரா?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. "நீங்கள்தான் அந்த வேண்டியவர். உங்கள் ஞாபகம்தான் வெகு தூரத்துக்குப் போய்விட்டது. உங்கள் மனைவி பங்கஜம்தான் நான்" என்று கதறிச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால் ஆசையை அடக்கிக் கொண்டாள். என்ன செய்வது என்று தெரியாமல் தன் குழப்பத்தை மறைக்கக் கடியாரத்தைப் பார்த்தாள்.

அவள் கடியாரத்தைப் பார்ப்பதைக் கவனித்த ராஜன், "அவசரமாக எங்காவது செல்ல வேண்டுமா?" என்று சற்று ஆவலோடு கேட்டான்.



ராஜன் குரலில் தொனித்த ஆவலை உடனே புரிந்து கொண்டாள். ராஜன் கண்கள் தன்னைப் பாதாதி கேசம் கவனிப்பதை உணர்ந்தாள். தன் உதடுகளை தன் நாவின் நுனியால் நனைத்து சரச் சேட்டையோடு, விழிகளை ஒருபுறமாக ஒதுக்கி ஆண்களை மயக்கி அதனாலே வாழும் விலைமகள் கடைக்கண் பார்ப்பது போல் ராஜனைப் பார்த்தாள். கைகளைத் தூக்கி ஒருவிதமாகச் சோம்பல் முறித்தாள். பங்கஜம் என்றுமே உணராத, அவள் இயற்கைக்குப் பொருந்தாத அந்த நடிப்பு திடீரென்று எப்படி வந்தது என்று அவளுக்கே புரியவில்லை. ராஜன் முகம் சிவந்து விட்டது. பங்கஜம் அதைக் கவனித்தாள். "அவசரமான வேலை ஒன்றுமில்லை. எலிபெண்டா குகைக்குப் போய் விட்டு வரலாமென்று நினைத்தேன்" என்றாள்.

ராஜன், "எலிபெண்டா குகைக்கா?" என்று கேட்டு விட்டுச் சும்மா இருந்தான். அவன் மனதில் ஏதோ சுழன்று கொண்டிருந்தது. பிறகு திடீரென்று ராஜன் வின்சென்டின் பக்கம் திரும்பி, "என்ன மிஸ்டர் வின்சென்ட், நாமும் எலிபெண்டா குகைக்குப் போய் வரலாமா?" என்று கேட்டான்.

வின்சென்ட் ஒருமுறை பங்கஜத்தைப் பார்த்தார். பிறகு சிரித்தபடி, "இல்லை மிஸ்டர் ராஜன், எனக்கும் சித்தய்யனுக்கும் முக்கியமான வேலை இருக்கிறது. நாங்கள் வரமுடியாது. மிஸஸ் பங்கஜம்! நீங்கள் மிஸ்டர் ராஜனை அழைத்துச் செல்கிறீர்களா?" என்று வேண்டினார்.

பங்கஜம் அவரை நன்றியோடு பார்த்தாள். "எனக்கு ஒரு தொந்தரவும் இல்லை. அவர் வரட்டுமே?" என்றாள்.

ராஜன் உடை மாற்றி வருவதாகக் கூறிவிட்டு தன் அறைக்குச் சென்றான். வின்சென்ட், பங்கஜம், "நீங்கள் உண்மையிலேயே சிறந்த பெண்மணி. உங்களை மனைவியாக அடைய ராஜன் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பம்பாய் வந்ததிலிருந்து ராஜனுக்கு ஒரு மாறுதல் ஏற்பட்டு

ருக்கிறது. உங்கள் முயற்சியால் அவருக்கு நன்மை ஏற்படும் என்று திடமாக நம்புகிறேன்'' என்றார்.

ராஜன் ஒரு சில்க் பேண்ட்டும், புஷ் ஷர்ட்டும் அணிந்து திரும்பி வந்தான். இருவரும் ஓட்டலை விட்டுச் சிரித்தபடி வெளியேறினர். ஓட்டல் போர்ட்டர் ஒருவிதமாக இவர்களைக் கவனித்தான். பாவம், அவனுக்கு ராஜன் தன் மனைவியோடுதான் செல்கிறான் என்று தெரியாதே!

இருவரும் நடந்து சென்று பம்பாய் எலெக்ட்ரிக் டிரெயினில் ஏறினர். அப்போது பங்கஜத்தின் கையிலிருந்த 'வெனிஸ் வர்த்தகன்' புத்தகத்தைப் பார்த்தான் ராஜன். அதை வாங்கி உட்புறம் புரட்டினான். அதில், போர்ஷியா என்ற கதாநாயகியின் பெயர் வரும் இடத்தைப் புரட்டினான்.

பங்கஜம், ''ராஜன் எனக்கு ஷேக்ஸ்பியர் நாடகக் கதாநாயகிகளிலேயே போர்ஷியாதான் மிகவும் பிடித்தவள். அவள் தன் கணவனது நண்பனுக்காக ஆண் வேடத்தில் துணிந்து கோர்ட் ஏறி வாதாடினவள் அல்லவா?'' என்றாள்.

ராஜன் அப்படியே அவளை விழித்துப் பார்த்தான். ரயில் வண்டியை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். பங்கஜம் ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்றாள்.

ராஜன், ''எனக்குப் போர்ஷியாவைப் பற்றி ஞாபகமில்லை. ஆனால் கிட்டத்தட்ட இதே வார்த்தைகளை எங்கோ கேட்டது போல் ஞாபகம் வருகிறது. அதுவும் ரயில் பிரயாணத்தில் கேட்டதுபோல் தோன்றுகிறது'' என்று கூறிவிட்டு நிறுத்தினான். பிறகு கண் கலங்கித் துக்கத்தோடு கூறினான்: ''மிஸஸ் பங்கஜம், நான் ஒரு விசித்திரமான நிலையில் இருக்கிறேன். என்னுடைய கடந்த காலம் ஒரே இருட்டாக இருக்கிறது. எதிர்காலம் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. பழைய கடந்து போன காலத்தில் நடந்த ஏதோ ஒரு பயங்கர விஷயம் என்னை விழுங்கக் காத்திருக்கிறது என்று தோன்றுகிறது.



இந்த வார்த்தைகளைக் கேட்ட பங்கஜத்திற்குச் சந்தோஷமே ஏற்பட்டது. ''இறந்த காலத்தை மறந்து விடுங்கள். எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நிகழ்காலத்தில் அசையாது நில்லுங்கள். எல்லாம் சரியாகி விடும்'' என்றாள்.

## 26

ஷேக்ஸ்பியர் 'வெனிஸ் வர்த்தகன்' எழுதியதற்காகப் பங்கஜம் அவருக்கு நன்றி செலுத்தினாள். மிகவும் பழைய நினைவுகள் அவள் கணவன் மனத்தில் மறுபடியும் எதிரொலிக்க முடியுமானால், ஏன் அவருக்கு ஞாபகம் திரும்ப முடியாது? தன்னை அவர் அடிக்கடி கவர்ச்சியோடு பார்ப்பதைக் கவனித்தாள். அந்தக் கவர்ச்சிக்கு காரணமே, ஏற்கனவே அவர் மனத்தில் இருந்து இப்போது அடித்தளத்திற்குப் போயிருக்கும் பழைய கவர்ச்சி உணர்வுதான் என்பதை உணர்ந்தாள்.

''வாங்க, ரயிலை விட்டு இறங்கலாம்'' என்று ராஜனை அழைத்தாள். மின்சார வண்டியிலிருந்து 'சாண்டா க்ரூஸ்' என்ற இடத்தில் இறங்கினர். பிரயாணிகள் வெளியே வரும் இடத்தில் கூட்டம் நெருக்கிற்று. அப்போது ராஜனின் கைகள் அவள் உடலில் அழுந்தியது. பங்கஜத்திற்கு வெகு நாட்களுக்குமுன் ஸ்பரிசத்தினால் உணர்ந்த இன்பம், மறுபடியும் ஞாபகத்திற்கு வந்து அவள் முகம் சிவந்தது. அதே வினாடி அவள் திரும்பி ராஜன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகமும் குழம்பி இருந்தது.

ராஜன் தன் கைகளை அவள் தோள் மீதிருந்து எடுத்துக் கொண்டு, ''ஐ ஆம் சாரி'' என்று முன்பின் தெரியாதவளிடம் தவறாக நடந்து கொண்டதற்கு ஒருவன் மன்னிப்புக் கேட்பதுபோல் கேட்டான்.

''நீங்கள் ஒரு தவறும் செய்யவில்லை'' என்று

சொன்னாள் பங்கஜம். ஆண் பெண் இருவரிடையே தவறு நடக்க முடியும் என்பதை ராஜன் இன்னும் மறந்துவிடவில்லை என்பதைத் தெரிந்து கொண்டு மகிழ்ந்தாள்.

வெளியே வந்ததும், இருவரும் பஸ் ஏறினார்கள். பங்கஜம் அப்புறம் வேண்டுமென்றே ராஜனைப் பல தெரிந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றாள். அதாவது, ராஜன் வெளிநாடு செல்வதற்கு முன், இருவரும் சேர்ந்து சென்ற இடங்களுக்கெல்லாம் சென்றனர். ராஜன் ஏதோ குழப்பத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தபடி இருந்தான். பழைய காட்சிகளின் ஞாபகங்கள் அவன் மனக் கதவில் வந்து மோதுவதுபோல் தெரிந்தது. ஆனால் அந்த ஞாபகங்களுக்கு, நனவுப் பகுதிக்கு வர இன்னும் வலிமை ஏற்படவில்லை என்பதும் தெரிந்தது.

இருவரும் போட்டோ ஸ்டுடியோவிற்குச் சென்றனர். அங்குதானே ராஜன் அவளை விட்டுப் பிரிவதற்கு முன்பு அவளோடு சில புகைப்படங்கள் எடுத்துக் கொண்டான்? ஆனால் அந்தப் போட்டோ ஸ்டுடியோவின் அமைப்பு இப்போது அடியோடு மாறிப் போயிருந்தது. பங்கஜத்திற்கே அது ஒரு புது இடம்போல் தெரிந்தது. ஆகையால் ராஜனின் பழைய ஞாபகங்களை, அந்தப் போட்டோ ஸ்டுடியோ அவன் மனத்தின் மேல் தளத்துக்குக் கொண்டு வர உதவாது என்பதை உணர்ந்தாள்.

பிறகு இருவரும் படகில் ஏறி எலிபெண்டா குகைக்குச் செல்லத் தொடங்கினர். பங்கஜம் அவன்மீது சாய்வதும், அவன் முகம் பார்த்துச் சிரிப்பதும், சத்தம் போட்டுப் பேசுவதுமாக இருந்தாள். அவள் நடத்தை அவளுக்கே லஜ்ஜையாக இருந்தது.

ராஜன் அவளை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். தன்னை வெட்கமில்லாதவள் என்று நினைத்து அவன் ஒதுக்கி விடுவானோ என்ற நினைவு எழுந்ததும் அவளுக்கு பயம் ஏற்பட்டது. அவனது ஞாபக சக்தியைத் திரும்பக் கொண்டு வருவதற்காக நடித்த நாடகம் முடிவில்



அவனுக்கு வெறுப்பைக் கொடுத்து விட்டால் அப்புறம் அவனிடம் எப்படி நெருங்குவது. அவனை எப்படி ஊருக்கு அழைத்துச் செல்வது என்று பயந்தாள்.

தன் நடத்தையைச் சற்று மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்கலானாள். ஆனால், படகுப் பயணம் பூராவுமே ராஜனின் பார்வை, அவள் உடல் மீதே இருந்தது. அவள் தன் பக்கம் திரும்பும்போது மட்டும் சட்டென்று குற்றம் செய்தவன்போல் வேறு பக்கம் பார்ப்பான்.

படகை விட்டுக் கரையில் இறங்கியதும், ராஜனும் பங்கஜமும் எலிபெண்டா குகைக்குள் சென்றனர். அங்கு ராஜன் ஓர் பிரயாணிபோல்தான் நடந்து கொண்டான். இதற்கு முன் அவளோடு ஒருமுறை அங்கு வந்தவன் போல் நடந்து கொள்ளவேயில்லை. பிறகு வெளியே வந்து இளநீர் குடித்தனர். முதல்முறை வந்தபோதும் அதே இடத்தில்தான் இளநீர் குடித்தனர். ஆனால் அந்த ஞாபகம் ராஜனுக்கு லேசாகக்கூட வந்ததாகத் தெரியவில்லை. "இளநீர் இனிப்பாக இல்லை" என்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டான்.

பங்கஜம் ராஜனிடம், "இங்கே அருகில் உள்ள கிராமத்தில் ஒரு பாபா இருந்தார்" என்று சொல்லிவிட்டு ராஜனைக் கவனித்தாள்.

ராஜன், "பாபா... பாபா..." என்று இருமுறைக் கூறிவிட்டு, "அப்படியென்றால் என்ன?" என்று கேட்டான்.

"பாபா என்பவர் ஒரு சந்நியாசி. ஒரு மகான். ஒரு வேளை அவர் இன்னும் இங்கு இருந்தாலும் இருக்கலாம். போய்ப் பார்க்கலாமா?" என்றாள்.

"அந்தச் சந்நியாசியை எதற்குப் பார்க்க வேண்டும்!" என்று ராஜன் கேட்டான். பாபாவைப் பார்ப்பதில் அவனுக்கு அக்கறை இருந்ததாகவே தெரியவில்லை.

இது பங்கஜத்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆச்சரியத்தையும் கொடுத்தது. கல்யாணம் ஆவதற்கு முன்



30052

www.t.me/tamilbooksworld

ரயில் வண்டியில் சென்றபோது எதேச்சையாக அவன் 'வெனிஸ் வர்த்தகன்' நாடகத்தில் வரும் போர்ஷியாவைப் பற்றிப் பேசிய வார்த்தைகள் அவனுக்கு ஞாபகம் வருகின்றன. ஆனால் அந்தக் காலத்தில் அவன் மனத்தையே உலுக்கிய நிகழ்ச்சி பாபாவின் சந்திப்பு. கப்பல் ஏறும்வரை அவன் அதைப் பற்றியே பேசிக் கொண்டு இருந்தான். பாபா கொடுத்த சங்கு மாலையை அணியச் செய்து புகைப் படம் எடுத்துக் கொண்டவனும் அவனே. அதைப் பற்றிச் சிறிதுகூட ஞாபகம் இல்லையே என்று வியந்தாள். ஞாபகங்களின் தன்மையே அதுதானோ!' என்று நினைத்தாள்.

பங்கஜத்துக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. உணர்ச்சிவசப்பட்டு தாம் பங்கெடுத்துக் கொண்ட பல பால்ய நிகழ்ச்சிகள் தமக்கு மறந்து விடுகின்றன. ஆனால் பொருத்தமில்லாத சில சாதாரண பால்ய நிகழ்ச்சிகள் ஞாபகத்தில் நிற்கின்றன. அதுபோல் இருக்குமோ ராஜன் விஷயமும் என்று நினைத்தாள். ஆனால் ராஜன் எலிபெண்டாவைப் பற்றித் தூக்கத்தில் கனவு கண்டு சொன்னதாக வின்செண்ட் சொன்னாரே! அந்த இடத்துக்கு வந்தபின் அவனிடம் எந்த ஞாபகமும் இல்லையே!

பங்கஜத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஓட்டலை விட்டு கிளம்பியபோது, ராஜனின் ஞாபகம் திரும்பி விடும் என்று எதிர்பார்த்தாள். அதற்குத் தக்கபடி அவன் மின்சார ரயிலில் கூறிய வார்த்தைகள் வர்ஜிதம் செய்தன. ஆனால் இப்போது அந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.

திடீரென்று அவளுக்கு ஓர் ஆசை எழுந்தது. ஒரு வேளை பாபா அதே ஆசிரமத்தில் இருந்தால்? அவரைப் பார்த்தால், நல்லது ஏற்படாதா? அவர்தானே அவனுக்கு வெளிநாட்டில் ஆபத்து ஏற்படும் என்று சொன்னவர்? அவரேதான் அவள் மாங்கல்யத்துக்குப் பங்கம் வராது என்று சொன்னவரும்? இரண்டும் உண்மையாகி விட்டது.



ஆனால் அவர் சொல்லாத ஒன்று; அவள் கணவன் ஞாபகம் இழந்து திரும்புவான் என்பதுதான். அதையும் அவரிடம் கேட்டு விடுவோமே...

குகையிலிருந்து அருகில் உள்ள கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் பங்கஜம். குறுகிய கிராமத் தெரு வழியே நடந்தாள். முதலில் இடம் அடையாளம் தெரியவில்லை. பலகாரம் விற்கும் டீக்கடையை நெருங்கியதும் வலதுபுறம் சற்றுத் தூரத்தில்தான் பாபா தங்கியிருந்த கொட்டகை இருந்த ஞாபகம் வந்தது. அதை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

ராஜனுக்குச் சலிப்பாக இருந்தது. 'வாங்க மிஸிஸ் பங்கஜம், நாம் திரும்பலாம்'' என்றான்.

''ஐந்து நிமிஷங்கள் பொறுங்கள். வந்தது வந்தோம். பாபாவைப் பார்த்து விட்டுப் போய்விடலாம்'' என்று சொல்லி அவன் கையைப் பற்றி இழுத்தபடி நடக்க ஆரம்பித்தாள் பங்கஜம்.

ஒரு சிறு சாக்கடைப் பாலம். அதற்கடுத்தாற் போல் ஒரு சிறு திடல் இருந்தது. அதன் விளிம்பில் சிறு குடிசைகள். பங்கஜத்துக்கு ஏமாற்றமாக இருந்தது. திடல் இருந்த இடத்தில்தான் அன்று பாபா தங்கிய கொட்டகை இருந்திருக்க வேண்டும்.

சுற்று முற்றும் பார்த்தாள். மூலையில் ஓட்டு வில்லையால் ஆன ஷெட் ஒன்று இருந்தது. அதன் வெளிப்புறம் பாபா சமாஜ் என்று வெள்ளைப் பெயிண்டால் ஹிந்தியில் எழுதியிருந்தது. அதை நோக்கி நடந்தாள். உட்புறம் காவி அணிந்த ஒரு ஆள் ஹூக்கா குடித்தபடி சிமெண்ட் பலகையில் உட்கார்ந்திருந்தார். அவர் உடை அணிந்த முறை பாபா போல் இருந்தாலும் ஆன்ம வளர்ச்சியில் அவர் பாபாவுக்கு வெகு தூரம் என்பது அவரைப் பார்த்த வுடனேயே தெரிந்தது.

ராஜனையும், பங்கஜத்தையும் பார்த்ததும் காவி அணிந்த ஆள் பல்லை இளித்தபடி வெளிவந்தான்.

www.t.me/tamilbooksworld

ஹிந்தியில் ஏதோ பேசினான். அருகில் இருந்த ஒரு மராத்திக்காரர் அரைகுறை இங்கிலீஷில் அதை விளக்கினார்.

பாபாவைப் பற்றிப் பங்கஜம் விசாரித்தாள்.

"சில வருஷங்களாகவே பெரியவர் எங்கு இருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது. ஹிமாலயத்தில் இருக்கலாம். அல்லது சமாதி ஆகியிருக்கலாம்" என்று கூறினார்கள். அங்கிருப்பவர் அவர் சிஷ்யர் என்று ஒருவன் சொன்னான். ஏதாவது தாயத்து, விபூதி வேண்டுமென்றால் அவருக்கு இரண்டு ரூபாய் தர வேண்டும் என்று மராத்திக்காரர் சொன்னார்.

பெரியவரின் பெயரை வைத்து ஜீவனம் செய்யும் போலி சந்நியாசிதான் இந்த ஆள் என்பது நன்றாக விளங்கியது. பங்கஜம் மனம் சலித்தாள். பிறகு வருவதாகக் கூறி அங்கிருந்து கடற்கரையை நோக்கி நடந்தாள். நடந்தபடியே தன் கைப் பையைத் திறந்தாள். அதில் கிடந்த சங்கு மாலையை எடுத்துப் பார்த்தாள். அந்தச் சங்கு மாலைதான் பாபாவுக்கும் அவளுக்கும் இடையே உள்ள ஒரே தொடர்பு. அதுதான் அவர் பணம் வாங்கிக் கொள்ளாமல் அவளுக்குக் கொடுத்த அன்பளிப்பு. அதை அந்தப் பெரியவர் அவளது 'சிந்தூர்' என்று சொல்லி கொடுத்தார்.

அதை எடுத்து ராஜனின் முன் நீட்டினாள் பங்கஜம். ராஜன் அதைக் கூர்ந்து நோக்கினான். அதை வாங்கும் போது அவன் விரல்கள் நடுங்கின. ஒரு விநாடி அதையே பார்த்தபடி இருந்தான். பிறகு, "இது என்ன கிளிஞ்சல் மாலை?" என்றான்.

பங்கஜத்துக்குப் பக்கென்றது. ஒரு காலத்தில் அந்தச் சங்கு மாலையை உயிர் நிலையாகக் கருதிய கணவரா இப்படி அதைக் கிளிஞ்சல் மாலை என்கிறார்? கனவில் தோன்றியபோதுகூட அந்த மாலை சிதையாமல் இருக்கும் வரை அவள் சௌபாக்கியத்திற்கு எந்தக் குறைவும் வராது



என்று சொன்னாரே? அவரே இப்போது அதை வெறும் கிளிஞ்சல் மாலை என்று சொல்கிறாரே!

வேதனையோடு நினைத்தாள் பங்கஜம். மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு, ராஜனோடு ஏதும் பேசாமல் நடந்தாள். இருவரும் கடற்கரையோரமுள்ள பாறைகள் பகுதிக்கு வந்தனர். பாறைகளைப் பார்த்ததும் அவளுக்கு ஒரு நினைவு வந்தது. அதே பாறைகளின் நிழலில்தானே அன்று பாபாவைப் பார்க்கச் செல்லுமுன் அவளும் ராஜனும், நெருக்கமாக உட்கார்ந்திருந்தனர்!

மனமும், உடலும் அயர்ந்து பாறையின் நிழலில் உட்கார்ந்தாள் பங்கஜம். சில விநாடிகளுக்குத் தன் அருகில் கணவர் இருப்பதையும் மறந்து கடலைப் பார்த்து இருந்தாள். ஒதுக்குப்புறமான இடம். ஆள் நடமாட்டம் இல்லை. நடைபாதையை விட்டு ஒதுங்கிய இடம். சுற்றிலும் பாறைகள், மரங்கள் காதலுக்கு ஏற்ற இடம். அவள் சாய்ந்திருந்த பாறை வழவழவென்று சோபாபோல் இருந்தது.

திடீரென்று ஒரு கை தன் தோளைப் பிடித்து இழுப்பதை உணர்ந்தாள். திரும்பிப் பார்த்தாள். ராஜன் அவளை ஆவலுடன் பார்த்தபடி சிரித்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. அழகான பற்கள் முத்துச் சரம்போல் தெரிந்தன. அவன் மூச்சு வேகமாக வந்து போய்க் கொண்டிருந்தது. அவன் கை அவளை எடுத்துத் தன் மடியில் அவளைக் கிடத்திக் கொண்டது. இன்னொரு கை அவள் இடுப்பைச் சுற்றி வட்டமிட்டது.

எல்லையில்லா இன்பமும் வெறுப்பும் ஒருங்கே சேர்ந்து பங்கஜத்தைச் சூழ்ந்து கொண்டன. அவளை அணைப்பது அவள் கணவன்தான். அவள் உடலை உணர்ந்த கணவன் தான். இருந்தாலும்... அவன் முகத்தில் தோன்றிய வெறி அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தது. அவள் திமிறினாள்.

## 27

ராஜன் முகம் பங்கஜத்தின் முகத்தை நெருங்க மூச்சு வெப்பத்தோடு அவன் முகத்தில் வீச பங்கஜம் திணறினாள். அவன் கை அவள் உடலில் பட்டதும், அவள் தேகத்தில் ரத்தம் வேகமாக ஓடிற்று. அவள் பார்வை மங்கியது. இருள் சூழ்ந்தது. இன்பமும் சூழ்ந்தது பங்கஜத்தை. அந்த இன்பம் தவறான இன்பம் என்று தோன்றியது பங்கஜத்துக்கு. என்ன விசித்திரமான நிலை. அவள் கணவனோடு அவள் தவறு செய்தாள். தன் கைகளால் அவனைத் தடுக்க முயற்சித்தாள். முடிய வில்லை. எவ்வளவு நாட்கள் உணராது இருந்த இன்பம், எவ்வளவு நாட்கள் நினைத்து நினைத்துப் பார்த்து ஆனால் நிகழாத இன்பம், அது இன்று நிகழும்போது அவள் உடலே அவள் மனத்தையும் மீறி அதை ஏற்றுக் கொண்டது. அவள் உடல் அவள் மனத்தோடு முரண் செய்தது. அலை அலையாக ஒரு போதை அவளைச் சூழ்ந்தது. இன்னும் பல லட்சம் அலைகள் பாக்கி இருக்கின்றன என்று உணர்த்தியது உடல். கணவனுக்குள் மனைவி ஒன்றானாள். விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே எங்கோ மகிழ்ச்சி என்ற திரிசங்கு சொர்க்கத்தில் மிதந்தாள். அந்தச் சொர்க்கத்தில் கட்டுப்பாடு, பண்பு என்ற வரம்புகளுக்குப் பொருள் இருப்பதாகவே தெரிய வில்லை. அந்தச் சொர்க்கத்தில் காலம், இடம் என்ற பரிமாணங்கள் மறைந்தன. ஒரு வினாடி என்பது அங்கு கல்பகோடி காலமாக விரிந்தது. யுகங்கள் வினாடிகளாக குறுகின. அந்த இன்பத்தில் அவர்கள் இருந்த இடம் பாறை என்பது இருவருக்கும் புரியவில்லை. உடலும், உள்ளமும் அவர்களுக்கு அப்போது அங்கு இல்லை. சத்தும் மறைந்தது. சித்தும் மறைந்தது. ஆனந்தமே மிஞ்சி நின்றது. ராஜனையும் பங்ஜகத்தையும் இணைத்த ஆனந்த மின்னல் மின்னி மறைந்ததும் உலகம் அவர்களிடம்





திரும்பியது. கடலோசை மறுபடியும் கேட்டது. அவர்கள் கிடந்த பாறை உறுத்தியது. உள்ள வெப்பத்தில் ஒரு வினாடிக்கு மறைந்து இருந்த சூரிய வெப்பம், மறுபடியும் தெரிந்தது. ஒருவர் இருவராகி, இருவரும் வெட்கித் தரையைப் பார்த்தனர். வெட்கத்தோடு பண்பு, கட்டுப்பாடு எல்லாம் திரும்பின. அவர்களைச் சூழ்ந்திருந்த உலகத்தைக் கண் திறந்து பார்க்க இருவருமே கூசினர். ராஜன் கண்களைத் திறந்து பங்கஜத்தைப் பார்த்தான். கலைந்த கூந்தல், வியர்த்த முகம், இவைதான் தோற்ற மளித்தன. அவன் மனவாசலில் கூட்டமாகப் பழைய ஞாபகங்கள் குமுறி எழுந்து வெளியே வரத் துடித்தன. இந்த அனுபவம் புதியதுபோல் தோன்றினாலும் புதியதல்ல என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. அந்த எண்ணத்தோடு மற்றப் பழைய ஞாபகங்களும் மனக் கதவை உடைத்துக் கூட்டமாக வெளி வந்திருக்கும். ஆனால் ஐயோ, முன்பின் தெரியாதவளோடு தவறு செய்து விட்டோமோ என்ற குற்ற உணர்ச்சி அலைபோல் அவன் மனத்தில் எழுந்து ஞாபகங்களை மறுபடியும் அடிமனத்தில் புதைத்தது. ராஜன் பங்கஜத்தைப் பார்த்த பார்வையிலிருந்து இந்த அனுபவம், அவனுக்குப் பழைய ஞாபகத்தைக் கொடுக்கும் என்றுதான் நினைத்தாள். ஆனால் ராஜன் பங்கஜத்திடம், "பங்கஜம், என்னை மன்னித்து விடு, என்னை மன்னித்துவிடு" என்றான்.

"நல்ல வேளை, மிஸஸ் பங்கஜம் என்று அழைக்காமல் பங்கஜம் என்று அழைக்கிறாரே அதுவே போதும்" என்று நினைத்தாள் அவள். ராஜன் முகத்தில் ஏற்பட்ட மாறுதல் அவன் தன்னையே வெறுக்கிறான் என்பதைக் காட்டியது.

"பங்கஜம், எனக்குப் புரியாத சக்தி, என்னை உந்தித் தவறு செய்யச் செய்து விட்டது. எனக்கு ஒன்றும் புரிய வில்லை. ஒன்றுமே புரியவில்லை!" என்று இருமுறை சொல்லிவிட்டுத் தரையைப் பார்த்தான்.

யாருக்கு எது புரிகிறது? இந்த மனம் என்ன என்று

புரிகிறதா? இந்தக் கடல் என்ன என்று புரிகிறதா? நாம் பிறந்ததன் காரணம் நமக்குப் புரிகிறதா? புரிந்ததுபோல் நடிக்கிறோம் அல்லாமல் ஏதாவது உண்மையிலேயே புரிகிறதா? ஏதோ ஒரு புரியாத சக்திதான். நம்மை நல்லது கெட்டது இரண்டிலும் உந்தித் தள்ளுகிறது. இத்தனை வருடங்கள் நிமிஷம் நிமிஷமாக உங்கள் நினைவால் துடித்தேனே, ஏன், எதற்கு? அதுவும் ஒரு புரியாத சக்திதான்! இன்பம், இனிப்பு, அதற்கடியில் துன்பம், துடிப்பு மறுபடியும் இன்பம், மறுபடியும் துன்பம் இப்படி அடுக்கு அடுக்காக வைக்கப்பட்ட மிட்டாயாகத் தானே வாழ்வு இருக்கிறது. அது ஏன் என்று நமக்குப் புரிகிறதா!" என்று இவ்வாறு எல்லாம் பங்கஜமும் நினைத்தாள். ஆனால் வாய் திறந்து எதுவும் பேசவில்லை.

சட்டென்று திரும்பினாள். ராஜன் மெள்ள எழுந்திருப்பதைப் பார்த்தாள். பங்கஜமும் எழுந்தாள், ஆடைகளைச் சரிசெய்து கொண்டு.

ராஜன் கடற்கரை நோக்கிப் பேசாமல் நடந்தான். பங்கஜமும் மௌனமாக நடந்தாள். ராஜன் கடலைப் பார்த்தபடி நின்றான். தன்னுடைய மேல் சட்டை, 'பான்ட்' இரண்டையும் கழற்றினான். ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவள் போல அவள் நின்றாள். ராஜன் வேகமாகக் கடலில் இறங்க ஆரம்பித்தான். பங்கஜம் திகைத்துக் கடலைப் பார்த்தபடி நின்றாள். அவளால் அசைய முடியவில்லை.

ராஜன் குளிக்கப் போகிறானா? அவன் இப்போது ஏன் குளிக்க வேண்டும்! அவன் தள்ளாடியபடி கடலில் போய்க் கொண்டிருந்தான்! கடல் அலை அவன் கழுத்தளவுக்கு வந்து விலகியது. பங்கஜம், "ராஜன்!" என்று கூப்பிட வாயசைத்தாள். வார்த்தைகள் வெளிவரவில்லை. கடலை நோக்கிக் காலை எடுத்து வைத்தாள். கால், மணலை விட்டு நகர மறுத்தது. நுரையோடு ஓர் அலை அவள் தலையைத் தாண்டிச் சென்றது.

www.t.me/tamilbooksworld



பங்கஜத்தின் உடல் சிலிர்த்தது. "ராஜன்!" என்று அலறினாள். அடுத்த வினாடி பங்கஜம் கடலை நோக்கி ஓடினாள். ஒரு பேரலை அவளை இழுத்துச் சென்றது. கால் தரையில் பாவாமல் எங்கோ மிதப்பதுபோல் தெரிந்தது. அடுத்த வினாடி முழங்கால் அளவு தண்ணீரில் நின்றாள். எதிரே சற்றுத் தூரத்தில் தலையில் நீர் சொட்ட ராஜன் அவளை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். உடனே பங்கஜத்தின் வலது புறமாக வந்த அலை அவளை முழுக்கி இழுத்துச் சென்றது. நீரும் மணலும் அவளோடு சேர்ந்து சரிவதை உணர்ந்தாள். அன்று பாபா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. நீரும் மணலும் உன்னை விடாது என்று ஏதோ சொன்னார் அல்லவா என்று நினைக்கும் போதே தண்ணீர் அவள் மூக்கில் நுழைவதை உணர்ந்தாள். திடீர் என்று தலை நீருக்கு மேல் வருவதும், ராஜன் முகம் தெரிவதையும் உணர்ந்தாள்.

ராஜன், "பங்கஜம்!" என்று அழைத்துக் கொண்டிருக்கும்போதே ஓர் அலை அவளைத் தண்ணீரிலே அடித்துச் சென்றது. நீந்த முயற்சி செய்தாள் பங்கஜம். ஆனால் அவள் கையும் காலும் நீந்த மறுத்தன. அதே சமயத்தில் ராஜனுக்குக் கால்களும் கைகளும் அவனையுமறியாமல் நீந்தத் தொடங்கின.

எப்போது நீந்தக் கற்றுக் கொண்டோம் என்பது அவனுக்கே விளங்கவில்லை. வெகு சுலபமாக அலைகளை அணைத்து அலைகளின் மேல்புறம் வந்தான்.

அப்போது பனிச்சென்று இங்கிலாந்தில் ஒரு துரையிடம் நீந்தப் பழகியது ஞாபகத்துக்கு வந்தது. அதே வினாடி அந்தத் துரையிடம், "மிஸ்டர் நார்ட்டன், நான் ஊர் திரும்பும்போது என் மனைவியிடம் எனக்கு நன்றாக நீந்தத் தெரியும் என்று நிரூபிக்க வேண்டும்" என்று சொன்ன வார்த்தைகளும், அதற்குப் பதிலாக அவர் சிரித்ததும் ஞாபகத்திற்கு வந்தது. நார்ட்டன் துரை எக்குச் சிலையில் நீந்தக் கற்றுக் கொடுத்தார்

அதனால்தான் இன்று நீந்துகிறேன் என்ற நினைவு வந்ததும் எதிரே ஐம்பது கஜதூரத்தில் பங்கஜம் கடல் அலையில் மேலும் கீழுமாக அலைக்கழிக்கப்படுவதைப் பார்த்தான். அதே வினாடி அவன் கண் பொன்மங்கலம் காவிரிக்கரையும், அங்கு இதே பங்கஜம் முழுகவிருக்கும் தன்னைக் காப்பாற்ற வரும் காட்சியும் தோன்றின. தொடர்ந்து ஒவ்வொரு விஷயமாக ஞாபகத்துக்கு வரத் தொடங்கியது.

ராஜனைக் கூட்டமாக ஞாபகங்கள் மோதும் நிலையில் பங்கஜத்தின் மனத்தை விட்டு ஞாபகங்கள் மறையத் தொடங்கின. கடலின் இருண்ட நீர்ப்பகுதியில் இறங்கிக் கொண்டிருந்தாள் பங்கஜம். அப்போது தரையை நோக்கி வந்த ஓர் அலை, அவள் மெலிந்த தேகத்தை தரையை நோக்கித் தள்ளியது. பங்கஜத்தின் உடல் தரைக்கருகில் இருந்த ராஜன் பக்கம் தள்ளப்பட்டது. இவ்வளவும் இரண்டு மூன்று வினாடிகளுக்குள் நிகழ்ந்தன.

மிக லாவகமாக நீந்திக் கொண்டிருந்த ராஜன் பார்வையில் பங்கஜம் பட்டதும், அவன் பாய்ந்து அவளைப் பிடித்தான். அவளை இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தான். அவள் நிறையத் தண்ணீர் குடித்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டான். அவளைத் தரையில் கிடத்தி அவள் உடலைப் பலவிதமாக அசைத்து உள்ளே சென்றிருந்த கடல் நீரை வாய், மூக்கு வழியாக வெளியேற்றினான். நீரில் மூழ்கியவர்களுக்குச் செய்யும் இந்த முதல் உதவி சிகிச்சையும் நார்ட்டன் துரையிடம் கற்றுக் கொண்டது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

நீர் அலைகளின் சீற்றம் எப்படியோ ராஜன் மனத்தின் ஒரு பகுதியில் உள்ள ஞாபக அலைகளை எழுப்பி விட்டன என்பதை உணர்ந்தான். அவனுக்கு முதலில் குழப்பமாக இருந்தது. 'நாம் எங்கு இருக்கிறோம். இங்கிலாந்து கடற்கரையிலா, இல்லை, பம்பாயிலா!''

பங்கஜத்தைத் திரும்பிப் பார்த்தான். சட்டென்று



அன்று காலை அவளோடு எலிபெண்டா குகைக்கு வந்தது. பிறகு பாபாவைப் பார்க்கச் சென்றது. பிறகு அவ்வளவு இன்பமாக இருந்தது எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன.

கெய்ரோ ஆஸ்பத்திரியிலிருந்து பம்பாய் வரும்வரை உள்ள ஞாபகங்கள் கோவையாக இருந்தன. அது மட்டும் இல்லாமல் பொன்மங்கலம் காவேரிக் கரையில் பங்கஜம் நீந்தத் தெரியாத தன்னைக் காப்பாற்றியதும், பிறகு அவளை மணந்து கொண்டதும், பிறகு பம்பாய் வந்ததும், சீமைக்குச் சென்றதும், தொடர்ந்து சங்கிலிபோல் அவன் மனத்தில் தோன்றின.

நார்ட்டன் துரையிடம் நீந்தக் கற்றுக் கொண்ட கட்டம் வந்ததும் ஞாபகம் நின்று விட்டது. அதற்கப்புறம் என்ன நிகழ்ந்தது என்று அவனுக்குப் புரியவில்லை. எல்லாம் ஒரே இருளாக இருந்தது. எது உண்மை, எது பொய் என்று தெரியாமல் குழம்பியபடி இருந்தபோது பங்கஜம் கண் விழித்தாள்.

''பங்கஜம்...பங்கஜம்...'' என்று அவளை அணைத்துக் கொண்டான்.

பங்கஜம் ஒன்றும் புரியாமல், ''நீங்களா என்னைக் காப்பாற்றினீர்கள்?'' என ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஆமாம்...பங்கஜம்...நானே நான் காப்பாற்றினேன். எனக்கு இப்போது நீந்தத் தெரியும். ஆனால் நன்றாக நீந்தத் தெரிந்த நீ எப்படி மூழ்கினாய்?'' என்று கேட்டான்.

பங்கஜம் ஆச்சரியமடைந்தாள். ''எனக்கு நீந்தத் தெரியுமென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''பொன்மங்கலம் காவேரியில் என்னை நீ காப்பாற்ற வில்லையா? அதை மறந்து விட்டாயா?'' என்று கேட்டான்.

பங்கஜம் அதிர்ச்சியும், மகிழ்ச்சியும் ஒருங்கே தாக்கின.

www.t.me/tamilbooksworld

## 28

பங்கஜம் கிட்டத்தட்ட ஒரு விஞ்ஞானியின் நிலையில் இருந்தாள். விஞ்ஞானி பல வருடங்களாகத் தொடர்ந்து ஒரு குறிக்கோளுடன் இயற்கையின் ரகசியம் ஒன்றைக் கண்டுபிடிக்க விழைகிறான். பசியை மறந்து, தூக்கத்தை மறந்து, சலியா உழைப்பால் இதோ இன்று உண்மையைக் கண்டு விட்டோம், நாளை கண்டுபிடித்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் வேலை செய்கிறான். அந்த உண்மை அவனை முடிவில் ஏமாற்றி விடுகிறது. அவன் இது நாள் உழைத்ததெல்லாம் தவறான பாதை, வீண் முயற்சி என்பதை உணர்கிறான். அவன் மனம் உடைந்து உள்ளம் குறுகிச் சோர்கிறான். தான் வாழ்க்கையில் தோல்வி யடைந்து விட்டதாக நினைக்கிறான். அப்போது திடீரென்று வேறு ஓர் இயற்கையின் ரகசியம் அவன் மனப் பார்வையின் முன் வெடிக்கிறது. விஞ்ஞானி தேடிய உண்மை கிடைக்கவில்லை. அவன் தேடாத ஓர் உண்மை ஓர் இயற்கையின் சட்டம், அவன் தேடிய தத்துவத்தை விடச் சிறந்த தத்துவம் அவனுக்கு அளிக்கப்படுகிறது. அந்தப் புதுத் தத்துவத்தைக் கண்டுபிடித்த மேதையா கிறான்.

அதுபோல் பங்கஜம் காலையிலிருந்து ராஜனின் ஞாபகம் திரும்ப எவ்வளவோ முயற்சிகள் செய்தான்! பலனில்லை. முடிவில் அவனுக்கு ஞாபகம் திரும்பியது மட்டுமல்லாமல், அவன் அவள் உயிரையும் காப்பாற்றியிருக் கிறான். சிக்கல்கள் தீர்ந்து விட்டன. இனி வாழ்க்கைப் பாதையில் தேன் சிந்தும் என்று நினைக்கவில்லை பங்கஜம். அவளுக்கு ஓர் அச்சம் இருந்து கொண்டே இருந்தது. பட படப்பில்லாமல் ராஜனிடம் நடந்து கொண்டான்.

ராஜன்தான் உணர்ச்சி வசப்பட்டுப் போனான். ''பங்கஜம், எனக்குக் கொஞ்சம் விளக்கமாக, கோவையாக நீ என்னைச் சந்தித்ததைப் பற்றிச் சொல்கிறாயா?'' என்று கேட்டான்.

www.t.me/tamilbooksworld



பங்கஜம் அவர்கள் குடும்பத்தோடு பம்பாய் வந்தது, ஹார்பரில் வின்சென்டைச் சந்தித்தது, ராஜன் கப்பலில் இறங்கி வந்து அவர்கள் முன் நின்றும் அவர்கள் யாரையும் அடையாளம் கண்டு கொள்ளாமல் வின்சென்ட், சித்தப்பனுடன் சென்றது; பிறகு அவள் வின்சென்ட் என்பவரிடமிருந்து விவரங்கள் தெரிந்து கொண்டது— எல்லாவற்றையும் சொன்னாள். ராஜன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். மறுநாள் காலை தன்னை அலங்கரித்துக் கொண்டு ஹோட்டல் லாபியில் அவனுக் காகக் காத்திருந்த நிகழ்ச்சியைச் சொல்லும்போது, பங்கஜத்துக்கு அழுகையே வந்து விட்டது. ''என்ன கொடுமையாக உனக்கு இருந்திருக்க வேண்டும்? மணந்த புருஷனிடம் நெருங்க நீ மயக்குகாரிபோல் நடிக்க வேண்டி யிருந்திருக்கிறதே! அது மட்டுமா? ஞாபகமில்லாத நிலை யிலே சற்று முன் நான் இந்தப் பாறைகளின் நடுவே உணர்ச்சிகளால் உந்தப்பட்டு உன்னை அடைந்தபோது, நீ எப்படித் துடித்திருக்க வேண்டும்! அம்மாவும் அப்பாவும் நான் கப்பலில் இருந்து இறங்கி அவர்களைப் பார்த்தும் பாராதவன்போல் சென்றபோது, எப்படி வேதனைப்பட்டி ருப்பார்கள்!'' என்று சொல்லிவிட்டு, ''வா பங்கஜம், ஹோட்டலுக்குப் போவோம்'' என்றான்.

பங்கஜமும் ராஜனும் மறுபடி படகில் கடந்து பம்பாய் வந்தனர். நேராக ராஜனை ராமலிங்கம் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அழைத்து வந்தாள். ராமலிங்கமும் சிவகாமியும் நமச்சிவாயமும் அப்போதுதான் மும்பாதேவி கோவிலுக்குச் சென்று திரும்பி வந்தனர். சற்று நனைந்த ஆடையோடும், கலைந்த தலையோடும் நுழைந்த ராஜனையும் பங்கஜத்தையும் பார்த்தவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

ராஜன் ஓடிப்போய், ''அம்மா!'' என்று தன் தாயைக் கட்டிக் கொண்டான்.

சிவகாமி சந்தோஷம் தாங்காமல், ''ராஜன்...ராஜன்'' என்று பலமுறை கூறினாள்.

நமச்சிவாயத்தை வணங்கினான் ராஜன். டெலிபோன் மூலம் செய்தியை வின்சென்ட்டிற்கும் சித்தய்யனுக்கும் தெரிவித்ததும், அவர்கள் உடனே ஹோட்டலுக்கு வந்தனர். இவ்வளவு சீக்கிரத்தில் ராஜனுக்கு ஞாபகம் திரும்பும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

ராஜன், வின்சென்ட்டிடம், "சார், உங்கள் உதவிக்கு என்ன கைம்மாறு செய்வது என்று புரியவில்லை" என்று உணர்ச்சியோடு நன்றி தெரிவித்தான்.

அன்று இரவு ஹோட்டலில் எல்லோருக்கும் தடபுடலாக விருந்து வைத்தார் ராமலிங்கம். என்ன பேசுவது என்று தெரியாமல் கண்களில் நீர் ததும்ப வாயில்லாப் பிரயாணிபோல் சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொண்டார் நமச்சிவாயம்.

தன் சிநேகிதியின் கணவனுக்கு ஞாபகம் திரும்பி அவன் மகிழ்ச்சியோடு ஹோட்டல் திரும்பியதை ஒரு மூலையில் இருந்தபடி குழப்பத்தோடு கவனித்தாள் சாவித்திரி. மற்றவர்களின் நிறைந்த சந்தோஷத்தில் சாவித்திரியை யாரும் கூர்ந்து கவனிக்கவில்லை. பங்கஜமே அவளைக் கூர்ந்து நோக்கியிருந்தால் சாவித்திரியின் சிரித்த முகத்தில் உள்புறம் உள்ள வேதனையைப் புரிந்து கொண்டிருப்பாள். விருந்து முடிந்து எல்லோரும் ஹோட்டல் பால்கனியில் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். தங்க ரேக் போட்ட 'பனாரஸ் பீடா'வை எல்லோரும் போட்டு மெல்லும்போது சித்தய்யன், ராஜனிடம் ஒரு கேள்வி வேடிக்கையாகக் கேட்டான். "ராஜன், நாங்கள் பேச வேண்டியதை எல்லாம் பேசியாகி விட்டது. இனிமேல் நீதான் ஒரு சிறு லெக்சர் தர வேண்டும்."

"லெக்சரா! எதைப்பற்றி லெக்சர் செய்ய வேண்டும்?" என்றான் ராஜன்.

"டோப்ருக் சண்டை நடந்தபின் நீ கெய்ரோ ஹாஸ்பிடலுக்கு வரும்வரை நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நீ சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.



பங்கஜத்துக்கு அதைப்பற்றியெல்லாம் ஏன் சித்தய்யன் கிளறுகிறார் என்று பயமாக இருந்தது.

ராஜன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"டோப்ருப் சண்டையா? என்ன சொல்கிறாய் சித்தய்யன்?" என்று சலிப்புடன் கேட்டான்.

சித்தய்யன் விடாமல், "டோப்ருக் ஆர்மி மெஸ் உனக்கு ஞாபகமில்லையா?" என்று கேட்டான்.

"டோப்ருக் ஆர்மி மெஸ்... டோப்ருக் ஆர்மி மெஸ்..." என்று இருமுறை ராஜன் தனக்குத் தானே சொன்னான்.

பிறகு ராஜனின் கண்கள் சுழன்றன. உதடுகளைக் கடித்துக் கொண்டான். அவன் முகம் சிவந்தது. சித்தய்யனை விறைத்துப் பார்த்தான். "ப்ளீஸ் ப்ளீஸ்! என்னைச் சித்திரவதை செய்யாதே. எனக்குத் தலை சுற்றுகிறது. பங்கஜம், கொஞ்சம் தண்ணீர் கொடு" என்று சொல்லியபடியே நாற்காலியில் சாய்ந்தான்.

பங்கஜம் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை குடித்துவிட்டு ஒன்றும் பேசாமல் இருந்தான் ராஜன்.

சித்தய்யன் நல்லதெல்லாம் கூடி வரும் வேளையில் பேசக் கூடாததைப் பேசி விட்டோமோ என்று வருந்தினான். "என்னை மன்னித்து விடு ராஜன்" என்று கேட்டுக் கொண்டான்.

ராஜன் சித்தய்யனை ஒருவிதமாகப் பார்த்தான். "பரவாயில்லை, என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு ஓய்வு தேவை" என்று கூறிவிட்டு, பங்கஜத்தின் அறைக்குள் சென்று படுக்கையில் படுத்தான்.

பங்கஜமும் மற்றவர்களும் சிறிது நேரம் பேசிவிட்டுப் படுக்கச் சென்றனர்.

ஃ ஃ ஃ

அன்று சாவித்திரி, வேறு தனி அறையில் படுத்துக் கொண்டாள். வெகு நேரம்வரை தூக்கமில்லாமல் புரண்டு கொண்டிருந்தாள். பங்கஜத்தின் கணவன் திரும்பி

விட்டான். அவன் தோழமையை இனி நான் எதிர்பார்க்க முடியாது. இனிமேல் சாகும் வரையில் தன்னுடைய அப்பா அம்மா முகத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்று நினைத்தாள். அவளுக்கு அவள் எதிர்காலமே அர்த்தமற்றதாகத் தெரிந்தது. எழுந்து ஓட்டலை விட்டு ஓடிவிடலாமா என்று கூடத் தோன்றியது.

சாவித்திரி எழுந்து ஓட்டல் வராந்தாவில் நின்றாள், மெல்ல வராந்தாவில் நடக்க ஆரம்பித்தாள்.

வராந்தாவின் மூலையில் யாரோ கிசுகிசுவென்று பேசுவதுபோல் தெரிந்தது. அங்கு போடப்பட்டிருந்த சோபாவில் ஓர் ஆங்கிலோ இந்தியன் உட்கார்ந்திருந்தான், அவன் மடியில் கவுன் அணிந்த இளம்பெண் தலை வைத்துப் படுத்திருந்தாள். அவன் அவளைத் தூக்கினான்,

சாவித்திரிக்குக் குப்பென்று வியர்த்தது. உடனே தன் அறைக்கு ஓடிவந்து படுத்தாள். அந்தக் காட்சி அவள் கண் முன்பே நின்றபடி இருந்தது.

ஃ ஃ ஃ

மறுநாள் அதிகாலையில் ராமலிங்கம் எழுந்து நமச்சிவாயத்தோடு சென்று சித்தய்யன், வின்சென்ட் இருவரையும் பார்த்து வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

ராமலிங்கம் தன் நன்றியின் விளக்கமாக நவரத்தினங்கள் பதித்த தங்க சிகரெட் பெட்டிகளை வின்சென்ட்டுக்கும் சித்தய்யனுக்கும் பரிசளித்தார். முதலில் வின்சென்ட் வாங்க மறுத்தார். ராமலிங்கத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கி ஏற்றுக் கொண்டார்.

அன்று மாலையே ஒரு ப்ளேன் ஆர்டர் செய்து எல்லோரும் சென்னை திரும்புவது என்று முடிவாயிற்று.

விமான நிலையத்தில் வின்சென்ட் வழியனுப்பினார். சித்தய்யனும் ராமலிங்கத்தோடு சென்னைவரை வந்து கொழும்பு செல்வதாக முடிவு செய்தான்.

ராமலிங்கத்தின் வீடு மறுபடியும் களையோடு விளங்கிற்று. நண்பர்கள் கூட்டமாக வந்திருந்தனர்.



பொன்மங்கலம் பாரிமங்கலம் பந்துக்கள் வந்தபடி இருந்தனர்.

ராமலிங்கம் தமது பந்துக்களிடம் யாரும் ராஜுவிடம் "டோப்ருக் சண்டை நிகழ்ச்சியைப் பற்றிப் பேசக் கூடாது" என்று சொல்லி எச்சரித்திருந்தார்.

மகன் திரும்பிய உற்சாகத்தில் ராமலிங்கம் மறுபடியும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார். பெரிய கிளப்புகளுக்குச் சென்று அவர் மறுபடியும் சீட்டாடத் தொடங்கினார்.

பங்கஜமும் ராஜுவும் சென்னை திரும்பியதும் ஊட்டியிலே இரண்டு மாதம், கோடைக் கானலில் இரண்டு மாதம் என்று இரண்டாவது தேனிலவை அனுபவித்தனர்.

நமச்சிவாயம் பொன்மங்கலம் சென்றதும் தன் மகன் எதிர்காலத்தைப் பற்றிச் சரியான ஜோதிடம் சொன்ன வள்ளுவனை வரவழைத்து, அவனுக்கு முதல் தரமான நிலமாகப் பத்து ஏக்கர் சாஸனம் செய்தார்.

மாறுபட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக ராமலிங்கம் அவர் முன்பு ஒதுங்கி நின்ற காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஒரு முக்கிய நபராக மாறினார்.

இது சாவித்திரியின் தந்தையான ராவ்ஜிக்கு—பழைய காங்கிரஸ் தியாகிக்கு—புன்முறுவலைத் தந்தது. பொன்மங்கலம், பாரிமங்கலம் தொகுதியிலிருந்து காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ராமலிங்கம்.

அதே தினத்தில் சுப வேளையில் பொன்மங்கலத்தில் பங்கஜம் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பொன்மங்கலம், பாரிமங்கலம் பண்ணைகளுக்கு வாரிசு இல்லாமல் போய்விடும் என்ற நிலைமாறி, இரண்டு பண்ணைகளுக்கும் ஒரு பொது வாரிசு ஏற்பட்டுவிட்டதாக எண்ணி மகிழ்ந்தனர்.

ஊரும் உலகமும் சுற்றமும் பங்கஜம்—ராஜன் நிலையைச் சந்தோஷத்தின் உச்சகட்டமாக நினைத்தாலும், உண்மையிலேயே பங்கஜம் தன் நிலை பூராவும் சந்தோஷம் என்று நினைக்கவில்லை. ராஜன் வாழ்வின் ஒரு பகுதி பற்றி அவனுக்கு ஞாபகம் திரும்பவே இல்லை.

ஒவ்வொரு சமயத்தில் அவள், அவனுக்கு ஞாபகம் திரும்பவில்லையோ, ராஜன் தன் வாழ்வின் அந்தப் பகுதியைப் பற்றிப் பேச விரும்பவில்லையோ என்று சந்தேகப்பட்டாள். அவர்கள் தொடர்பில் ஏதோ ஒரு குறை இருப்பதாகத் தெரிந்தது.

திடீர் திடீர் என்று காரணம் சொல்லாமல் இரண்டு நாட்கள் எங்காவது காணாமல் போய்விடுவான். காரணம் கேட்டால், அவனுக்குக் கோபம் வரும்.

எகிப்து மொழிப் பாடல்களும் எகிப்து மொழிப் புத்தகங்களும் கடிதங்களும் அவன் அறையில் கிடந்தன. அவைகளைப் பற்றிப் பங்கஜம் விசாரித்தபோது தனக்கு ஒன்றும் தெரியாது என்று ராஜன் சொன்னான். அம்மாதிரி சிறு விஷயங்களைப்பற்றிப் பங்கஜம் பாராட்டவில்லை.

அவள் மனம், பிறந்த குழந்தையின் முகத்தைப் பார்த்து மகிழ்வதிலேயே கழிந்தது.

தன் வாழ்க்கையில் இனிமேல் பெரிய துக்கமோ குழப்பமோ நிகழ முடியும் என்ற பயம் பங்கஜத்துக்குச் சிறிதும் இல்லை.

## ௨௯

கணவனை இழந்து விட்டதாகப் பங்கஜம் நினைத்திருந்த போது, பங்கஜத்துக்கும் சாவித்திரிக்கும் இடையே இருந்த தொடர்பின் வலிமை, நாள் போக்கில் குறைய ஆரம்பித்தது. கணவனைக் கவனிக்கவும், குழந்தையைக் கவனிக்கவுமே பங்கஜத்துக்குக் காலம் போதவில்லை.



சாவித்திரி பங்கஜத்தின் மடியில் குழந்தையைப் பார்க்கும்போது, அந்தக் குழந்தையின் பராமரிப்பில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவாள். குழந்தைக்குக் குளிப்பாட்டுவது, புட்டியில் பால் கொடுப்பது அதற்கு விளையாட்டுக் காட்டித் தூங்க வைப்பது இவற்றில் தான் இழந்த வாழ்வை மீண்டும் பெற்று விடலாம் என்று நினைத்தாள். ஆனால் பங்கஜம் அந்தத் தாய்மைப் பணிகளையெல்லாம் தானே கவனித்துக்கொண்டாள். எப்போதாவது ஒரு சமயம் சாவித்திரியிடம் தன் குழந்தையைக் கொடுப்பாள். ராஜனும் பங்கஜமும் ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் சமயம் குழந்தையைச் சாவித்திரியிடம் கொடுத்துத் தோட்டத்தில் எடுத்துச் சென்று வரச் சொல்வான். குழந்தையின் நிர்மலமான சிரிப்பைப் பார்க்கும்போது அவளாலும் ஒரு ஜீவனுக்கு மகிழ்ச்சி தர முடியும், அவளுக்கும் இந்தப் பூமியில் ஓர் உபயோகம் இருக்கிறது என்பதை நம்பினாள்.

'பங்கஜத்தின் வாழ்வு மலர ராஜன் திரும்பி விட்டான். குழந்தையை என்னிடமே விட்டுவிட்டால் இவளுக்கு என்ன குறைந்துவிடும்?' என்று சாவித்திரி நினைப்பாள். ஆனால் பங்கஜத்தின் குழந்தை இரண்டு குடும்பங்களுக்கு வாரிசல்லவா? ராமலிங்கம் சிவகாமி, நமச்சிவாயம் பங்கஜத்தின் தாய் எல்லோருமே போட்டி போட்டுக்கொண்டு குழந்தையைத் தூக்கிச் சீராட்டுவார்கள். எல்லோருக்கும் சொந்த வேலையிருக்கும் போது தான், பங்கஜத்தின் செல்ல மகன் சாவித்திரியின் கையில் கிடைப்பான். அப்போதுதான் அவள் அந்தச் சிசுவைத் தன் மடியில் போட்டுக் கொண்டு, அவனோடு பேசுவாள். அவனை அந்தரத்தில் தூக்கிப் போட்டுப் பிடிப்பாள். அந்தக் குழந்தை 'கிலுகிலு'வென்று சிரிக்கும். அந்தச் சிரிப்பொலி சாவித்திரியின் உள்ளத்தை மயக்கும்.

குழந்தையிடம் அவள் பாசம் வைக்க இன்னொரு காரணமும் இருந்தது. குழந்தைக்குப் பெயர் சூட்டும்

போது எவ்வளவோ பெயர்கள் பலரால் கொடுக்கப் பட்டன. ஆனால் ராமலிங்கமும், நமச்சிவாயமும் தேர்ந்தெடுத்த பெயர் 'செல்வம்' என்ற நாமம்தான். அந்தப் பெயரைச் சொன்னது சாவித்திரிதான்.

வாழ்க்கையில் செல்வத்தை எந்தவித உருவத்திலும் அடையப் பெறாத சாவித்திரியின் மனத்தில் அந்தப் பெயர் உதயமாயிற்று. "நம் இரு குடும்பங்களுக்கும் இவன்தான் பெரிய செல்வம். நமது செல்வத்துக்கெல்லாம் வாரிசாகப் போகும் இவனுக்குச் சாவித்திரி சொன்ன பெயரையே வைப்போம். இனி இவனைச் செல்வம் என்றே கூப்பிடுவோம்" என்று பெருமகிழ்ச்சியோடு கூறினார் ராமலிங்கம்.

'இந்தக் குழந்தைக்குப் பெயரிடும் பாக்கியமாவது நமக்குக் கிடைத்ததே' என்று எண்ணி சாவித்திரி மகிழ்ந்தாள். அந்தப் பெரிய வீட்டில் ஒரு நாளைக்குப் பலமுறை 'செல்வம், செல்வம்' என்று குரல் கேட்கும். அப்போதெல்லாம் சாவித்திரி பெருமையடைவாள்.

குழந்தை செல்வனின் தொடர்பினாலேயே தன் ஜென்மத்தின் நிறைவைக் கண்டிருப்பாள் சாவித்திரி. ஆனால் அந்த இன்பத்துக்கும் ஒரு தடை ஏற்பட்டது.

ஒரு நாள் மாலை பங்கஜம் சாப்பிடும் வேளையில் தொட்டிலில் படுத்திருந்த குழந்தை அழுதான். அடுத்த அறையில் இருந்த சாவித்திரி குழந்தையைத் தூக்கினாள். வயிற்று அஜீரணமோ அல்லது வேறு எந்தக் காரணமோ குழந்தையின் அழுகை நிற்கவில்லை. செல்வம் தொடர்ந்து அழுதான். சாவித்திரி குழந்தையைத் தூக்கிப்போட்டுப் பிடித்தாள். உடனே குழந்தையின் அழுகை சிரிப்பாக மாறியது.

சாவித்திரியும் குழந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தனர். பலமுறை இப்படித் தூக்கிப்போட்டு அதைச் சிரிக்க வைத்தாள். ஒரு முறை



தூக்கிப் போடும் போது சாவித்திரியின் கை தவறியது. குழந்தை தவறித் தரையை நோக்கிச் சென்றது. ஆனால் சாவித்திரி பாய்ந்து தரையில் விழுமுன் பிடித்துக் கொண்டாள். அப்படிப் பிடிக்கும் போது கை தவறுதலாக கழுத்தில் அழுத்தி விட்டது. இந்த நிகழ்ச்சியின் போது, சாப்பிடும் அறையில் இருந்து பங்கஜமும் அவள் தாயும் வந்து விட்டனர்.

தரையில் விழப்போகும் குழந்தையைக் கண்டதும் பங்கஜம், "செல்வம்!" என்று அலறிவிட்டாள். பங்கஜம் தன்னையும் மறந்து. "என்ன சாவித்திரி, உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன், அப்படித் தூக்கிப் போட்டுப் பிடிக்காதே என்று?" என்று அலறி விட்டாள்.

பங்கஜத்தின் தாய், "சாவித்திரி நீ ஒரு துக்கிரி; உன் கை பட்டால் குழந்தை உருப்படாது" என்று கொஞ்சம் கூட இரக்கமில்லாமல் சொல்லி விட்டாள்.

பங்கஜத்தின் தாய் சொன்னதை ஊர்ஜிதம் செய்வது போல் அன்று இரவே குழந்தைக்கு ஜுரம் கண்டுவிட்டது. குழந்தையின் கழுத்துத் தசைகளில் வீக்கம் கண்டு இருப்பதாகவும், அதன் விளைவாகத்தான் ஜுரம் என்றும் டாக்டர் கூறிவிட்டார்.

குழந்தையோடு தான் விளையாடியதனால் வந்த கோளாறு என்பதைச் சாவித்திரியும் உணர்ந்து வருந்தினாள். பங்கஜமும் அவள் தாயும் சாவித்திரியைப் பார்த்த பார்வை அவளை இன்னும் அதிகமாக வருத்தப் படுத்தியது.

இரண்டு மூன்று நாட்களுக்குக் குழந்தை செல்வனின் உடல் நிலை சரியாக இல்லை. ஒன்று விட்டால் ஒன்று என்று ஜுரம், தும்மல், வயிற்றுப்போக்கு இப்படியாகத் தொடர்ந்து குழந்தையைப் பிடித்தன. சாவித்திரி, செல்வனின் நிலை குறித்துப் பயந்தே போய்விட்டாள்.

'தன் கை பட்டுத்தான் செல்வனுக்கு நோய் வந்தது. நாம் இனி அவனைத் தொடாமல் இருப்பது நல்லது' என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.

பங்கஜத்தைப் பார்க்க அடிக்கடி பங்கஜத்தின் வீட்டுக்குச் செல்வதையும் நிறுத்திக் கொண்டாள். செல்வனுக்குச் சரியாகி விட்டது என்பது தெரிந்ததும், ஒரு நாள் குழந்தை எப்படி இருக்கிறான், தொடாமல் தூர இருந்து பார்த்துவிட்டு வருவோம் என்ற ஆசையில் பங்கஜத்தின் வீட்டுக்கு வந்தாள். வழக்கம் போல் நேராகப் பங்கஜத்தின் அறை நோக்கிச் சென்றாள்.

பங்கஜத்தின் அறையில் ராஜன் கட்டிலில் படுத்து இருந்தான். அவன் மார்மீது குழந்தை செல்வன் தவழ்ந்தபடி கிடந்தான். ராஜனின் பாதங்கள் கட்டிலில் உட்கார்ந்து இருக்கும் பங்கஜத்தின் மடிமீது இருந்தன.

பங்கஜம், ராஜன் பாதத்தைப் பிடித்தபடி இருந்தாள். இந்த நிலையில் அறையின் உள்ளே செல்வது சரியல்ல என்று சாவித்திரி திரும்பிக் கொண்டிருந்தாள்.

சாவித்திரியின் எதிரே பங்கஜத்தின் தாய் வந்தாள். "இந்தா பாரு சாவித்திரி, இப்போ விஷயமே வேறே. முன்பெல்லாம் பங்கஜம் தனியாக இருந்தாள். நீ அடிக்கடி வந்து போயிட்டிருந்தது குற்றமில்லே. இப்போ அவள் புருஷனோடு தனியா இருக்கிறப்போ அடிக்கடி வர்றது, போறது நல்லா இல்லை. இது உனக்கே தெரிஞ்சிருக்கணும். இனிமேலாவது தெரிஞ்சுக்கோ" என்று வெடுக்கென்று சொன்னாள்.

சாவித்திரி அங்கு நிற்கவும் பிரியமில்லாமல் தன் வீட்டுக்கு வந்தாள். இது நடந்த பின்பு சாவித்திரி பங்கஜத்தின் வீட்டுக்குச் செல்வதையும் நிறுத்திக் கொண்டாள். பங்கஜத்துக்கும் சாவித்திரி வரவில்லையே என்பதைச் சிந்தித்துப் பார்க்க அவகாசமும் இல்லை. இரண்டு நாட்களில் பொன்மங்கலமும் சென்று விட்டாள்.



பங்கஜத்தின் தொடர்பு இல்லாத நிலையில் வீட்டில் அதிக நேரம் தங்க வேண்டி வந்தது சாவித்திரிக்கு. [illegible] நூற்றுக் கொண்டிருக்கும் தந்தையும், தம்பி போன்ற நாயும்தான் அவள் பார்வையில் இருந்தனர். படு வேகமாகச் செல்லும் உலகில், தனியே பின்னால் ஒதுக்கப்பட்ட பிராணிகளாகத் தோன்றினர் அவள் பெற்றோர். 'அப்பா எவ்வளவோ பாடுபட்டார். கடைசியில் தனி தான் மிச்சமா?' என்று நினைத்தாள். அவருக்குள் [illegible] இருக்கும் ஆத்ம திருப்தி என்ற சாம்ராஜ்யத்தின் விஸ்தீரணத்தைச் சாவித்திரியால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசியல் சூதாட்டத்தில் சிலர் வாழ்க்கை முழுவதும் தியாகம் செய்துகொண்டே இருந்து வெறும் தியாகிகளாக மடிய வேண்டி வரும்; மற்றும் சிலரின் தியாகத்துக்குச் சம்பளம் கிடைக்கும். சிலருக்கு ஒரு தியாகமும் செய்யாத போதும் பரிசு கிடைக்கும் என்பதை சாவித்திரி கண்டாள். அதன் தத்துவம் அவளுக்கு விளங்காமல் போனது ஆச்சரியமில்லை.

ஒருநாள், ராவ்ஜியை மாலையுடனும் பழத் தட்டுடனும் பார்க்க வந்தான், அவரிடம் ஒரு காலத்தில் சம்பளம் இல்லாத தொண்டராக இருந்த வெங்கடாசலம் என்பவன். அவனோடு பத்திரிகை நிருபர்களும், போட்டோ எடுப்பவர்களும் வந்திருந்தார்கள். இப்போது அவன் பெரிய புள்ளி ஆகி விட்டிருந்தான். ராவ்ஜியின் பாதத்தைத்தொட்டு வணங்கி விட்டு, வெங்கடாசலம், "நீங்கள் ஏற்றி வைத்த விளக்கு இன்று நல்ல பதவியில் செல்வாக்கோடு இருக்கிறான்" என்று பணிவோடு கூறிவிட்டுப் போனான். இது பத்திரிகையில் வெளி வந்தது.

இந்த நிகழ்ச்சி சாவித்திரியின் மனத்துக்கு ஆறுதலாக இருந்தது. நம் அப்பாவையும் மதித்து ஒரு பெரிய மனிதர் மரியாதை செலுத்தி விட்டுப் போகிறாரே என்று பெருமைப் பட்டுக் கொண்டாள். ஒரு வேலையுமில்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருப்பதைவிட,

வெங்கடாசலத்தின் மேற்பார்வையில் நடக்கும் பள்ளியில் ஆரம்ப வகுப்பு ஆசிரியையாக இருந்தால் பொழுதும் போகும், குழந்தைகளின் உறவு மனத்துக்கு ஆறுதலாகவும் இருக்கும் என்று எண்ணினாள். இது பற்றித் தந்தையிடம் சொன்னாள்.

ஆனால் ராவ்ஜி வெங்கடாசலத்திடம் செல்லத் தயங்கினார். "இதுவரை நான் கொடுத்திருக்கிறேன். எதுவும் யாரிடமும் வாங்கிக் கொண்டதில்லை, நமச்சிவாயத்தைத் தவிர. நமச்சிவாயம், 'கொடுக்கிறோம்' என்ற அகந்தையில்லாது கொடுப்பவர், உத்தம நண்பர். வெங்கடாசலம் அப்படியில்லை" என்று சொல்லிப் பார்த்தார்.

ஆனால் சாவித்திரி கேட்கவில்லை. சென்னையில் வெங்கடாசலம் நடத்தும் பள்ளிக்குத் தயக்கத்தோடு ராவ்ஜி சென்றார். வெங்கடாசலம் இருந்த அறையில் பலர் உள்ளே செல்வதும் வருவதுமாக இருந்தனர்.

சாவித்திரியை அழைத்துக் கொண்டு ராவ்ஜி அங்கு வந்தார். அங்கு வெளியே உள்ள மரப் பெஞ்சியில் உட்காரச் சொன்னான் வெங்கடாசலத்தின் பியூன்.

காலை எட்டு மணியிலிருந்து பதினொரு மணி வரை ராவ்ஜி உட்கார்ந்திருந்தார். பல பேருக்கு இட்லி தோசை ஓட்டலில் இருந்து தருவிக்கப்பட்டு உள்ளே சென்றது. பிறகு கூஜாக்களில் காப்பி உள்ளே சென்றது. தமிழ் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வந்தவர்கள் உள்ளே செல்வதும், வெற்றிலை துப்ப வெளியே வருவதுமாக இருந்தனர். ஆனால் ராவ்ஜியால் உள்ளே செல்ல முடியவில்லை. யாரும் அவரைக் கவனிக்கவுமில்லை.

சிலர் வெளியே நின்றபடியே பின்வருமாறு பேசிக் கொண்டிருந்தனர். "வெங்கடாசலத்தை நம்பி எப்படி அந்த மனிதரைப் பகைத்துக் கொள்வது? கிழவர், எல்லாரையும் விடப் பெரிய சூழ்ச்சிக்காரரர்" என்று ஒருவன் சொன்னான்.



அதற்கு மற்றவன், "ஏதாவது ஒரு பக்கத்திலே சேர்ந்துதான் ஆகணும். வெங்கடாசலம் சொல்லித்தானே உனக்குப் பல விஷயம் சாதகமாக முடிஞ்சுது?" என்று பதில் சொன்னான்.

இந்த அரசியல் பேரப் பேச்சு ராவ்ஜிக்குக் குமட்டலைத் தந்தது. அவர் காலத்தில் கேட்டறியாத பேச்சு, பார்க்காத புது மனிதர்கள். மகள் முகத்தைப் பார்த்து, தன் அருவருப்பைச் சமாளித்துக் கொண்டார். மறுபடியும் வெங்கடாசலத்தின் பியூனிடம் 'வெங்கடாசலத்தைப் பார்க்கலாமா?' என்று கேட்க வாயெடுத்தவர் தன் தவறை உணர்ந்து, "அய்யாவைப் பார்க்கலாமா?" என்று அங்குள்ள சூழ்நிலைக்கேற்பக் கேட்டார்.

பியூன் முகத்தைச் சுளித்துக் கொண்டு உள்ளே சென்றான். சில விநாடிகளில் திரும்பி வந்து ராவ்ஜியை உள்ளே அழைத்தான். அந்த ஆபீஸ் அறையினுள் அவர் பார்த்த காட்சி ராவ்ஜியைத் திகைக்க வைத்தது. வெங்கடாசலம் மேஜை மீது கால் போட்டு உட்கார்ந்திருந்தான். "வாங்க ராவ்ஜி! வாங்க! என்ன விஷயம்?" என்று காலை மேஜை மீதிருந்து எடுக்காமலே வெங்கடாசலம் கேட்டான்.

சில நாட்களுக்கு முன்பு தனிமையில் தன் வீட்டில் பணிவோடு பழகியவன், இப்போது அகந்தையோடு பேசுவதன் அர்த்தம் ராவ்ஜிக்கு விளங்கியது. அன்று அவனுடன் பத்திரிகை நிருபர்கள், பத்திரிகை போட்டோ எடுப்பவர்கள் இருந்தார்கள். வெங்கடாசலம் தன்னுடைய நன்றி மறவாத பண்பை விளம்பரப்படுத்த ஆடிய நாடகம் அது. இன்று சூழ்நிலை வேறு என்பதைப் புரிந்து கொண்டார். மனம் குமுறியது. ஆனால் அடக்கிக் கொண்டார்.

வெங்கடாசலம் தன் நண்பர்களிடம் ராவ்ஜியைக் கொஞ்சம்கூட வெட்கமில்லாமல் பின்வரும் வார்த்தைகளில் அறிமுகப்படுத்தினான்: "ராவ்ஜிசார் உண்மையான

www.t.me/tamilbooksworld

தியாகி. ஆனால் பிழைக்கத் தெரியாதவர்! உட்காருங்க'' என்றான்.

அப்போது ராவ்ஜியின் பார்வையில் மேஜையில் அவன் காலுக்கருகில் காலஞ்சென்ற ஒரு தலைவரின் படம் இருப்பது பட்டது. ராவ்ஜிக்கு அவரிடம் மரியாதை உண்டு. சிறிது காலத்துக்கு முன்பே இறந்தவர். அவர் படத்தின் முன் கால் நீட்டிக் கிடக்கும் வெங்கடாசலத்துடன் அவருக்குப் பேசவே பிடிக்கவில்லை. அங்கு உட்காரவும் பிடிக்கவில்லை.

விர்ரென்று சாவித்திரியை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

'வேலை கேட்க வந்த இடத்தில் இப்படிக் கோபமாக வெளியேறுகிறாரே? ஒன்றுமே தெரியாத மனிதராக அப்பா இருக்கிறாரே!' என்ற குழப்பத்தோடு சாவித்திரி தந்தையைப் பின் தொடர்ந்தாள். ''சாவித்திரி, என்னைப் போன்றவர்களுக்குக் குழந்தைகள் இருக்கக்கூடாது'' என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார். சாவித்திரிக்கு அவர் செயல் கண்டு இரக்கப்படுவதா கோபப்படுவதா என்று தெரியவில்லை. தந்தையைப் பின் தொடர்ந்து நடக்கும் போது சற்று அருகிலிருந்து யாரோ விசில் செய்யும் சப்தம் கேட்டது. சாவித்திரி தன்னையும் அறியாது திரும்பினாள். ஒரு வாலிபன் புஷ் ஷர்ட் அணிந்தபடி சிரித்துக் கொண்டு நின்றான். அவனை எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது. எங்கு பார்த்திருப்பாள்? உடனே ஞாபகத்துக்கு வரவில்லை.

## 80

வெங்கடாசலத்திடம் கூச்சலிட்டுத் திரும்பிய ராவ்ஜி முதல் முறையாக, தன் தோல்வியின் பரிமாணத்தைப் புரிந்து கொண்டார். அவர் பங்கெடுத்துக் கொண்ட தியாக ஊர்வலம் திசை திரும்பி விட்டது.



அவர் வழியிலேயே விடப்பட்டார். அவரால் அவர் வீட்டுக்கும் பலனில்லை. நாட்டுக்கும் பலனில்லை. அவருக்கும் எந்த விதப் பிரயோசனமும் இல்லை. குடும்பத்தை வதைத்து, பலன்களைப் புறக்கணித்த தியாக வாழ்வு. அவருடைய ஆணவத்திலிருந்து பிறந்த அகந்தை உணர்ச்சியா அல்லது அவர் ஆத்மாவிலிருந்து பிறந்த பண்பு உணர்ச்சியா என்று புரியவில்லை.

தோட்டத்தில் உட்கார்ந்தபடி இருந்த ராவ்ஜியின் பார்வை அங்குச் சிதறிக் கிடந்த மலர்களில் சென்றது. சில மலர்கள் தரையில் விழுந்து வாடியிருந்தன. சில, செடி களிலேயே சிதறிக் கிடந்தன.

அப்போது நமச்சிவாயம் அங்கு வந்தார்.

''என்ன ராவ்ஜி, என்ன தரையைப் பார்த்த உட்கார்ந்துக்கிட்டு இருக்கீங்க?'' என்று கேட்டார்.

''ஒன்றுமில்லை, பொன்மங்கலத்திலிருந்து எப்ப வந்தீங்க? சென்னைக்குப் பங்கஜமும் உங்ககூட வந்திருக்கா?'' என்று கேள்வி கேட்டுப் பேச்சை மாற்ற முயன்றார்.

''பங்கஜமும் மாப்பிள்ளையும் ஊரிலேதான் இருக்காங்க. நான் தான் தனியா வந்துட்டேன். என்ன உங்க முகம் ஒரு மாதிரியா இருக்கு ராவ்ஜி?'' என்று நமச்சிவாயம் கேட்டார்.

ராவ்ஜி ஒருவிதமாகச் சிரித்தார். ''என்ன நமச்சிவாயம், பார்த்தீங்களா, சிதறிக் கிடக்கும் மலர்களை! மலர்வதெல்லாம் பூஜைக்குச் செல்வதில்லை, பெண்களின் கூந்தலுக்கும் செல்வதில்லை. யாருக்கும் பயனில்லாமல் பூக்கள் மலர்ந்து மண்ணில் விழுகின்றன. அதுபோல ஆகி விட்டது என் வாழ்க்கை'' என்று கூறி மனம் நொந்து கொண்டார்.

நமச்சிவாயம் என்ன நடந்தது என்று விசாரித்தார். ராவ்ஜி, வெங்கடாசலத்தைப் பார்க்கச் சென்றதையும்

அங்கு அவன் இருந்த கோலத்தைக் கண்டு கோபமடைந்ததையும் விளக்கினார். "மகளுக்கென்று பொரிக்கப் போனவன் கோபப்படலாமா சொல்லுங்க நமச்சிவாயம், எனக்குப் புத்தியில்லை" என்றார் ராவ்ஜி.

நமச்சிவாயம் ராவ்ஜியைப் பார்த்துப் புன்னகைசெய்தபடி, "என்னை விடப் படிச்சவங்க, நீங்களே இப்படிப் பேசறீங்களே. வாழ்வே ஒரு பூஜைன்னு நெனைக்கிறபோது நமக்குக் கவலை வராது. நான் எது நடந்தாலும் அது ஆண்டவனுக்குன்னு அர்ப்பணம் பண்ணிடுவேன். நீங்க எல்லாத்தையும் நாட்டுக்குன்னு அர்ப்பணம் பண்ணிட்டீங்க. ஆண்டவன் மாதிரிதான் நாடும். பூஜை செய்யறவங்களிலே சிலருக்குத்தான் ஆண்டவன் பலன் தர்றான். சிலருடைய பூஜை பலனில்லாமலே போயிடுது. அது ஏன் என்னன்னு நமக்குப் புரியறதில்லை! அதுக்காகப் பூஜை செய்ய விடவும் முடியலை. நாட்டுக்காக உண்மையா உழைச்சவங்க சிலரைப் பாராட்டாமல் நாடு மறந்துடுது. சிலருக்கு எல்லாம் கிடைக்குது. இது புரியாத பெரிய கணக்கு. அதுக்காக வருந்தி என்ன பலன்? சாவித்திரியைப் பற்றிக் கவலைப்படாதீங்க. நீங்க எனக்கு அண்ணன் மாதிரி, அவள் ஒரு அண்ணன் மக மாதிரி, அவள் எதிர்காலத்தில் யார் கிட்டேயும் போய்க் கை நீட்டாதபடி பார்த்துக்க வேண்டியது என் கடமை" என்றார்.

ராவ்ஜியின் கண்கள் கலங்கின நன்றிப் பெருக்கால். கண்களைத் துடைத்துக் கொண்டார். "நமச்சிவாயம், நான் இதுவரையிலுமே உங்களுக்கு ரொம்ப ரொம்பக் கடமைப் பட்டிருக்கேன்" என்று கூறிவிட்டு வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திக் கொண்டார்.

நமச்சிவாயம் ராவ்ஜியை அன்போடு அணைத்தபடி, "அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நான் மட்டும் என்ன? ஆண்டவனுக்கு மீளாத கடன் பட்டிருக்கேன். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைக் கொடுத்து என்னைக் கடனாளியாக்கி விட்டார் கடவுள். உங்க மாதிரி புண்ணியாத்மாக்களுக்கு உதவியாயிருப்பது ஓரளவுக்கு ஆண்ட



[illegible] சொல்லிச் சிரித்தார்.

ராவ்ஜியும் கண்ணீரோடு சிரித்தார். ஒருவர் படிப்பு, பண்பு இரண்டும் இருந்தும் வாழ்க்கையில் தோற்றவர், ஏழை. மற்றவர் படிப்பு இல்லாத பண்பு நிறைந்தவர், வெற்றி தோல்வி இரண்டையும் அறியாத செல்வந்தர். இருவரின் உள்ளங்களும் வெண்மையானவை.

நமச்சிவாயத்துக்கும் ராவ்ஜிக்கும் நடந்த சம்பாஷணையை உட்புறமிருந்து கேட்டபடி இருந்தாள் சாவித்திரி. நமச்சிவாயத்தின் அன்பு நிறைந்த பேச்சு அவளை உலுக்கிற்று. 'எல்லாத் துறைகளிலும் அப்பா தோற்றுப் போனவராயினும், நமச்சிவாயம் போன்றவரின் உண்மையான நட்பைப் பெற்றது பெரிய வெற்றிதானே!' என்று நினைத்தாள். இருந்த போதிலும் நமச்சிவாயத்திடம் உதவி பெறுவது அவளுடைய ஆணவத்தை வருத்தப்படுத்தியது.

பங்கஜத்தின் தந்தையின் உதவியை நம்பி அவளுடைய எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதா? தன் வாழ்நாள் முழுவதும் பங்கஜத்தின் முன் கை நீட்டி வாழ்வதா? சாவித்திரிக்கு அது பிடிக்கவில்லை. தன் கையே தனக்கு உதவி என்று வாழ வேண்டும். பங்கஜத்தின் கருணையை நம்பி, அவளுக்கு ஒரு தோழியாக வாழும் வாழ்க்கை அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அன்று மாலை ஆறு மணி அளவுக்கு சாவித்திரி வீட்டில் இருந்து சிந்தித்தபடி வெளியே வந்தாள். சிந்தித்தபடியே ரோடில் நடந்தாள். பஸ் ஸ்டாண்டு அருகில் அப்போதுதான் கல்யாணமாகிப் புதுக் குடித்தனம் வைத்த தம்பதிகள் சினிமாவுக்குச் செல்ல பஸ்ஸுக்காகக் காத்து இருந்தனர்.

அந்தத் தம்பதிகளின் பேச்சும், சிரிப்பும் அவர்கள் மனத்தில் உள்ள இன்பத்தைப் பிரதிபலித்தன. அந்தப்

பெண் மிகவும் கர்வத்தோடு கணவன் அருகில் நின்றாள். 'இவன் எனக்குச் சொந்தம். அதனால் இந்த உலகமே எனக்குச் சொந்தம்' என்று பறை சாற்றுவது போல் இருந்தது அந்தப் பெண்ணின் பார்வை. அவர்கள் அணிந்திருந்த உடையிலிருந்து அவர்கள் சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவர்களிடையே நிலவிய இன்பம், உலகமே அவர்களுக்கு அடிமை என்பது போன்ற தோற்றம் அளித்தது.

பஸ் வந்ததும் இருவரும் ஏறிக்கொண்டனர். சாவித்திரியும் சிந்திக்காமல் அவர்களோடு அதே பஸ்ஸில் ஏறினாள். 'என் கணவன் உயிரோடு மட்டும் இருந்தால் அவரும் எங்காவது ஒரு குமாஸ்தா வேலையாவது பார்க்க மாட்டாரா? நானும் அவரோடு இப்படி இன்பமாக இருந்து இருக்க மாட்டேனா?' என்ற எண்ணம் எழவே அந்த இளம் தம்பதிகளைப் பார்த்தபடி எதிர் சீட்டில் உட்கார்ந்தாள். அந்தப் பெண்ணின் கணவன் சித்தம் பூராவுமே அவன் மனைவியின் அழகில் லயித்து இருந்தது. அவன் பஸ்ஸில் இருக்கிறோம் என்பதையே மறந்து இருந்தான். மனைவியின் தலையிலிருந்து பூ கீழே விழுந்ததும் அதை எடுத்து அவள் தலையில் மறுபடியும் சூட்டினான். அவன் மனைவி திரும்பியபோது அவள் பார்வை சாவித்திரியின் ஏக்கம் நிறைந்த பார்வையைச் சந்தித்தது.

உடனே அந்தப் பெண் ரகசியமாக, "சும்மா இருங்க. விளையாடாதீங்க. எதிர்த்தாப் போல உட்கார்ந்திருக்கிறவ கொட்டு கொட்டுன்னு நம்மையே பார்த்திட்டிருக்கா" என்று சொன்னாள்.

அவன் சட்டென்று கையை எடுத்துக் கொண்டான். சாவித்திரியும் தலையை வேறு திசையில் திருப்பினாள்.

அப்போது பஸ் கண்டாக்டர் அவள் முன் வந்து நின்றவன், "எங்கே போகணும்?" என்று கேட்டான்.

www.t.me/tamilbooksworld



எங்கே செல்கிறோம் என்று யோசியாமல் பஸ்ஸில் ஏறி விட்டோம் என்பதை உணர்ந்தாள் சாவித்திரி. "இந்தப் பஸ் எங்கே போகுது?" என்று அசட்டுத்தனமாக அவனையே ஒரு கேள்வி கேட்டாள்.

கண்டக்டர் விழித்து அவளைப் பார்த்தான். "பஸ் மவுண்ட் ரோடு வழியாகப் பாரிஸ் கார்னர் போகுது. நீங்க எங்கே போகணும்?" என்று கேட்டான்.

சாவித்திரி சட்டென்று சமாளித்தபடி, "மவுண்ட் ரோடுக்கு ஒரு டிக்கட் கொடு" என்றாள். அவன் மவுண்ட் ரோடுக்கு ஒரு டிக்கட் கொடுத்தான்.

மவுண்ட் ரோடில் ஓர் இடம் வந்ததும் தம்பதிகளும் இறங்கினார்கள். சாவித்திரியும் இறங்கினாள். சாவித்திரி நடைபாதையில் நின்றபடி செல்லும் ஜனத்திரளைப் பார்த்தாள். எதிரே தெரிந்த சினிமாத் தியேட்டரை நோக்கி நடந்தாள். அங்கு ஓர் ஆங்கிலப்படம் ஓடிக்கொண்டிருந்தது. தியேட்டரின் வெளிப்புறம் ஆங்கிலப் படத்தின் போஸ்டர் ஒட்டியிருந்தது. மிகக் குறைந்த ஆடைகளுடன் காட்சி அளித்த கதாநாயகியைக் கதாநாயகன் நீச்சல் குளத்தில் ஏறியும் காட்சி போஸ்டரில் சித்தரிக்கப்பட்டு இருந்தது.

அதைப் பார்த்ததுமே தியேட்டரில் ஓடும் அந்த ஆங்கிலப் படம் ஒரு பொழுது போக்குப் படம் என்பது தெரிந்தது. டிக்கெட்டை வாங்கிக் கொண்டு தியேட்டரின் உட்புறம் சென்று ஒரு மூலையில் உட்கார்ந்தாள். தியேட்டர் பூராவுமே காலியாக இருந்தது. முதன் முறையாக பங்கஜத்தின் துணை இல்லாமல் அவள் தியேட்டருக்கு வந்தது இதுதான். அவளுக்கு அச்சமாக இருந்ததும் இன்றுதான். அச்சத்தின் நடுவே ஒருவிதத் துணிவும் இருந்தது.

படம் முடிந்து வீடு செல்ல 9 மணி ஆகுமே! "எங்கு போயிருந்தாய் சாவித்திரி?" என்று அப்பா கேட்டால்

'கோவிலுக்குப் போயிருந்தேன்' என்று பொய் சொன்னால் போகிறது என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள். படம் தொடங்கியதும் தியேட்டரில் இருள் சூழ்ந்தது.

மாமூலாகக் காட்டப்படும் செய்திப் படம் முடிந்ததும் விளம்பரம் செய்திருந்த ஆங்கிலப் படம் தொடங்கியது. காதலன் காதலி சந்திக்கும் கட்டம். ஒரு கூட்டமான ரெயில் வண்டியில் நிகழ்கிறது. காதலனும் காதலியும் ஒருவர் மீது ஒருவர் இடித்துக் கொண்டு நிற்கின்றனர். கதாநாயகன், கதாநாயகியைப் பார்த்துச் சிரிக்கிறான். அவளும் சிரிக்கிறாள். அவன் அணிந்து இருக்கும் டையின் நடுவே டை ஊசி இருக்கிறது. டை ஊசியில் கதாநாயகியின் உடை சிக்கிக் கொள்கிறது. இருவரும் தங்களை விடுவித்துக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

தியேட்டரில் கலகலப்பும் குதூகலமும், நிறைந்திருந்தன. இந்தக் காட்சியைச் சாவித்திரி கவனித்துக்கொண்டு இருக்கும்போது, 'நாம் முதல் முறை சந்திச்சதும் ரயில்லே தானே?' என்ற குரல் கேட்கிறது.

அடுத்த வினாடி ஒரு கை அவள் தோள் மீது விழுகிறது. சாவித்திரி திடுக்கிட்டுத் திரும்புகிறாள். அருகில் ஓர் இளைஞன் உட்கார்ந்து இருப்பதைக் கவனிக்கிறாள். அவன் எப்போது தியேட்டருக்குள் வந்தான்? எப்போது தன் அருகில் வந்து உட்கார்ந்தான் என்பது அவளுக்குப் புரியவில்லை.

தியேட்டரை ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். வேறு மூலைகளில் சிதறி உட்கார்ந்திருந்த சிலரைத் தவிர தியேட்டரே காலியாக இருந்தது.

சாவித்திரியின் மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. எழுந்து போய் விடுவோமா என்று நினைத்தாள். எழுந்து வெளியே செல்லவும் அவனைத் தாண்டித்தான் செல்லவேண்டும். என்ன செய்வது என்று



தெரியாமல் இருந்தாள். அந்த இருளிலும் சாவித்திரியின் குழப்பத்தைப் புரிந்து கொண்டவன்போல் அந்த வாலிபன், "பயப்படாமல் படத்தைப் பாரு சாவித்திரி, நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்றான். அப்போதுதான் திரும்பி அவன் முகத்தைக் கவனித்தாள்.

ஆம். வெகு நாட்களுக்கு முன்பு தாம்பரத்திலிருந்து எலக்ட்ரிக் வண்டியில் திரும்பியபோது வந்தவன்தான். வெங்கடாசலத்தைப் பார்த்துவிட்டு வீடு திரும்பும்போது அவளையும் தந்தையையும் பின் தொடர்ந்த வாலிபன் தான். அவன் தன் பெயரையும் தெரிந்து கொண்டிருக்கிறானே என்று நினைத்து ஆச்சரியப்பட்டாள்.

திரையில் நிகழ்ந்து கொண்டிருந்த கதையைக் கவனித்தாள்.

அவன் அடுத்த சீட்டில் உட்கார்ந்து இருந்தான். ஆனால் அவன் அவளைத் தொடவோ, அவளுடன் பேசவோ முயற்சிக்கவில்லை. அவனும் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். தரக் குறைவாக அவன் நடந்து கொள்ளவே இல்லை. சாவித்திரியின் மனத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியும், பயமும் குறைந்தது. திடீரென்று இடைவேளை காரணமாகத் தியேட்டரில் இருள் மறைந்து வெளிச்சம் பரவியது.

மிட்டாய்கள், முந்திரிப் பருப்பு, சாக்லேட்டுகள் வைத்த தட்டுடன் பையன்கள் நுழைந்தனர். அடுத்த சீட்டில் வாலிபன் உட்கார்ந்து இருந்தான். அவளும் அவனும் வெகுநாள் பழகிய கணவன், மனைவிபோல் அடுத்தடுத்த சீட்டில் உட்கார்ந்து இருந்தனர்.

சாக்லேட் கட்டிகள் இரண்டு வாங்கி ஒன்றைஅவளிடம் நீட்டினான். சாவித்திரியும் அதை வாங்கிக் கொண்டாள். இடைவேளை வந்ததும் அவள் தியேட்டரை விட்டு எழுந்து போயிருக்கலாம். அல்லது நகர்ந்து உட்கார்ந்திருக்கலாம். இரண்டும் செய்யவில்லை. அவன் கொடுத்த சாக்லேட்டை



www.t.me/tamilbooksworld

வாங்கிக் கொண்டாள். ஆனால் இருவரும் பேசாமல் இருந்தனர். சாக்லேட்டை வாங்கிச் சாப்பிடாமலே உட்கார்ந்து இருந்தாள்.

அதைப் பார்த்த வாலிபன், அவள் கையிலிருந்த சாக்லேட்டை வாங்கி, அதன்மீது சுற்றப்பட்டிருந்த காகிதத்தை நீக்கி, சாக்லேட்டை மறுபடியும் அவளிடம் கொடுத்தான். அதற்கும் சாவித்திரி பேசவில்லை. எதிரே உள்ள வெண்மையான திரையைப் பார்த்தபடி மௌனமாக இருந்தாள். "என்னோடு பேசாட்டிப் பரவாயில்லை. சாக்லேட்டையாவது சாப்பிடலாமில்லையா? இல்லை, அதையும் நான் பிட்டு உன் வாயில் போடணுமா?" என்று சிரித்தபடி கேட்டான்.

சாவித்திரிக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அதை உடனே அடக்கிக் கொண்டாள். சாக்லேட்டை விண்டு வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தாள்.

மறுபடியும் படம் தொடங்கியது. மறுபடியும் இருள் சூழ்ந்தது. சாவித்திரியின் மனத்தில் மறுபடியும் பயம் பிறந்தது. அந்தப் பயத்தோடு விருப்பமும் கலந்திருந்தது. ஆனால் வாலிபன் அவளைத் தொடவில்லை. அவளோடு விரசமாகப் பேசவுமில்லை.

படம் முடிந்ததும் வெளியே வந்தாள். அவனும் பின் தொடர்ந்தான், தியேட்டர் வெளிப்புறம் சிறு கார் முன் வந்ததும் வாலிபன் "காரிலே ஏறிக்கொள். நான் உன்னை உன் வீட்டில் கொண்டு போய் விட்டுடறேன்" என்றான்.

சாவித்திரி தயங்கினாள். "தியேட்டரில் ஏற்படாத ஆபத்து நிச்சயமாக உனக்குக் காரில் ஏற்படாது" என்றான்.

சாவித்திரி மௌனமாகக் காரின் பின் சீட்டில் ஏறப் போனாள். "பரவாயில்லை முன் சீட்டிலேயே உட்காரு" என்று சொல்லி, காரின் முன் கதவைத் திறந்தான். சாவித்திரி காரில் ஏறி உட்கார்ந்தாள். அந்த வாலிபன் காரின் ஸ்டியரிங் முன் உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தான்.


தாயே நான்

பங்கஜமும் அவள் கணவன் ராஜனும் தனியே காரில் செல்வதைப் பலமுறை பார்த்து ஏங்கியிருந்தாள். இன்று, பேர் தெரியாத வாலிபனோடு காரில் செல்லும்போது அவளுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. அவனைத் திரும்பிப் பார்த்தாள். தன்னைவிட ஓரிரண்டு வயது மூத்தவனாக இருக்கலாம். இல்லாவிட்டால் தன் வயது உள்ளவனாகத்தான் இருப்பான். அவன் உடலில் வலிவும், அவன் முகத்தில் களையும் தெரிந்தது. கார் ஓட்டிக் கொண்டு இருந்தவன் காரை நிறுத்தினான். எழுந்து வந்து கதவைத் திறந்தான். "உன் வீட்டு வாசலில் கொண்டு போய் நிறுத்தினா, உன்னைக் காரணமில்லாமல் தப்பா நினைப்பாங்க. நீ இங்க இருந்து இறங்கி நடந்து போய்விடு" என்றான். சாவித்திரி இறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

வாலிபன் அவளிடம், "சாவித்திரி, தாங்க்ஸுன்னு ஒரு வார்த்தை சொல்லாட்டிப் பரவாயில்லை, என் பேரை யாவது தெரிஞ்சுக்க உனக்கு விருப்பமில்லையா?" என்று கேட்டான். சாவித்திரி அவனைப் பார்த்தாள். "உங்க பேரு?" என்றாள். "என் பெயர் கோபால்" என்று சொல்லிவிட்டு காரில் ஏறிச் சென்று விட்டான். செல்லும் நபரைப் பார்த்தபடி நின்றாள் சாவித்திரி.

## 31

வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் சாவித்திரியின் ந்தை, சாவித்திரியை ஆச்சரியத்துடன் பார்த்தார். இவ்வளவு நேரம் கழித்து, சாவித்திரி வீடு திரும்பியது டையாது. ஆனால் அவளை அதுபற்றிக் கேள்வி கேட்கவும் ராஜுக்கு விருப்பம் இல்லை.

ஆனால் சாவித்திரியின் தாய்க்கு ராஜுவின் தன்மை ட்கம் இல்லை. "என்ன சாவித்திரி, எங்கே போய் ருந்தே? ஏன் இவ்வளவு நேரம்?" என்று படபடப்புடன் கேட்டாள்.

www.t.me/tamilbooksworld

சாவித்திரி பதில் சொல்லாமல் குளிக்கும் அறைக்குச் சென்று கால் முகம் கழுவிவிட்டு வந்தாள்.

''என்னடி, நான் கேட்டிட்டு இருக்கேன், நீ பேசாமல் இருக்கியே?''

சாவித்திரி தன் தாயை நிமிர்ந்து பார்த்தாள். ''சினிமாவுக்குப் போயிருந்தேன் அம்மா'' என்றாள் உறுதியோடு.

ராவ்ஜி, சாவித்திரியின் குரலில் உள்ள உறுதியை உணர்ந்து கொண்டார். அது கண்டு ஓரளவு அச்சமும் அடைந்தார். 'நான் சினிமாவிற்குப் போயிருந்தேன். நீங்க என்னை என்ன செய்யப் போறீங்க?' என்று சொல்லாமல் சொல்வதுபோல் அவள் குரல் இருப்பதை, அவர் புரிந்து கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சாவித்திரியை மேலும் விசாரிப்பது சரியில்லை என்று ராவ்ஜி நினைத்தாலும் அவர் மனைவி அவ்வாறு நினைக்கவில்லை. ''பூவும் பொட்டும் இழந்தவளுக்கு என்ன சினிமா வேண்டியிருக்கு?'' என்று இரக்கமில்லாமல் கேட்டு விட்டாள்.

சாவித்திரி திடுக்கிட்டு நின்றாள். உடனே ஒருவித ஏளனப் புன்னகை அவள் உதடுகளில் தோற்றமளித்தது. ''எல்லா விஷயங்களிலும் நல்லாயிருக்கிறவங்களுக்குச் சினிமா தேவையில்லையம்மா. என்னைப் போல இருக்கிறவர்களுக்குத்தான் சினிமா தேவை. உன்னையும் அப்பாவையும் பார்த்துட்டே எத்தனை நேரம்தான் வீட்டிலே உட்கார்ந்திட்டிருக்கிறது?'' என்று சொல்லி விட்டுப் படுக்கை அறைக்குள் சென்றாள்.

ராவ்ஜியும், அவர் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி வேதனையோடு இருந்தனர். ராவ்ஜி, ''சாவித்திரி சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கோ'' என்று அன்போடு கூறினார்.

சாவித்திரி அறையின் உட்புறமிருந்தபடியே, ''எனக்குப் பசியில்லையப்பா'' என்று சொல்லி



படுக்கையைத் தட்டிப் போட்டாள் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள்.

ராவ்ஜி பெருமூச்சு விட்டபடி வெளிப்புறம் நடந்தார். சாவித்திரி சொன்ன வார்த்தைகள் அவர் மனத்தைக் குழப்பின. மங்கலான தெரு வெளிச்சத்தில் தோட்டத்தைப் பார்த்தார். தோட்டத்தில் மண்ணில் சிதறிக் கிடக்கும் புஷ்பங்களைப் பார்த்தார். தன்னைப் போலும் தன் மகளைப் போலும் அவை தோன்றின. அவருக்குத் தூக்கம் வரவில்லை.

அதே சமயம் உட்புறம் படுத்திருந்த சாவித்திரியும் தூங்கவில்லை. அவள் மனமும் சிந்தனை அலைகளால் தாக்கப்பட்டது. சினிமாப் படம் பார்க்கும்போது கோபால் வந்து அருகில் அமர்ந்ததும், அவன் கண்ணியமாக நடந்து கொண்ட விதமும், பிறகு அவன் அவளை வீட்டருகே கொண்டு வந்து விட்டதையும் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தாள். அவள் பெயர், அவள் வீடு இருக்கும் இடம் முதலிய விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கும் அவன், அவள் மணமாகி கணவனை இழந்தவள் என்பதையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தெரிந்த பின்பும் அவளை அவன் நெருங்க வேண்டுமென்றால், அவன் என்ன எண்ணத்தோடு நெருங்குகிறான்? கணவனில்லாத பெண், உணர்ச்சிக் கடலில் தத்தளிக்கும் அபலை, எந்தச் சிறு துரும்பானாலும் போதுமென்று கைப்பற்றுவாள் என்ற துணிவுதானே அவனை உரிமையோடு அவளைப் பின்தொடரச் செய்திருக்கிறது! 'பண வசதி உள்ளவன், அழகும் வலிமையும் நிறைந்தவன் என்னைத் தேடிவர வேண்டுமானால், என்னை எவ்வளவு அற்பமாக நினைத்திருக்க வேண்டும்? தன் விரலைச் சொடுக்கினால் வலையில் வந்து விழுவாள் இந்த சாவித்திரி என்று நினைக்கிறானோ?' அவன் மீது ஆத்திரம் அடைந்தாள். அதே சமயத்தில் நல்வாழ்வு ஒதுக்கிவிட்ட தன்னிடமும் ஓர் ஆடவனுக்கு அக்கறையிருக்கிறது

www.tamilbooksworld

என்பதை நினைக்க அவளுக்குப் பெருமையாகவும் இருந்தது. கோபாலைப் பற்றி வெறுப்போடு நினைப்பாள், மறு நிமிஷமே அவன் என்ன தவறு செய்தான், ஒன்றும் செய்யவில்லையே என்று அவனுக்குச் சாதகமாக சிந்திப்பாள். இவ்வாறு சிந்தித்தபடி விழித்திருந்து நேரம் கழித்து தூங்கினாள்.

மறுநாள் காலை எழுந்ததும் பக்கத்து வீட்டில் எழுந்த சந்தடியிலிருந்து, பங்கஜம் பொன்மங்கலத்திலிருந்து திரும்பி விட்டாள் என்பது தெரிந்தது. அவளையும் குழந்தையையும் போய் பார்த்துவிட்டு வருவோமா என்று சாவித்திரி நினைத்தாள். வலுவில் போய்ப் பங்கஜத்தின் தாயின் கடுகடுப்பான முகத்தைப் பார்க்கவும் அவளுக்குப் பயமாக இருந்தது. பங்கஜத்தின் கணவன் ராஜன், காலையிலேயே பங்கஜத்தைத் தாய் வீட்டில் இறக்கிவிட்டு ராமலிங்கத்தின் வீட்டுக்குப் போய் விட்டான் என்பது வேலைக்காரியை விசாரித்ததும் தெரிந்தது.

அன்று பிற்பகல் இரண்டு மணி சுமாருக்குப் பங்கஜமே தன் குழந்தையை எடுத்துக் கொண்டு சாவித்திரியைப் பார்க்க வந்தாள். சாவித்திரியிடம் வெகு நேரம் பொன் மங்கலத்தையும் பாரிமங்கலத்தையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள். பங்கஜத்தின் குழந்தை சாவித்திரியைப் பார்த்ததும் பாய்ந்து அவள் தோள்மீது தாவியது. சாவித்திரி குழந்தையைத் தூக்கியதும் அது 'கிலு கிலு' என்று சிரித்தது.

"பாரு சாவித்திரி, என் பிள்ளை உன்னை மறக்கலே இல்லை" என்றாள் பங்கஜம்.

"அவன் என் செல்வன் அல்லவா? அவன் எப்படி மறப்பான்! ஏன் பங்கஜம் திடீர்னு ஊர்லேருந்து வந்துட்டே? உங்க அப்பா சொன்னாரே, நீ வரக் கொஞ்ச நாளாகும்னு?"

திடீரென்று பங்கஜத்தின் முகத்தில் ஒருவிதக் குழப்பம் தோன்றி மறைந்தது. வலுவில் சிரிப்பை வரவழைத்துக்



கொண்டு பேசினாள். "அவருக்கு ஏதோ அவசர வேலை பட்டணத்திலே இருக்குன்னுட்டுப் புறப்பட்டு வந்துட்டார். எனக்கு இன்னும் கொஞ்ச நாள் இருக்கணும்னு தான் ஆசை" என்று கூறி விட்டுப் பேச்சை வேறு திசையில் திருப்பினாள் பங்கஜம். சாவித்திரிக்குப் பங்கஜம் எதையோ மூடுகிறாள் என்பது நன்கு விளங்கியது.

"நீ இன்னும் இரண்டு நாளைக்கு இங்கிருப்பியா? இல்லை, நீ உடனே கணவர் வீட்டுக்குப் போயிடுவியா பங்கஜம்?" என்று கேட்டாள் சாவித்திரி.

இந்தக் கேள்வியைப் பங்கஜம் எதிர்பார்க்கவில்லை. அதை விரும்பவும் இல்லை. உடனே பதில் சொல்லாமல் இருந்தாள். "இரண்டு நாள் இருந்தாலும் இருப்பேன். இல்லேன்னா இன்னிக்குச் சாயந்திரமே போனாலும் போயிடுவேன்" என்று சொன்னாள்

அதற்கு மேல் பங்கஜத்திற்குச் சாவித்திரியோடு பேசிக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. குழந்தையை எடுத்துக் கொண்டு தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

சாவித்திரி மாலை ஐந்து மணி ஆனதும் வீட்டிலிருந்து புறப்பட்டு லைப்ரரிக்குச் சென்றாள். அங்கு பழைய புத்தகங்களைக் கொடுத்து விட்டுப் புதுப் புத்தகங் களை வாங்கிக் கொண்டு திரும்பும்போது பங்கஜத்தின் வீட்டின் வெளிப்புறத்தில் ராமலிங்கத்தின் கார் நின்று கொண்டிருந்தது. அதில் பங்கஜமும் குழந்தையும் ஏறிக் கொண்டனர். பங்கஜத்தின் தந்தையும் காரில் ஏறினார்.

கார் புறப்படும் போது நாம் எதிரே வரவேண்டாம் என்று எண்ணி, குறுக்கேயுள்ள ஒரு வழியே சாவித்திரி நடக்க ஆரம்பித்தாள். சாவித்திரி சிந்தித்தபடி நடக்கும் போது, பின்புறமாக அவளை நெருங்கி ஒரு கார் வருவதை அவள் உணரவில்லை. அவள் பின்புறமாக வந்த கார் அவளைத் தாண்டியதும் நின்றது. அதிலிருந்து கோபால் அவளைப் பார்த்துச் சிரித்தான். மறுபடியும் கோபாலைச் சந்திப்போம் என்று எதிர்பார்த்திருந்தாள்

ஆனால் இவ்வளவு சீக்கிரமாக மறுநாள் மாலையே அது நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

''எங்கே போகணும் சாவித்திரி?'' என்று சிறிதுகூடக் கூச்சம் இல்லாமல் கேட்டான் கோபால்.

சாவித்திரி, ''நான் வீட்டுக்குப் போறேன்'' என்று சொல்லி நடக்க ஆரம்பித்தாள்.

கோபால் சிரித்தபடியே, ''நான் உன் வீட்டுக்கு வரக் கூடாதா?'' என்று கேட்டான்.

சாவித்திரியின் முகம் சிவந்தது. ஒரு பதிலும் சொல்லாமல் நடக்க ஆரம்பித்தாள். கார் மறுபடியும் அவளைத் தொடர்ந்தது.

கோபால் விடாமல், ''நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் போகிறாயே! நான் உன் வீட்டுக்கு வரக் கூடாதா?'' என்றான்.

சாவித்திரிக்கு நடுத் தெருவில் இப்படி வழி மறித்துப் பேசுவது வேதனையாக இருந்தது. ''தயவு செய்து நடுத் தெருவிலே இப்படி என் மானத்தை வாங்காதீங்க'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

காரிலிருந்து கோபால் சிரிக்கும் ஒலி அவள் காதில் விழுந்தது. கோபால் காரைத் திருப்பிக் கொண்டு செல்லும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். கார் தொலைவில் சென்று கொண்டிருந்தது. படபடப்புடன் தெருக்கோடி வரை சென்றுவிட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். வீட்டின் வெளிப்புறம் கோபாலின் கார் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்ததும் சாவித்திரியின் மனம் திகில் அடைந்தது. மெள்ள உட்புறம் நுழைந்தாள்.

திண்ணையில் உள்ள மரப் பெஞ்சில் அவள் தந்தை ராவ்ஜி உட்கார்ந்திருந்தார். அவர் அருகில் கோபால் உட்கார்ந்திருந்தான். சாவித்திரி தெருக்கோடி வரை சென்றுவிட்டுத் திரும்புவதற்குள், கோபால் அவள் வீட்டுக்கே வந்து, அவள் தந்தையிடம் பேசிக் கொண்டு



இருக்கிறான். இதில் மிக ஆச்சரியம் என்னவென்றால், அவள் தந்தை கோபாலிடம் மிக உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்ததுதான். தந்தையின் முகம் மகிழ்ச்சியோடு காணப்பட்டது. அவர் கண்களில் ஒளி வீசியது. கோபால், சாவித்திரியின் பக்கம் கூடத் திரும்பாமல் அவள் தந்தை சொல்வதைச் செவி சாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

சாவித்திரி வேகமாக உள்ளே சென்று விட்டாள். உள்ளே லைப்ரரியிலிருந்து வாங்கி வந்த புஸ்தகங்களை அலமாரியில் வைப்பதற்கு முன் ராவ்ஜி, ''சாவித்திரி, சாவித்திரி'' என்று இருமுறை அழைத்தார்.

சாவித்திரி அவசரமாக வெளியே வந்தாள். தந்தை, ''இரண்டு காப்பி தயார் செய்து கொண்டு வாம்மா சாவித்திரி'' என்று உத்தரவு போட்டார்.

கோபால் தன் தந்தையின் மனத்தைப் பூராவும் கவர்ந்துவிட்டார் என்பது அவளுக்குத் தெரியாமலில்லை. விட்டது. காப்பி தயார் செய்து கொண்டு வந்ததும், ராவ்ஜி காப்பியை வாங்கிக் கோபாலிடம் கொடுத்தார். ஒன்றுமறியாத அப்பாவிபோல் தரையைப் பார்த்தபடி கோபால் காப்பியை வாங்கிக் கொண்டான்.

''இதுதான் என் மகள் சாவித்திரி. இவர்தான் மிஸ்டர் கோபால். கோபால் அண்டு கோ என்ற புஸ்தக வெளியீட்டு ஸ்தாபனத்தின் முதலாளி. என்னுடைய அரசியல் அனுபவங்களைப் புத்தகமாக வெளியிட ஆசைப்படுகிறார். எவ்வளவோ புகழுள்ள தேசபக்தர்கள் இருக்கின்றனர். சாதாரணத் தொண்டன், என் அனுபவங்கள் எப்படி மக்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று எனக்கு புரியவில்லை. என் புஸ்தகத்தை வெளியிடுவதனால் கோபால் பெரிய நஷ்டத்தைத்தான் அடையப் போகிறார்'' என்று சிரித்தபடி சொன்னார்.

''உங்கள் புஸ்தகத்தை நான் வெளியிடுவதனால்,

www.tamilbooksworld

நஷ்டம் வந்தாலும் அதைப் பெரிய லாபமாகக் கருதுவேன்'' என்று சாவித்திரியைப் பார்த்தபடி கூறினான்.

சாவித்திரிக்கு அவன் கூறியதன் அர்த்தம் புரிந்தது. தன்னை அடிக்கடி சந்திக்க இது ஓர் ஏற்பாடு என்பதைப் புரிந்து கொண்டவள், கோபாலைப் பற்றி எல்லாவற்றையும் அப்பாவிடம் கூறிவிடலாமா என்றுகூட நினைத்தாள். ஆனால் அவளுக்கு அதற்குத் துணிவில்லை.

காபி சாப்பிட்டானதும், காபி டம்ளர்களை எடுத்துக் கொண்டு கோபாலைக் கவனியாமலே வீட்டின் உட்புறம் சென்றாள்.

ராமலிங்கத்தின் வீட்டில் திடீரென்று பங்கஜமும் குழந்தையும் வரவே ராஜன் திடுக்கிட்டான். சில நாட்கள் பங்கஜம் தன் தாய் வீட்டில் இருக்கப் போகிறாள் என்ற நம்பிக்கையில் இருந்தான் ராஜன். அவன் முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைப் பங்கஜம் கவனித்தாள். ஆனால் அவள் அதைக் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ராஜன் சிறையிலிருந்து திரும்பியது முதல், சில விஷயங்களில் அவன் மாறுபட்டிருந்தான். குழந்தைபோல் இருந்தவன் ஓரளவு முதிர்ச்சியோடு காணப்பட்டான். அதற்குக் காரணம் அவனுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்று பங்கஜம் எண்ணினாள். வடக்கு ஆப்பிரிக்கா போர் முனை பற்றிப் பங்கஜம் பேசினால் அவனுக்கு ஆத்திரம் வரும். அது மட்டுமல்ல. இன்னொரு விஷயமும் பங்கஜத்துக்குக் கவலை கொடுத்தது. திடீரென்று ஓரிரண்டு நாட்கள் யாரிடமும் சொல்லாமல் எங்காவது சென்றுவிடுவான்.

அது பற்றி ஒருமுறை ராமலிங்கம் கேட்டது, ராஜனுக்குப் பிடிக்கவில்லை. ''நான் என்ன ஒன்றுமறியாத சிறுவனா? என்னை ஏன் ஒன்றுமில்லாத விஷயத்தில் குறுக்கு விசாரணை செய்கிறீர்கள்?'' என்று சொல்லி விட்டான்.

அப்புறம் அவர் அவனை விசாரிப்பதை நிறுத்திக் கொண்டார்.



ஒரு நாள் ராஜனுக்கு வந்த டெலிபோனைப் பங்கஜம் எடுக்கும்படியாயிற்று. அந்த டெலிபோன் ஒரு நர்ஸிங் ஹோமிலிருந்து வந்திருந்தது. அந்த நர்ஸிங் ஹோம் அதிபதி சைகியாட்ரிஸ்ட், அதாவது மனோ தத்துவ டாக்டர் மூர்த்தி என்பவரின் நர்ஸிங்ஹோம். அந்த நர்ஸிங்ஹோம் அதிபதி, ராஜன் இரண்டு நாட்கள் நர்ஸிங்ஹோமில் தங்கியதற்கு ஐம்பது ரூபாயும், வைத்தியத்திற்காக நூறு ரூபாயுமாகச் சேர்த்து, நூற்றைம்பது ரூபாய்க்குச் செக் அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். வீட்டிலிருந்து வெளியே சென்ற இரண்டு நாட்களும் ராஜன் ஆஸ்பத்திரியில்தான் இருந்திருக்கிறான் என்பது பங்கஜத்துக்குத் தெரிந்து விட்டது. டெலிபோன் விஷயத்தை ராஜனிடம் சொல்வதா, சொல்லாமல் விட்டு விடுவதா என்றும் யோசித்தாள். துணிந்து ஒரு முடிவுக்கு வந்து ராஜனிடம் அதைப் பற்றிக் கேட்டாள்.

ராஜன் தன்னையும் மறந்து ஆத்திரமடைந்தான். ''அந்த இடியட் வீட்டுக்கே போன் பண்ணிட்டானா... சரி, சரி. பங்கஜம், அந்தப் போன் வந்ததையே நீ மறந்து விடு'' என்றான்.

''அதை நான் எப்படி மறக்கிறது? நான் உங்க மனைவியில்லையா? உங்க உடம்புக்கு என்ன? ஏன் நீங்கள் ரகசியமாக ஆஸ்பத்திரிக்குப் போகணும்? இது பற்றித் தெரிந்து கொள்ள எனக்கு உரிமையில்லையா?'' என்று கேட்டாள்.

''உளறாதே பங்கஜம்! புருஷன் பெண்ஜாதின்னாலும் எண்ணங்கள், சிந்தனைகளுக்குப் 'பிரைவஸி' வேணும். ஒரு தனிமை இருக்கணும். நான் யாருன்னு பூராவும் தெரிஞ்சா, அதாவது நான் நினைக்கிறதையெல்லாம் நீ தெரிஞ்சுக்கிட்டா, நீ என்னை வெறுக்கத்தான் செய்வாய். விரும்ப மாட்டாய். அதேபோலத்தான் உன் மனதிலே ஊசலாடும் ஒவ்வொரு சிந்தனை, ஆசையையும் நான் அறிந்து கொண்டால் நான் உன்னை வெறுக்க வேண்டி

வரும். தம்பதிகளுக்குள்ளே சில விஷயம் வெளிப்படையா இருக்கணும். சில விஷயம் மூடித்தான் இருக்கணும்'' என்று ராஜன் பிரசங்கமே செய்தான்.

இந்தச் சம்பாஷணை நடந்த சில நாட்களுக்குள் பங்கஜமும் ராஜனும் பொன்மங்கலம் செல்ல நேர்ந்தது.

அப்போது, திருச்சி கன்டோன்மென்டில் தங்கியிருந்த அவள் பள்ளிச் சிநேகிதி, அவளையும் ராஜனையும் ஒரு நாள் தன் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்திருந்தாள். பங்கஜத்தின் சிநேகிதியின் கணவர் ஓர் இன்ஜினீயர். அவர் விருந்து முடிந்ததும், ஆங்கில சினிமாப் படம் பார்த்து விட்டு வரலாம் என்று ராஜனையும் பங்கஜத்தையும் அழைத்தார்.

எல்லோரும் கன்டோன்மென்டிலுள்ள அடக்கமான சிறு தியேட்டரில் படம் பார்க்கச் சென்றனர். பங்கஜமோ, ராஜனோ அந்தப் படத்தின் கதை, இரண்டாவது மகா யுத்தத்தின் ஒரு பகுதியான ஆப்பிரிக்கப் போர் முனையைச் சித்திரிக்கும் கதையாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. படம் தொடங்கியதிலிருந்து, டோப்ருக், லிபியா, கெய்ரோ நகரங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளாக இருந்தது. கெய்ரோ நகரத்தின் தெருக்கள் வழியாகக் காமிரா சஞ்சாரம் செய்தபடி பல காட்சிகள் எடுத்திருந்தனர்.

அரை மணி நேரம்கூட ராஜன் படம் பார்த்திருக்க மாட்டான். உடனே எழுந்து வெளியே வந்து விட்டான். பங்கஜத்திடம் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லி வெளியே வந்த ராஜன், மறுநாளே பங்கஜத்தை அழைத்துக்கொண்டு சென்னை வந்து அவளை அவள் தாய் வீட்டில் தங்கும்படி சொல்லிவிட்டுத் தனிமையை நாடித் தன் வீட்டிற்கு வந்து விட்டான்.

காரில் சென்னைக்குப் போய்க் கொண்டிருந்தபோது ராஜன் அதிகம் பங்கஜத்திடம் பேசவில்லை. தன் மகன் செல்வனை ஒருமுறைகூட எடுத்து அவனோடு விளையாடவில்லை. எதையும் சொல்ல முடியாத நிலையில் தவித்துக்

www.t.me/tamilbooksworld



கொண்டிருந்தான். ஆகையால், பங்கஜம், அவள் சொன்னதற்கு மாறாக, அன்று மாலையே வீட்டிற்குத் திரும்பியதும் ராஜனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அன்று இரவு தனக்கு ஓய்வு தேவை என்று கூறிவிட்டுத் தன் அறையில் படுத்துக் கொண்டான். பங்கஜத்தையும், குழந்தையையும் நெருங்கவே அவன் தயங்கினான்.

பங்கஜம் குழந்தையோடு தன் படுக்கையறையில் படுத்துக் கொண்டாள். இரவு பதினொரு மணிக்கு ராஜன் படுத்திருந்த அறையில் விளக்கு எரிவது கண்டு சப்தம் செய்யாமல் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். அடுத்த விநாடி அவன் அறை விளக்கு அணைந்தது. அவன் அறைக் கதவு திறந்தது. பங்கஜம் படுத்துக் கொண்டாள். ராஜன் கையில் செருப்புக்களுடன் நின்றான். அவன் பார்வை அவள் தூங்குகிறாளா என்று கவனிப்பதுபோல் தெரிந்தது. பிறகு ராஜன் அவள் படுக்கையைத் தாண்டி, படிக்கட்டு வழியே இறங்கிச் சென்றான். செருப்புச் சப்தத்தால் யாரும் விழித்துக் கொள்ளக் கூடாது என்று செருப்புக்களைக் கையில் எடுத்துக் கொண்டான் என்பது தெரிந்தது.

பங்கஜம் உடனே படுக்கையை விட்டு எழுந்து மாடி பால்கனியில் வந்து நின்றாள். ராஜன் கையில் செருப்புடன் தூக்கத்தில் நடப்பவன் போல் தோட்டக் கதவு நோக்கி நடந்து சென்றான்.

வெளிப்புறம் ஒரு டாக்சி காத்திருந்தது. அதில் ராஜன் ஏறிக் கொள்ளவும் டாக்சி வீட்டைவிட்டு நகர்ந்தது.

## 32

ராஜனை ஏற்றிச் சென்ற டாக்சி, தேனாம்பேட்டை ரோட் வழியே சென்று கிண்டியைக் கடந்து பரங்கி மலையை அடைந்தது. பரங்கி மலையிலிருந்து பூந்தமல்லி செல்லும் ஒரு குறுக்கு ரோடில் திரும்பியது. ஒரு மைல்

சென்றதும் ஒரு தோட்டத்தில் நுழைந்தது. அந்தத் தோட்டத்தின் நடுவே ஒரு பாழடைந்த வீடு தெரிந்தது. அதன் முன்பு டாக்சி நின்றது.

டாக்சியிலிருந்து நாற்பது வயது நிறைந்த ஓர் உருவம் இறங்கியது. அந்த உருவத்தின் முகம், க்ஷவரம் செய்யப் படாமல் இருந்தது. அதன் நெற்றி வெளுத்திருந்தது. அந்த மனிதனின் கண்கள் ஒருவித ஒளியோடு இருந்தன.

ராஜனும் டாக்சியை விட்டு இறங்கினான். ராஜனோடு அந்த மனிதன் எதுவும் பேசவில்லை. ராஜனும் பேச வில்லை. மிகவும் மனம் நொந்து பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் பேசாமல் பணியாற்றுவதுபோல் இருவரும் இருந்தனர். டாக்சிக்காரனிடம் பத்து ரூபாயைக் கொடுத்தான் மற்றவன். டாக்சிக்காரன் "என்னங்க, இவ்வளவுதானா?" என்று கேட்டான். அந்த ஆள் தன் கண்களை அவன் பக்கம் திருப்பினான். டாக்சிக்காரன் ஒரு விநாடி அந்த ஆளைப் பார்த்தான். உடனே, கடுகடுப் புடன் இருந்த டாக்சிக்காரன் முகத்தில் மகிழ்ச்சி தோற்ற மளித்தது. டாக்சிக்காரன் பணம் பெற்றுக் கொள்ளாமலே "நன்றி" என்றான். டாக்சியை வேகமாகத் திருப்பிக் கொண்டு சாலைக்கு வந்து சென்னை நகரம் நோக்கித் திரும்பினான்.

ராஜனும், மற்றவனும் அந்த வீட்டின் உட்புறம் சென்றனர்.

அன்று இரவு கடந்து விடியற்காலை மூன்று மணி வரை பங்கஜம் பால்கனியில் உட்கார்ந்தபடி ராஜனின் வருகைக்காகக் காத்திருந்தாள். ராஜன் வரவேயில்லை. தூக்கம் கண்களைச் சுற்றவே படுக்கையில் வந்து படுத்தாள். மறுநாள் காலை எட்டு மணிக்குத்தான் ராஜன் வீட்டிற்கு வந்தான். வீடு திரும்பியவன் மிகவும் கவலையோடு காணப்பட்டான். பங்கஜத்துக்கு, "நீங்க எங்கே போயிருந்தீங்க ராத்திரி?" என்று அவனிடம் கேட்க வேண்டுமென்று ஆத்திரமாக இருந்தது. ஆனால் ராஜன்



முகத்தைப் பார்த்ததும் அவள் ஆத்திரம் போய்விட்டது. அவனை இந்தக் கேள்வி கேட்பதால், இன்னும் அதிக வேதனைக்குள்ளாகி அவன் வெறுப்பைத்தான் அடைவோம் என்று நினைத்தாள். பேசாமல் இருக்கவும் முடியவில்லை. "ஏன் ஒரு மாதிரியா சோர்ந்துபோய் இருக்கீங்க?" என்று மட்டும் கேட்டாள்.

ராஜன் பங்கஜத்தை ஒருவிதப் பச்சாத்தாப உணர்ச்சி யோடு பார்த்தான். பங்கஜத்துக்கு ஒரு யோசனை தோன்றியது. பக்கத்துக்குத் தொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த செல்வனை எடுத்துக் கொண்டு வந்து ராஜனின் முன் நீட்டினாள். "பாருங்க, எப்படி விளையாடறான்?"

ரோஸ் கலர் சட்டையுடன் கொழு கொழுவென் றிருந்த 'அந்தக் குழந்தையின் அகலமான கண்கள் ராஜனை நோக்கின. குழந்தையின் உதடுகள் விரிந்தன. ராஜனைப் பார்த்துப் புன்னகை பூத்தன. ராஜன் குழந்தையை அப்படியே வெறித்துப் பார்த்தான். குழந்தையின் கபடமற்ற புன்முறுவல் ராஜன மனத்தில் எந்தவிதமான சிந்தனை அலைகளை எழுப்பினவோ! ராஜன் கண்கள் கலங்கின. மளமளவென்று அவன் கன்னத்தில் நீர் வழிந்தது. குழந்தையை எடுத்து உணர்ச்சியோடு அணைத்துக் கொண்டான். அதன் பிஞ்சு முகத்தில் முத்தங்களைச் சொரிந்தான்.

பங்கஜம் ராஜனை நெருங்கினாள். குழந்தையை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள். பிறகு தன்னுடைய முந்தானையால் அவன் கண்ணீரைத் துடைத்தாள். "உங்க வேதனை என்னன்னு எங்கிட்டே சொல்லக் கூடாதா?" என்று அடக்கத்தோடு கேட்டாள்.

ராஜன் ஒரு முறை அவளைப் பார்த்து விட்டுக் குழந்தையைப் பார்த்தான். பெருமூச்சு விட்டான். "மனிதன் தன்னைத்தானே உண்டாக்கிக் கொள்வ

www.t.me/tamilbooksworld

இல்லை. அவனைக் கடவுள் நிர்மலமாகப் பிறப்பிக்கிறார். ஆனால் பிறந்து வளர்ந்த பின் அவன் தன்னுடைய வாழ்வில் சிக்கல்களைத் தானே உண்டாக்கிக் கொள் கிறான்'' என்று பதில் அளித்தான். உடனே எழுந்து சென்று விட்டான்.

பங்கஜம், 'உங்கள் வாழ்க்கையில் அப்படி என்ன சிக்கல்? நல்ல மனைவி, அழகான குழந்தை, பொன்மங்கலம் பாரிமங்கலம் இரண்டு கிராமங்கள். அதைத் தவிர அழிக்க முடியாத செல்வம், பெற்றோர் எல்லாம் இருக்கும்போது சிக்கல் என்று சொல்வது பொருத்தமாக இல்லையே?' என்று ராஜனைக் கேட்போமா என்று நினைத்தாள். தன் ஆசையை அடக்கிக் கொண்டாள்.

குளித்துவிட்டு வேகமாகச் சாப்பிட்டான் ராஜன், உடனே வெளியே புறப்பட்டான். அன்று மாலை திரும்பும் போது ஒரு பூட்டுப் போட்ட தோல் பை வாங்கி வந்தான். அந்தத் தோல் பையைத் தன்னுடைய அலமாரியில் வைத்துப் பூட்டினான். சாவியைத் தன் பையிலேயே வைத்துக் கொண்டான்.

அன்றிரவு பங்கஜம், ராஜனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். அவன் மனத்தில் இன்பம் ஏற்படும்படி பேசினாள். ஆனால் அவன் புரியாத ஒருவித அச்சத்தோடு அவளை நெருங்காமலே தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான்.

அவன் படுத்துத் தூங்கிய பின் ஒரு டெலிபோன் வந்தது. அது மனோதத்துவ நர்சிங் ஹோமிலிருந்து வந்தது. நர்சிங் ஹோமிலிருந்து டாக்டர் பேசினார்: ''ராஜன் தூங்கிவிட்டார். அவர் மனைவி பேசுகிறேன்'' என்று பங்கஜம் சொன்னதும் டாக்டர் போனை உடனே வைத்து விட்டார்.

முன்பொருமுறை, மருத்துவமனையிலிருந்து வந்த போனைத் தான் எடுத்தது பற்றிப் பேசியபோதே ராஜன்



நிலையடைந்தாள். அதுபற்றி ராஜனிடம் பேசக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள் பங்கஜம். ராஜனுக்குத் தெரியாமல் அவன் விவகாரங்களை ஆராய்வது என்று தீர்மானித்தாள். ராஜனின் தாய் சிவகாமியிடமோ, ராமலிங்கத்திடமோ இது பற்றிப் பேசுவது கூடச் சரியல்ல என்ற முடிவுக்கும் வந்தாள்.

மறுநாள் காலை பத்து மணிக்கு ராஜன், பூட்டுப் போட்ட தோல் பையுடன் புறப்பட்டான். பங்கஜம் இவர் என்று ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். ராஜனைப் பின் தொடர்வது என்று தீர்மானித்தாள். ''உங்களோடு நானும் வருகிறேன்?'' என்றாள்.

ராஜன் திகைத்தான். ''நான் டவுனிலுள்ள ஆபிசுக்குப் போகவில்லை. மவுண்ட்ரோடு செல்லுகிறேன்'' என்று சொன்னான்.

''பரவாயில்லை. நான் மவுண்ட்ரோடு வரையில் வருகிறேன்; ஸ்பென்சரில் சில சாமான்கள் வாங்க வேண்டும்'' என்று சொன்னாள் பங்கஜம்.

ராஜன் வேறு வழியில்லாமல் ஒப்புக் கொண்டான். பங்கஜத்தை மவுண்ட் ரோடில் உள்ள ஸ்பென்சர் கம்பெனி முன் விட்டு விட்டுக் காரைத் திருப்பினான்.

பங்கஜம் ஸ்பென்சரில் நுழைவது போல் பாவனை செய்துவிட்டு வெளியே வந்தாள். காலியாக வந்த ஒரு டாக்சியில் அமர்ந்தாள். ராஜனுடைய கார் சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருந்தது. டாக்சிக்காரன், ''எங்கம்மா போகணும்?'' என்று கேட்டான்.

''நேராகப் போ'' என்று உத்தரவிட்டாள். டாக்சி டிரைவர் முதலில் குழப்பமடைந்தாலும், அவள் சொன்ன படியே ரவுண்டானா நோக்கி ஓட்ட ஆரம்பித்தான்.

ராஜனின் கார் மவுண்ட்ரோடைக் கடந்து டவுனை

நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. அங்கு ஒரு பாங்கின் முன் நின்றது. ராஜன் இறங்கி உள்ளே சென்றான்.

பங்கஜம் டாக்ஸியைத் தூரத்திலேயே நிறுத்திவிட்டு, பாங்குக்கு அருகில் உள்ள ஒரு கடையில் ஏறி ஏதோ சாமான்கள் தேடுவதுபோல் நின்றாள். பத்து நிமிடங்களில் ராஜன் பாங்கிலிருந்து திரும்பினான். கடையிலிருந்தபடியே பங்கஜம் ராஜனைக் கவனித்தாள். ராஜன் காரை நெருங்கியதும் காரின் உட்புறமிருந்து பூட்டுப் போட்ட தோல் பையைத் திறந்தான். தன் கோட்டுப் பையிலிருந்து நூறு ரூபாய் நோட்டுக் கற்றைகளை எடுத்து அந்தப் பைக்குள் திணித்தான். மொத்தமாகப் பல ஆயிரம் ரூபாய்களுக்கு நூறு ரூபாய் நோட்டுக்களாக வாங்கி இருந்தான் என்பது தெரிந்தது.

மறுபடியும் தோல் பையைக் கையில் எடுத்துக் கொண்டு பங்கஜம் இருந்த கடையை நோக்கி வந்தான் ராஜன். தன்னை அவன் பார்த்து விடுவானோ என்ற திகில் பங்கஜத்துக்கு ஏற்பட்டது. கடையின் ஒரு மூலையில் குடைகள் தொங்க விடப்பட்டு இருந்தன. தொங்கும் குடைகளின் பின்னால் மறைந்து கொண்டாள். ராஜன் பங்கஜம் இருந்த கடைக்குள் வரவில்லை. அருகிலிருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்குச் சென்று நன்னாரி சர்பத் தயார் செய்ய உத்தரவிட்டான். சர்பத் குடித்ததும் போய்க் காரில் ஏறிக் கொண்டான்.

கார் நகர்ந்தது. பங்கஜம் வெளியே வந்து டாக்ஸியில் ஏறினாள். டாக்ஸியை வீடு நோக்கி ஓட்டச் சொன்னாள்.

ராஜன் தன் பெயரில் உள்ள பாங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுத்து வீட்டுக்குக் கொண்டு வருகிறான். இவ்வளவுதானே? அதற்கு ஏன் இவ்வளவு ரகசியம்?

ஒரு வேளை...

ராஜன் தன் தந்தைக்குத் தெரியாமல் பணம் எடுக்கிறானோ? அப்படித்தான் இருக்கும். சந்தேகமில்லை என்ற



30052
4663165

முடிவுக்கு வந்தாள்.

இதை மாமனார் ராமலிங்கத்திடம் சொல்வதா? சொல்லாமல் மூடி வைப்பதா? என்ன செய்வது என்று பங்கஜம் யோசித்துக் கொண்டிருக்கும் போது, அவள் சென்ற டாக்ஸி கந்தசாமி கோயிலை நெருங்கியது. அப்போது அவளுக்கு எதிர்ப்புறம் ராஜன் கார் சென்று கொண்டிருந்தது. வளைந்து கந்தசாமிக் கோவிலுக்குச் செல்லும் சந்தில் நுழைந்தது. அதைப் பார்த்த பங்கஜத்துக்கு அவன் எங்கு செல்கிறான் என்பதை அறிய வேண்டும் என்ற ஆசை மறுபடி எழுந்தது.

தன் டாக்ஸியைக் கந்தசாமி கோவில் சந்தில் திரும்பும்படி சொன்னாள். கோவில் வெளிப்புறம் ராஜனின் கார் நின்றது. ராஜன் தோல் பையுடன் கோவிலுக்குள்ளே சென்றான். அந்த வேளையில் கோவிலில் கூட்டம் இல்லாமல் இருந்தது. பங்கஜமும் பின் தொடர்ந்தாள். ராஜன் முருகன் சன்னதியில் நின்றபடி கண்களை மூடித் தொழுது கொண்டிருந்தான். ராஜன் பாதத்தில் தோல் பை கிடந்தது. சன்னிதியில் வேறு யாரும் இல்லை குருக்களைத் தவிர. குருக்கள் தீபாராதனைத் தட்டுடன் உட்புறம் சென்றார்.

அவர் சென்றதும் ராஜன், "முருகா! நீதான் என்னைக் காப்பாற்றணும். என் மனத்தில் உள்ள குழப்பத்தைப் போக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டபடி நின்றான்.

குருக்கள் தீபாராதனைத் தட்டுடன் ராஜனை நோக்கி வந்தார். பங்கஜம் உடனே கோவில் தூணின் பின்புறம் மறைந்து கொண்டாள். ராஜன் குருக்களுக்கு ஒரு ரூபாய் கொடுத்த பின்பு தோல் பையை எடுத்துக் கொண்டு வெளியேறினான். அவன் வெளியேறிய பின் பங்கஜம் முருகன் சந்நிதி நோக்கிச் சென்றாள். சில விநாடிகள் மும் விக்கிரகத்தையே பார்த்தபடி நின்றாள். முருகனையே அவள் பார்த்துக் கொண்டு நின்றாலும், அவள் மனத்தில்

என்னவோ வயதான பாபாவின் கனிவுத் தோற்றம்தான் தோன்றியது. அதோடு அவள் மனத்தில் ஓர் அமைதியும் தோன்றியது. அவள் பொறுமையோடு இருந்தால் இவ்வளவு சிக்கல்களும் தானே தீர்ந்து விடாதா என்ற எண்ணம் தோன்றியது. ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்யக் கூடாது. கணவனிடம் கேள்வி கேட்டு அவரைத் துன்புறுத்தவோ, மாமனார் ராமலிங்கத்திடம் புகார் பண்ணிக் குடும்பத்தில் சச்சரவை உண்டு பண்ணுவதோ, அவள் பிரச்னையைத் தீர்க்காது; இன்னும் அதிகக் குழப்பத்தையே விளைவிக்கும்...

தீர்மானத்தோடு வீடு திரும்பினாள் பங்கஜம்.

அன்று முதல் பங்கஜம் அவள் கணவனின் ஒவ்வொரு செய்கைகளையும் விழிப்போடு கவனித்து வந்தாள். ஆனால் அவனிடம் எதையும் பற்றிக் கேள்வி கேட்பதில்லை. அவனை அதிகம் நெருங்கி அவனுக்கு அன்புத் தொல்லை கொடுப்பதையும் நிறுத்திக் கொண்டாள். மூன்று நாட்களுக்கு ஒரு முறை ராஜன் அந்தத் தோல் பையை எடுத்துக் கொண்டு செல்வான். பிற்பகல் திரும்பி வந்ததும் அதைப் பூட்டி வைப்பான். எவ்வளவு பணம் அந்தப் பையில் வைத்திருப்பான்? எதற்காக பாங்கியில் உள்ள பணத்தை சிறுகச் சிறுக வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கிறான்? இந்தக் கேள்விகளுக்கு விடை தெரிந்து கொள்ளப் பங்கஜம் மிகவும் ஆசைப்பட்டாள். அந்த நாட்களில் பங்கஜம் ராஜனிடையே கணவன் மனைவிக்குமுள்ள எவ்விதத் தொடர்புமே இல்லாமல் இருந்தது. தான் அவனை நெருங்காமல் இருப்பதையே அவன் விரும்புகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

பங்கஜத்துக்கு ஏற்பட்ட இந்த சங்கடத்தில் அவள் தன் தாய் வீட்டுக்குப் போவதையே மறந்து விட்டாள். அவள் சிநேகிதி சாவித்திரியையும் மறந்துவிட்டாள். சாவித்திரியின் வாழ்க்கையில் வேகமாக ஏற்பட்ட புது விளைவுகள், சாவித்திரியின் பூராக் கவனத்தையும் கவர்ந்

www.t.me/tamilbooksworld



திருந்தன. ஆகையால் சாவித்திரியின் மனத்தில் பங்கஜத்தைப் பற்றிய நினைவே எழவில்லை.

ஒழுங்கான மாணவன் பள்ளிக்குச் செல்வதுபோல், ஒரு கோவிலுக்குப் பக்தன் செல்வது போல், கோபால் தினமும் காலை பத்து மணிக்கு ராவ்ஜியைச் சந்திக்க வந்து விடுவான். அவரோடு பழைய காலத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுப்பான்.

பணம், அந்தஸ்து, பதவி, வெற்றி இவற்றையெல்லாம் துறந்த ராவ்ஜி, துறக்காமலும் சிலவற்றை வைத்துக் கொண்டிருந்தார். அவற்றில் ஒன்று சாவித்திரி மீதுள்ள பாசம். இரண்டாவது, அவர் மனதின் அடித்தளத்தில், அவர் கொண்டிருந்த தியாக வாழ்க்கையின் மீதுள்ள பெருமை. தான் மற்ற தேசபக்தர்களைப்போல் தன் தியாகத்திற்கு விலைபேசிப் பலன் அடையவில்லை என்ற பெருமை. அகந்தையே இல்லாத ராவ்ஜியின் மனத்தில் தான் ஓர் உண்மைத் தியாகி என்ற ஆணவம் மட்டும் இருந்தது. அந்த ஆணவத்திற்குத் தூபம் போடும் சிஷ்யனாக அமைந்தான் கோபால். ராவ்ஜி ஆணவத்தோடு இல்லாமல் விழிப்போடு இருந்திருந்தால், கோபாலின் அக்கறை எந்தத் திசையில் செல்கிறது என்று புரிந்து கொண்டிருப்பார். அவர் மகள் மீதுள்ள அக்கறைதான், அவனைத் தினமும் தன் வீட்டுக்கு வந்து கூறும் பழைய கதைகளைக் கேட்கச் செய்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்.

கோபாலின் கண்கள் வீட்டின் உட்புறம் ஹாலில் நின்று கொண்டிருக்கும் சாவித்திரியைத் தேடியபடியே இருக்கும். ஆனால் அவன் உதடுகள் ராவ்ஜியைப் பாராட்டியபடி இருக்கும். கோபால் அடக்கமாகப் பழகும் விதம், சாவித்திரியின் தாய்க்கே அவன்மீது ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கொடுத்தது.

ஆரம்பத்திலிருந்தே தனக்கு ஒரு பிள்ளை இல்லாத குறை, மாப்பிள்ளை வந்ததும் தீர்ந்தது என்று மகிழ்ந்த

சாவித்திரியின் தாய், அந்த மாப்பிள்ளையும் இறந்து போன போது மனம் உடைந்துவிட்டாள். சிரித்த முகத்துடன் பேசும் கோபாலிடம் சாவித்திரியின் தாய்க்கு ஒரு வாஞ்சையே ஏற்பட்டது.

ஆனால் சாவித்திரிக்கு உண்மை புரியாமல் இல்லை. கோபாலின் விஷமப் பார்வையின் அர்த்தம், அவன் ஒன்றும் அறியாதவன்போல் சிரிப்பதன் நோக்கம்—எல்லாம் நடிப்பு என்று புரிந்து கொண்டாள். சாதுவான தன் அப்பாவைக் கோபால் ஏமாற்றுகிறான். அது தெரியாமல் அப்பாவும் ஏமாந்துவிட்டார் என்றுதான் அவள் நினைத்தாள். ஏமாறப் பிறந்தவர் அப்பா. வாழ்வு அவரை ஏமாற்றியது; நாடு அவரை ஏமாற்றியது. யார்தான் அவரை ஏமாற்றவில்லை. அதாவது, நமச்சிவாயம் ஒருவரைத் தவிர? அதனால் கோபால் ஏமாற்றுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. 'கோபால் எனக்காகத் தினமும் வருகிறான்' என்ற இன்பம், பெற்றோர் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதில் உள்ள ஆத்திரத்தைவிட அவளுக்கு அதிகமாக இருந்தது. கோபாலின் அழகான முகம், அவன் வலிமை மிகுந்த உடல் இவற்றைத் தினமும் பார்ப்பதில் அவளுக்கு ஒரு நிறைவு இருந்தது. அதனால் அவள் தன் மனத்தில் தோன்றிய உண்மையைப் பெற்றோரிடம் கூறவில்லை.

நடுப்பகல், வீட்டுத் திண்ணையில் அவள் தந்தையோடு கோபால் உட்கார்ந்து 'செஸ்' ஆடுவான். சாவித்திரியும் அருகில் அமர்ந்து தந்தைக்கு உதவியாகக் காய்களை நகர்த்தி ஆடுவாள். 'செஸ்' ஆட்டத்திலாவது கோபால் தன் தந்தையை ஏமாற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் போலும்! ராவ்ஜி காய்களைப் பார்த்தபடி இருப்பார். கோபாலின் பார்வை பழுத்த பலாப்பழம் போன்ற சாவித்திரியின் எழில்மீது லயித்து இருக்கும். சாவித்திரியும் கோபாலின் மன நிலையைப் புரிந்து கொண்டு உள்ளூர மகிழ்ச்சியோடு அந்தச்



சந்தர்ப்பத்தை வீணாக்காமல், தந்தையின் காய்களை நகர்த்தி, செஸ் ஆட்டத்தில் கோபாலின் ராஜாவைக் கட்டிவிடுவாள். "அப்பா உங்களைக் கட்டிப் போட்டு விட்டார்!" என்பாள்.

ஒன்றுமறியாத ராவ்ஜி, "நான் எங்கம்மா கோபாலைக் கட்டிப் போட்டேன்? நீ தானே அவனைக் கட்டிப் போட்டு இருக்கே?" என்பார். ராவ்ஜியின் வார்த்தைகளில் அவர் எண்ணாத இரண்டாவது அர்த்தத்தைப் புரிந்து கொண்டு விஷமப் புன்னகையோடு சாவித்திரியைப் பார்த்துச் சிரிப்பான் கோபால். சாவித்திரியின் முகமும் சிவக்கும்.

ஒவ்வொரு நாளும் ராவ்ஜியிடம் அவர் எழுதப்போகும் புஸ்தகத்துக்காக வேலை செய்வது பாதி நேரம். மிகுதி நேரம் 'செஸ்' ஆட்டம்—இப்படியே சென்றது.

திருவல்லிக்கேணியில் ராவ்ஜியின் நெருங்கிய உறவினரின் வீட்டில் ஒரு கல்யாணம். அதற்கு ராவ்ஜியும், அவர் மனைவியும் செல்ல வேண்டியிருந்தது. பொதுவாகக் கல்யாணங்களுக்கு, அதுவும் உறவினர் வீட்டுக் கல்யாணங்களுக்குச் சாவித்திரி செல்வதில்லை.

இன்று வீட்டில் சாவித்திரியை வைத்து விட்டுப் பெற்றோர் சென்றுவிட்டனர். அன்று வழக்கமாகப் பத்து மணிக்கு வரும் கோபால் வரவில்லை. பெற்றோர் இல்லாத சூழ்நிலை. வேலைக்காரி ஒருத்திதான் இருந்தாள். பாத்திரம் கழுவி வைத்த பின் சாவித்திரி அவளையும் சீக்கிரமே வீட்டுக்கு அனுப்பி விட்டாள்.

அவள் மனத்தில் பெரும் குழப்பம். 'கோபால் இப்போது வந்து விட்டால்?'

மணி பதினொன்றாகியது. கோபால் வரவில்லை. சாவித்திரிக்கு ஒரு நிம்மதி. கடவுளே நம்மைக் காப்பாற்றி விட்டார் என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற

துணிவு அவளுக்கு இல்லை போலும்.

கதவைத் தாளிட்டுவிட்டு உட்புறம் செல்ல அடி எடுத்து வைத்தாள். வாசல்புறம் கார் என்ஜின் சத்தம் கேட்டது. மறுபடியும் சாவித்திரிக்குப் படபடப்பு ஏற்பட்டது. கோபாலின் காராக இருக்குமோ? கார் என்ஜின் சத்தம் நின்றது. கதவு திறந்து மூடும் சத்தம் கேட்டது. சாவித்திரி ஜன்னல்புறம் வந்தவள், கோபால் வீட்டினுள் நுழைவதைப் பார்த்தாள்.

ஒருவிதப் பயம் அவளுக்கு ஏற்பட்டது. கதவைத் திறக்காமல் நின்றாள். கோபாலும் அவளும் தனிமையில் பெரியவர்கள் இல்லாது சந்திக்கப் போகின்றனர்.

வெளிப்புறமிருந்து "சார்...சார்..." என்ற சத்தம் வந்தது. பேசாமல் நின்றாள் சாவித்திரி. மறுபடியும் "சார்...சார்..." என்றான் கோபால்.

சாவித்திரி கதவைத் திறந்தாள். ஆனால் அவள் பார்வை தரையில் இருந்தது. "அப்பா இல்லையா?" என்றான் கோபால்.

"இல்லை" என்று பதில் சொன்னாள்.

"அம்மா?" என்றான்.

"அம்மாவும் கல்யாணத்துக்குப் போய்விட்டாங்க. சாயந்தரம் கழிச்சுத்தான் வருவாங்க" என்றாள். ஏன் சாயந்தரம் வருவார்கள் என்று சொன்னாள் என்று அவளுக்கே புரியவில்லை. கோபாலின் கால்கள் லேசாக நடுங்குவதைப் பார்த்தாள். தியேட்டரில் துணிவோடு அவள் அருகில் தனியாக உட்கார்ந்தவனுக்கு இப்போது ஒருவிதப் பயம் ஏற்பட்டது. அப்போது அவனுக்குச் சாவித்திரியின் மனநிலை புரியவில்லை. இப்போது புரிந்து இருந்தது. இம்மாதிரி சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த்து இருந்தான். சந்தர்ப்பமும் வந்துவிட்டது. ஆனால்... அவன் கற்பனை செய்த வார்த்தைகள் வெளிவர மறுத்தன.



"இருங்கள்" என்ற சாவித்திரி உட்புறம் சென்றாள்.

முகம் வியர்க்க, கைகள் நடுங்க கோபால் சிந்தித்தபடி நின்றான். சில நிமிடங்கள் கழிந்தன.

## 33

சாவித்திரியும் கோபாலும் பக்கத்தில் உள்ள அறைக்கு நடக்கவில்லை. மிதந்து சென்றனர். ஆசை தான் அவர்களை அழைத்துச் சென்றது. சாவித்திரியின் கண்கள் மூடியபடி இருந்தன என்றாலும் அவள் உடல் மிக மிக விழிப்புடன் இருந்தது. தனது வாழ்நாளில் இம்மாதிரியான படபடப்பை அவள் உணர்ந்தது இல்லை. இன்பமும் துன்பமும் கலந்த உத்வேகம் அவளை ஆண்டது.

வியர்த்துப் போன அவள் நெற்றி, வேகமாக விடும் மூச்சு, பிரிந்த உதடுகள் மூன்றும் கோபால் விரும்பிய சந்தர்ப்பம், அவன் திட்டமிட்ட நாடகத்தின் உச்சகட்டம் நெருங்கிவிட்டதை உணர்த்தின. நீர்வீழ்ச்சியை விட மிக மிக அழகான காட்சி ஒரு பெண்ணின் வீழ்ச்சி என்பதை இதற்கு முன்பே உணர்ந்தவன் கோபால். அவன் மனத்தில் போதை ஏறியது.

சாவித்திரியின் அழகு, அவன் போதையைப் பல மடங்கு அதிகப்படுத்தியது.

எதிரே நிர்மலமாகத் துவண்டு கிடக்கும் சாவித்திரியைப் பார்த்தான். ஏனோ திடீரென்று உடைப்பெடுத்து ஓடிவரும் தண்ணீர் போல், அவன் உள்ளத்தில் ஒரு தெளிவு பெருக்கெடுத்தது. தெளிவு, வெள்ளம்போல் பாயவும், அவன் உள்ளத்து ஆசை மறைய ஆரம்பித்தது. மெள்ளத் தன் கைகளை விடுவித்துக்கொண்டு விலகினான்.

சாவித்திரி அவனைப் பளீர் பளீர் என்று அறைந்தாள். அடுத்த விநாடி அவள் விக்கி விக்கி அழுதாள்.

அவளிடம் ஏதோ சொல்ல நினைத்து ''சாவித்திரி'' என்று பேச ஆரம்பித்தான்.

''போதும்...போதும்...இங்கே நிற்காதீங்க.''

''நான் சொல்றதைக் கேளு சாவித்திரி'' என்று தொடர்ந்து கெஞ்சினான்.

''என்னை ஒரு மானங்கெட்டவள் என்று நினைக்கி றீங்க. அப்படித்தானே?''

''இல்லை சாவித்திரி. உன்னைப் புனிதமான அழகான பெண் என்று நினைக்கிறேன். இதற்கு முன்னால் நான் பெண்களோடு பழகி இருக்கிறேன். அவங்க மாதிரி இல்லை நீ. அவர்களை அடைஞ்ச மாதிரி உன்னை அடைந்தால் உன்னை அவமானப்படுத்தின மாதிரி ஆகும். நீ வலிய வந்ததினால் உன்னைக் கேவலமாக நினைக் கிறேன்னு நினைக்காதே. ஆசைங்கறது அவமானப்பட வேண்டிய விஷயமில்லை. அது கவர்ச்சியின் ஓர் இயற்கை நிகழ்ச்சி. உன் கவர்ச்சி என்னை மிருகமாய் மாற்றினது உண்மை. அதே கவர்ச்சிதான் சற்றுமுன் என் அறிவுக்கு ஒரு தெளிவையும் கொடுத்தது. உன்னை மறந்து ஓட வனா இருந்தால், உன்னை இன்று நான் அடைந்திருக்க லாம். ஆனால் வாழ்வு முடியறவரையில் உன்னோடு இருக்க ஆசைப்படறவன் நான். ஆண்மை மிகுந்தவன் என்ற தற்பெருமை எனக்குத் தேவையில்லை. நான் கண்ணியமானவன்னு உனக்குப் புரியணும்!'' என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வெளியே சென்றான். வாயில்படிவரை சென்றவனுக்குத் திடீ ரென்று ஒரு பயம் வந்தது. வெளியே நின்றபடி, ''சாவித்திரி'' என்று கூப்பிட்டான். பதில் இல்லை.

மறுபடியும் உள்ளே நுழைந்தான். கோபமாக அவனையே முறைத்துப் பார்த்தபடி மௌனமாக இருந் தாள் சாவித்திரி. பிறகு, ''இன்னும் லெச்சர் பாக்கி இருக்கிறதா?'' என்று கேட்டாள். அவளை நெருங்கிக்



கட்டிலிலிருந்து அவளைத் தூக்கினான். ''கண்ணிய மானவரே என்னை ஏன் தொட்டீங்க?'' என்றாள் அவள்.

அவளுக்கு அவனை அறையலாம் போல் இருந்தது. ''முட்டாள் பெண் நீ ஏமாந்தால், பயந்தால் ஆத்திரப் பட்டு உன் உயிருக்குத் தீங்கிழைத்துக் கொள்ளாதே. இந்த உடல், உயிர் இனி எனக்குச் சொந்தம். நீ என்னிடம் பத்திரமாக ஒப்படைக்க வேண்டும். அதை மறந்து விடாதே'' என்று சொல்லிச் சென்றான்.

சில வினாடிகள் சாவித்திரி ஒன்றும் புரியாமல் திகைத்தாள். அவள் உடலை உலுக்கிய ஆசை மறைந்து அந்த இடத்தில் ஒரு சோர்வு ஏற்பட்டது.

கோபால் செல்லும் அவசரத்தில் அவன் குட்டையை மறந்து விட்டுச் சென்றிருந்தான். அதை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அவன் சொன்னது எல்லாம் அவளுக்குப் புரியா விட்டாலும், ஒன்று நன்றாகப் புரிந்தது. கோபால் அவளை, அவள் வாழ்வின் இருட்டு இன்பங்களில் ஒன்றாக நினைக்க வில்லை. சாவித்திரிக்குத் தன்னைப் பற்றி நினைக்க வெட்கமாயிருந்தது.

மறுநாள் கோபால் வரவில்லை. ஆனால் அவன் அனுப்பிய கார் மட்டும் வந்து, ராவ்ஜியைக் கோபால் நடத்தும் பதிப்பகத்துக்கு அழைத்துச் சென்றது.

ராவ்ஜி ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக்குடன் திரும்பி வந்தார். ''என் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றிய புத்தகத்துக்குக் கொடுக்கப்பட்ட சன்மானம். அந்தப் பிள்ளையாண்டானிடம் பணம் வேண்டாம் என்றேன். கேட்க மாட்டேன் என்கிறான்'' என்றார்.

சாவித்திரியின் தாய், ''கோபால் இன்னைக்கு வருவானா?'' என்று கேட்டாள்.

''கோபால் இன்னும் ஒரு வாரத்துக்கு வரமாட்டான். அவனுடைய உறவினன் ஒருவன்-ராணுவத்தில் சேர்ந்

தவன்-மலேயாவிலிருந்து வந்திருக்கிறானாம். அவன் உடல் நிலை சரியில்லையாம். அவனைப் போய் அழைத்திட்டுச் சென்னைக்கு வரப் போகிறானாம். அதனால் தான் எனக்கு அவசரமாக இன்றைக்கு 'செக்' போட்டுக் கொடுத்தான்'' என்றார்.

சாவித்திரிக்குச் சில நாட்கள் அவனைப் பாராமல் இருப்பதும் சரி என்று தோன்றியது. அவளுடைய பலவீனத்தை அவன் தெரிந்து கொண்டு விட்டான். அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தாத நல்லவனாக அவன் தோற்றம் அளிக்கிறான். அவன் முகத்தில் எப்படி விழிப்பது என்ற லஜ்ஜை அவளைப் பிடித்து வாட்டியது.

ஃ ஃ ஃ

பங்கஜத்தின் வீட்டில் அன்று இரவு பெருஞ் சோதனை அவளுக்குக் காத்திருந்தது. ராஜன் தனி அறையில் படுப்பது என்பது கடந்த சில நாட்களில் இருவரும் ஒப்பு கொண்ட விஷயமாகி விட்டது. இருந்த போதிலும் ராஜன் அறையில் விளக்கு அணையும் வரையில் பங்கஜம் தூங்காமல் காத்திருப்பாள். பிறகுதான் தூங்குவாள். அன்றும் அவ்வாறே காத்திருந்தாள். ராஜன் அறையில் அதிசயமாக அன்று விளக்கு ஒன்பதரை மணிக்கே அணைந்து விட்டது. சிறிது நேரம் காத்திருந்தாள். எழுந்துபோய் அவன் அறைப்பக்கம் நின்று கேட்டாள். ராஜன் நிம்மதியாகத் தூங்குகிறான் என்பது தெரிந்ததும், தன் படுக்கையில் வந்து படுத்தாள். அப்படியே அயர்ந்து தூங்கி விட்டாள். விடியும் வரை விழிக்காமலேயே தூங்கி விட்டாள்.

தூக்க மருந்து சாப்பிட்டது போல் அவள் தூங்கியது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அருகில் குழந்தை செல்வம் பசியால் அலறியபடி கிடந்தான். குழந்தைக்குப் புட்டிப்பால் தயார் செய்து பாட்டிலில் ஊற்றிக்



கொடுத்து விட்டுக் கணவன் அறைக்குச் சென்றாள். அறை காலியாக இருந்தது. இரவு பூராவும் ராஜன் அதில் படுத்துத் தூங்கவில்லை என்பது படுக்கை இருந்த நிலையில் தெளிவாகத் தெரிந்தது. ஓடிப் போய்ப் 'பீரோவைத் திறந்து பார்த்தாள். பீரோவில் இருந்த தோல் பணப்பை அங்கு இல்லை.

ஆயிரக் கணக்கில் அவன் சேர்த்து வைத்திருந்த பணத் தொகையோடு இரவு எங்கு போயிருப்பான் என்று யோசித்தாள். முன் ஒரு முறை இரவு ராஜன் டாக்ஸியில் சென்றதைப் பார்த்திருந்தாள். அன்று மறு நாள் காலை வீடு திரும்பி விட்டான். இன்றும் அப்படியே எதிர் பார்த்தாள்.

மணி பத்தாகியும் ராஜன் திரும்பவில்லை. ராஜன் தாய் சிவகாமி, ''காலங்காத்தாலே அவன் எங்கே போனான் பங்கஜம்?'' என்று கேட்டாள். அதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள் பங்கஜம். பிற்பகல் ஆகியும் வரவில்லை. நல்ல வேளை, மாமனார் கோர்ட்டுக்குப் போயிருந்தார். அவர் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நிர்ப்பந்தம் பங்கஜத்துக்கு ஏற்பட வில்லை.

பிற்பகல் மூன்று மணியாகியும் ராஜன் வரவில்லை என்றதும் பங்கஜத்துக்கு உண்மையிலேயே கலவரம் ஏற்பட்டது. ஒவ்வொரு நிமிடமும் வேதனை அதிகரித்தது. எண்ணாத காட்சிகளையெல்லாம் எண்ணி வேதனைப்பட்டாள்.

மாலை ஐந்து மணிச் சுமாருக்கு ராமலிங்கம் வீட்டுக்கு வந்தார். வரும்போதே, ''சிவகாமி, ராஜன் எங்கே?'' என்று கேட்டார். பங்கஜம் மாடியில் படிக்கட்டருகில் நின்றபடி கீழே நடப்பதைக் கவனித்தாள்.

சிவகாமி, ''காலையில் போனவன் இன்னும் வரலியே.'' என்றாள்.

''காலையில் போனவன் வரலியா? சரி, பங்கஜம்

எங்கே?'' என்று கேட்டார்.

பங்கஜம், ''என்ன மாமா ...என்ன வேணும்?'' என்று படிக்கட்டில் இறங்கி வந்தாள்.

ராமலிங்கம் குழப்பத்தோடு காணப்பட்டார். ''பங்கஜம். நீ பெரிய இடத்துப் பெண். உன்னை இப்படி விசாரிக்கவே வெட்கப்படறேன். ஆனால் எனக்குக் கவலையாயிருக்கு. சமீபத்தில் உனக்குப் பெரிய வைரம், பச்சையிலே ஏதாவது நகை வாங்கச் சொல்லி ராஜனிடம் கேட்டியாம்மா?'' என்றார்.

ராமலிங்கத்தின் கேள்விகள் செல்லும் திசையைப் புரிந்து கொண்டாள். பொய் சொல்லலாமா என்று ஒரு விநாடி நினைத்தாள். அடுத்த விநாடியே பொய் சொல்வது சரியல்ல, தேவையுமில்லை என்ற முடிவுக்கு வந்தாள். ''நகை ஒன்றும் வாங்கலியே?'' என்றாள்.

ராமலிங்கம் சில விநாடிகள் குழம்பியபடி நின்றார். மறுபடியும் பங்கஜத்தை நோக்கித் திரும்பினார். அவர் என்ன கேட்கப் போகிறார் என்பது பங்கஜத்துக்குத் தெரியும். ''கடந்த ஒரு வார காலத்தில் கொஞ்சம் கொஞ்சமா இரண்டரை லட்ச ரூபாய் அவன் கணக்கில் இருந்து வாங்கி இருக்கிறான். உனக்கு ஏதாவது தெரியுமா!'' என்று கேட்டார்.

இது அவளுக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் மொத்தத் தொகை எவ்வளவு என்று தெரியாது. ஆகையால் துணிந்து பொய் சொல்வது என்று தீர்மானித்துப் பதில் கூற வாயெடுத்தாள். அவள் பதில் கூறுமுன்பே அறையில் கவிழ்ந்த தலையோடு ராஜன் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து தாடி வைத்து, குல்லாய் வைத்த ஒரு முஸ்லீமும், அவன் அருகில் கிட்டத்தட்ட பங்கஜத்தின் வயதில் ஒரு முஸ்லீம் பெண்ணும், அவள் கையைப் பிடித்தபடி மூன்று வயதுச் சிறுவன் ஒருவனும் வந்தார்கள்.



அந்த முஸ்லீம் பெண் கண்ணைப் பறிக்கும் அழகுடன் இருந்தாள். ரத்தச் சிவப்பான உதடுகள். பளிங்கு மேனி, நாவல் பழம் போன்ற கண்கள், சற்று செம்பட்டையான தலைமயிர். கொழு கொழுவென்று வளர்ந்த உடல்கட்டு. அவள் முகத்தில் கம்பீரமும் சோகமும் தெரிந்தன. அந்தப் பெரிய ஹாலையும், அதில் நிறைந்து இருக்கும் விலை மதிக்க முடியாத பொருள்களையும் அலட்சியமாகப் பார்த்தாள். அவள் பார்வை நேரடியாகப் பங்கஜத்தின் மீது நின்றது.

பங்கஜம் பயத்தால் சிலிர்த்தாள். அவள் வாழ்வில் இன்னும் ஓர் இடி பயங்கரமாக ஒலிக்கப் போகிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. தன் கணவன் முகத்தைப் பார்த்தாள். ராஜன் முகம் பேயறைந்தது போல் காணப்பட்டது. ஏமாற்றம், வருத்தம், தோல்வி, குழப்பம் எல்லா உணர்ச்சிகளும் போட்டி போட்டபடி விளையாடின.

ராமலிங்கத்துக்கும், சிவகாமிக்கும் இரண்டு புதியவர்கள், அதுவும் வேறு நாட்டு முஸ்லீம் போன்றவர்கள் ஹாலில் நுழைந்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது. பங்கஜத்துக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது. உள்ளே நுழைந்த முஸ்லீமின் கையிலிருந்த தோல் பைதான். அதில் தான் ராஜன் பணத்தைப் பாங்கியிலிருந்து வாங்கிச் சேகரித்து வைத்திருந்தான்.

முஸ்லீம் ஆண்மகன் ராமலிங்கத்தை ஒரு முறை பார்த்தான். பிறகு சிவகாமியைப் பார்த்தான். பெரியவர்களைப் பார்த்ததும் அவனும் ஒரு விநாடி திகைத்தான். பிறகு சமாளித்தபடி ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தான். அவன் பேசிய ஆங்கிலத்தின் உச்சரிப்பு புதுவிதமாக இருந்தது. ''மன்னிக்க வேண்டும் பெரியவரே. உங்கள் மகன் கொண்டு வந்த பணம் அப்படியே இந்தத் தோல் பையில் இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிப் பையை அவரிடம் நீட்டினான்.

ராமலிங்கம், ''இதெல்லாம் என்னப்பா, ராஜன்?''

என்று கேட்டார். ராஜன் பதில் சொல்லாமல் இருந்தான்.

முஸ்லீம் பேசாமல் இருக்க முடியவில்லை. "உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறேன். உங்கள் மகன் எனக்கு இரண்டரை லட்சம் கொடுத்து எங்களை விலைக்கு வாங்கலாம் என்று நினைக்கிறான். ஆனால் பணத்துக்கு ஆசைப்பட்டவர்களாக நாங்கள் இருந்திருந்தால், என் சகோதரி இந்தியாவுக்கு ராஜனைத் தேடி வந்திருக்க வேண்டாம். அமெரிக்கா போயிருக்கலாம். அவள் கணவனோடு, குழந்தையோடு ஒன்று சேர்ந்து வாழ விரும்புகிறாள். அதைத் தனிமையில் உங்கள் மகனோடு சொல்லிப் பார்த்தேன். ஒரு மாத காலமாகத் தட்டிக் கழித்து வருகிறான். நானும் பொறுத்திருந்தேன். நேற்றுப் பணத்தோடு வந்து என்னிடம் கொடுத்து ஊருக்குப் போகச் சொல்கிறான். என் தங்கச்சியின் மானம் விலைக்கு வாங்கப் படக் கூடியதல்ல. அவள் குழந்தைக்குத் தங்கள் மகன்தான் தகப்பன்" என்று சொன்னதும், ராமலிங்கம் தன் பொறுமையை இழந்து "ஷட் அப்!" என்று கூச்சல் போட்டார்.

ராஜனிடம் திரும்பி, "இதெல்லாம் என்னடா ராஜன்?" என்று கேட்டார்.

ராஜன், "அப்பா, எனக்கு ஒன்றும் புரியவில்லை அப்பா. எனக்கு நான் யார் என்றே புரியவில்லை. கடந்த ஒரு மாத காலமாக நான் நானேயா? நான் யார்? ராஜனா? இல்லை வேறு ஒருவனா என்ற கேள்வியைத் தானப்பா கேட்டு வருகிறேன். ஒவ்வொரு சமயம் இந்த அஹமதும், ஆயஷாவும் சொல்வதும் என் வாழ்வில் நடந்து இருக்கலாம் என்று தோன்றுகிறது. சில வேளை அது நடந்திருக்காது என்று தோன்றுகிறது. எந்த ஞாபகம் என்னுடைய சொந்த ஞாபகம் என்று புரிய வில்லையப்பா" என்று துடித்தான்



"என் சகோதரியை நீங்கள் ஏற்றுக் கொள்ளா விட்டால் இந்த ஊர் பத்திரிகைகளில் நான் வழக்குத் தொடரப் போவதாகச் செய்தி கொடுப்பேன். நீண்ட நாள் பொறுத்து விட்டேன். இனிமேல் பொறுக்க முடியாது" என்று ஆத்திரத்துடன் ஆங்கிலத்தில் கூறினார் அந்த முஸ்லீம்.

விஷயங்களை ஆராய்ந்து பார்க்கக் கூட அவகாசமில்லாமல் தொடர்ந்து இறங்கும் உண்மைகளைச் சந்திக்கும் படியான நெருக்கடியில் ராமலிங்கம் பொறுமையை இழந்தார். "கெட் அவுட்!" என்று கூச்சலிட்டார். அஹமதும், ஆயஷாவும் வெளியே சென்றனர்.

சிவகாமி அம்மாள், "என்ன ராஜன், இன்னும் உன்னைக் கஷ்ட காலம் விடவில்லையா? சொல்லுடா" என்று கேட்டாள்.

"அம்மா, எதை என்னவென்று சொல்லுவேனம்மா! என் மூளை உணர்ச்சிகள் என்னுடையதா என்று தெரியவில்லை அம்மா! என்னை ஒன்றும் கேட்காதீங்க..." என்று கூறிவிட்டு மாடிப் பக்கம் நோக்கி ஓடினான்.

பங்கஜம் அவனைப் பின் தொடர்ந்தாள். ராஜன் பங்கஜத்தைப் பார்த்ததும், "உன் முகத்தைப் பார்க்கவே எனக்கு அருகதையில்லை. உனக்கு என் மீது கோபமில்லையா? என்மீது வெறுப்பில்லையா?" என்று கேட்டான்.

பங்கஜம், "என்னதான் நடந்தது சொல்லுங்களேன்" என்றாள்.

"அஹமதும், ஆயஷாவும் எகிப்து நாட்டைச் சேர்ந்தவங்க. டோப்ருக்கிலிருந்து பத்து மைல் தூரத்தில் வசிக்கிறவர்கள். அவள் என்னைக் காயம் பட்ட நிலையில் காப்பாற்றினதாகவும், வைத்தியம் செய்து என்னை மணந்து கொண்டதாகவும் சொல்கிறாள். நான் அவளோடு

கெய்ரோவில் இருந்ததாகவும் சொல்கிறாள். அவள் குழந்தைக்கு நான் தகப்பன் என்றும் சொல்கிறாள்.''

''நீங்க என்ன நினைக்கிறீங்க?'' என்று அமைதியோடு பதட்டமில்லாமல் கேட்டாள் பங்கஜம். அவளுக்கே அவள் அமைதி ஆச்சரியத்தைத் தந்தது.

ராஜன் பதில் சொல்லாமல் பங்கஜத்தின் முகத்தைப் பார்த்தான். பங்கஜம் உறுதியோடு, ''நீங்கள் மனச் சாட்சியைக் கொல்லாமல் உண்மையைச் சொல்லுங்க. அது எனக்கு எவ்வளவு கசப்பாக இருந்தாலும் பரவாயில்லை. அவள் சொல்றது உண்மைன்னு நினைக்கிறீங்களா?'' என்றாள்.

ராஜன் நடுக்கத்துடன், ''அவள் சொல்றது உண்மை யாயிருக்குமோன்னு பயப்படறேன், பங்கஜம்'' என்றான்.

''அது உண்மையா இருக்கும்னு எந்தக் காரணத்தைக் கொண்டு சொல்றீங்க?''

''முதல் காரணம், அவள் இரண்டரை லட்சம் ரூபாய் பணத்தை லட்சியம் பண்ணலை... இரண்டாவது... இரண்டாவது...'' என்று சொல்லி நிறுத்தினான்.

''இரண்டாவது என்ன! சொல்லுங்க?'' என்றாள்.

''என்னை ராஜன் என்கிற பேர்லேதான் ஆயஷா தெரிஞ்சுக்கிட்டு இருக்கா. வேறு எந்தப் பேர்லேயும் அவள் என்னைத் தெரிஞ்சுக்கிட்டதாகத் தெரியலை. அதுமட்டு மில்லை. ஆயஷாவின் அட்ரஸ், என் கையெழுத்தில் எழுதின பேப்பர் அவளிடம் இருக்கிறது. என் 'யூனிபார்ம்' எல்லாம் வைத்திருக்கிறாள். இவ்வளவும் நான் கொடுக்காமல் அவளுக்கு எப்படிக் கிடைத்திருக்கும்?''

பங்கஜம் மனமுடைந்து எழுந்து நின்றாள். ''நீங்கள் ஞாபகம் இழந்தப்பறம் ஆயஷாவைச் சந்திச்சிருக்கணும். இல்லேன்னா அவளை மணந்து அவளோடு வாழ்ந்திருக்க மாட்டீங்க. அது மட்டும் உறுதி!'' என்றாள்.

''எனக்கு எதுவும் உறுதியில்லை பங்கஜம். நான் உன்

www.t.me/tamilbooksworld



கணவன்தானா? இல்லை நான் வேறு ஒருவனா? நான் யார்? என்ற கேள்விக்கு விடை கேட்கத்தான் மருத்துவ மனைக்குப் போனேன். அதே ஒரு காரணத்தினால்தான் நான் உன்னை நெருங்கவும் கூச்சப்பட்டேன். ஒன்றே ஒன்றுதான் உறுதி. இந்தக் குழந்தை என்னுடையது. செல்வம் என்னுடைய மகன். என்ன பயங்கரமான நிலையிலே நம் தொடர்பு இருக்கிறது என்பதை நினைக்க நினைக்க எனக்கு ஒன்றும் புரியவில்லை பங்கஜம்.'' என்றான்.

ராஜன் கூறியதைக் கேட்டதும், பங்கஜத்தின் கற்பனையில் சில எண்ணங்கள் எழுந்தன. அவற்றின் பளுவை, அவமானத்தை அவளால் தாங்க முடியவில்லை. தன்னை மணந்து சென்ற கணவன் ஒருவன், பம்பாய்த் துறைமுகத்தில் ஞாபகமிழந்து திரும்பியவன் வேறு ஒருவன் என்று நினைக்கவே ஆபாசமாக இருந்தது. பெற்ற குழந்தையின் தகப்பன் எதிரே இருப்பவன். ஆனால் அவன் அவளுக்குத் தாலி கட்டியவன் அல்ல என்று எப்படி நினைப்பது? இப்படியும் அவள் வாழ்க்கையில் நிகழ முடியுமா என்று நினைத்தாள். ஒரு நாளும் இருக்க முடியாது என்ற நேர் விடைதான் அவள் மனச்சாட்சி சொல்லியது.

அதையே அவள் ராஜனிடம் சொன்னாள். ''ஏன் வீணாகக் குழம்புகிறீர்கள்? நீங்கள் என் கணவர்தான். இல்லாவிட்டால் எலிபெண்டா கடற்கரையில் உங்களுக்கு எப்படித் திடீரென்று கடந்த கால ஞாபகங்கள் திரும்பி இருக்க முடியும்? உங்கள் வாழ்க்கை ஞாபகங்களை வேறு ஒருவர் பகிர்ந்து கொள்ள முடியுமா?'' என்று கேட்டாள்.

ராஜன் உடனே, ''பங்கஜம், என் மனம் என்ற குகையில் தெளியும் ஞாபகங்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? எது என் ஞாபகங்கள்? என் சுபாவத்துக்குப் பொருத்தமில்லாத ஞாபகங்களும் அங்கு இருக்கின்றன. ஆயஷாவை நான் எப்படி மணந்திருக்க முடியும்?

அவளுடன் ஒரு குழந்தைக்குத் தகப்பன் ஆகும்வரையில் வாழ்ந்து விட்டு எப்படி அவ்வளவையும் நான் மறந் திருப்பேன்? அது சரியாக இல்லையே. என்னால் எவ்வளவு பேருக்குத் துன்பம்! எவ்வளவு பேருக்கு அவமானம்!" என்றான்.

"ஒன்று மட்டும் உறுதி. கட்டிய மனைவிக்குக் கணவன் அடையாளம் தெரியாமல் போக முடியாது. யார் என்ன சொன்னாலும் நீங்கள்தான் ராஜன். நான் அந்தப் பெண் ஆயிஷாவுடன் பேச வேண்டும். அவளுக்கு ஆங்கிலம் பேசத் தெரியுமல்லவா?" என்று கேட்டாள்.

"அவளுக்கு ஆங்கிலம் பேசத் தெரியும்... நீ அவளைச் சந்திக்க வேண்டுமா... அது தேவையா?" என்றான்.

"நிச்சயமாக நான் அவளைப் பார்த்துத் தனிமையில் பேச வேண்டும். என்னை அழைத்துச் செல்லுங்கள்" என்று கட்டளையிட்டாள். தயக்கத்துடன் ராஜன் புறப் பட்டான்.

பங்கஜமும், ராஜனும் மாடியிலிருந்து இறங்கி வரும் போது ஹாலில் ராமலிங்கமும் சிவகாமி அம்மாளும் ஸ்தம்பித்து உட்கார்ந்து இருந்தனர்.

"அம்மா, நான் அவரோடு கொஞ்சம் வெளியே போய்விட்டு வரேன்" என்று சொல்லி நகர ஆரம்பித்தாள்.

சிவகாமிக்கு ஆச்சரியமாக இருந்தது. 'என்ன துணிச்சல்! கணவனைப் பற்றி இம்மாதிரி செய்தி கேள்வி பட்ட பின்பு கூச்சல் போடாமல், அலறி அழாமல் அவனோடு சாதாரணமாகப் புறப்படுகிறாளே! அமைதி யாகப் போகிறாளே. இவள் அப்பா நமச்சிவாயம் போலவே பெண்ணும். அவரும் எது நேர்ந்தாலும் இப்படித்தான் பதட்டமில்லாமல் இருப்பார்' என்று நினைத்தாள்.

சிவகாமி அம்மாள் நமச்சிவாயம் பிள்ளையைப் பற்றி நினைக்கும்போதே அவர் உட்புறம் நுழைந்தார். தந்தை எதிரே வரவும், பங்கஜம் துணுக்குற்றாள். உடனே



சமாளித்துக் கொண்டு, "அப்பா, அவசரமாகக் கொஞ்சம் வெளியே போய்விட்டு வர வேண்டியிருக்கு. நானே வீட்டுக்கு வர்றேம்பா..." என்று சொல்லிவிட்டுக் கணவனோடு சென்றாள்.

பங்கஜமும், ராஜனும் காரை எடுத்துக் கொண்டு, கிண்டி நோக்கிச் சென்றனர். பிறகு ஒதுக்குப்புறமான ரஸ்தாவில் கார் நுழைந்தது. அந்த ரஸ்தாவிலிருந்து ஒரு பள்ளத்தில் சிறு பங்களாவின் முன் காரை நிறுத்தினான். அந்தப் பாழடைந்த வீட்டின் வெளிப்புறம் ராஜன் மகன் என்று சொல்லப்பட்ட சிறு பையன் நின்று கொண்டி ருந்தான்.

அவன் ராஜனைப் பார்த்ததும், "வா!" என்று கூச்ச லிட்டபடி உள்ளே ஓடினான். அடுத்த நிமிஷம் ஆயிஷா வெளிப்புறம் வந்தாள். அவள் ராஜனோடு வந்திருக்கும் பங்கஜத்தைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தாள். பங்கஜம் முகத்தில் ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "சகோதரி ஆயிஷா... நான் உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்" என்று ஆங்கிலத்தில் சொன்னாள்.

ஆயிஷா, "சகோதரி!" என்று பங்கஜம் அழைத்ததைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டாள். அதோடு ஏதாவது சூழ்ச்சித் திட்டத்தோடு வந்திருப் பாளோ என்ற அச்சமும் அடைந்தாள் என்பது அவள் மருண்ட பார்வையில் இருந்து தெரிந்தது. பங்கஜம் உள்ளே நுழைந்தாள். ராஜன் வெளியே போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

ஆயிஷா, உள்ளே சென்றதும் அறையின் மூலையில் வைத்திருந்த பச்சை நிற ஷர்பத்தைத் தண்ணீரில் ஊற்றிக் கலக்கி ஒரு கிளாஸில் விட்டு ராஜன் முன் கொண்டு வைத்தாள். ராஜன் அதை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தான். அவன் அருகில் குள்ளாய் ஒளிந்த அந்தச் சிறு பையன் நின்றான். ஆயிஷா உட்புறம் சென்றாள். ஷர்பத்தைப் பங்கஜத்துக்குக் கொடுக்கவில்லை. அவளை

உபசரிக்கவும் இல்லை. அவளையே முறைத்துப் பார்த்தபடி நின்றாள். "என் அண்ணன் அஹமத் வீட்டில் இல்லை. வக்கீல் வீட்டுக்குச் சென்று இருக்கிறார். ஆனால் என்னை நான் காப்பாற்றிக் கொள்ள முடியும்" என்று சொல்லி விட்டு, தலைகாணி அடியிலிருந்த 'பிச்சுவா' போன்ற ஆயுதத்தை எடுத்துக் காட்டினாள். பங்கஜம் எப்படி அவளிடம் பேசுவது என்று தெரியாமல் யோசித்தாள்.

## 34

ஆயிஷா பிச்சுவாவைக் காட்டியதும் பங்கஜத்துக்கு அவளுடைய மனப் பக்குவம் ஓரளவு புரிந்து விட்டது. ஆயஷாவின் மனத்தில் உள்ள ஆசையின் உறுதி என்ன வென்றும் புரிந்து விட்டது. பணத்தை மதிக்காதவள், எங்கோ பிறந்தவள். தான் மணந்த கணவனைப் பாஷை புரியாத நாட்டுக்குத் தேடி தந்தவளின் கற்பை மதிக்காமல் இருக்க முடியாது. அவளிடம் ஆத்திரப் பட்டுப் பலன் இல்லை. சிந்தனையை விட உணர்ச்சி மிக்க அவளோடு எப்படிப் பேசி, தான் கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்பது என்று சில விநாடிகள் சிந்தித்தாள்.

பங்கஜம் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு சாவதானமாக ஆங்கிலத்தில் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேச ஆரம்பித்தாள். "சகோதரி நானும் உன்னைப்போல ஒரு பெண். நானும் உன்னைப் போலவே என் கணவர் மீது உயிரையே வைத்திருப்பவள். வெளியே உட்கார்ந்திருப்பவர் உன் கணவர் என்று உரிமை கொண்டாடுகிறாய். அவர் உங்கள் ஊருக்கு வருவதற்கு முன்பே என்னை மணந்திருந்தார். நானும் அவர் குழந்தைக்குத் தாய். இந்த விஷயங்களை நினைத்துப் பார்த்தால், உனக்கு என் மீது கோபம், பொறாமை ஏற்படாது. என் மீது பச்சாதாபம்தான் ஏற்படும்" என்று ஆரம்பித்தாள்.



இந்த வார்த்தைகளைக் கேட்ட ஆயஷாவின் மனத்தில் குழப்பம் ஏற்பட்டது. பங்கஜத்தை ஒருமுறை அவள் ஏற இறங்கப் பார்த்தாள். "நீ சொன்னதெல்லாம் உண்மையாக இருக்கலாம். நீ பணக்காரி; உனக்கு அவர் மீது அன்பிருக்க முடியாது. அவரை இழந்தாலும் நீ நல்லபடியாக வாழக் கூடியவள். ஆனால் என்னால் வாழ முடியாது. நானும் அஹமதும் எல்லாவற்றையும் இழந்து வந்திருக்கிறோம். எங்கள் வீடு, ஒட்டகங்கள் இவற்றை விற்றுவிட்டுக் கப்பல் ஏறினோம். இன்னும் சில மாதங்கள் இங்கு தங்குவதற்குத் தான் பணம் இருக்கிறது. அப்புறம் அஹமத் மட்டும் திரும்பிச் செல்வான். நான் அவரை அடைய முடியா விட்டால் இந்த ஊரிலேயே கடலில் விழுந்து இறந்துவிடப் போகிறேன். அவர் அன்புக்காக ஏங்கி இறந்த என் உடலைப் பார்த்த பின் அவர் உன்னோடு அன்பாக வாழ முடியுமா? என் நினைவு உங்கள் இருவர் வாழ்க்கையையும் நரகமாக்கி விடும்!" என்று மனத்தில் உள்ள கவலை யெல்லாம் கொட்டிப் பேசினாள்.

இப்படிப் பயங்கரமான உத்வேகத்துடன் காதலிக்கும் பெண்ணின் காதலில் தவறு இருக்க முடியும் என்று எண்ணுவதே பங்கஜத்துக்குத் தவறாகத் தோன்றியது. "உன் அன்பைப் போற்றுகிறேன் சகோதரி. ஒரு ஞாபகத்தில் அவர் உன்னை மணந்திருக்க வேண்டும். அதற்கு முன்பு இருந்த ஞாபகத்தில் நான் அவர் மனைவி. நீ நினைப்பது போல் நானும் அவரோடு வாழத்தானே ஆசைப் படுவேன்?"

ஆயஷா வெறுப்புக் கலந்த ஒரு சிரிப்புச் சிரித்தாள். "என் காதலோடு உன் காதலை ஒப்பிடக் கொள்ளாதே. என் அன்பின் ஆழம் உனக்குத் தெரியாது. நான் அவருக்காக கிராமத்தில் உள்ளவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு கெய்ரோவுக்கு வந்தேன். பார், நான் அவரை விரும்பி மணந்ததற்காக என் உறவினர்கள்

கொடுத்த ''சன்மானத்தை'' என்று கூறி தன் மேல் ஆடையைத் திறந்து தோள் பட்டையில் ஏற்பட்டிருந்த கத்திக் குத்தைக் காட்டினாள். ''ரத்தம் கொடுத்து வாங்கிய சொத்து அவர்.''

பங்கஜத்துக்கு ஒரு விநாடி ஒன்றுமே புலப்படவில்லை. 'இவள் ஓரறிவுப் பிராணி. இவள் அன்பு மிக ஆழமானதே அல்லாமல், விசாலமானதல்ல. இவளை வார்த்தைகளால் வழிக்குக் கொண்டு வர முடியாது' என்பதைப் புரிந்து கொண்டாள்.

திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. வருத்தம் தரும் அந்த நிலையிலும், அந்த எண்ணம் அவளுக்குச் சிரிப்பை உண்டாக்கியது. பங்கஜம் சிரித்தாள்.

பங்கஜம் சிரிப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தாள் ஆயஷா. ''எதற்குச் சிரிக்கிறாய்?''

''சகோதரி, ஆச்சரியப் படும்படியான அன்பு வைத்தி ருக்கிறாய். அவருக்காக சொத்தை விற்று கடல் கடந்து வந்திருக்கிறாய். அவரை அடையாவிட்டால் கடலில் விழுந்து இறக்கத் தயார் என்கிறாய். நீ விரும்பி மணந்து இன்பம் துய்த்த மனிதர் என் கணவராக இல்லாமல் வேறு ஒருவராக இருந்து விட்டால் நீ செய்த முயற்சிகள் எல்லாம் வீணல்லவா?'' என்றாள்.

''உன் கணவரேதான். அவரல்லாமல் வேறு ஒருவராக எப்படி இருக்கமுடியும்'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள் ஆயஷா.

''என் கணவரைப் போன்ற உருவத்துடன் டோப்ருக் போர்முனையில் வேறு ஒருவர் இருந்த விஷயம் உனக்குத் தெரியாதா? உன்னை மணந்து உன்னோடு வாழ்ந்தவர் அதைப் பற்றியே உன்னிடம் சொல்லவில்லையா?''

''அப்படிக் கிடையவே கிடையாது. கதைகளில் வேண்டுமானால் அப்படி இருக்கலாம். ஆனால்... ஆனால்...''



ஆயஷா எதையோ சொல்ல வந்தவள் சொல்லாமல் நிறுத்துகிறாள் என்பது பங்கஜத்துக்குத் தெரிந்தது. ''என்ன ஆயஷா, என்ன சொல்ல நினைக்கிறாய்? நீ மூடி வைக்கும் விஷயமே, நம் பிரச்சினையைத் தீர்க்கும் விஷயமாக இருக்கலாம். என்ன, சொல்லு?'' என்று கேட்டாள்.

ஆயஷா உடனே எழுந்து சென்று, முதலைத் தோலால் செய்யப் பட்ட ஒரு நீண்ட பையை எடுத்து வந்தாள். அதிலிருந்து பல காகிதங்கள் விழுந்தன. காகிதத்தோடு ஒரு சிறு கவரும் விழுந்தது. ஆயஷா அந்தக் கவரை மட்டும் கையில் எடுத்துக் கொண்டாள். வேதனையோடு பங்கஜத்தைப் பார்த்தாள். ''பஹன்! உன் கணவரை நான் மணக்கும்போது, அவர் உன்னை ஏற்கனவே மணந்திருக்கிறார் என்று தெரிந்தே மணந்தேன் எனக்கு அவர்மீது இருந்த ஆசையால் அப்படிச் செய்தேன். அவர் உயிரைக் காப்பாற்றி, அவர் பொருட்டு இவ்வளவு கஷ்டப்பட்ட எனக்கு, எங்கோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் உன்னை மாற்றுவது தவறாகத் தோன்றவில்லை. மிகப் பெரிய அந்தத் தவறுக்குத்தான் அல்லா என்னை இப்படி வாட்டி வதைத்துத் தண்டிக்கிறார் போலும்'' என்று சொல்லிவிட்டு அந்தக் கவரைப் பங்கஜத்திடம் நீட்டினாள்.

பங்கஜம் அவசர அவசரமாகக் கவரைப் பிரித்தாள். கவரைப் பிரித்ததும் பங்கஜத்தின் தலையில் இடிதாக்கியது போல் இருந்தது. ''ராஜனை நான் காப்பாற்றியபோது, அவர் உடையிலிருந்தது இந்தக் கவர். அதிலிருந்த போட்டோவைப் பார்த்ததும் அவர் திருமணமானவர் என்று தெரிந்து கொண்டேன். அவரைக் கேட்டேன். அவர் தனக்குத் திருமணமாகவில்லை என்று பொய் சொன்னார். என்னை வருத்தப்படுத்த வேண்டாம் என்று பொய் சொல்கிறார் என்று நினைத்து, சில நாள் அவரிடம் இந்தப் போட்டோ பற்றிப் பேசவில்லை. எங்களுக்கு மணமான

பின்பு அவரிடம் போட்டோவைக் காட்டினேன். அவர் தன் பொய்யை ஒப்புக் கொண்டு, 'இனிமேல் நான் ஊர் திரும்பப் போவதில்லை. என் மனைவியிடம் நான் போகப் போவதில்லை' என்று சத்தியம் செய்து கொடுத்தார்" என்று ஆயஷா கூறினாள்.

அவன் கையில் வைத்திருந்த போட்டோ, பம்பாயில் பங்கஜம், பாபா கொடுத்த சங்கு மாலையுடன் எடுத்துக் கொண்ட போட்டோ. கணவன் இறந்து விட்டான் என்று நினைத்து, பங்கஜம் அல்லல்பட்டபோது ஒரு நம்பிக்கை நங்கூரமாக இருந்தது, பாபாவின் சொற்களும் அவர் அளித்த சங்கு மாலையும்தான்.

பம்பாயில் கப்பல் ஏறும்போது 'இந்தப் போட்டோவை என்றுமே பிரிய மாட்டேன். இதை யாரிடமும் காட்டமாட்டேன். இது என்னிடம் இருக்கும் வரையில் எனக்கு எந்த வித ஆபத்தும் வராது. இது உன் மாங்கல்யத்தைக் காப்பாற்றும்' என்று கூறினான் ராஜன்.

அவ்வளவு தூரம் அதன்மீது மதிப்பு வைத்திருந்தான். ஆயஷாவினால் காப்பாற்றப்படும்போது, அந்தப் போட்டோ அவன் உடையில் இருந்ததில் ஆச்சரியமில்லை. அப்படியென்றால் ஆயஷா காப்பாற்றியது தன் கணவனைத்தான். வேறு ஒருவனை இல்லை. எவ்வளவு கசப்பான உண்மை!

ஆனால் தன் கணவன் அவளிடம் கல்யாணமாக வில்லை என்று சொல்லிவிட்டு, போட்டோவைப் பார்த்ததும், 'நான் என் மனைவியிடம் செல்லப் போவதில்லை' என்று சத்தியம் செய்தது ஒரு ஞாபகம் இழந்தவன் செய்கையா? அது ஓர் ஏமாற்றுக்காரன் செய்கையாக அல்லவா இருக்கிறது என்று நினைத்தாள். "என் கணவர் உன்னை மணந்தபோது தன் ஞாபகத்தோடுதான் இருந்தாரா? அவருக்குக் கடந்த கால நினைவுகள் இருந்தனவா?"

"அப்போது அவருக்கு எந்த ஞாபக மறதியும் இல்லை,



இப்போதுதான் எல்லாவற்றையும் மறந்து விட்டவர் போல் நடிக்கிறார். உன் பணத்தின் மீதுள்ள ஆசைதான் அவரை அப்படி நடிக்கச் செய்கிறது. எங்கள் ஊரில் இருந்தபோது கூட அவர்கள் எந்த வழியிலாவது பணத்தை அடைய முயற்சி செய்து வந்தார். என்னாலான வரையில் அவருடைய பணத்தாசையைப் பூர்த்தி செய்து பார்த்தேன். அவருக்குத் திருப்தி ஏற்படவே இல்லை" என்று ஆயஷா சொன்னதும் பங்கஜத்துக்குத் தன் கணவர் இவ்வளவு மட்டமானவராக இருந்திருப்பாரா, ஒரு பெண்ணின் பணத்தில் வாழும் அளவுக்குக் கேவலமானவராகி விட்டாரா என்று வருந்தினாள்.

வருத்தம் ஆத்திரமாக மாறியது. அந்தப் படத்தை ஆயஷாவின் கையிலிருந்து பிடுங்கினாள். நேரே நடந்து போய் வெளியே உட்கார்ந்திருந்த ராஜனிடம் காட்டினாள். "பாருங்கள். நம் வாழ்க்கையின் புனித ரகசியமான இந்தப் போட்டோ இந்த எகிப்துப் பெண் கையில் கிடைத்து இருக்கிறது. அவளிடம் மணமாகவில்லை என்று பொய் சொல்லியிருக்கிறீர்கள். பிறகு படத்தைப் பார்த்த பின்பு, என் மனைவியிடம் போகப் போவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறீர்கள். பிறகு அவளையும் ஏமாற்றி ஞாபகம் இழந்தவர்போல் நடித்திருக்கிறீர்கள். உங்கள் நடிப்பு சித்தய்யன், வின்சென்ட் இருவரையுமே ஏமாற்றி இருக்கிறது. எகிப்தில் ஆயஷாவை மணந்த செய்தி ஊருக்குத் தெரிந்தால், ஞாபக மறதியில் செய்து கொண்டேன் என்று சொல்லிவிட்டு நல்லவராகி விடலாம் என்றுதானே ஞாபகமறதி நாடகம் நடத்தினீர்கள்? இவ்வளவு கபடமானவர் என்று தெரியாமல் போய் விட்டதே எனக்கு" என்று அழுகையும் ஆத்திரமும் பொங்கப் படபடவென்று மனத்திற்குத் தோன்றியதையெல்லாம் பேசினாள்.

ஆயஷாவுக்குப் பங்கஜத்தின் வேதனை பெருமகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அடுத்த வினாடியே அவள்

மகிழ்ச்சி பங்கஜத்தின்மீது மதிப்பாக மாறியது. பங்கஜம் ஆயஷாவின் பக்கம் திரும்பி, ''சகோதரி! நீ இனி வருந்த வேண்டாம். நீ இங்கு இந்தப் பாழ் வீட்டில் தங்க வேண்டாம். நீ என்னோடு என் தந்தையின் வீட்டில் வந்து தங்கலாம். உன் குழந்தையோடு புறப்படு. வெளியில் கார் காத்திருக்கிறது. உன் சகோதரன் அஹமத் வக்கீல்களைத் தேடிப் போய் உரிமைகளை நிலைநாட்ட வேண்டாம். உன் உரிமைகளைப் பாதுகாக்க நானே தயாராக இருக்கிறேன்'' என்றாள்.

ராஜன், படத்தையும் ஆயஷாவையும் கோபமடைந்து நிற்கும் பங்கஜத்தையும் மாறி மாறிப் பார்த்தான். பெரிய தவறு செய்து விட்டவன் பிடிபட்டதுபோல் மருண்டு மருண்டு விழித்தான். பங்கஜத்துக்கு ராஜன் முகத்தைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. ''வாருங்கள் போகலாம்'' என்று ராஜனை அழைத்தாள்.

ராஜன் அந்தப் படத்தைக் கையில் வாங்கியபடி காரை நோக்கி நடந்தான். ஆயஷா பேசாமல் நின்றாள். அவள் மனத்தில் பங்கஜத்தைப் பற்றி இருந்த எண்ணம் வேகமாக மாறிக்கொண்டிருந்தது.

''சகோதரி, இந்தப் பங்களா கூரிக்காவிடம் என் அட்ரஸைக் கொடுத்துவிட்டுச் செல்வோம். உன் அண்ணன் அஹமத் வந்தால், அவருக்கு அவன் தகவல் சொல்லுவான். நீ என்னுடனே வரலாம்'' என்று சொல்லிவிட்டு ஆயஷாவின் குழந்தையின் கையைப் பிடித்து அழைத்தபடி பங்கஜம் நடந்தாள்.

உறுதியும், வெறுப்பும் நிறைந்தவளாயிருந்த ஆயஷா, பங்கஜத்தின் பண்பைப் பார்த்ததும், அதற்குத் தலை வணங்கியபடி காரை நோக்கி நடந்தாள். நேர்மையல்லாத ஒரு செய்கையில் பங்கஜம் என்றும் இறங்க மாட்டாள் என்ற எண்ணம் மட்டும் ஆயஷாவின் மனத்தில் இருந்தது. காரைப் பங்கஜமே ஓட்டினாள். காரின் பின் சீட்டில் ஆயஷாவும், ராஜனும், குழந்தையும் உட்கார்ந்திருந்தனர்.

www.t.me/tamilbooksworld



ராஜன் மருண்ட பார்வையோடு ஆயஷாவைப் பார்த்தான். ஒரு விநாடிக்கு ஆயஷாவிற்கு ராஜனிடம் இரக்க உணர்ச்சி ஏற்பட்டது. ராஜனின் பண்புக் குறைவு, ராஜனின் தவறாகவே ஆயஷாவுக்குத் தோன்றவில்லை.

ஆயஷாவின் ஆழமான அன்பு ராஜனிடம் எதையும் மன்னிக்கத் தயாராக இருந்தது. ஆனால் ராஜன் பார்வை படத்திலேயே நின்றது. அந்தப் படம் மெள்ள அவன் மனத்தில் ஒரு வேதனையையும், ஒரு விதமான அயர்ச்சியையும் கொடுத்தது. படத்தைப் பார்த்தபடியே ராஜன் கண் மூடிப் பின் சீட்டில் சாய்ந்து விட்டதைப் பங்கஜமும் கவனிக்கவில்லை. ஆயஷாவும் கவனிக்கவில்லை.

பங்கஜத்தின் மனம் கடந்த காலத்தில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தது. 'எல்லாம் அவன் இஷ்டம்' என்று ஆண்டவனிடம் மனத்தைக் கட்டுப்படுத்தி வாழ்ந்த நமச்சிவாயத்தின் மகளாகப் பிறந்த தமிழ்நாட்டுப் பெண் பங்கஜம், தன் கணவன் பெரியதோர் ஏமாற்றுக்காரன் என்று நினைத்தபோது, அவன் தவறைச் சரியென்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை. 'தலாக்' என்று மும்முறை சொல்லிக் கணவன் மனைவி பிரியும் நாட்டில் பிறந்து வளர்ந்த ஆயாஷாவோ, 'எல்லாம் அவன் இஷ்டம்' என்று தன்னை மணந்தவனின் எல்லாத் தவறுகளையும் நளாயினி போல் மன்னிக்கத் தயாராக இருந்தாள்.

கண்ணை மூடி இருக்கும் ராஜனின் மனம் என்ற குகையில் எழுந்த எண்ண அலைகளைப் பற்றி ஆயஷாவுக்குத் தெரியாது. அலை அலையாகக் காட்சிகள் ராஜன் மனத்தில் தோன்றி மறைந்தன.

டோப்ருக் போர் முனையில் துப்பாக்கி வெடிக்கும் காட்சி. படத்தில் உள்ள பங்கஜத்தின் சங்கு மாலை அணிந்த உருவம். மறுபடியும் இருளில் துப்பாக்கி வெடிக்கும் காட்சி. மறுபடியும் பங்கஜத்தின் உருவம். கெய்ரோ நகரத்தில் ஓர் இருட்டறை. அந்த அறையின் இருட்டு மூலையிலிருந்து ஓர் உருவம்; ஆட்டு தாடி வைத்த

பயங்கரமான உருவத்தின் கண்கள். அவன் கண்களை ஊடுருவிப் பார்க்கும் காட்சி. அந்த உருவம், 'இந்தப் பெட்டியை எடுத்துச் சென்று பணம் வாங்கி வா'' என்று உத்தரவிடும் காட்சி. அவன் இருளில் பெட்டியை எடுத்துச் செல்லும் காட்சி. மறுபடியும் இருட்டறை. அன்று தாடி வைத்த உருவத்துடன் அவன் போன்ற உருவமே எதிரே நின்றது. அவன் உருவம் சிரிக்கிறது. வேறு உடையில்...

திடீரென்று ஒரு மணற் புயல். அதன் நடுவே பங்கஜத்தின் சங்கு மாலை அணிந்த போட்டோ, பெரிய டாங்கி வெடிக்கிறது. ராஜன் ஆகாயத்தில் எழும்பி மறுபடியும் தரையில் விழுகிறான்.

ஒளி மறைகிறது. இருளில் எங்கும் நிசப்தம். ராஜன் முகமே ராஜனைக் குனிந்து பார்க்கிறது. அந்த உருவம் அவன் உடைகளைக் கழற்றிக் கொண்டு, வேறு உடைகளை அணிவிக்கிறது. அவன் உடைகளை அது அணிந்து கொள்கிறது. மறுபடியும் ஞாபகம் மறைகிறது—

இப்படித் தாறுமாறாகப் பல காட்சிகள் தோன்றி மறைகின்றன. ஒழுங்கில்லாத அந்தக் காட்சி வரிசையில் இடையிடையே ஆட்டுத் தாடி வைத்த உருவமும், அது அவனை இருட்டறையில் கட்டளையிடும் காட்சியும் வந்து மறைந்தன. தாடி வைத்த உருவம் அவனை, ''நீ யார்?'' என்று கேட்டது. ''நான் தியாகராஜன்'' என்று அவன் பதில் சொல்வதும் தோன்றி மறைகின்றன. அவன் மனம் உடனே சூனியமாகிறது.

மறுபடியும் அவன் மனத்தில் நிலையாக நின்றவை பங்கஜத்தின் சங்கு மாலை போட்டோவும் பாபாவின் அருள் மொழிகளும்தான். அவன் அவள் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், எதிரே மணல் முன் குண்டு வெடிக்கிறது. அதிர்ச்சி அவனை ஆகாயத்துக்குத் தூக்கி எறிகிறது.

www.tamilbookworld



கண்களை விழிக்கிறான்: மணல் மேடு இல்லை, தேனாம்பேட்டை ரோடு.

பங்கஜம் எந்த நிமிடத்தில் தன்னை மறந்தாள் என்று தெரியவில்லை, வேகமாக வந்த அவன் கார், லாரியில் பலமாக மோத, அடுத்த வினாடி கார் உருள, அவள் தூக்கி எறியப்பட, பின் சீட்டிலிருந்த கதவு திறந்து அதன் வழியாக ஆயஷா எறியப்பட, அவள் மகன் வீரிட்டலறினான்.

பங்கஜம் தன் கணவன் மீது விழுந்தாள். கார் ஆயஷா மீது சாய்ந்தது. சிறுவனுக்கு நெற்றியில் சிறு காயம்.

ராஜன், போட்டோவைக் கையில் பிடித்தபடி காரின் மூலையில் கிடந்தான். பங்கஜத்தின் தேகத்தில் காயம் படவில்லை, ஆனால் கை கால்கள் ஒரு வினாடிக்கு வேலை செய்ய மறுத்தன. மெள்ள எழுந்து ஊர்ந்து காரைவிட்டு வெளியே வந்தாள். கார் தலைகீழாகக் கவிழ்ந்து கிடந்தது. காரின் மேல் பக்கம் இருக்கும் காரியர் ஆயஷாவின் தொடைமீது அழுத்தியிருந்தது. ஆயஷா ஆடை குலைந்தபடி ஒரு சலவைக் கல் சிற்பம் போல் கிடந்தாள். அவள் தொடை எலும்பு முறிந்து வெளியே தெரிந்தது. ரத்தம் கசிந்தபடி இருந்தது.

கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது. வண்டிகள் இரு புறமும் நின்றன. பீட்கான்ஸ்டபிள் விசில் அடித்தபடி கூட்டத்தை விலக்கினார்.

ராமலிங்கத்துக்கு நன்றாகத் தெரிந்த, பாரி மங்கலத்துக்கு அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி ஒருவர் போலீஸ் வேனில் வந்தார். அவர் பங்கஜத்தைப் பார்த்ததும் வேனை நிறுத்தினார். நிலைமையைப் புரிந்து கொண்டு, உருண்டு கிடந்த வண்டியை நிமிர்த்த ஏற்பாடு செய்தார்.

ராஜன் கண் விழித்துக் கொண்டான். அவன் கை

மணிகட்டில் லேசாக அடிபட்டு இருந்தது. சிறு காயத்துடன் இருந்த ஆயஷாவின் மகன் மயக்கத்தில் கிடக்கும் தாயைப் பார்த்து அலறி ஓடினான். பங்கஜம் அவனை அணைத்துக் கொண்டாள். ராஜனும், போலீஸ் அதிகாரியும் ஆயஷாவை வேனில் ஏற்றினார்கள். போலீஸ் கார் ஜெனரல் ஆஸ்பத்திரி நோக்கிச் சென்றது.

போலீஸ் அதிகாரி ஆஸ்பத்திரிக்குச் சென்று 'ஸ்ட்ரெச்சர்' எடுத்து வர ஏற்பாடு செய்தார். 'ஸ்ட்ரெச்சர்' வந்ததும் ஆயஷாவை அதில் கிடத்தி ஆஸ்பத்திரிக்குள் சென்றனர். ஆஸ்பத்திரியில் கீழே இருந்த ஆபரேஷன் தியேட்டரில் வேறு வேலை நடந்து கொண்டிருந்தபடியால் ஆயஷாவை முதல் மாடியிலுள்ள ஆபரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் செல்ல டாக்டர் உத்தரவிட்டார்.

முதல் மாடிக்குச் செல்லும் மின்சார லிப்டின் முன் ஸ்ட்ரெச்சரோடு காத்து நின்றனர் ராஜனும், பங்கஜமும். அதே சமயத்தில் சக்கர நாற்காலியில் வைத்து ஒருவனைத் தள்ளியபடி ஆஸ்பத்திரி சிப்பந்திகள் வந்தனர். சக்கர நாற்காலியின் அருகில் கோபால் நின்று கொண்டிருந்தான். அவனும் சக்கர நாற்காலியில் அமர்ந்து இருக்கும் வியாதியஸ்தனை மாடிக்கெடுத்துச் செல்லக் காத்து இருந்தான். சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தவன் கால்கள் இளைத்து, சதையே இல்லாமல் மரக்கட்டைகள் போல் இருந்தன. அவன் கைகளும் அவ்வாறே இளைத்து இருந்தன. ஆனால், உடல், முகமெல்லாம் சாதாரணமாக இருந்தன.

யதேச்சையாகத் திரும்பி பங்கஜம் அதிர்ச்சி அடைந்தாள். சக்கர நாற்காலியில் உட்கார்ந்து இருந்தவன் முகம், ராஜன் முகம் போலவே இருந்தது. ராஜனும் அவனைப் பார்த்ததும் பேரதிர்ச்சி அடைந்தான். ஆனால் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தவன் பார்வை 'ஸ்ட்ரெச்சரில்' கிடந்த ஆயஷாவின் முகத்திலேயே லயித்து நின்றது. அவன் முகத்தில்



ஆச்சரியம், பயம், கழிவிரக்கம் போன்ற உணர்ச்சிகள் ஒருங்கே படர்ந்தன. அவன், "ஆயஷா... ஆயஷா" என்று கூச்சலிட்டுக் கூவினான்.

ஆனால் உணர்விழந்து கிடக்கும் ஆயஷாவின் காதில் அந்தக் கூச்சல் விழவில்லை. அதற்குள் மின்சார லிப்ட் வந்து நின்றது. அதன் கதவுகள் திறக்கப்பட்டன. 'ஸ்ட்ரெச்சரு'ம் சக்கர நாற்காலியும் 'லிப்டி'னுள் சென்றன. லிப்டு நகர ஆரம்பித்ததும் சக்கர நாற்காலியில் இருந்தவன், "ஆயஷாவுக்கு என்ன? அவள் எப்படிச் சென்னைக்கு வந்தாள்?" என்று தொடர்ந்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தான். கேள்விகளைக் கேட்டபடியே அவன் பார்வை ராஜன் பக்கம் சென்றது. உடனே பேரதிர்ச்சியுடன், "ராஜன்! நீயா? நீ உயிரோடா இருக்கிறாய்? நீ எப்போது ஊர் திரும்பினாய்?" என்று கேட்டான்.

ராஜன் அவனைப் பார்த்தபடியே இருந்தவன், "நீ தியாகராஜன்தானே?" என்று அமைதியோடு கேட்டான்.

லிப்டு முதல் மாடியில் வந்து நின்றது. கதவுகள் திறக்கப்பட்டன. ஆயஷாவின் ஸ்ட்ரெச்சர் முதல் மாடிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. திருவாரூர் தியாகராஜன், தானும் ஸ்ட்ரெச்சரைப் பின் தொடர வேண்டுமென்று வற்புறுத்திக் கூச்சலிட்டான். ஆனால் லிப்டு அடுத்த மாடியை நோக்கிச் சென்றது. "கோபால், நான் ராஜனோடு பேச வேண்டும்... கோபால், நான் ராஜனோடு பேச வேண்டும்" என்ற தியாகராஜனின் கூச்சல் மட்டும் லிப்டிலிருந்து கீழே ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆயஷாவை ஆபரேஷன் அறைக்கு எடுத்துச் சென்றதும், அறையின் வெளியே பங்கஜமும், ராஜனும் ஒன்றும் புரியாத ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றனர். தனக்குத் தாயின் நிலையில் ஆயஷாவின் மகனும், இப்போது இருப்பது பங்கஜம்தான் என்று உணர்ந்தவன்

போல் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தபடி நின்றான். பங்கஜம் குழந்தையை முத்தமிட்டுவிட்டு, ''அம்மாவுக்கு ஒன்றுமில்லை; சீக்கிரமே சரியாகிவிடும்'' என்றாள்.

சிறுவன் புரிந்து கொண்டவன் போல் பேசாமலிருந்தான். ராஜன் பங்கஜத்தைப் பார்த்து, ''பங்கஜம், என் மனம் ஒரு பயங்கரப் பயணத்தில் இருந்தது. அந்தப் பயணம் இன்று முடிந்து விட்டது. நான் யார் என்ற கேள்விக்கு எனக்கு விடை கிடைத்து விட்டது. நானே நான்! நானே ராஜன் என்று புரிந்து கொண்டேன். சங்கு மாலை அணிந்த உன் போட்டோவைப் பார்த்ததுமே தெளிவு வர ஆரம்பித்தது. உன்னால் ஏற்பட்ட கார் விபத்து மற்ற விவரங்களைத் தெளிவாக்கி விட்டது'' என்றான்.

பங்கஜம் மன அயர்வோடு, ''எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் கனவுபோல் இருக்கிறது. என் ஞாபகம் எனக்குச் சிதறிவிடும்போல் இருக்கிறது'' என்று சொல்லி, களைப்பு மேலிட அங்கு போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அதே சமயம், கோபால் அவர்கள் அமர்ந்திருந்த அந்த அறைக்குள் நுழைந்தான். ராஜனிடம் வந்து, ''சார்! மாடியில் இருக்கும் என் உறவினர் தியாகராஜன் உங்களை உடனே பார்க்க வேண்டுமென்கிறார். உடனே வாருங்கள்'' என்று அழைத்தான்.

ராஜனும், பங்கஜமும் அங்கிருந்த நர்ஸிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு ஆயஷாவின் மகனையும் அழைத்துக் கொண்டு மாடி நோக்கிச் சென்றார். கோபால் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

ஸ்பெஷல் வார்டில் உள்ள ஓர் அறையில் படுக்கையில் சாய்ந்தபடி கிடந்தான் தியாகராஜன். ராஜன் அவனை நெருங்கியதும், அவர்கள் இருவரும் ஓர் உருவத்தின் இரண்டு பிரதி பிம்பங்களைப் போல் தோற்றமளித்தனர். ஒருவன் படுக்கையில் கிடந்தான். அவன் முகம் போஷணை



இல்லாமல் வெளுத்துக் கிடந்தது. மற்றவன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஆரோக்கியத்தின் பளபளப்பு இருந்தது.

தியாகராஜன், ''ஆயஷாவுக்கு என்ன நேர்ந்தது? அவள் உடல் நிலை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான்.

''அவளுக்கு எலும்பு முறிந்து இருக்கிறது. அதற்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது'' என்றான் ராஜன்.

''என்னை மன்னித்து விடு ராஜன், நான் செய்த கொடுமைகளுக்கு மன்னிப்பே இருக்க முடியாது. போர்னியோ காடுகளின் பயங்கரம், அரக்கனாயிருந்த என்னை மனிதனாக்கி விட்டது. சாவின் முகத்தை நான் பல முறை சந்தித்தும் புரிந்து கொள்ளவில்லை. நான் சுயநலத்தோடுதான் வாழ்ந்தேன். அன்புதான் இன்பத்தின் ரகசியம் என்பதைப் போர்னியோ காட்டில்தான் புரிந்து கொண்டேன். காலின் சக்தியை இழந்து பதினைந்து நாட்கள் போர்னியோ காட்டில் ஒரு மரத்தின் மீது கழித்தேன். மரத்தின் அடியில் கோர மிருகங்கள் உறுமியபடி உலவின. மனித வாடையே இல்லாத இடம். உண்ண உணவில்லாமல் பட்டினியாக அந்த மரத்தில் கழித்தேன். இரவில் தூங்குவதற்கும் பயம். வயிற்றுப் பசி தாகம்! மழை பெய்தபோது விழுந்த நீரைக் குடித்து தாகத்தைத் தணித்துக் கொண்டேன். ஒவ்வொரு நாளும் உதவி வராதா என்று எதிர்பார்த்தேன்? ஆண்டவனை அழைத்து அலறினேன்.

''உனக்கும், ஆயஷாவுக்கும் இழைத்த தீங்கை நினைத்து உண்மையாக உள்ளம் உருகிக் கதறினேன்; மரணம் என்னை நெருங்கிக் கொண்டிருந்தது. கைகள் வலிமை இழந்து கிளையைப் பற்றவும் முடியாத நிலை. கீழே ஒரு புலி என்னைப் பார்த்து உறுமியபடியே உலாவிக் கொண்டிருந்தது. மரணம் நிச்சயம் என்று

ஏற்பட்ட கடைசி நிமிடத்தில் நான் சாவுக்குப் பயப்படவில்லை. அது நான் எதிர்பார்த்த விஷயமாகி விட்டது. உன்னையும் ஆயஷாவையும் சந்தித்து மன்னிப்புப்பெற வேண்டும் என்ற ஒரே ஆசைதான் என் மனத்தில் மிகுந்து இருந்தது. அந்த எண்ணத்தோடுதான் மரத்திலிருந்து கீழே விழுந்தேன். விழித்துப் பார்த்தபோது புலி அங்கு இல்லை. என்னை ஏன் அது கொன்று தின்னாமல் விட்டுச் சென்றது என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு மலை ஜாதி மனிதன்தான் என் அருகில் இருந்தான்.

"அவன் எனக்கு உணவளித்து, காட்டிலிருந்து தூக்கி வந்தான். பிறகு போக்கு வண்டிகளில் ஏறி, துறைமுகத்துக்கு வந்தேன். கோபாலின் தந்தைக்குத் தந்தி கொடுத்துப் பணம் வரவழைத்துக் கப்பல் ஏறி வந்தேன். என் வாழ்க்கை முடிவதற்குள் எந்த இருவரைச் சந்திக்கத் துடித்தேனோ அந்த இருவரையும், ஒருங்கே ஆஸ்பத்திரி 'லிப்டில்' சந்தித்து விட்டேன். உங்களைக் காட்டி, ஆண்டவன் என் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றி விட்டான்" என்றான்.

பிறகு பங்கஜம் ஆயஷாவின் வருகையிலிருந்து தொடர்ந்து நடந்த எல்லா விஷயங்களையும் கூறினாள். அதைக் கேட்டதும் தியாகராஜன், "ராஜன், இப்போது புரிகிறது. உன் வாழ்க்கையில் ஒரு சிக்கலை ஏற்படுத்தியவன் நான். நானே தான் அந்த முடிச்சை அவிழ்க்க வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காகத்தான் ஆண்டவன் என்னை உயிரோடு இங்கு கொண்டு வந்திருக்கிறான். எல்லாவற்றையும் தெளிதாக உன் மனைவிக்குக் கூற வேண்டியது என் கடமை" என்று கூறி, மெல்லப் பேச ஆரம்பித்தான்.

"ஆப்ரிக்கா கண்டத்தில் உன்னைச் சந்தித்த அன்று முதலே, உருவம், அழகு இரண்டிலும் உன்னைபோலிருந்த நான் மட்டும் ஏழையாக இருக்கிறேன். நீ செல்வந்தனாக





இருக்கிறாய் என்ற பொறாமை உணர்ச்சி என்னைப் பற்றிக் கொண்டது. சண்டையில் நீ இறந்து விட்டால், நான் மட்டும் ஊர் திரும்ப நேரிட்டால் உன் ஸ்தானத்தில், உன் செல்வத்தில் நான் வாழலாம் என்ற அசட்டு ஆசை என்னைப் பிடித்துக் கொண்டது. அதனால் நான் உன்னிடம் நெருங்கிப் பழகி உன் தந்தை, தாய், மனைவி இவர்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். போர்முனையில் உன் அருகிலேயே இருந்து போரிட்டேன். என் கெட்ட எண்ணம் நிறைவேறுவதுபோல், அன்று டோப்ருக் சண்டையில் வெடித்த வெடிகுண்டு உன் அருகில் வெடித்தது. மணல் பத்தடி உயரம் கிளம்பி, உன்னை மூடுவதைப் பார்த்தேன். நானும் இறந்தவன்போல் அந்த மணல் மேட்டு அருகிலே என்னை மணலில் புதைத்துக் கொண்டேன்.

"இரவில் தற்காலிகமாகப் போர் ஓய்ந்தது. மணலில் இருந்து வெளியே வந்து உன்னுடலை இழுத்தேன். உனக்கு உயிர் போகவில்லை என்று எனக்குத் தெரிந்தது. எனக்கு ஏமாற்றமாக இருந்தது. மறுநாள் காலை வரையில் நீ தாங்கமாட்டாய் என்ற உறுதியில் உன் உடைகளை எடுத்து நான் அணிந்து கொண்டேன். உன் டயரி, அதில் நீ குறித்து வைத்திருந்த உன் தந்தையின் விலாசம், உன் ஷர்ட் உட்புறத்தில் நீ வைத்திருந்த போட்டோ எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டேன். நீ, 'தண்ணீர் தண்ணீர்' என்று முனகியபடி இருந்தபோது உன்னை இரக்கமில்லாமல் விட்டுவிட்டுக் கெய்ரோ நோக்கிச் சென்றேன். இரண்டு மைல்கள் கூட நான் தாண்டி இருக்க மாட்டேன். ஜெர்மன் 'சென்ட்ரி' ஒருவன் என்னை நோக்கிச் சுட்டான். அப்படியே மணல் திட்டின் மறைவில் விழுந்தேன். அன்று இரவு அடித்த பெருங்காற்று என்னை மணல் கொண்டு மூடிவிட்டது.

"மறுநாள் அவ்வழியே வந்த அஹமதும், ஆயஷாவும் நான் மணலில் அடிபட்டுக் கிடப்பதைக் கண்டு என்னை

காப்பாற்றினார்கள். என் தேகத்தில் பாய்ந்த குண்டை எடுத்து எனக்கு உயிர் கொடுத்து வாழ்வும் கொடுத்தாள் ஆயஷா. ஆனால் நான் இத்தாலிய ஜெர்மன் எதிரிகள் மூலமாகப் பர்மா சென்று, அங்கிருந்து இந்தியா திரும்பத் திட்டம் போட்டிருந்தேன். அந்த முயற்சியில் 'டுர்ஹான்பே' என்ற எகிப்தியக் கள்ளக் கடத்தல்காரன் எனக்குப் பெரும் உதவியாக இருந்தான். அவன் கெய்ரோவில் புகழ்பெற்ற ஜாலவித்தைக்காரன். அவன் மற்றவர்களை 'ஹிப்னாடிக்' முறையில் தூங்கச் செய்து, அவர்கள் மனத்தில் இருப்பதைத் தெரிந்து கொள்வான்.

"ஒரு நாள் அவனைச் சந்திப்பதற்காக அவன் வீட்டிற்குச் சென்றபோதுதான் உன்னை அவன் வீட்டில் சந்தித்தேன். நீ எப்படி அங்கு வந்து சேர்ந்தாய் என்று அவனைக் கேட்டேன். அவன் உன்னைப் போர்முனைப் பாலைவனத்தில் கண்டு எடுத்துத் தன் வீட்டில் கொண்டு வைத்திருப்பதாகக் கூறினான். சுய மூளையும், நினைவுகளும் உள்ளவர்களையே மயக்கி, மதி இழக்கச் செய்து தன் கள்ளக் கடத்தல் வேலைகளுக்குப் பயன்படுத்தி வந்த அவன், ஞாபக சக்தியை இழந்திருந்த உன்னைத் தன் கள்ளக் கடத்தல் வேலைகளுக்குச் சுலபமாகப் பயன்படுத்த எண்ணினான். அதேபோல் கள்ளக் கடத்தலில் பெனிசிலின் பெட்டிகள் எடுத்து வரவும், இத்தாலியருக்கு ரகசியச் செய்தி அனுப்பவும் உன்னை உபயோகித்து வந்தான். அவனுடைய கட்டளைகளுக்கு உன்னை ஓர் ஊமை அடிமைபோல் உபயோகித்து வந்தான்.

"நான் டுர்ஹான்பே உதவியால் எதிரி நீர்மூழ்கிக் கப்பலில் ஏறி ஜப்பானுக்குச் செல்ல முடிவு செய்தேன். ஆயஷா இந்தத் திட்டம் எதுவுமே தெரியாத நம்பிக்கையோடு எப்பொழுதும்போல் என்னிடம் இருந்தாள். கடைசியில் நான் புறப்பட வேண்டிய தினம். அன்றிரவு நான் தங்கியிருந்த ஹோட்டலைச் சுற்றிக் காவல் போட்டு இருந்தார்கள் எகிப்திய அரசாங்கத்தார்.



உன்னை ஹோட்டலின் அந்தரங்க அறையில் இருத்தி வைத்து விட்டு நான் ஹோட்டலில் இருப்பதாக அவர்களை நம்ப வைத்து, மாறுவேடத்தில் தப்பிச் சென்று விட்டேன்.

"அப்புறம் உனக்கு என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியாது. உன் பேரோடு நான் இந்தியாவிற்குத் திரும்ப நினைத்த முயற்சிகள் ஆண்டவனால் தடைபட்டுக் கொண்டே வந்தன. முடிவில் போர் முடிந்த பின்பும், நான் காடுகளில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தேன்" என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

"ராஜன், இப்போது எனக்குப் புரிகிறது. அன்று ஒரு நாள் நான் கெய்ரோவில் டுர்ஹான்பேயின் ஹிப்னாடிக் கட்டளைப்படி பெனிசிலின் எடுத்துச் சென்றபோது, பெட்டிகளில் பெனிசிலின் வைக்காமலே காலிப் பெட்டிகளை என்னிடம் கொடுத்து அனுப்பி விட்டான் டுர்ஹான்பே. ஏற்கெனவே முழுப் பணத்தையும் கொடுத்துவிட்டுப் பெனிசிலின் வாங்க வந்திருந்த அராபிய வியாபாரிகள் ஏமாந்து போய், நான்தான் அவர்களை ஏமாற்றி விட்டேன் என்று என்னை அடித்துப் போட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். தெருவில் மயங்கிக் கிடந்த என்னை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருக்கிறார் எகிப்து போலீஸ்காரர். அங்கு என்னை வின்சென்ட் சந்தித்து ஊருக்கு அழைத்து வந்திருக்கிறார். ஆனால் ஒன்று தியாகராஜன், நீ என்ன தவறுசெய்தாலும் ஆயஷா உன் நினைவாகவே தன் ஆயுளையெல்லாம் [illegible] உன்னைத் தேடி வந்தாள். நான்தான் நீ என்று நினைத்து எனக்கு அவள் தொந்தரவு கொடுத்திருக்கிறாள்" என்று சொல்லி முடித்தான் ராஜன்.

* * *

இரண்டு மாதங்களில் தியாகராஜன் உடல் நிலை சரியாகி விட்டது. ஆயஷாவும் எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டாள். 'நான் கார் ஓட்டியதால்தானே ஆயஷாவுக்கு

ந்த ஆபத்து நேர்ந்தது' என்று பங்கஜம் அவளை சகோதரிபோல காத்து வந்தாள்.

ஆயஷாவை நாட்டைவிட்டு அனுப்ப ராஜ இரண்டரை லட்சம் ரூபாய் கொடுக்கத் தயாரா இருந்தான். அதே தொகையை, ஆயஷா தியாகராஜ னோடு வாழ மூலதனமாகக் கொடுத்தாள் பங்கஜம்.

சாவித்திரி கோபாலைக் கலப்புத் திருமணம் செய்து கொள்வதில் ராவ்ஜிக்கும் நமச்சிவாயத்திற்கும் இஷ்ட இல்லாவிட்டாலும் ராமலிங்கத்தின் ஆதரவில் அந் திருமணம் நடந்தேறியது.

ராஜனைப் பிடித்த சனீஸ்வரனின் சேஷ்டை வில விட்டது என்று ஜோதிடர் சொல்ல, அவன் தன் குடும்பத்தையே நெருங்கக் கூடாது என்று நமச்சிவாய பொன்மங்கலத்தில் சனீஸ்வர பகவானுக்கு ஒரு கோவிலே கட்டி வைத்தார்.

ஆனால் ஆயஷாவின் மகன் மட்டும் புதிதாகக் கற்று கொண்ட தமிழ் மொழியில் ராஜனை நல்ல அப்பா என்றும், தியாகராஜனை ஆஸ்பத்திரி அப்பா என்றும் கூறி வந்தான்.